ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஐம்பதாவது குருபூஜைப்

பொன் விழா மலர்

3—6—1973



வெளியிடுவோர் :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்

(பதிவு பெற்றது)

32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1

Phone: 34600

தெய்வப்பழநியில் புகழ்பெற்ற
புண்ணிய தீர்த்தங்கள்
சுவாமி வரத்திஞல் ஏற்பட்ட
வரத்தாறு என்ற வரதமா நதி
ஆறுநதிகள்கூடியது ஷண்முகநதி
— சரவணப்பொய்கை —
பழநியில் பார்க்கவேண்டிய இடங்கள்
திரு ஆவினன்குடி
மலைமேல் ஸ்ரீதண்டாயுதபாணிசுவாமிசன்னதி
பெரிய ஆவுடையார் கோவில்
பழநி பெரியநாயகி அம்மன்கோவில்



இவர்களின் நற்சாட்சி இதழ் பெற்றது

ட.சித்தனுதன்

பழநி பரிமளவிலாஸ்
ட.சித்தனுதன்
ஜவ்வாது வாசனை விபூதி,
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம் சிறந்தது.
Props: S.சித்தனுதன் சன்ஸ், அடிவாரம், பழநி

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஐம்பதாவது குருபூஜைப்

பொன் விழா மலர்

★

★

வெளியிடுவோர் :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்

32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, (தொலைபேசி : 34600)

சென்னை-1

[உரிமை பதிப்பகத்திற்கு]

[3—6—1973]

வெளியீடு தேதி : 3—6—1973

உரிமை : பதிப்பகத்திற்கு

படிகள் : 1000

★

மலர் பதிப்புக் குழு

தலைவர் : திரு. கீ. இராமலிங்கனுர் M.A.,

உறுப்பினர் : 'பாலகவி' திரு. M. K. வேங்கடராமனுர்
திருமதி. சு. மங்கையர்க்கரசியார், வித்வான்.
திரு. K. வெங்கடேசன் B.A.
திரு. இரா. பாலகுரு L.C.E.

★

கிடைக்குமிடம் :

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்,

தொலைபேசி : 34600 P.P. (பதிவு பெற்றது)

32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

அச்சிட்டோர் : சூப்பர் பவர் பிரஸ், சென்னை-1.

சமர்ப்பணம்

★

அகில அண்டங்களையும் படைத்துக், காத்து, அழிக்கும் பூரணப் பொருளே! தாங்கள் அருட்பெருங் கருணையால் இவ்வுலகப் பெரு மக்களுக்கு அளித்தருளிய அருட்சட்டத்தின் உயர் பெருமைகளை இவ்வுலகுக்கு எடுத்துக் கூறுவான் வேண்டி, துவக்கப் பெற்றிருக்கும் இவ்விலக்கியப் பதிப்பகத்தில் மலரும் இப் "பொன்னுண்டு குருபூஜை விழா மலரைப்" புகழை விரும்பாப் பொன் மலராம் தங்கள் திருவடி மலர்களுக்குப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம். அருள் கூர்ந்து ஏற்று, எல்லா உலகங்களையும் சன்மார்க்கத்தில் திருப்பி அருள் புரிய வேண்டுகிறோம்.

குருநாதா சரணம்! குருநாதா சரணம்!! குருநாதா சரணம்!!!



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

பதிப்புரை

உலகில் துன்பங்கள் மீதூரும்போது, அதை உய்விக்கும் பொருட்டு, மானிடச் சட்டை தாங்கி வந்து, இறைவன் ஆட்கொள்வது இவ்வுலக நியதி. அவ்வாறு அவதரித்த பல மகான்களில் ஒருவரான ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் எல்லா உயிரும் உய்யும் வண்ணம் தனிச்சிறப்பு கொண்ட 'அருட்சட்டம்' அருளினர்கள்.

அச்செந்நெறியைப் பிரசாரப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கிவரும் இப் பதிப்பகம், 1971-ல் துவக்கப் பெற்றுச் செயலாற்றி வருகிறது. 1972-ம் வருடம் ஜனவரி மாதம் 11-ம் தேதி இரெட்டியப்பட்டி சந்நிதியில் நடந்த இப்பதிப்பகத்தின் வெளியூர் பிரச்சாரக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவதற்காக, 'அருட்கவி' **ஸ்ரீ சுவாமி சாதுராம்** அவர்களை, இப்பதிப்பகச் செயலர் அழைத்துச் செல்கையில், ஆண்டவரின் ஐம்பதாவது குருபூஜையை முன்னிட்டு ஓர் மலர் வெளியிடவேண்டும் என்ற கருத்து உருவாயிற்று.

அக்கருத்தை 1972-ம் வருடம் டிசம்பர் மாத செயற்குழு கூட்டத்தில் வரவேற்ற இப்பதிப்பகம், 1973-ம் வருடம் ஜனவரி மாதச் செயற்குழு கூட்டத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது.

அதன்படி, 'ஆட்சிச் சொற்காவலர்,' உயர்திரு. கீ. இராமலிங்கனர் M.A., (ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத் தலைவர்), உயர்திருமதி **சு. மங்கையர்க்கரசியார்**, தமிழ் வித்வான், காஞ்சிபுரம், 'பாலகவி' உயர்திரு. **M. K. வேங்கடராமன்** இரெட்டியப்பட்டி, உயர்திரு. **K. வெங்கடேசன்** B.A., (ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகத் தலைவர்), **திரு. R. பாலகுரு** L.C.E. (ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகப் பொருளர்) ஆகியோரைக்கொண்ட, **"ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் குருபூஜைப் பொன்னுண்டு மலர் பதிப்புக் குழு"** உருவாக்கப்பெற்றது.

குறுகிய காலத்தில், சிறந்த கட்டுரைகள், இனிய, எளிய நடையில் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் கவிதைகள், இம்மலர் சிறப்பாக அமைய அருட்சட்ட, பாதயாத்திரை அநுபவங்கள், மற்றும் குழந்தை முதல் முதியோர் வரை யாவருக்கும் எளிய முறையில் மனதில் பதியும் வண்ணம் சுவாமிகள் வரலாற்றுக்காட்சிகள், உரைநடை வடிவில் மலருக்கு அணிகலனகத் தொகுத்து மலரைச் சிறப்பிக்கும் வண்ணம் சுவாமிகளுடைய பொன்மொழிகள், அடியார்களின் அருளநுபவங்கள் ஆகியவை சேகரிக்கப்பெற்று இம்மலரில் தொகுக்கப் பெற்றுள்ளன.

இவ்வரும்பெரும் பணி சிறப்புடன் நிறைவேறத் தேவையான நிதியை நன்கொடைகள், விளம்பரங்கள் மூலமாகத் திரட்டிக் கொடுத்த இப் பதிப்பகத்தின் அமைப்பாளர் திரு. T. ஜெகன்னுதகுப்தா அவர்களுக்கும்,

கட்டுரைகள், கவிதைகள், அருளநுபவங்கள். ஓவியங்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் வழங்கியோருக்கும்,

ஆசிச் செய்திகள் அருளிய பிள்ளையார்குப்பம் ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையார், அருள்நகர் உயர்தவத்திரு. A. நரசிம்மலு நாயுடு (ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கச் செயலர்) மற்றவர்களுக்கும்,

மலர் அச்சிடுகையில் ஒப்பச்சு சரிபார்த்தல் போன்றவற்றிற்கு உடனிருந்து உழைத்த இப்பதிப்பகத்தின் செயற்குழு அங்கத்தினர் திரு. V. குருநாதன் M.A., அவர்களுக்கும்,

மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய சென்னை சூப்பர் பவர் பிரஸ் அச்சகத்தினருக்கும்,

மற்றும் இம்மலர் மலர்ந்து மணம் வீச மனம் மொழி, செயல்களால் உதவிய அன்பர்களுக்கும்,

இப்பதிப்பகத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில், இப்பொன்னுண்டு மலரை வெளியிட்டுதவிய உயர்திரு. P. சீத்தாராமன் M.A., [தலைமைப் பொக்கிஷதார், மர்க்கண்டைல் பாங்கு, சென்னை] அவர்களுக்கும், எங்களது உளங்கனிந்த நன்றியை இப்பதிப்பகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்,

இங்ஙனம்,

சென்னை
27—5—73

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் குருபூஜைப்
பொன்னுண்டு மலர் பதிப்புக் குழுவினர்

ஓம்

பொன்விழா மலர்

உள்ளுறை

பொருள்	ஆசிரியர்	பக்கம்
வாழும் வழி	'பாலகவி' திரு. M. K. வேங்கடராமனுர்	i—xii
செய்திகள்	... ...	a—h
செய்தித்தாள் மதிப்புரைகள்	... ...	h—k
I. சிறப்புப் பகுதி		
1. வழிகாட்டும் விண்ணொளி	... .	2
2. பதிப்பகச் செயலரின் பொன்னேடு	... ...	3
3. ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னையாருடன்	... ...	55
4. ஆண்டவர் விழா நடைபெறும் ஸ்தலங்கள்	... ...	m
II. கட்டுரைகள்		
1. இலக்கியப் பதிப்பகத்தின் இன்றியமையாமை	திரு. மே. வி. வேணுகோபாலப் பிள்ளை, சென்னை	8
2. சமாதி நிலை	திரு. கீ. இராமலிங்கனர் M.A., சென்னை	10
3. ஞானம்	ஓர் அடியார்	18
4. கடவுள் அருவமா? உருவமா? அருவுருவமா?	சுவாமி சாதுராம், சென்னை	22
5. அருள்வேட்கை	திரு. T. G. சரவணப்பிள்ளை, திருவிசைநல்லூர்	28
6. அன்றும் இன்றும் என்றும் ஒன்றே	திரு. R. பாலகுரு, L.C.E., சென்னை	29
7. மனதிற்குக் கூறும் அறிவுரை	திரு. T. ஜெகந்நாத குப்தா, சென்னை	33
8. விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானம்	திரு. வே. குருநாதன் M.A., ஈரோடு	37
9. எங்குளான்? எங்கும் உளான்!	திரு. இரகி. வரதன், கீழ்நெல்லி	41
10. மகா கணபதியின் மகிமை	திரு. மு. பெருமாள், வேலூர் (N.A)	43
11. ஆசிரியரும் அருட்சட்டமும்	திரு. சே. சு. சென்ருயன், நெய்வேலி	52
III. அநுபவங்கள்		
1. அருட்சட்ட அநுபவங்கள்	(அ) திரு. ச. ராஜு செட்டியார், அருணபுரம்	68
	(ஆ) திரு. T. ஜெகந்நாத குப்தா, சென்னை	69
	(இ) திரு. K. V. இராம ஐயங்கார், சென்னை	70
	(ஈ) திருமதி. G. சத்தியவதி, குடந்தை	70

பொருள்	ஆசிரியர்	பக்கம்
2. குருகடாக்ஷம்	திரு. S. கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஆடுதுறை	59
3. சுவாமிகள் பொன்னுண்டுப் பாதயாத்திரை	திரு. வே. இராமலிங்கம் B.E., நெய்வேலி	73
4. பாதயாத்திரை அநுபவங்கள்	திருமதி & திரு. S. சந்திரஹாசன் B.A., மேட்டூர் அணே	81
5. வேலூரின் கண் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்	திரு. பெத்த பெருமாள் ஆச்சாரி, வேலூர்	65
6. குருநாதர் அருளாட்சி	திரு. இரெட்டியப்பட்டிசாமி பிள்ளே, வேலூர்	79

IV. கவிதைகள்

1. மதுரைப் பரிபூரண விநாயகர் துதி	... ...	1
2. இரெட்டியப்பட்டிப் பெருமான்	திரு. கி. வா. ஜகந்நாதன், M.A., சென்னே	9
3. குருநாதர் துதி	'பாலகவி'	27
4. சுகம் தருவான், நம்பித் தொழு......	'அடியார்க்கினியான்'	32
5. கருணேயே வடிவாய்......	'பிரம்மானுபூதி' திரு. பெத்த பெருமாள் ஆச்சாரி, வேலூர்	36
6. தெய்வமதில் உயர்ந்த....... ...	திரு. கோ. தியாகராாசன், தண்ணீர்க்குன்னம்	40
7. அருட்சீர் அகவல்	'திருவடிதாசன்'	49
8. குறள் வெண்பாக்கள்	'சற்குருதாசன்'	51
9. திருப்பாதுகை மகிமை	'திருவடிதாசன்'	56
10. பொலிவு மிகப் பெறுவோம்	'பாலகவி' திரு. M. K. வேங்கடராமன் இரெட்டியப்பட்டி	85
11. ஸ்ரீ குருநாதா பாஹிமாம்	குமாரி. G. பிரேமலதா, குடந்தை	93
12. தும்பிக்கை தேவன் துணே	திருமதி. T. J. தேஜோவதி அம்மாள், சென்னே	92
13. கனவிடைக் கண்ட காட்சி	கவிஞர் கார்வண்ணன், சென்னே	89
14. கலந்து இன்புற விரைந்து வகைசெய்	திருமதி. S. கிருஷ்ணவேணி சிவராட்ஜம், ஆப்ரிக்கா	91
15. மேகமும் மழையும்	ஆனத்தூர், திரு. M. K. வேங்கடராமன்	n
16. திருவடி வாழ்த்து	... ...	95

V. தெலுங்குப் பகுதி

குறிப்பு : (1) இம்மலரில் ஆண்டவர் என்னும் சொல், சற்குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளேக் குறிக்கும்.

(2) உடையவன் என்னும் சொல், பரம்பொருளாகிய ஸ்ரீ பரிபூரண விநாயகரைக் குறிக்கும்.

(3) இம்மலரில் காணும் குற்றம் பொறுத்து, குணம் கொள்ளுமாறு வேண்டுகிருேம்

INDEX TO ADVERTISERS

Sl. No.	*Name of Advertiser*			*Page No.*
	FULL PAGE			
1.	D. V. P. Bakery, Vellore-4 (N.A.)	...	...	xvi
2.	Mamidi Manavala Chetty & Co., Madras-1.	...	...	76
3.	Narasu's Coffee, Salem-1.	...	...	Cover Third
4.	National Industries, Madras-81.	...	...	Telugu Page
5.	Raju Chettiar & Bror. P.A , Coimbatore-1.	...	...	Cover Fourth
6.	Sithanathan Co., Palani	...	...	Cover Second
7.	The Mettur Chemical & Industrial Corporation Ltd , Mettur Dam-2.	...	...	'a'
8.	The Mylapore Hindu Permanent Fund Ltd., Madras-4.	...	...	94
9.	The South India Glass & Enamel Work Ltd., Salem-7.	...	...	84
10.	United India Roller Flour Mills Pvt., Ltd. Madras-81.	...	...	'f'
11.	Vummidi Ramaiah Chetty Guruswamy Chetty & Co , Madras-1.	...	...	74
	Three Quarter Page			
12.	Margabandu Iyer & sons. K. Vellore-4, (N.A.)	...	...	xiv
	Half page			
13.	Adi Kalathu Original Nei Mittai Kadai, Madurai-1.	...	...	39
14.	Ariyan Soap Mfg Co., Coimbatore-18.	...	...	88
15.	Balaji Diamond Co., Trichy-8.	...	...	40
16.	Bharath Traders, Erode-1.	...	...	46
17.	Binny Ltd.,-Clearing & Forwarding, Madras-1,	...	...	26
18.	Binny Ltd.,-Steamer and Travel Agents, Madras-1.	...	...	xiii
19.	Gandavadi Sreeramulu Chetty & Sons ,,	...	...	xv
20.	Karthikeya Finance Corporation. ,,	...	...	7
21.	Krishnaswamy Chetty & Co., N. Pondicherry-1.	...	...	83
22.	Krishnaswamy Mudaliar & Son. S., Vellore-4 (N.A.)	...	...	31
23.	Madras Engineering Co., Madras-1.	...	...	'h'
24.	Mahalakshmi Embroidery and Zig Zag works., Madurai-1.	...	...	88
25.	Murugan Lodge, Vellore-4. (N.A.)	...	...	'b'
26.	Muthusamy Chettiar & Co., C. B. Madras-1	...	...	87

Sl. No:	*Name of Advertiser*			*Page No.*
27.	Nagarajan, G. Vellore-4 (N.A.)	...	...	64
28.	Nalli Silk Emporium, Madras-17.	...	...	'c'
29.	Nandini Diamond Co., Trichy-8.	...	...	54
30.	Nathella Sampath Chetty & Son, Madras-1.	...	...	'b'
31.	Pattabiraman Chettiar, N. Karur.	...	...	87
32.	Ramakrishna & Co., Madras-1.	...	...	93
33.	Ramu Pillai & Sons, R. K. Nagalapuram (Tin. Dt.)	...	...	67
34.	Revoor Padmanabha Chetty's Charities, Madras-1.	...	...	86
35.	Shree Meenakshi Financial Corporation, Namakkal.	...	...	'h'
36.	Sri Dhanalakshmi Finance Corporation, Vellore-4 (N. A.)	...	...	'e'
37.	Sri Kesava Finance Corporation, Madras-1.	...	...	21
38.	Srinevasan & Bros., M.K. Madurai-2.	...	...	'c'
39.	Taj Soap works, Madras-81,	...	...	44
40.	The Modern Automobiles, Madras-2.	...	...	'e'
41.	Tip Top plastic Industries, Madras-1.	...	...	46
42.	Veekaycee Company,, Madras-3.	...	...	xv
43.	Vysia Modern Hotel, Selem-1.	...	...	44
	Quarter page			
44.	Broadway Photo Studio, Madras-1.	...	...	'g'
45.	Gopalakrishna & Son. R. Coimbatore-1.	...	...	'g'
46.	Gopala Padhma Vilas, Salem-1.	...	...	54
47.	Hansa Chemical Industry, Madras-1.	...	...	78
48.	Hotel Ananda, Salem-1.	...	...	'd'
49.	Laljee Godhoo & Co., Madras-1.	...	...	72
50.	Mohan Chitra Sala, Madurai-1.	...	...	72
51.	Murugan Auto Parts, Pondicherry-1.	...	...	35
52.	Murugan oil Mills, Pudupet (S.A.)	...	...	'g'
53.	Popular Transport (Regd), Madras-1,	...	...	48
54.	Prakash Textiles, Salem-1.	...	...	'd'
55.	Radha Jewellary House, Trichy-8.	...	...	'd'
56.	Radha Krishna Jewellary, Trichy-8.	...	...	'd'
57.	Ramachandra Chettiar. C. V. Salem-1.	...	...	'g'
58.	Solar Furnishers, Madras-1.	...	...	86
59.	The Metal Ware House, Pondicherry-1.	...	...	48
60.	The National Litho Press, Sivakasi.	...	...	72
61.	The Oriental Litho Press, Sivakasi.	...	...	72
62.	Thilakam Steel Stores, Vellore-4. (N.A.)	...	...	xiv
63.	Vijaya Silk House, Salem-1.	...	...	83

Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham, [Regd.]

MADRAS-1



Founder:

Sri. T. JAGANNATHA GUPTA



Patron:

Sri. K. SHUNMUGAM & family

KANCHEEPURAM

OPENING OF

Sri REDDIAPPATTI SWAMIGAL ILAKKIYA PATHIPPAHAM,

***By* Sri. K. RAMALINGANAR, M.A., (1971)**

Smt. S. Mangaiyarkarasiar,
Tamil Vidwan, Kancheepuram.

Sri. M. K. Venkataraman,
Reddiappatti.

OFFICE BEARERS

President : **Sri. K. VENKATESAN,** B.A.,

Hony. Secretary :
Sri. T. J. Kubendran, (D.H.M.C.T.)



Hony. Treasurer :
Sri. R. Balaguru, L.C.E.,

COMMITTEE MEMBERS



Sri. R. Nagaraja Iyer.

★

Sri. K. Sundaram Chettiar.

Sri. Thallam Kuppusamy.

★

Sri. T. R. Sivaprakasa Mudaliar.

COMMITTEE MEMBERS (*Contd.*)

Smt. T. B. Santhakumari.



Sri. K. Krishnamurthy Guptha, L.E.E.,



Sri. V. Gurunathan, M.A.,



Sri. S. Gurunathan, (M.Sc.,)

வாழும் வழி

பாலகவி
திரு. M. K. வேங்கடராமன்

இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் யாவும் சிறப்பாக, இன்பமாக வாழ விரும்புகின்றன. அழியாப் பெருவாழ்வு, ஆனந்த வாழ்வு, நித்திய வாழ்வு அமைய வழி எது ? என்பதே ஆன்ருேருடைய வினு? அவ்வாழ்வு வாழ, மிகச் சிறந்தது இல்லறமா? துறவறமா? என்ற ஐயமும் வாதமும் பலவாருகப் பெருகி உள்ளன. இந்நிலையில், தானும் வாழ்ந்து, தன்னைச் சேர்ந்தோர்களையும் வாழ வைக்க, உலக மக்களுக்கும் துன்பில்லா இன்ப நெறிகாட்டியருள வல்ல வழியை வகுத்துத் தொகுத்து அளிப்பதே குருநாதரின் திருவருட் சட்டமாகும்.

திரு அவதாரம்

திருவருட் சட்டத்தை உலகப் பொது நெறியாக வகுத்து வழங்கி, அருளாட்சி புரிந்துவரும் குருநாதர், அமிழ்தினும் இனிய தமிழ் மொழி வழங்கும் தென் பாண்டி நாட்டில், நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டிக்கு 28 மைல் தொலைவிலுள்ள நாகலாபுரத்தை அடுத்த இரெட்டியப்பட்டி என்னும் தலத்தில் சைவ வேளாள மரபில் (கி.பி. 1856) நள வருடம் புரட்டாசி மாதம் இரேவதி நாளில் அவதரித்தனர். 'ரெட்டியப்பட்டி, என்னும் ஊர்ப்பெயரை உற்று நோக்கினுல், (ஒற்றெழுத்து நீங்க) ஐந்தெழுத்துக்களால் ஆன பஞ்சாக்ஷரத் தலமாக விளங்குதல் காணலாம்.

சுவாமிகள் அவதரித்தவுடனே தேவர்கள் மலர் மழை பொழிந்து வாழ்த்தினர். முனிவர்கள் போற்றி மகிழ்ந்தனர். இயற்கை முழுதும் வணங்கி வாழ்த்தியது. குழந்தையின் அருளழகைச் கண்ட பெரியோர். 'இது தெய்வக் குழந்தை எனப் போற்றினர். 'சுப்ரமண்யம்' எனத் திருநாமம் சூட்டினர்.

குழந்தைப் பருவம்

சுவாமிகள் குழந்தைப் பருவத்தில் மற்ற குழந்தைகளோடு சேராமல், தனித்து இருப்பதும், பூசை அறைக்குள் அடிக்கடி புகுந்து கொள்வதும், விநாயகர்மீது மலர்களைத் தூவுவதும், வானை நோக்கிச் சிரிப்பதும், திடீரென அழுவதும், மூலை நோக்கி முழந்தாளிட்டுப் பணிவதும், சில சமயம் கண்ணை மூடிக் கொண்டு மவுனமாயிருப்பதும் கண்டு, 'இக் குழந்தைக்குப் பைத்தியமோ!' என்றனர் சிலர். 'இது உழல வந்த குழந்தையல்ல; உலக மக்களை உய்விக்க வந்த குழந்தை' என்றனர் சிலர். இப்படிச் சில ஆண்டுகள் கடந்தன.

கல்வியும் தொழிலும்

சுவாமிகள் ஆங்கிருந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் எழுதப் படிக்கப் பயின்றனர். பயின்ற காலம் சொற்பமே எனினும், இவர் குருவுக்கு மிஞ்சிய சீடராகச் சிறந்த அறிவு வளர்ச்சியுடன் திகழலாயினர். சிலம்பப் பயிற்சியில் சிறந்து, நல்ல உடல் உரத்துடனும் திகழ்ந்தனர். பிறகு, தம் குலத் தொழிலாகிய விவசாயத்தில் ஈடுபட்டனர். அருளாளராகிய நம் சுவாமிகள் திருவடி பட்டதும், அவர் ஏர் பிடித்து உழத் தொடங்கியதும், நிலம் பன் மடங்கு விளைவைத் தந்தது. 'சுப்ரமண்யம் கைராசி உடையவன்' என உற்ருரும் மற்ருரும் உவந்து போற்றினர். புகழ்ச்சிக்கு அடிமையாகாத நம் அண்ணலாரின் உள்ளம், அக்காலத்தில் பஞ்சத்தால், பொழுதுக்கும் உழைத்தும், அரை வயிறும் உண்ண முடியாது பசியால் வாடிய ஏழை மக்களின்பால் சென்றது. உடனே, தூத்துக்குடிக்கு வண்டி கட்டிச் சென்று உணவுப் பொருள்களை வாங்கி வந்து, கொண்ட விலைக்கே விற்று, ஏழை எளியவர்க்கு இனிது உதவினர். இச்செயல் கண்ட பெற்ருேர்க்கும் உற்ருேர்க்கும் இவர்மீது வெறுப்பு தோன்றலாயிற்று.

ஆலவாயடைதல்

இஃதறிந்த நம் அண்ணலார். தாம் இவ்வுலகிற்குச் செய்ய வந்த அரும் பெருஞ் செயலைத் தொடங்கவேண்டிய காலம் நெருங்கி விட்டதென்று உணர்ந்து. வீட்டை விட்டுக் கிளம்பி நேராகத் திருச்செந்தூர் சென்றனர். அங்கு மயில் ஒன்று ஆனந்தமாகத் தோகை

விரித்தாடும் காட்சியைக் கண்டு களி மிகக் கொண்டனர். பின்னர், முருகப்பெருமானின் அருட்காட்சியும் கண்டு ஆனந்தித்து, அருள் திறம் போற்றி, இருநாள் தங்கி, அங்கிருந்து நடந்து மதுரைமாநகர் சேர்ந்தனர்.

அங்கயற் கண்ணம்மையின் ஆலயம் சென்று, அகங்கசிந்து உருகித்தொழுது, அவ்வருளன்னை யின் அரவணைப்பைப் பெற்றனர். உடம்பைக் கொண்டு உயர் சாதனம் செய்து ஒப்பிலாப் பேரருள் பெற்று உலகுக்கு உதவுதல் வேண் டும் எனத் திட்டமிட்ட இவர், உலக வாழ்வுக் குரிய ஒரு தொழிலில் அமர, உண்மையும் நேர் மையும் உடைய ஒரு வியாபாரத் தலத்தை நாடினர். அங்கயற் கண்ணம்மை ஆலயத்திற் கெதிரில் சீமைச்சாமான்கள் விற்கும் உருண்டை மீரா முகைதீன் இராவுத்தர் கடையில் கணக் குப் பிள்ளையாக அமர்ந்தனர். சுவாமிகள் அங்கு சேர்ந்தவுடனே, அவர்களின் வாணிபம் பன்மடங்காகப் பெருகலாயிற்று.

இல்லறப் பெரியார்

சுவாமிகள் நாள்தோறும் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து வைகை நதிக்கேகி, நான்கு மணிக்குள் நீராடி, முன்னவனுர் வழிபாடு ஆற்றி வந்தனர். பெற்ருேரும் உற்ருேரும் சுவாமிகள் மதுரையில் உள்ளதையறிந்து, வந்து பார்த்து, மாரியம்மை என்ற ஒரு பெண்ணை இவர்க்குத் திருமணம் முடித்து வைத்தனர். அதன் பின்பும் சுவாமிகள் அருள் நெறியில் கனிந்து உயர்நிலை எய்திக் கொண் டிருந்தனர். இவரது திருமுகப் பொலிவையும், திருக்கண்களின் ஒளியையும் கண்ட அன்பர்கள் பலரும் இவரை 'சுவாமி! சுவாமி' என்று போற்றலாயினர். இருவரது ஊராகிய இரெட்டியப்பட்டி என்பதைச் சேர்த்து 'இரெட்டியப்பட்டி சுவாமிகள்' எனக் குறிக்க லாயினர்.

அருட்பெருங்காட்சி.

சர்வஜித்து ஆண்டில் ஒரு நாள் சுவாமிகள் வைகை நதியில் நீராடி தியானத்தில் அமரச் செல்லுகையில் அற்புதமான ஜோதி ஒன்றைக் கண்டனர். அருகில் செல்லச் செல்ல அவ்வருட் ஜோதியில் தம் குரு மூர்த்தியாகிய விநாயகப் பெருமானின் அருளுருக் காட்சியைக் கண்டு, அகமிக மகிழ்ந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக, ஓடிச்சென்று ஆலிங்கனம் செய்து கொண்டனர். அருட்காட்சி யளித்த முன்னவ ஞர், நம் சுவாமிகள் கழுத்தில் ஒரு மலர் மாலை சூட்டி அருள்மணம் கொண்டு, ஒரு சிலர் விக்ரஹமாக மாறி விட்டனர். வைகைமா நதியின் தென் திருக்கரையில், ரயில் பாலத் தின் மேற்கில் நடந்த இவ்வற்புதத்தைக் கண்ட நம் சுவாமிகள் ஆனந்தக் கூத்தாடி, எல்லாம் வல்ல இறைவனின் அருள் திறத்தைப் போற்றிய வண்ணம் அம் மூர்த்தியை எடுத்து, அருகில் இருந்த அரசமரத்தில் அடியில் அமர்த்திப் 'பரிபூர்ண விநாயகர்' எனத் திரு நாமம் சூட்டி, ஆற்றுநீர் கொண்டு அபிஷே கித்து, நறு மலர் சூட்டி வழிபாடு செய்து, தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடினுர்கள்.

சித்தி வல்லபம்

இவ்வற்புதங் கண்ட மக்கள் திரள்திரளாக வந்து முன்னவனுரை வழி பட்டும், சுவாமி களிடம் திருநீறு பெற்றும்செல்லலாலயினர். ஊமை கள் பேசலாயினர். செவிடர்கள் செவியாற்றல் பெற்றனர். மலடுகள் மகப் பேறு பெற்றனர். குருடர்கள் கண்ணெளி பெற்றனர். நோயுடை யோர் நோய் தீர்ந்து நலம் பெற்றனர். தீராப் பிணிகள் உடையவரும் அப்பிணிகள் நீங்கி ஆரோக்யம் பெற்றனர். குறையுடையோ ரெல்லாம் குறை தீர்ந்து மனநிறைவுற்றனர். அருள், பொருள், பக்தி, ஞானம் முதலிய யாவும் அவரவர் வேண்டுவ வேண்டியாங்கு பெற்று வியந்து போற்றினர். இந் நிலையிலும் சுவாமி கள் இஸ்லாமியரின் கடையில் கணக்கெழுதும் வேலையையும், வியாபார வளர்ச்சிக்கு ஆவன புரிவதையும் முறையோடு செய்துகொண்டே வந்தார்கள்.

இந்துஸ்தானியும் குரானும்

முகமதியர்களோடு நாள் தோறும் பழகிய தால், இந்துஸ்தானி மொழியையும், இஸ்லா மியக் கொள்கைகளையும், அம்மதத்தின் நுணுக் கங்களையும், அடிப்படை உண்மைகளையும், முடிந்த முடிவுகளையும் உணர்ந்து கொண்டார் கள். மேலும் அவர்களின் மொழியிலும், அவர் களின் வேதமாகிய குரானிலும் மிகவும் திறன் உடையவராகவும் விளங்கினுர்கள்.

பம்பாய் வாணிபம்

அதுபோதுகடையின் தலைவர்கள் பம்பாயிலே கப்பல் வாணிபம் தொடங்கியதால், அதனைக் கவனித்துக் கொள்ள சுவாமிகள் அங்கு செல்ல வேண்டிய தாயிற்று. அங்கும் தம் அருள்நெறியினைச் செவ்வையுறப் பேணி, ஞான வளர்ச்சியெய்திய வண்ணமே இருந்தனர்.

கப்பல் வாணிபம் சிறப்பான முறையில் நடைபெற்றது. கடையின் தலைமையிடமான மதுரையிலும், சிளை நிறுவனமான பாளையங்கோட்டையிலும் கணக்குகள் ஏராளமாகக் குவிந்து விட்டன. அவைகளைச் சரிபார்க்க அவகாசமே இல்லாதபடி வாணிபம் வளர்ந்து கொண்டே சென்றது. சுவாமிகள் இங்கு வந்தால்தான் கணக்குகளை ஒழுங்கு படுத்த முடியும் என்று கடையின் தலைவர்கள் எண்ணலாயினர்.

அம்மை மீனுட்சி

இந்நிலையில் ஒருநாள் அவர் முன் அங்கயிற் கண்ணம்மை தோன்றி 'நம்மை மறந்தனையோ!' என்று கூறி மறைந்தனர்; அம்மையின் அருளழைப்பை உணர்ந்த சுவாமிகள், "உம் திருவருளை மறக்க முடியுமா? இதோ வந்து விட்டேன் தாயே!'' என்று கூறி, மதுரைக்குப் புறப்பட ஆயத்தமாயினர். புறப்பட்டு வரும்படி கடையின் தலைவர்கல் அனுப்பிய செய்தியும் சேர்ந்தது. சுவாமிகள் புறப்படலாயினர். வழியில் சென்னையில் இறங்கிப் பல இடங்களைப் பார்த்தனர்.

விவிலிய வேதம்

அப்போது கிறிஸ்தவ மதப் பாதிரிமார்களையும், அரசாங்க அலுவலர்களையும் கண்டு தொடர்பு கொள்ள நேர்ந்தது. கிறிஸ்தவமதத்தின் சாரத்தையும், நுணுக்கங்களையும் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

ஆட்சியின் அமைப்பு

சட்டத்தினை அமைத்து அதன்படி அரசாங்கம் செயல் புரிந்து வருவதையும் நன்கு புரிந்து கொண்டார்கள்.

இறைவனது அருளாட்சியின் அற்புதத்தையும், அப்பெருமானின் அருட்சட்ட அமைப்பையும், அதன் பெருமையையும் உன்னி, உன்னி வியந்து கொண்டும், மற்றும் வழியில் உள்ள பல ஊர்களிலும் வியாபார அலுவல்களையும், மக்களின் மன நிலைகளையும், சமய உணர்ச்சிகளையும் பார்த்துக் கொண்டு மதுரை சேர்ந்து, கடைக் கணக்குகளைக் கவனிக்கலாயினர்.

அகமுக நோக்கம்

ஆயினும் அவர்களின் கருத்தெல்லாம் உடையவனிடமே பதிந்திருந்தது. சுவாமிகளின் திருவருளால் முன்னேற்றம் பெற்று வந்த அடியவர் பலரும், புதிய அன்பர்கள் பலரும் திரண்டு வந்து மேன்மை பெறலாயினர். அடியவர் பலரும் கூடி சுவாமிகளின் அருளாசியுடன் பரிபூர்ண விநாயகருக்கு ஆலயம் அமைத்துத் திருக்குடமுழுக்கும் செய்வித்தனர் பின்னர் மக்கள் கூட்டம் ஏராளமாக வந்து, பரிபூர்ணரைச் சேவித்தும், சுவாமிகளின் அருளாசிகள் பெற்றும், நலம் பல எய்திச் செல்லலாயினர். பிறகு பரிபூர்ண விநாயகர் திருக்கோவிலுக்குத் தென்புறத்தில் உள்ள கடகம்பவனத்தையும் அதைச் சார்ந்துள்ள இடத்தையும் அக்கோயிலுக்குச் சொந்தமாக்கி, அதில் கடம்பவன நாதர் பிரதிஷ்டையும், திருக்கோயில் அமைப்பும், சுவாமிகளின் ஆமோதிப்பைப் பெற்று அடியார்கள் செய்து முடித்தனர். சுவாமிகள் அகமுக நோக்கம் மிகுந்தவராய்ச் சிறிது சிறிதாக உணவையும் பேச்சையும் குறைத்து வந்து, ஒரு நாள் உணவு சிறிதும் அருந்தாது, முழுமவுனம் ஏற்று அமர்ந்து விட்டனர். அது கண்ட அடியவர்களும், அன்பர்களும், கடையின் தலைவர்களும் ஏது செய்வது எனத் தெரியாமல் திகைத்தனர். பலர் சுவாமிகட்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்றனர்,

பொதிகை அருந்தவம்

இந்நிலையில் சுவாமிகள் ஒரு நாள் மதுரைக்கு நன்றி கூறிவிட்டு, யார்க்கும் தெரியாமல் பொதிகைநோக்கிப் புறப்பட்டு விட்டனர். இயற்கையின் எழிலும், இழுமென இழிதரும் அருவியின் அழகும், அருட்கவின் மிகுந்த கூத்தனின் திருக்கோயிலும் 'வருக! வருக!' என அன்புடன் அழைக்க, சுவாமிகள் குற்றாலம் சென்று சேர்ந்தனர். அருவி நீராடி, ஆண்டவனைச்

சேவித்து, அருட்பூரிப்புடன் தம்அருந்தவத்திற் கேற்ற இடத்தை நாடினர். மலையின்மீது நடந்து சென்று, சண்பகமாதேவியின் திருக் கோயிலைத் தரிசித்து, அங்குள்ள அருவியின் பக்கத்தில் உள்ள குகைக்குட் சென்று ஓராண்டு காலம் தவத்தில் ஆழ்ந்தனர்,

அன்னையார் பணியும், ஆருயிர் பணியும்

இரெட்டியப்பட்டியில் தளர்ந்த நிலையில் உள்ள தம் அன்னையார்க்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணம் திருவருளால் உதிக்க, உடனே இரெட்டியப்பட்டிக்குச் சென்று, அன்னையார்க்கு நாளும் பாத பூசை செய்தும், அவர்களோடு அருளுரை யாடியும் ஆதரவாயிருந்தனர். அன்னையாரும் தம் அருட்புதல்வரின் மேன்மை கண்டு அகம் பூரித்தனர். அடியவர் கூட்டம் ஏராளமாகப் பெருகி, உடற் பிணியும், உள நலிவும் தீர்ந்து நலம் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் சுவாமிகள் கண்மாயோரமாகச் செல்கையில் ஒருகருங்கல் மீது அவர்களின் நாட்டம் சென்றது. அருகிருந்த அன்பரைக் கொண்டு அக்கல்லைப் புரட்டச் சொல்ல, அஃது ஒரு விநாயகர் சிலையாகக் காட்சியளித்தது. அம் மூர்த்திக்குச் 'சித்தி விநாயகர்' எனத்திருநாமம் சூட்டி, ஊரின் கிழக்கேயுள்ள புளியந்தோப்பில் எழுந்தருளச்செய்தனர். அன்பர்கள் ஆங்கொரு கோவில் அமைத்தனர். சுவாமிகள் அங்கு அமர்ந்து அநேக அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர்.

செத்தாரை எழுப்பும் திறன்

இரெட்டியப்பட்டியில் வாழ்ந்த ஆச்சியம்மாள் ஒரு நாள் புன்செய்க் காட்டுக்குச் சென்றிருக்கையில் விஷம் தீண்டியதால் மாண்டனர். உற்றாரிற் சிலர் துணிந்து சுவாமிகளிடம் கொண்டு வந்தனர். சுவாமிகள் உடையவன் அருள் உன்னித் திருநீறு தடவியதும், அனைவரும் வியக்கும்படி ஆச்சியம்மாள் உயிர்பெற்றெழுந்தனர். இத்தகைய அற்புதங்கள் எத்தனையோ நிகழ்ந்தன. இடையிடையே சுவாமிகட்கு அருந்தவ நாட்டம் அதிகமாகிப் பொதிகை அடைந்து தவநிலை பேணலும் பின்னர், அன்னையர் நினைவு வந்து இரெட்டியப்பட்டி சேர்தலுமாக இருந்தனர்.

அன்னையார் அடக்கம்

ஒருநாள் அன்னையார் உடையவன் திருவடி எய்தவே, சுவாமிகள் தம் சகோதரர்களுடன் இருந்து அன்னையாரின் திருமேனியைப் பூதேவியின் திருவயிற்றில் அடக்கம் (சமாதி) செய்து, இறுதிப்பணிகளைச் செய்து முடித்தபின் ஒரு நாற்காலியில் அமர்ந்தனர்.

மண்டல மவுனம்

அமர்ந்தவர் ஒரு மண்டலம் வரை சிறிதும் அசையாது, உணவும் நீரும், பேச்சும் மூச்சும் ஏதுமின்றி மவுனநிஷ்டையில் ஆழ்ந்து விட்டனர். இத்தகைய உயர்நிலையினை முன்பின் கண்டிராத உற்றாரும் மற்றாரும் திகைத்து வருந்தினர்.

ஒரு மண்டலம் கழித்தபின் ஒரு நாள் சுவாமிகளின் திருநயனங்கள் சிறிதே திறந்தன. அது போது அருகிலிருந்தவர்கள் அவர்தம் திருமேனியைத் தொட்டு உலுக்கியும், உரத்த குரலில் பேசியும் சுவாமிகளை உலக நிலைக்குக் கொண்டுவர முயன்றனர். சுவாமிகளின் நிஷ்டை கலைந்தும் கலையாமலும் இருந்தது. அவர்தம் திருவுள்ளம் உடையவன் கழல்களிலேயே ஊன்றிக்கிடந்தது. ஆதலால் அவர்கள் எழுந்து சென்று மாயமாய் மறைந்து விட்டார்கள்.

பொதிகையிற் பூரணம் பெறுதல்

பொதிகைமாமலையில் சண்பகாதேவி அருவிக்கருகில் முன்னர்த் தவம் ஆற்றிய குகைத்கு நேரே உயர இருக்கும் மற்றொரு குகையில் சென்று அருந்தவத் தாழ்ந்தனர். ஆண்டுகள் பல திருவருளால் உருண்டோடின. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயர்தவ வேந்தர்முன் அகில உலகின் அருளன்னை ஒரு கிழவி வடிவில் தோன்றி அருந்தவக்கனலால் மிகமிக மெலிந்துள்ள நம் சுவாமிகட்கு அருவி நீர் பருகுவித்து ஆறுதலளித்து மறைந்தனர். சுவாமிகள் மீண்டும் அருந்தவத்து ஆழ்ந்தனர் மேலும் பல ஆண்டுகள் கழிந்தன. உடையவன் அருளைப் பரிபூர்ணமாகப் பெற்று, இரண்டற்ற நிலையில் ஒன்றிக்கலந்து, ஒப்புயர்வற்ற பேரானந்த அநுபவமாம் அருளமுதப் பெருங் கடலுள் திளைத்துத் திகழலாயினர்.

உயர்ப் பெருங்கருணை

உலகவர் நல்வினையும், உடையவனின் அருட்குறிப்பும் ஒருங்கிணைய, சுவாமிகளின் உயர் சமாதி நிலை ஒரு சிறிது கலைந்தது. தாம் பெற்ற பேரின்பத்தினை உலகில் வாழ் அனைத் துயிரும் பெறவேண்டும் என்ற உயர் பெருங் கருணை அவர்களின் அருட்டிருவுளத்தில் தோன்றலாயிற்று. ஏழை மக்களும் கல்வியறிவு பெறாதவரும் கூட, நாடு, இனம், மொழி, சமயம் வயது முதலிய எவ்வித வேறுபாடுமின்றி, எக்காலத்திலும் எவரும் கைக்கொண்டு, இம்மையின்பமும். உடலுரமும், பிணியிலா வாழ்வும், துயரிலா உள மும் பெற்று, அருள்நெறி பேணி, இனி பிறவாப்பேரின்ப நிலையினை எய்தி உய்யத் தக்க எளிய ஒரு நெறியினை அருளா லுணர்ந்து, 'சட்டம்' என்ற பெயரில் அதனை உலகுக்களிக்க உடையவனின் பரிபூர்ண சம்மதத்தையும் பெற்று, உலகுக்கு உபகரிக்க வேண டி, பக்குவமிக்க அடியவர்களின் இருப் பிடம் நாடிச் செல்லாயினர்.

அடியவர்க்கு அருளல்

இதற்கெனத் தோன்றிப் பற்பல ஊர்களில் மூலை முடுக்குகளிலெல்லாம் வாழ்ந்து வந்த பக்குவ ஆன்மாக்களின் இருப்பிடம் நாடிச் சென்று, அந்நல்லடியார்களைக் கண்டு, அவர் களின் வினைத்தளை களைந்து, அன்பினால் ஆண்டு, அருட்சட்டச் செந்நெறியைக் கடைப் பிடிக்கச் செய்து அருள்பாலிக்கலாயினர்.

அச்'சட்டத்தின்' சிறப்பான கொள்கைகள் இங்கு சுருக்கமாக உள்ளன :

1. ஒவ்வொரு நாளும் விடியற்காலை 4 மணிக்குமேல் 5 மணிக்குள் பச்சை நீரில் முழுக வேண்டும்; தலை நனைய நீராட வேண்டும்.

2. குடிக்கவோ, குளிக்கவோ, எக்காரணம் கொண்டும் வெந்நீரைப் பயன்படுத்தலாகாது.

3. நீராடி முடிந்ததும், விநாயகர் கோவி லுக்குச் சென்று மும்முறை வலம் வந்து, மன முருகி வழிபட்டு வணங்கவேண்டும். [எந்த மதத்தினராயினும், தத்தமக்குரிய வழக்கப்படி வழிபாடு செய்யலாம்] தண்ணீரில் திருநீறும் துளசியும் இட்டு உள்ளுக்குப் பருக வேண்டும்.

4. உலகெலாம் படைத்துக் காக்கும் ஒரு பரம் பொருளை பல மதத்தினர் பல உருவங் களில் வழிபட்டுப் பயனடைகின்றனர்; ஆனால் பரம்பொருள் ஒருவரே என்ற தீர்மானமான எண்ணம் கொள்ள வேண்டும். எந்த மதத்தினை யும் நிந்தித்தல் கூடாது.

5. புலாலுண்ணல், பொய் பேசல், கள் குடித்தல், சூதாடுதல், திருடுதல், புகை பிடித் தல், புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்களைப் பயன்படுத்துதல், பொல்லாரோடு உறவாடுதல் முதலியன செய்தல் ஆகாது.

6. எந்நோய் வரினும், எத்துயர் வரினும் எத்தகைய சிக்கல் ஏற்படினும், ஒரு மருத்துவரையோ, ஒரு மனிதரையோ தஞ்சம் என்று அடையாது, எல்லாம் வல்ல இறை வனையே தஞ்சம் எனப் பற்றி, உறுதியாக நின்று உயர்பயன் பெறுதல்.

7. நோயுற்ற காலை இருவேளை பச்சை நீரில் முழுகித் திருநீறு பூசி, திருநீறும் துளசியும் இட்ட தீர்த்தம் அருந்தி மனமுருகி இறையருளை நாடி, அவனருள் துணையால் நோய் நீக்கம் பெற்றுப் பயனடையவேண்டும். விஷக்கடி, வெட்டு ரணம், பிரஸவம் முதலிய எதற்கும் மருத்துவம் நாடாது, திருநீறு, தீர்த்தம் கொண்டே அருட்பயன் காண வேண்டும்.

8. வைத்தியம், ஜோதிடம், மாந்திரிகம் இவைகளை நம்பி ஏமாறாமல், மருந்து. மணி மந்த்ரம் முதலியன மருவாமல், 'எல்லாம் வல்ல கடவுளே கதி' என்ற பரிபூரண நம்பிக்கை யோடு, தளராத நெஞ்சத்துடன், இறைவனருள் நாடி அருளாற்றலால் அனைத்து இடுக்கண் களையும் வென்று நற்பயன் பெறுதல்.

9. இந்தத் தீது அகன்றால், இந்த நன்மை கை கூடினால் இன்னது செய்கிறேன் என்று தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கத்தைக் கைவிடுதல்.

10. வெள்ளிக்கிழமை தோறும் ஒரு வேளை யாவது உணவைக் குறைத்துக் கொண்டு, விரதம் இருந்து பயில வேண்டும்.

11. எப்போதும் ஆண்டவர் திருநாமத்தை மனனம் செய்த வண்ணம், உடல், பொருள், ஆவி அனைத்தையும் உடையவனிடம் ஒப்படைத்து, அச்சமும் பற்றும் அணுவளவும் இன்றி, அருள் வாழ்வு வாழப் பழகுதல் வேண்டும்.

12. தினந்தோறும் ஆண்டவர் அருளை வேண்டி, எந்தப் பிற எண்ணமும் இன்றி,

அமைதியாக அமர்ந்து, அருள் நிட்டை பேணி. ஆனந்தம் எய்தப் பழக வேண்டும்.

13. சட்ட அனுட்டானத்தில் உள்ளவர்களில் யாருக்காவது உலகில் உலாவும் காலம் முடிந்து உயிர் அடக்கமாக நேர்ந்தால், அதற்காக வருந்தாது அவர்களின் உடலை எரிக்காது, மண் மறைவு (சமாதி) செய்தல் வேண்டும்.

14. உலக விவகாரங்களில் சிக்கல்கள் நேரும் போது, அறக்கடலாகிய இறைவனின் அருள் துணை நாடி அற முடிவைப் பெற முயல வேண்டுமேயன்றி, அறமன்றம் நாடி விவகாரங் களை விபரீதமாக வளர்த்துக் கொள்ளுதல் கூடாது.

15. சட்ட நெறியில் ஈடுபட்டுள்ளோர் தவறி நடந்தால், அவர்கட்கு அறிவுறுத்தத் திரு வருளால் உடல் உபாதி முதலிய தண்டனை ஏற்படலாம். அவர்கள் உடனே உண்மையை உணர்ந்து, தவறு புரிந்தமைக்கு மன்னித்து அருள் புரியுமாறு இறைவனை உருகி நினைந்து வேண்டிக் கொண்டால், உடனே பரிஹாரம் ஏற்படும். ஏற்பட்ட தண்டனை நிவர்த்தியாகும்.

16. 'வேலைக்கு ஏற்ற கூலி' என்பது போல், எந்த அளவு உறுதியும் ஊக்கமும் கொண்டு கைப்பற்றுகிறோமோ, அந்த அளவுக்குக் கை மேல் பயன் கிட்டுவதையும், தூய நல்வாழ்வு அமைவதையும், இறைவன் அருள் முன்னின்று எல்லா வகைக்கும் வழிகாட்டி அழைத்துச் செல்வதையும், நாம் நன்கு உணர்ந்து அருள் துணை கொண்டு முன்னேறலாகும்.

அடியாரைத் தேடும் அருளாளர்

உடையவன் அருளைப் பெற்று உயர்ந்த சட்டத்தை உலகுக்கு வழங்க வேண்டும் என்னும் அவா சுவாமிகளுக்கு நிரம்ப இருந்தது. சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற இருந்த ஆன்மாக்களும் பக்குவம் பெற்றிருந்தன. எனவே, சுவாமிகள் தம் இச்சையின்றி, உடைய வன் அருள் செலுத்திய வண்ணம் ஆங்காங்கு சென்று அருள் மழை பொழிந்தார்கள். தூத்துக் குடி, கொக்கிறகுகுளம், சாத்தூர், மதுரை முதலிய இடங்களில் சுவாமிகள் எழுந்தருளி, அடியவர் கட்கு அருள் பாலித்து வருவதையறிந்த இரெட்டியப்பட்டி மக்கள் சுவாமிகளை வர வேற்று உபசரித்தனர்.

பின்னர் பொதிகையின் மேற்குச்சாரல் சென்று, சேர நாட்டின் வழியாக, பம்பாய், கல்கத்தா, காசி ஆகிய இடங்களைப் பார்த்துக் கொண்டு தமிழகம் திரும்பினர்.

சுவாமிகள் பல ஊர்களுக்கும் சென்று ஆங் காங்கு பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள் வார்கள். அவர்களும் வறியவனுக்குக் கருந் தனம் கிட்டியது போன்று மிக ஆவலுடன் சுவாமிகளின் அருள் உபதேசத்தை இறுகப் பற்றிக் கொள்வார்கள். சுவாமிகள் எந்த வசதி யையும் எதிர் பார்த்துச் செல்லவில்லை. யாரிட மும் எந்த விதக் கைம்மாறும் எதிர் பார்க்க வில்லை.

தம் செயலற்று, உடையவனது அருட் குறிப் பின் வண்ணம் அருளுலா செய்து வந்த நம் சுவாமிகளால் ஆங்காங்கும் ஆட்கொள்ளப் பெற்ற அடியார்கள், அன்பிற் சிறந்து, அருளிற் கனிந்து மணி மணியாகத் திகழ்வது கண்டு, உடையவனது அருட்கருணையை உன்னி வியந்து, அடியவர்கட்கு விளக்குவதுண்டு.

மணி மணியாக அடியவர்களைத் தேர்ந் தெடுத்த பின், பயிர் செய்தோன் அடிக்கடி அப்பயிரைப் பார்த்து, நீர் பாய்ச்சி, வேண்டுவன செய்து பேணுதல் போல, அவ்வடியார்களைக் கண்டு சட்ட அனுட்டானத்தில் ஊக்கம் ஊட்டி வருவார்கள்.

தேர்ச்சி பெற்ற அடியார்களைக் கண்டு, மற்ற அடியாரும் தேர்ச்சி பெறும் பொருட்டு, சுவாமி கள் சில அடியார்களின் இல்லங்களில் சில நாள் தங்கியிருப்பதும் உண்டு. அதுபோன்று சுவாமிகள் தங்கி அருள் புரிந்த இடங்களில் சில ஈண்டு குறிக்கப் பெறுகின்றன.

சுவாமிகள் அடியார்களுக்குக் கடிதம் எழுதுகையில் "அடியார்கள் பாத தூளிகளுக்கு அநேக வணக்கம்'' என்று எழுதச் சொல்வார்கள். இதன் மூலம், அடியார்களை அவர் எவ்வளவு போற்றுகின்றார். என்பது நம்மை நெக்குருகச் செய்கின்றது.

திருச்சாத்தனூர்

திருவெண்ணெய்நல்லூரிலிருந்து சுமார் 4 மைல் தொலைவிலுள்ள திருச்சாத்தனூரில் பெரிய கம்பத்தம்-திரு. முத்துராமரெட்டியாச் அவர்களை ஆட்கொண்டு பேரருள் புரிந்திருக் கிறார்கள். அவ்வூரில் ஒரே வீடாக ரிஷியாச் ரமம் போல் உள்ள அவர்களின் இல்லத்திற்கு சுவாமிகள் பலமுறை சென்றிருக்கிறார்கள். ஒரு சமயம் திரு. ரெட்டியார் அவர்களின் மனைவி யார் திருமதி-பங்கஜம்மாளுக்குக் கண்ணில் சதை வளர்ந்து கொண்டு வந்தது. அவர்களின் தாய் வீட்டினர் மருத்துவ முறையில் பலவித சிகிச்சைகளைச் செய்தும் குணம் காணவில்லை. அவ்வமயம் அங்கு எழுந்தருளியிருந்த சுவாமி கள் தமது திருவிரலை அச்சதை வளர்ந்து வரும் இடத்தில் வைத்துத் தடவிக் கொடுத்து அருட் சட்டம் ஏற்கப் பணித்தனர். அருகிருந்த திரு. பிள்ளையார் குப்பம் தாய் அவர்களை யழைத்து, தினமும் திருவருள் உன்னி அவ் வாறு தடவிக்கொடுத்து வருமாறு பணித்தனர். ஒரு பெரிய கடலையளவு இருந்த சதை கரைந்து கொண்டே வந்து கடுகளவாயிற்று. தொடர்ந்து தடவிக் கொடுந்து வந்திருந்தால் முழுதும் குணமாகியிருக்கும், ஆனால் அம்மையார் தம் சிறிய தகப்பனாராகிய கடலூர்-திரு. பாஷ்யம் ரெட்டியாரின் இல்லத்திற்குச் செல்ல நேர்ந்து விட்டதால், அச்சதை அந்த அளவிலேயே நின்று விட்டது. சென்னையிலிருந்து வந்த மருந்து பார்சலைத் திறந்து பார்க்கையில், அதில் மருந்து இன்றி, புட்டி காலியாய் இருந்தது. இஃதறிந்த அனைவரும் சுவாமிகளின் அருள் மகிமையை உன்னி வியந்து போற்றினர். அம்மையார் இன்றும் சட்ட அநுஷ்டானத்தில் தீவிரப்பற்றுடையவராக இருக்கிறார்கள். சுவாமி கள் திருச்சாத்தனூரில், ‘உடையவன் அருட் கொடி நாட்டப் பெற்றிருக்கிறது’ என்று திரு வாக்கு அளித்தார்கள். அதன் படியே இன்றும் அங்கு அருட்கொடியேற்று விழா நடைபெற்று வருகிறது.

சுவாமிகள் எழுந்தருளியுள்ள காலங்களில், சிறு குழந்தைகள் தம்மை மறந்து சுவாமிகள் பால் வருவார்கள். ‘யார்?’ என்று வினவ நடராஜர், விநாயகர், முருகன் என்று பதில் அளிப்பார்கள். சுவாமிகளின் வருகையை அறிந்த அடியார்கள் அங்கு வந்து, தம் ஐயங் கள் நீங்கப் பெற்று ஆன்ம முன்னேற்றம் அடைந்து செல்வர்.

ஒருமுறை சுவாமிகள் எழுந்தருளியபோது, ஒருவன் அருளாவேசம் வந்தது போலப் பொய் யாக ஆடினான். எல்லா உயிர்களையும் ஆட்டு விக்கும் சுவாமிகளுக்கா இது தெரியாது? உடனே அங்கு இருந்த ஒரு சட்டப்பிள்ளையை நோக்கினார்கள். அப்பிள்ளையின் மீது உண்மை யான அருளாவேசம் வந்து, கையில் பிரம்பு கொண்டு, அந்தப் பொய் ஆவேசக்காரனை, நையப்புடைக்கவே, பொய் நடிப்பாளன் அடி தாங்க முடியாமல், உண்மையை ஒப்புக் கொண்டு சுவாமிகளை வணங்கி மன்னிப்புக் கோரினான்.

வாணியம்பாடி

ஆண்டவர் அருளுலா செய்துவந்த காலை யில் வாணியம்பாடியில் திரு. முனியப்ப செட்டியார் இல்லத்தில் சுவாமிகளுக்கு அபி ஷேக ஆராதனையும் திருவீதியுலாவும் நடத்த ஏற்பாடாகியிருந்தது. சுவாமிகளைப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து திருவீதியுலா கொண்டு வருவது இதர மதத்தவர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. ஆதலால், தடுக்கக் கருதினர். வெளியூர்களிலிருந்து தங்கள் மத குருமார்களை இதற்காக வரவழைத்தனர். அவர்கள் சுவாமி களைச் சந்தித்த பிறகு எந்த முடிவும் செய்ய லாம் என்றனர். தாங்கள் சந்திக்க வருவதாய் முனியப்பசெட்டியாருக்குச் சொல்லியனுப்பினர். சந்தனம், புஷ்பம், கற்கண்டு, பழவகை முதலிய பொருள்களுடன் வந்து சுவாமிகளைக் கண்டனர்.

சுவாமிகள் அவர்கட்கு அன்புடன் நல்வரவு கூறி, எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றே என்பதையும், அப்பொருளையே எல்லா மதங்க ளும் பற்பல பெயரால் போற்றுகின்றன என்பதை யும், அப்பொருளை அடைவதற்கு உயிர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைதான் ‘அருட் சட்டம்’ என்பதையும், குரான் முதலிய வேதங்களின் மேற்கோள்களுடன் மிக விளக்கமாகக் கூறி, அனைவரின் உள்ளத்து ஐயங்களையும் நீக்கி, அருள் தெளிவு உண்டாக்கினர்,

இவ்வுண்மைகளையெல்லாம் சுமார் 4 மணி நேரம் மிக்க அன்போடு செவிமடுத்த மத குரு

மார்களும், ஏனையரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, சுவாமிகளின் உயர் மகிமையையும், அவர்கள் உலகிற்கு செய்யும் அருட்பணியின் சிறப்பையும் உணர்ந்து போற்றிய வண்ணம் உளமிகக் களித்தவர்களாய், சுவாமிகளின் திரு வீதியுலாவிற்கு ஆவன அனைத்தும் மனப்பூர்வ மாகச் செய்ய முன்வந்தனர்.

இவ்வாறு சுவாமிகள் உலகின் பல பாகங் களிலும் அருளுலா நடத்தி, பக்குவமிக்க ஆன்மாக்களுக்கு அருட்சட்ட நெறியை இனம், மதம், செல்வம், கல்வி முதலிய எவ்வித பேத மும் கருதாது, பெருங்கருணையுடன் போதித்து அருள் பாவித்து வந்தனர்.

பிள்ளையார்குப்பம்

மிக உழைத்துப் பொருள் சேர்த்த ஒருவன் அப்பொருளின் அருமையறிந்து பாதுகாத்துப் பலரும் பயன் பெறச் செய்யத்தக்க ஒருவனிடத் திலே ஒப்படைக்க விரும்புவது போல, அருந் தவம் ஆற்றிப் பெற்ற தமது அருட்சத்தியை அளிப்பதற்கு, உரிய பக்குவமுடையார் யார் என்று தேடிவந்தனர்.

பிரஞ்சு இலாகா பிள்ளையார்குப்பம் திரு. வெங்கடபதிரெட்டியாரின் வாழ்க்கைத் துணைவி யாரான திருமதி சொர்ணம்பாள் அம்மையாரை ஆண்டவர் தேர்ந்தெடுத்தனர். முதலில் மேற்படி அம்மையாரைச் சட்ட அனுஷ்டானம் ஏற்கும்படி அவரது தமையனுரான திருச் சாத்தனூர் திரு. முத்துராம ரெட்டியார் அவர் கள் வலியுறுத்தியும், 'மகான்களிடத்தில் வாக் குக் கொடுத்துவிட்டால், பின் தவறலாகாதே' என்ற அச்சத்தால் அம்மையார் சட்டம் ஏற்கத் தயங்கினர். சட்ட அனுஷ்டானம் மேற் கொண்ட தாயாரும், தமையனுரும் மிகவும் வற்புறுத்தியதால் அம்மையார் துணிந்து சட்டம் ஏற்றனர்.

பண்ணுருட்டியில் உள்ள அடியார்கள் இல்லத்திற்குச் சுவாமிகள் எழுந்தருளியிருந்த போது, தம் தாயார், தமையனுர் இவர்களுடன் தரிசிக்கச் சென்ற இவ்வம்மையார் சுவாமிகளை வலம் வந்து வணங்கியபோது, சுவாமிகள் இவ்வம்மையார் யார்? எனத் திருச்சாத்தனூர் சுவாமிகளைக் கேட்டார்கள். அவர் விவரம் கூற ''இனி நம் சொர்ணத்துத் தாய் சட்டத்தை விடுமா?'' என்று கருணையோடு கூறியருளினுர் கள்.

பின்னர் பன்முறை பிள்ளையார் குப்பத்திற்குச் சுவாமிகள் எழுந்தருளியபோது ஒருமுறை திரு. தாய் அவர்களிடம் ''காசி முதல் கன்னியாகுமரி வரை தேடி வந்தது தாயி'' என்று பரிவோடு கூறியருளினுர்கள். சுவாமிகள் தங்கியிருக்கும் காலங்களில் தன்நிலை மறந்து, திரு. தாய் அவர் கள் அன்ன ஆகாரம் ஏதுமின்றி, நீரும்பருகாமல் பரிபூர்ண அன்போடு சுவாமிகளை உபசரிப்ப திலேயே ஈடுபட்டிருப்பார்கள். அவர்களின் தலை சிறந்த அன்பைக் கண்டு சுவாமிகள் அக மகிழ்ந்து, ''அவரே உடையவனது சட்டத் திற்கு உயர்வு கூட்டுவிக்கவல்ல உண்மைச் சட்டாம்பிள்ளை'' என்பார்கள்.

மேலும், 'சட்ட வளர்ச்சிக்கு இவ்வூர் தலைநகர் போல விளங்கும்' என்றும் ஆசீர்வதித்தார்கள். அருட்சட்ட அடியார்களைக் கவனித்துவரும் பொறுப்பு தாய் அவர்களுடையது என்பதைக் குறிப்பிட, சுவாமிகள் ''அடியார்களின் விஷயங் கள் தாயிடம்; தாய் விஷயம் சுவாமியிடம்'' என்று அருளோடு கூறுவார்கள், அத்திரு வாக்கின்படி திரு. தாய் அவர்கள் ஆண்டவர் நெறியில் மிகமிக முன்னேறி, இல்லத்திலேயே பல ஆண்டுகள் அருந்தவம்ஆற்றி, நிர்விகற்ப சமாதி பூர்த்தியடைந்து, ''அருட்சக்தி அன்னை யார்'' என்னும் சிறப்புத் திருநாமத்துடன், அடியார்களுக்குத் தலைமணியாகவும், வழி காட்டியாகவும், அருந்துயர் தீர்த்து அருட்பயன் வழங்கும் தெய்வக் கற்பகமாகவும் அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கி வருகிறுர்கள்.

இன்றும் திரு. தாய் அவர்களின் இல்லமாகிய ஸ்ரீ அருட் சக்தி சந்நிதியில் நடந்து வரும் அருளற்புதங்கள் அளவிறந்தனவாகும்.

அடியார்கள், 'ஆண்டவர் மறைந்துவிட்டால் என்ன செய்வது' என்று ஏக்கமுற்றபோது, சாமி அடைஞ்சும்னு கவலைப்படுதோ? இது அடைய வந்த சாமி யல்லவே! இந்த சாமி எப்போதும் இருக்கும் என்று கருணையோடு கூறியுள்ளார்கள்.

ஒரு முறை பாலூர் திரு. சுப்புராமய்யர் மனைவியார் திருமதி. சீதாலட்சுமி அம்மாள் பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டு, எழுந்து நடக்கவும் இயலாத நிலையில் மிகவும் துன்புற்றனர். ஆயுர்வேதம் முதலிய பலவித மருத்துவ முறைகளைக் கையாண்டும் பயன்தரவில்லை. அவர்களின் தாய் வீடாகிய சாத்தமங்கலத்திற்கு அழைத்துச்சென்று மேலும் வைத்தியம் பார்க்க வேண்டும் என்று அழைத்துச் செல்கையில் இரெட்டிச்சாவடி திரு. நாராயண அய்யர் இல்லத்தில் அருட்சட்ட அடியவரான பிள்ளையார் குப்பம் திரு. சுப்ரமண்ய சாஸ்திரிகளின் குமாரர் திரு. சுந்தரராம அய்யர் கண்டு, தவத்திரு தாய் அவர்கள் அழைத்து வரச் சொன்னதாகக் கூறினர். உடனே சுப்புராமய்யர் பிள்ளையார் குப்பம் சென்று திரு. தாய் அவர்களைத் தரிசித்தனர். நோயுற்ற அவ்வம்மையாரை அழைத்துவரும்படி திரு. தாய் அவர்கள் கூறினர். அய்யர் 'வேண்டாம்' என மறுத்துக்கூறியும் திரு. தாய் அவர்கள் அம்மையாரை அழைத்துவரச் செய்து அருட்சட்டம் ஏற்கப் பணித்து, அங்கேயே தங்கச் செய்தனர். இருநாள் கழித்து அங்கு வந்த திரு. சுப்புராம அய்யர் தம் மனைவியார் பூர்ண குணமடைந்து நல்ல முறையில் எழுந்து உலாவுதைக் கண்டு மிக்க வியப்புற்றனர். ஆண்டவர் அருளால் குணமானது என்று அறிந்து விம்மிதமடைந்து திருவருளைப் போற்றினர். பின்னர் அவர்கள் குடும்பத்தினரும், உறவினர்களும் அருட்சட்டம் ஏற்று, இன்றும் நன்று ஒழுகி, அருட்பயன் பெற்றுத் திகழுகிறுர்கள்.

உயிர் தந்த உறவு

ஒருமுறை புத்தி சுவாதீனமில்லாத ஒருவரை அவர்களின் உறவினர் கொண்டுவந்து, நம் தாயிடம் விட்டுச் சென்றனர். திரு. தாய் அவர்கள் தினமும் அவரை நீராடச் செய்து விபூதி தீர்த்தம் கொடுத்து வந்தனர். ஒரு நாள் அவர் திடீரென அங்குள்ள கிணற்றில் விழுந்து விட்டனர். அது விவரம் தெரியாததால், அவரை எங்கெங்கு தேடியும் காணுமல், கடைசியாக கிணற்றினுள் பார்க்க, அங்கு ஓர் ஆள் மிதப்பது கண்டு, தூக்கியெடுக்கச் செய்து நன்ருகத் துடைத்து திருநீறு தடவித் தேய்க்கச் செய்தனர். அனைவரும் வியக்கும்படி அவர் உயிர்பெற்றெழுந்ததுமன்றி, அவருக்குற்ற பிணியும் விலகி, நல்ல முறையில் புத்தி சுவாதீனத்துடனும் காணப்பட்டனர். பிறகு அவர்களின் உற்ருர்களுக்குக் கடிதம் எழுதி வரவழைத்து அவரை அனுப்பி வைத்தனர்.

சற்குருவைக் காத்த சற்குரு

ஆடுதுறையில் சட்ட அடியரான திரு. S. கிருஷ்ணமூர்த்தி அய்யரின் குமாரன் சற்குரு என்ற இராமசாமிக்குக் காய்ச்சல் வந்து மிகவும் கடுமையாகி, அன்ன ஆகாரமின்றிப் பிதற்ற ஆரம்பித்துவிட்டான். இவனுக்கு முன் பிறந்த பெண்குழந்தை இறந்து விட்டதால், இவனுவது நல்லபடியாக இருக்கவேண்டுமே என்று எண்ணியவராய், அதிகாலை 4மணிக்கு நீராட்டி திருநீறு பூசி, தீர்த்தம் கொடுத்து, பூஜையில் உள்ள ஆண்டவருக்குமுன் படுக்கவைத்து விட்டனர்.

காலை 6 மணி ஆயிற்று, பிள்ளையார் குப்பம் தாயிடம் அவனை அழைத்துச் செல்வதென முடிவு செய்தனர். உடனே அவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினுன். 'பசிக்கிறது' என்ருன். கஞ்சி கொடுத்தனர்; குடித்தான். 8 மணிக்குள் அவன் உடம்பு பூரண குணம் அடைந்தது. உணவு அருந்தினுன். சிரித்து விளையாடினுன். இரயில் நிலையத்திற்கு அவனே நடந்து வந்தான்.

இரயில் வண்டியில் ஏறியபின் இங்குமங்கும் ஓடியாடினுன். கடலூரில் இறங்கி, பிள்ளையார் குப்பம் சென்று ஸ்ரீ தாய் அவர்களைத் தரிசித்த பின் அங்கு மாடிப்படிகளில் ஏறியும் இறங்கியும் குதிப்பதுமாக இருந்தான். காய்ச்சல் கண்ட பையன் என்று யாரும் கூற இயலாதபடி விளையாடினுன்; உணவருந்தினுன். எப்போதும் போல நன்ருக இருந்தான். இன்னும் அவர்கள் குடும்பம் முழுவதும் சட்ட அநுட்டானத்தில் தீவிரப் பற்றுடன் திகழ்கிறது.

பொதுவாகவே சட்ட அடியார்களுக்கு உடம்பு நலம் சரியில்லை என்ருல், பிள்ளையார் குப்பம் புறப்பட்டாலும், பிள்ளையார் குப்பம் ஸ்ரீ தாய் அவர்களுக்கு விபரம் தெரிவித்து அருள் திருநீற்றுப் பிரசாதம் அனுப்பும்படித் தபால் எழுதினுலும் உடனே நோய் குணமாவது வழக்கம்.

ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையார் அவர்களிடம் மட்டுமன்றி, அருட்சட்ட அடியார்கள்

பலருடைய இல்லங்களிலும் அனேக ஆயிரம் அற்புதங்கள் நடந்துள்ளன; இன்றும் நடக்கின்றன; இனியும் நடக்கும். அவற்றில் இரண்டொன்றை இங்கே காணலாம்.

பாம்பு வந்து காத்தமை

அருட்சட்ட அநுட்டானத்தில் ஈடுபட்டிருந்த ஒரு அம்மையார் தினமும் அதிகாலை 4 மணிக்கு ஒரு வாய்க்காலில் நீராடி வருவது வழக்கம். அவர்களின் கணவனுர் சுவாமிகளின் மகிமை அறிந்தவராயினும் சட்டம் ஏற்கவில்லை. ஆனுல் அம்மையாரின் சட்ட வழிபாட்டிற்கு ஏதும் தடை செய்யமாட்டார். அம்மையார் தினந்தோறும் காலை 3-30 மணிக்கு இரட்டைமாட்டு வண்டியில் நீராடப் புறப்படுவார்கள். அவர்கள் மிகுந்த செல்வந்தர்கள் ஒருநாள் வண்டி ஓட்டுபவன் அவர்கள் இல்லத்தில் உள்ள கடிகாரத்தின் முள்ளைத் திருப்பி வைத்து விட்டான். நள்ளிரவிலேயே அலாரம் அடித்தது வண்டிக்காரனும் தயாராக வண்டியைப் பூட்டி நிறுத்திவிட்டு. வீட்டின் கதவைத் தட்டி அம்மையாரை அழைத்தான். விடியல் 3-30 மணியாய் விட்டதென அம்மையார் புறப்பட்டுச் சென்ருர். வண்டி புறப்பட்டதும் வேகமாக ஓடத் தொடங்கியது. அம்மையார் வெளியில் பார்த்து, 'இன்னும் விடியற்காலம் ஆகவில்லை போல் தோன்றுகின்றதே' என ஐயுற்றனர்; வண்டிக்காரனிடமும் கூறினர். அவன் 'விடியற்காலம் ஆகிவிட்டது' என்று சொல்லிக் கொண்டே வண்டியை வாய்க்காலுக்குச் செல்லும் வழியை விட்டு வேறு வழியாக ஓட்டினுன். அம்மையார், "ஏன் வேறு வழியாகச் செல்லுகிருய்?" என்று கேட்டனர். 'அங்கே பாதை சரியில்லை, அதனுல் இப்படிச் செல்லுகின்றேன்' என்று சொல்லிக்கொண்டே வண்டிக்காரன் ஜனசஞ்சாரமில்லாத ஒரு இடத்திற்கு வண்டியை ஓட்டிச் சென்று நிறுத்தி, அம்மையாரை இறங்கச் சொன்னுன். கையில் வைத்திருந்த நீண்ட கத்தியைக் காட்டி நகைகளை எல்லாம் கழற்றி வைக்கச் சொன்னுன்.

அம்மையாருக்கு ஒன்றும் புரியவில்லை. மிகவும் திகைத்து, குருநாதரது திருவடிகளைப் போற்றிய வண்ணம் நகைகளைக் கழற்றிக் கீழே வைத்தனர். திடீரென வண்டிக்காரன் அம்மையாரை அங்கிருந்த கிணற்றினுள் தள்ளிவிட்டு, அருகிருந்த ஒரு பாருங்கல்லைத் தூக்கி அவர்கள் மீது போட நினைத்துக் கல்லைப் புரட்டினுன். அக்கல்லின் கீழிருந்த ஒரு பெரிய நல்லபாம்பு உடனே அவன் கால்களை நன்ருகச் சுற்றிக் கொண்டு, இறுகப் பற்றிக் கொண்டு, படமெடுத்துக் கொத்தத் தயாராக உள்ளதை உணர்த்தியது. வண்டிக்காரன் செய்வதறியாது திகைத்தான். அம்மையார் ஆண்டவரை உன்னி உருகிய வண்ணம் கிணற்றுள் தவித்தனர்.

நீராடுதற்கு வாய்க்காலுக்குச் சென்ற அம்மையார் வெகு நேரமாகியும் வராததை எண்ணிய அவர் கணவர் படுக்கையை விட்டு எழுந்தார். அலாரம் கடிகாரம் தவறுதலாக மணி காட்டுவதை அறிந்தார். வெளியில் வந்து பார்த்தார். சரியாக விடியவில்லை; வெளிச்சமாகிக் கொண்டே வந்தது. வாய்க்காலை நோக்கி நடந்தார். இடையில் வண்டியின் சக்கரங்கள் வேறுவழியில் திரும்பி இருப்பதைப் பார்த்து அவ்வழியே வேகமாக நடந்தார்; வண்டியிருக்கும் இடம் சேர்ந்தார். வண்டிக்காரனைக் கண்டார். "ஏன் வண்டியை இங்கே கொண்டு வந்தாய்? அம்மா எங்கே?" என்ருர். வண்டிக்காரன் நடுநடுங்கினுன். உண்மையை உள்ளவாறு கூறி மன்னிப்புக் கோரினுன். பாம்பு அவன் கால்களை விட்டுவிட்டுச் சென்று விட்டது. அம்மையார் கிணற்றிலிருந்து வெளியில் தூக்கி விடப்பெற்ருர். நகைகளும் காப்பாற்றப்பட்டன. ஆண்டவரின் திருவருள் மகிமையை அனைவரும் வியந்து போற்றினர்.

ரத்தினத்தைக் காத்த ரத்தினம்

அருட்சட்ட அநுட்டானத்தில் குடும்பம் மொத்தமும் ஈடுபட்டுள்ள சென்னை திரு. சம்பசிவ அய்யர் புதுவீடு கட்டினுர். சுவர்கள். எழுப்பி மேலே தளம் ஓட்டியாயிற்று. கைப்பிடிச்

அருட்சட்ட அடியார்களோடு சுவாமிகள் வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் "உடையவன் கணக்கு இப்போதேயா விளங்கிவிடும்? இன்னும் போகப் போகத்தான் விளக்கமுறும்! அவனுடைய அருட்கொடி உலகமெங்கும் பறக்கும்" என்று தம் அருள் திருவாக்கால் கூறுவார்கள்.

சுவர் கட்டப்பெறவில்லை. வேலைக்காரர் மேலே செல்ல கழிகளால் கட்டப்பெற்ற ஒரு ஏணிப்படி அமைக்கப் பெற்றிருந்தது. பள்ளியில் பயிலும் அவர் மகன் மூர்த்தி மேலே சென்று ஒருபுறம் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான். அவருடைய சின்னஞ்சிறு மகன் குருரத்தினம் என்பவன் எப்படியோ மேலேறிச் சென்று விட்டான். கைப்பிடி இல்லாததால் ஓரமாக வந்தான். தவறிக் கீழே விழுந்து விட்டான். கீழே சிமெண்டு தரை இருந்தது. பத்தடி உயரத்திலிருந்து கீழே விழுந்த அச்சிறுவன் மூர்ச்சையுற்ருன். தலையில் நெற்றிக்கு மேல் சற்று அதிகமான காயம் ஏற்பட்டது. இரத்தம் பெருக்கெடுத்தது. சப்தம் கேட்டு வீட்டிலுள்ளோர் ஓடிவந்து பார்த்தனர். தந்தையார் வந்து பார்த்து, அவன்மீது தண்ணீர் ஊற்றி, உடம்பைத் துடைத்து, காயம்பட்டிருந்த இடத்தில் சுவாமிகளின் திருநீற்றைக் கொட்டிக்கட்டு கட்டிவிட்டார். தினமும் நீராட்டம் செய்வித்தார். திருநீறு தீர்த்தம் வழக்கம் போல் கொடுத்து வந்தார். எந்த விதமான மருந்தும் பயன்படுத்தவில்லை; ஒரு வாரத்திற்குள் காயம் ஆறி சிறுவன் பூரண குணம் அடைந்தான்.

கொஞ்சநாளைக்குப் பின் அந்த வீட்டில் இரண்டாவது மாடி அமைக்கும் வேலை நடந்தது. கைப்பிடிச்சுவர் கட்டப்பெருத நிலையில், அதே சிறுவன் மீண்டும் மேலே ஏறி, இரண்டாவது மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டான். 20 அடிக்கு அதிகமான உயரத்திலிருந்து கீழே விழுந்த அந்தச் சிறுவனுக்கு தலையில் அதே இடத்தில் காயம் ஏற்பட்டது மட்டுமின்றி வெகு நேரம் மூர்ச்சையுற்றிருந்தான். முன்போலவே தந்தையார் நீராட்டம் செய்வித்துத் திருநீறு போட்டுக் கட்டிவிட்டார். காயம் சில நாளில் ஆறி குணமடைந்தது. ஆனுல் வெகு உயரத்திலிருந்து விழுந்த காரணத்தால், இருதயத்தில் சற்றுக் கோளாறு ஏற்பட்டது. தலையில் அடிபட்டதால் ஞாபக சக்தி குறைந்தது. தந்தையார் அதற்கும் மருத்துவம் நாடாது, ஆண்டவர் அருளையே நாடி திருநீறு தடவி வந்தனர். சில நாளில் யாவும் குணமாயின.

ஒரு முறை அச்சிறுவனின் தாயும் தமக்கையும் மற்றும் சில மாதர்களும் ஏதோ சில பொருட்கள் வாங்கக் கடைத்தெருவிற்குச் சென்றனர். அவர்களுடன் இந்த குருரத்தினமும் இவன் தமையனுன பிரணவமூர்த்தியும் உடன் சென்றனர். பலகடைகளுள் சென்று பார்த்து ஒரு கடைக்கு வந்தபோது, ரத்தினம் அவர்களுடன் இல்லை. எந்த இடத்தில் விட்டோம் என்று அவர்களுக்குப் புரியவில்லை. அவனைத் தேடிப்பார்த்து அழைத்து வரும்படி மூர்த்தியை அனுப்பினர். அவனும் இவர்கள் சென்ற இடமெல்லாம் சென்று தேடியும் ரத்தினம் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தவண்ணம் மூர்த்தி ஒரு பிளாட்பாரத்தில் போய்க் கொண்டிருந்தான். "அதோ போகிருன் பார்; அதோ போகிருன் பார்" என திடீரென்று அவன் காதுகளில் ஆண்டவர் அருளால் ஓர் ஒலி கேட்கலாயிற்று. சட்டென்று திரும்பிப் பார்த்தான். எதிர் பிளாட்பாரத்திப கூட்டத்தினிடையே ரத்தினம் அழுதவண்ணம் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது. ஓடிச் சென்று பிடித்துக் கொண்டான். தாயாரிடம் கொண்டு போய் விடுத்து நடந்த விவரத்தைக் கூறினுன். அனைவரும் அருட் பெருங்கருணையை உவந்து போற்றினர்.

மற்ருெரு முறை அந்த ரத்தினம் சாலையில் சென்று கொண்டிருக்கையில் சுமையேற்றிச் சென்ற வண்டிச்சக்கரம் அவன் கால்மீது ஏறியதால், கீழே விழுந்து விட்டான். கால் மிகவும் நசுங்கி விட்டது; இரத்தம் பெருகியது. ஒரு வண்டியில் வீட்டிற்குக் கொண்டுவரப் பட்டான். தந்தையார் வழக்கப்படி நீராட்டம் செய்வித்து விபூதி போட்டுக் கட்டிவிட்டார். சிலநாட்களில் கால் ரணம் முழுதும் ஆறி பூர்ணகுணம் ஆகிவிட்டது. அவன் நல்லபடி ஆரோக்கியத்துடன் பள்ளியில் பயின்று வருகிருன். அவர்கள் குடும்பத்திலேயே இன்னும் எத்தனையோ அற்புதங்கள் ஆண்டவர் அருளால் நிகழ்ந்துள்ளன. அனைத்தும் எழுதினுல் மிகவும் வளரும்.

தொலைபேசி மூலம் பேசினமை

சென்னையிலிருந்து அருட்சட்ட அடியார் ஒருவர் வியாபாரத்திற்காகப் பெங்களூர் சென்று ஒரு லாட்ஜில் ரூம் எடுத்துக்கொண்டு பெட்டியை வைத்து விட்டு வெளியில் புறப்பட்டார். வியாபார அலுவலை முடித்துக் கொண்டு ரூமுக்கு வரும்போது இரவு வெகு நேரம் ஆகி

விட்டது. வந்து உடை மாற்றிக்கொண்டு சிற்றுண்டியும் பாலும் அருந்திப் படுக்கச் சென்றார். அடுத்த ரூம்களில் இருந்தவர்கள் ரூம்களைக் காலி செய்துவிட்டுப் புறப்பட்டு விட்ட செய்தியறிந்ததும், பெருந்தொகையுடன் தனியாக அந்த அறையில் தங்கத் தயங்கினர். வேறு லாட்ஜுக்கு மாற்றிக் கொள்ளலாம் என்றாலும், பெருந்தொகையுடன் அந்த இரவு நேரத்தில் வெளியில் செல்வது சரியல்ல. இப்படி இக்கட்டான நிலையில் திகைத்த வண்ணம் கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்தார்.

உடனே டெலிபோன் மணி அடித்தது. படுத்தவர் எழுந்து ரிஸீவரைக் கையில் எடுத்தார். 'மெட்ராஸ் கால்' என்று பதில் வந்தது. 'வீட்டிலிருந்து பேசுகிறார்கள்' என்ற எண்ணத்துடன் 'சரி, பேசலாம்' என்றார். "நீ ஒன்றும் பயப்பட வேண்டாம் நான் காவல் பார்த்துக் கொள்கிறேன். நீ தைரியமாகப் படுத்து உறங்கு" என்ற ஒலி கேட்டது; வேறு எந்த விதமான சொல்லும் இல்லை, முதலில் இவருக்கு ஒன்றும் புரியவில்லை. ரிஸீவரை வைத்து விட்டுக் கீழே இறங்கிச் சென்று, 'சென்னையில் இருந்து எனக்கு போன் வந்ததா?' என்று கேட்டார். 'இல்லையே' என்றனர். பிறகு இவர் மாடியில் ரூமில் வந்து உட்கார்ந்து யோசித்தார். ஆண்டவர்தான் நமக்கு தைரியம் கூறியுள்ளார் என்பது திருவருளால் புரிய வந்தது. தோன்றாத் துணையாய் விளங்கும் சுவாமிகளின் அருட் பெருங்கருணையை உன்னிப் போற்றிய வண்ணம் அச்சம் சிறிதும் இன்றிப் படுத்து உறங்கினார். மறு நாள் புறப்பட்டுச் சென்னை வந்து தம் உயிரனைய நண்பர்களுடன் நடந்த விஷயத்தைக் கூறி அருள் மகிமையைப் பாராட்டினார்.

இவ்வாறு அருட்சட்ட அடியவர்களில் பலருடைய இல்லங்களிலும் நடந்துள்ள, நடந்துவரும் அற்புதங்கள் எண்ணிலவாகும். ஒவ்வொரு விநாடியும் ஆண்டவர் அருட்சட்ட அடியார்களைக் கண்ணைக் காக்கும் இமைகளைக் காட்டிலும் மேலான முறையில் மிக அருமையாகக் காப்பாற்றி வருகிறார், அச்சிறப்பினை உன்னும் அடியவர்கள் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி அருள் மகிமையை வியந்து போற்றுவர்; பல விஷயங்களை ரகசியமாக வைத்துக் கொள்ளவும் விரும்புவர். இவ்வாறு இம்மை நலன்கள் விஷயத்தில் உதவுவதன்றி, ஆன்ம முன்னேற்றத் துறையிலும் சுவாமிகள் புரிந்து வரும் பேருதவி சொல்லுதற்கரியதாகும்.

சுவாமிகளின் முதல் நிர்விகற்ப நிட்டை இரெட்டியப்பட்டியில் தொடங்கி, பொதிகையில் முடிவடைந்தது. இரண்டாவது மேல் இலந்தைக் குளத்தில் நிகழ்ந்தது. மூன்றாவது நிர்விகற்ப நிட்டை மறுபடியும் இரெட்டியப் பட்டியிலேயே நிகழலாயிற்று. சுவாமிகள் வெளியே செல்லும் வேலைகளையெல்லாம் ஒடுக்கிக் கொண்டு இரெட்டியப் பட்டியிலேயே தங்கலானார்கள். அப்போது சுவாமிகள் அவதாரமாகி அறுபத்தாறு ஆண்டுகள் ஆகியிருந்தன.

சுவாமிகள் இரெட்டியப்பட்டியில் தம் தாய் வயிற்றினின்றும் திரு அவதாரம் செய்த அதே இடத்தில் துந்துபி ஸு மார்கழி மீ 28 உ (1923 ஸு ஜனவரி மீ) ஏகாதசி திதி, அனுஷ விண்மீன் கூடிய நன்னாளில் திருமேனி நீருக் காப்பிட்டுக் கொண்டார்கள். அதே இடத்தில் தான் சுவாமிகள் முதலில் விநாயகர் வைத்து வழிபாடு செய்ததும், பின்னர் வேல் வழிபாடு செய்ததுமாகும். அதே இடத்தில் அடியவர்கள் ஒரு கற்கோயில் அமைத்தனர். தினசரி வழிபாடு நிகழ்ந்து வருகிறது, ஆண்டு தோறும் புரட்டாசி ரேவதியில் ஜயந்தி விழாவும், மார்கழி அனுடத்தில் குருபூஜை விழாவும் திருவருள் துணையால் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன.

திருக்கோயில் திருப்பணி

ஆண்டவர் திருக்கோயில் கர்ப்பக்கிருஹம், அர்த்தம் மண்டபம் ஆகிய இரண்டும்

"எல்லா நோய்களையும் தீர்த்து வைத்தற்காகத் தன் துணையை அடியார்கள் எப்போது நாடுவார்கள் என்று இறைவன் காத்துக்கொண்டிருக்க அதை மறந்து, பிணிகளின் நீக்கத்திற்கு அவன் அருளை நாடாமல், மருந்தை நாடிச் செல்வது அவனிடத்தில் உறுதியை இழப்பதாகும்" என்று சுவாமிகள் வறுத்த முறுவார்கள்.

கொண்டிருந்தது. அதனை மேலும் விரிவாக்கி அமைத்தல் வேண்டுமென்ற எண்ணம் அடியவர்களிடையே வெகுகாலமாக இருந்து வந்தது. ஆடுதுறையிலிருந்த திரு. S. கிருஷ்ண மூர்த்தி அய்யரும், ஆனத்தூரிலிருந்த திரு. பாலகவி. M. K. வேங்கடராமனும் செயலர்களாக இருந்து திருப்பணிச் செயல்களைக் கவனிக்க வேண்டும் எனக் கி.பி. 1961-ல் 'வழி காட்டும் வான் பொருள்' ஆசிரியர், 'செந்தமிழ் விளக்க வள்ளலார்,' 'ஆட்சிச் சொற் காவலர்' உயர்அருள்திரு கீ. இராமலிங்கனார், M.A., அவர்கள் தலைமையின்கீழ் திருக்கோயில் திருப்பணிக் குழு ஒன்றை, ஸ்ரீ இரெட்டியப்பபட்டி சுவாமிகள் சங்கம் நியமனம் செய்தது. சுவாமிகளின் திருவருள் துணைகொண்டு, ஷ திருப்பணிக் குழுவினர் சுவாமிகளின் திருக்கோயிலை விரிவாக்குதற்கு ஏற்றபடி, அம்பாசமுத்திரத்திலிருந்து கருங்கற்கள் கொண்டு வந்து சிறப்பான முறையில் அஸ்திவாரம் அமைத்த தோடன்றி, உத்ஸவ மூர்த்தி மண்டபத்திற்கு உரிய எல்லாக் கற்களையும் வேலை முடித்து வைத்தனர். சந்நிதிக்கு வரும் அடியார்கள் தங்குவதற்கேற்ற விடுதிகளும் அமைத்தனர். 1970-ல் சென்னை திரு. K. சாம்பசிவ அய்யர் அவர்கள், நாகலாபுரம் (பள்ளிவாசல்பட்டி) திரு. P.V.S. பொன்னுசாமி நாடார் அவர்கள் ஆகிய இருவரையும் செயலர்காளாகக் கொண்ட மற்றொரு திருப்பணிக்குழு நியமிக்கப் பெற்றது. இக்குழுவினர் செயலாற்றல் மிகுந்த உயர் அருள் திரு. K. சாம்பசிவ அய்யர் அவர்களைச் செயலாளராகக் கொண்டு, இரண்டு ஆண்டு காலத்தில் திருக்கோயில் முதல் பிராகாரம், முன் மண்டபம் உத்ஸவர் மண்டபம், விநாயகர் கோவில், இராஜ கோபுரம், அருட்கொடி ஸ்தம்பம், கிணறு முதலிய எல்லா அம்சங்களையும் அமைத்து, முடித்து, 14-9-1972-ல் திருக்குடமுழுக்கு செய்வித்தனர், மண்டலாபிஷேகமும் சிறப்புற நடந்தது அடியவர் அன்பர்கள் பலமாவட்டங்களிலிருந்தும் அவ்வப்போது வந்து தரிசித்து எல்லாம் வல்ல ஸ்ரீ குருபரம் பொருளின் அருட் பெருங்கருணையைப் பெற்றுச் செல்கின்றனர்.

வாழ்க குரு அருள்! வளர்க நலமெலாம்!

With the best compliments of:

★

BINNY LIMITED

MADRAS-1

*

STEAMER AGENTS

TRAVEL AGENTS

&

STEVEDORES

Tel. No. 29171 Telex No. 302

Press Secretary to the President,
"Rashtrapati Bhavan"
New Delhi-110004.
March 17, 1973.

No. F. 2-M/73.

Dear Shri Gupta,

The President thanks you for your letter of March 1, 1973 and sends his best wishes for the success of your endeavours.

Yours Sincerely,
(A. M. Abdul Hamid)

Shri T. Jagannatha Gupta,
Founder & Organiser,
Shri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham,
32, Govindappa Naicken Street, Madras-1.

GOVERNOR'S SECRETARIAT

PRIVATE SECRETARY
to the Governor of Tamil Nadu

"Raj Bhavan"
Madras-22
Dated 7th March '73.

Dear Sir,

Please refer to your letter dated 1st March 1973.

I am to say that the Governor will be away in Ooty during the month of May 1973 and therefore it will not be possible for the Governor to accept your kind invitation on the 27th May 1973. However, he wishes the function all success.

Yours faithfully,
(Sd.) ....
For Private Secretary to the Governor.

Thiru T. Jagannatha Gupta,
32, Govindappa Naicken Street, Madras-1.

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம்.
ஆ. நரசிம்மலு அவர்கள்,
செயலர்.

அருள்நகர்
1—1—1973,
தங்கல் : இரெட்டியப்பட்டி

குருநாதர் திருவருளால் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம் நன்முறையில் பணியாற்ற எந்தையை இறைஞ்சுகிறேன்.

ஆ. நரசிம்மலு
1—1—1973.

ஓம்

ஸ்ரீ அருள் சக்தி அன்னை அவர்கள்
ஸ்ரீ அருள் சக்தி விலாஸ்,
பிள்ளையார் குப்பம்
(வழி) கிருமாம்பாக்கம்
கடலூர் N.T.

7—1—73

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகமும், பதிப்பகத்தாரும், நாளுக்கு நாள் ஆண்டவன் அருளால் வளர்ச்சியாக வேண்டும்.

ஸ்ரீ அருள் சக்தி தாய்

வாழ்த்து

(நேரிசை வெண்பா)

Camp: VELLORE c/o Sri VAISHNAVI SHRINE
Date: 24-1-1973 NorthThirumullaivoil, MADRAS—62.

திருஇரட்டைப் பட்டிஎனும் சீர்இருடிப் பட்டிக்
குருஇரட்டை ஐயைந்தாண் டைக்கொள் — குருபூஜைப்
பொன்விழா ஆண்டுமலர் பூத்துநனி காய்த்தறிவு
மென்பழமு திர்க்க விரைந்து.

ஸ்ரீ சுவாமி சாதுராம்.

Sri S. Velayudam.
No. 4, Kue Kuplinger
G. N. 4 Evl, FRANE.

2—4—73

வாழ்த்து

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகத்தார் எடுத்துக் கொண்ட முயற்சி நல்ல முறையில் வெற்றி பெறனும்.

அருள் மலர் நல்ல முறையில் அமைவது உடையவர் பொறுப்பு. இதுபோல் பல மலர்கள் வெளி வரவேண்டும். அப்போது தான் ஆண்டவர் அருமை, பெருமை எல்லாம் அறிய முடியும்.

வாழ்க ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்!

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
(Sd) ஷண்முகம்.

ஸ்ரீ

12—1—72.

கி. வேங்கடசாமி ரெட்டியார்
வி. பூதூர் அஞ்சல்
வளவனூர் வழி, விழுப்புரம் RMS
S. A. Dt.

அருள்திரு இரெட்டியப்பட்டி அடிகளாரின் 50 ஆவது ஆண்டு ஆய பொன் விழாவின் நினைவு மலர் திரு இரெட்டியப்பட்டி அடிகளார் இலக்கியப் பதிப்பகத்தின் 2 ஆவது ஆண்டு விழாவில் வெளியிடுவதறிந்து பெருமகிழ்வெய்துகின்றேன்.

அருள்திரு. இரெட்டியப்பட்டி அடிகளாரைப்பற்றி அறியாதவர் இலர் என்றே சொல்லலாம். திரு இரெட்டியப்பட்டி அடிகளார் இலக்கியப் பதிப்பகத்தாரின் இடையரு முயற்சியாலும், சீரிய தொண்டாலும் திரு இரெட்டியப் பட்டி அடிகளாரின் திருவுள்ளத்தினின்று வெளிவந்த சட்டங்களின் விளக்கங்களும், அனுபவ நிகழ்ச்சிகளும், அடியார்கட்கு அரிய ஊன்றுகோலாக உள்ளன. அடிகளாரின் சட்டங்களைப பின்பற்றுவதென்பது அசையாத நம்பிக்கையையும், உண்மை உணர்வையும் கொண்டவாகட்கு மிகவும் எளிதேயாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை. அவ்வியற்கை வாழ்வைத்தான் அடிகளார் சட்டங்களாக ஆக்கித் தந்துள்ளார். எனவே அச்சட்டங்களைப்பின்பற்றுவோர் எல்லா நல் நலங்களும் பெற்று நீடுவாழ்வர் என்பதில் ஐயமில்லை. நிலமிசை நீடுவாழும் இவ்வாழ்க்கை முறையினை வெளிப்படுத்தும் இவ் விலக்கியப் பதிப்பகத்தாரின் சீரியபணி மேலும் மேலும் சிறப்புறுவதாகுக.

இங்ஙன்,
கி. வேங்கடசாமி.

SRI SWAMJ SADHURAM
Camp: பிள்ளையார் குப்பம்
அருள் சக்தி விலாஸ்
பாத யாத்திரை சமயம்.

ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வடதிருமுல்லைவாயில், சென்னை-62.

அருள் வளர் இருடியர் பட்டி
அடிகளார்தம் திருப்பெயர் தாங்கிப்
பொருள் வளர் அழகிய சென்னைப்
பூந்தலத் துருவக மாகி
இருள் வளர் உலகினுக் கொளியூட்
டிலக்கியப் பதிப்பகம் என்றும்
தெருள் வளர் திருவருட் பாட்டைச்
சிறப்புறப் பதிப்பித்து வாழி.

ஸ்வாமி ஸாதுராம்.
2—6—72.

ஓம்

ஸ்ரீ G. சரவணப்பிள்ளை அவர்கள் திருவிசலூர்.
நிலச்சுவான்தார். 3—12—72
குடந்தை,

எந்தை குருநாதரின் அருள் என்பது அனுபவித்தவர்களுக்கு மட்டில்தான் உண்மை விளங்கும். பிற தெய்வ வழிபாட்டில் இல்லாத ஓர் சிறப்பு அம்சம் அருட்சட்டத்தில் என்னவென்றால், 'வைத்தியம் கூடாது' என்பதுவேயாகும். காரணம் சாட்சாத் வைத்தீஸ்வரன் பிள்ளையாகிய ஸ்ரீ மதுரைப் பரிபூர்ண விநாயகர் அவர்களால் ஆட்கொள்ளப்பெற்ற திரு இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை இருக்கையில், நோய் வாய்ப்பட்டால் சிலர் வைத்தியத்தையே தெய்வ மாகக் கருதி கவலை அடைகின்ருர்கள். ஆனல் நமது அருட்சட்டத்தின் வழி சற்றும் வழுவாமல் நடந்து வரும் அருட்சட்டப் பிள்ளைகள் வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் வாழ்க்கைப் பரீட்சையில், குருநாதர் அருளால் வெற்றி பெற்று மேல் வகுப்புக்குப் பிரமோஷன் பெற்று, இறையருளுக்குப் பாத்திரமாகும் கதைகள் ஏராளம். இது என்னுடைய 27 வருட அநுபவம். வாழ்க்கையில் வெற்றி பெறுவது 'வேலைக்கேற்ற கூலி' என்பதுபோல் அவரவர்களுடைய தெய்வ வழிபாட்டுச் சிந்தனையைப் பொருத்ததுவேயாகும். தேன்கூடு போன்று, அவரவர் சேமிப்புக்குத் தக்கவாறு நேரில் சொல்லியும், நெருங்கிப்பழகும் அடியவர்கள் மூலம் உணர்த்தியும் வருகிருர்.

இத்தகைய மாபெரும் அரியதொரு சட்டத்தை அருளி, நம்மையெல்லாம் உய்விக்கும் பொருட்டு, அந்த அருளையே எல்லா மக்களும், எல்லா நாட்டினரும், எல்லா இனத்தவரும் கையாளவேண்டும் என்னும் பெரு நோக்குடையவர்களாக இவ்விலக்கியப் பதிப்பகத்தினர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் பெயரில் நடத்துவது பற்றி அகமிக மகிழ்ச்சி. இவ் இலக்கியப் பதிப்பகத்தார்க்கு ஆண்டவன் அருளும், அடியார்களின் ஆசிகளும் கிட்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ குருபரம் பொருளை தியானித்த வண்ணம் வாழ்த்துகிறேன்.

நம்மையெல்லாம் உய்விக்கும் பொருட்டு அருளப் பெற்ற அரியதொரு சட்டத்தை, எல்லா மக்களும், எல்லா நாட்டினரும், எல்லா இனத்தவரும் கைக் கொண்டு பயன்பெற வேண்டுமென்ற பெரு நோக்குடையவர்களாய் பிரசாரம் செய்துவரும் இவ்விலக்கியப் பதிப்பகத்தினருக்கு அவ்வருட் சட்டத்தையருளிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருளும் அவ்வருட்சட்ட அடியார்களின் ஆசி களும் கிட்ட வாழ்த்துகிறேன்.

From: To:

தி. க. சுவாமிநாதன், ஸ்ரீ சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்
தலைமை ஆசிரியர், சென்னை—1.
தவத்திரு ஆறுமுக நாவலர் உயர்நிலைப்பள்ளி,
சிதம்பரம். S. A. Dt.

அருள் நிறை ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் பற்றிய வரலாறு, உலகம் முழுவதும் பரவ பல வெளியீடுகள் பெருக வேண்டும். தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

க. சுவாமிநாதன்
24—6—1972

Rao Sahib
A. Varadappa Chetty, J. P.
Spl. Honry. Presidency Magistrate.

Phone : 71286
" Suvarna "
34, South Mada St.,
Mylapore, Madras-4.
12th February, 1973.

MESSAGE

It is a matter for appreciation that Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham is bringing out a Malar on the occasion of the Celebration of the Golden Jubilee Guru Puja during this year. The Malar, no doubt, brings out emphatically the Swamiji's thesis that human effort is bound to prove infructuous in the absence of Divine Sanction. In our daily life too, we find that even the most carefully worked out plans, drafted by intellectual giants and the most effective medicines, carefully prescribed by eminent doctors thoroughly fail. No resson can be adduced for the failure.

The principles adopted by our good Reddiappatti Swamigal are conducive both physically and metaphysically for the attainment of the goal, if followed.

The literary publications of the Pathippaham are all chaste and methodical serving as models for emulating the principles of the Swamingal to carry on the work left by him.

(Sd.) A. Varadappa Chetty.

Sir P. T. Rajan, (Bar-at-Law)
Palayam House,
Tallakulam P. O.
Madurai.

Camp : Madras
9—1—1973.

On the occassion of the Second Anniversary Celebrations of Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham, it is proposed to publish a Souvenir in connection with Swamiji's 50th Gurupuja. This publication will go a long way in helping people to understand Swamiji's teachings and enable them to keep good health, acquire implicit faith and attain salvation.

I invoke the Blessings of Sri Meenakshi on those connected with the Pathippaham in their efforts.

(Sd.) P. T. Rajan.

ஓம்

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்
ஸ்ரீ அருள் சக்தி விலாஸ்
பிள்ளையார் குப்பம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்—விருத்தியாகி பல்லாண்டு வாழ்க.

ஸ்ரீ அருட் சக்தித்தாய்
20—6—72.

18—6—1972
"தமிழ் மணம்"

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை :

காஞ்சீபுரம் அருள் ஞானச் செல்வத் தாய் திருமாளிகையிலிருந்து இரெட்டியப்பட்டி குருநாதர் சந்நதிக்குப் பாதயாத்திரை :

தவத்திரு. சாதுராம் சுவாமிகளின் செயலாண்மையிலும், அருள் ஞானச் செல்வத் தாய் திருவார்திரு வித்துவான் சு. மங்கையர்க்கரசியார், அடியார்க்கு இனியார் திருமிகு பாலகவி எம். கே. வேங்கடராம செட்டியார் இரு அருளாளர் தலைமையிலும், 9—6—72 விடியல் காஞ்சியில் புறப்பட்டு, இன்று காலை, பண்ணுருட்டி பெருமாள் கோவில் திருமண்டபத்துக்கு வந்து சேர்ந்து இந்நகரை பெரு மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

கீ. இராமலிங்கனுர்.

இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை
இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி

விடுநர் :
ஆ. நரசிம்மலு
மேலாளர் & செய்தியாளர்,
அருள் நகர்,
கிராமம் (அஞ்சல்), விழுப்புரம் (வழி) (தெ. ஆ. மா).

பெறுநர்:
ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்
இலக்கியப் பதிப்பகம்
சென்னை-1

எண்............

தேதி..............19

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம் காஞ்சிமாநகரத்தில் 1—12—1944-ல் ஆண்டவர் அருளால் நிறுவப்பெற்று, அரசாங்கத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

சங்கத்தின் நோக்கங்களின்படி, 1—7—46-ல் காஞ்சி மாநகரத்தில் இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி என்ற திருப்பெயரோடு, ஒரு விடுதி துவங்கப் பெற்று, 18—5—47-ல் சங்கச் செயலரிடத்தில் விடுதியின் வளர்ச்சிக்கு வேண்டுவன செய்யப் பொறுப்பளித்துப் பெற்று, அத் தீர்மானத்தின்படி நடந்து வருகிறது. திருவருள் திருக்குறிப்பின்படி, திருவெண்ணை நல்லூர் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் (கீழ்புறம்) விடுதி, பள்ளி பயனுக்காக நிலம் வாங்கி, கூரையாக இரு கட்டடங்கள் கட்டப்பெற்று, 24—6—54-ல் தென்னுற்காடு மாவட்டத் தண்டல்நாயகம் மேதகு A. உத்தண்ட ராமனுர், I. A. S. அவர்கள் பள்ளி, விடுதியினை முறைப்படி ஆரம்பித்து வைத்தார்கள்.

அருட்கொடிப் பள்ளிக்குக் கெட்டிக் கட்டிடம் ஒன்று அரசாங்க உதவியோடு அமைக்கப் பெற்று, முன்னுள் முதலமைச்சர் மேதகு K. காமராசனுர் அவர்கள், அருள்நகருக்கு 28—9—60ல் வருகைதந்து பள்ளிக்கட்டிடத் திறப்பு விழா செய்து வைத்தார்கள்.

இவ்வளர்ச்சிகளுக்கு அருளோடு பொருளும் உதவிய அன்பர்கள், அடியார்கள் பலர். இவர்களுக்கு எல்லாம் வல்ல குருநாதர் நல்லருள் புரிந்து, இனியும் அருள் நகரில் ஆக வேண்டிய ஆக்கப் பணிகளில் பங்குகொள்ளப் பணிவு பல.

ஸ்ரீ அருள் சக்தி விலாஸ்,
பிள்ளையார் குப்பம்,
மஞ்சகுப்பம் அஞ்சல்,

திருவருள் ஸ்ரீ அருட்சக்தி தாய்
20—6—72.

பாதயாத்திரை செல்லும் காஞ்சிபுரத்தம்மையார், உயர்திரு. சாதுராம் ஸ்வாமிகள், தவத்திரு பாலகவி ஸ்வாமிகள், மற்றும் கூடின அடியவர்கள் அனைவரையும் ஆண்டவர் சிரமம் இன்றி கொண்டு போய், ஆண்டவர் தரிசனம், அருள் அனுக்கிரகங்கள் அருளிச் செய்து அவரவர்களுக்கு அருளும் பொருளும், அள்ளித் தந்து, சட்டத்தை வளரச் செய்ய நல் அருள் புரிய வேண்டும்.

(Sd.) ஸ்ரீ அருட்சக்தி தாய்

From

Sri. P. Sitaraman, M.A.,
Chairman, Board of Trustees,
Sri Kandasamy Temple,
Rasappa Chetty St.,
Madras-3.

19—9—1971
Madras-3.

To
M/s. Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham,
32, Govindappa Naicken Street,
Madras-1.

I am very much pleased at the religious courses arranged which will give peace of mind. I request the organiser Sri T. Jagannatha Guptha to take further steps in the propagation of Hindu Religion.

(Sd.) P. Sitaraman,
19—9—1971.

From

Sri. T. T. Muthukrishnasamy,
Trustee,
Sri Kandaswamy Temple,
Rasappa Chetty St.,
Madras-3.

To
Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham,
32, Govindappa Naicken Street,
Madras-1.

It is pleasure to be with you when the discourse was conducted. The subject spoken about Sri Vinayaka or Sri Madurai Paripoorna Vinayakar is neatly worth preserving truths. Every Devasthanam should show keen interest in announcing them.

(Sd.) T. T. Muthukrishnasamy,
19—9—1971.

From

Sri. P. Kuppusamy Chettiar, B.A., B.L.,
Advocate,
Kanni Koil St ,
Tiruvannamalai, N.A. Dt.

To
Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham,
Madras-1.

Sir,

I had an oppurtunity to attend the meeting organised by Sri T. Jagannatha Gupta, the founder & Organiser of the above Pathippaham, at Tiruvannamalai on 25—12—1972. I have nothing but admiration for him and his associates for their zeal to propagate Sri Swamigal's " Arul Prasadam. " I wish the Ilakkiya Pathippaham all success, and hope it will succeed in propagating Sri Swamiji's ideas throughout Tamilnadu by organising many more meetings.

P. Kuppusamy
25-12-1972.

Sri Reddiappatti Swamigal Thunai

Dear Devotees !

This institution was opened on 16-5-1971

By

Sri. K. Ramalinganar M.A.,
(State Official Language Special Officer)

Under the Presidentship of
Sri. R. Shanmuga Sigamani, M.A.,
(Secretary, Tamil Nadu Electricity Board)

Srimadh Arulkavi Sadhuram Swamigal

gave his holy Speeches and blessings to the Pathippaham. The objects of this institution are mentioned.

We request all the devotees to co-operate with us for better progress.

Yours in Service,
Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham
Phone : P. P. 34600
32, Govindappa Naicken Street, Madras-1.

THE MAIL

24—3—1973

Books Received :

Tamil: Madurai Sri Paripoorna Vinayagar Varalaru 25.p. —Irattayaipatti Swamigal Ilakkiya Pathippaham, Madras.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பக வெளியீடு

CERTIFICATE OF REGISTRATION OF SOCIETIES ACT XXI OF 1860.

S. No. 73 of 1973.

I hereby certify that Sri **Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham**, has this day been registered under the Societies' Registration Act XXI of 1860.

Given under my hand at MADRAS., this 14th day of March, One thousand nine hundred and Seventy three.

Seal of the Registrar of Madras 14-3-1973

(True Copy)

(Sd.) E. Deenadayalan
Registrar of Madras District.

மதிப்புரை

நவசக்தி

17—3—73

வரப்பெற்றோம்

“மதுரை ஸ்ரீ பரிபூர்ண விநாயகர் வரலாறு”

(வெளியிட்டது—ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்,
32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1;)

எழுதியவர் : டி. ஜே. குபேந்திரன்,
(பக்கம் 24, விலை 25 காசு.)

விநாயகப் பெருமான் உலகின் முழுமுதற் கடவுள். ஓங்காரத்தின் பிரணவ சொரூபம். எதை முதன் முதலில் துவங்கினாலும், கணபதியை வழிபட்டே துவக்குவர். இந்த தெய்வம் குறித்து விளக்கும். இந்த சிறப்பான புத்தகம் பக்தர்கள் அவசியம் படிக்க வேண்டியதாகும்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளை ஆட்கொண்ட ஸ்ரீ பரிபூர்ண விநாயகர் குறித்து புத்தகம் முழுவதுமாக விளக்குகிறது.

THE HINDU

Books Received :

9—4—1972

Kindly Light That Leads by Sri A. Ramachandra Gupta. (Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham, 32, Govindappa Naick St., Madras-1. 75.p.)

B

THE HINDU

30—4—1972

Irudiyarpatti Gurunathar Pillai Thamizh (Re. 1-10): Perinba-Vetkai (50.p.): Guru Arul Thiru undiyar (15.p.); Arut Prasadam (10p.). All by Sadguru Dasan, Sri Reddiappati, Swamigal Ilakkiya Pathippaham, 32, Govindappa Naicken St., Madras-1).

THE INDIAN EXPRESS

11—11—1972

Books Review:

Poem

Reddiappatti Gurunathar Pillaithamizh: Written by Sargurudasan, Published by: The Swamigal Ilakkiya Pathippaham, 32, Govindappa Naick St., Madras-1.

This book is a composition in praise of Sri Reddiappatti Swamigal, a yogi & Saint, who has laid down a code of conduct for humanity, the essence of which is complete faith in and surrender to the Almighty. He lived between 1856 and 1923 A.D. in Reddiappatti near Nagalapuram (Tirunelveli Dt.) and Madurai where he got divine grace. He did penance in Courtralam and the Podia Hills for sometime. He has large circle of devotees who are running an association for the propagation of his teachings, a middle school and a free hostel for the poor at Arul Nagar in South Arcot Dt.

This composition is conceived in the traditional pattern of eulogising a great man or a deity in his/its different stages of growth, from babyhood to childhood. The child's graceful movements, lisping, clapping, toddling and plays are described. The mother inviting the moon to come down and play with the child forms an important part of this composition and the author is at his best here. The author has displayed great scholorship and skill in the composition of this poem. Prof: R. Krishnamoorthy.

THE MAIL

Date: 16—9—1972

Books Reviewed:

Religious Tracts in Tamil: (Gurunathar Pillai Thamiz, Perinba Vetkai, Guru Arul Thiru Undiyar. All Three by Sargurudasan, Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham, Madras-1)

This series of religious tracts have been brought out by devotees of Reddiappatti Swamigal, a bussinessman who became a spiritual leader during the latter part of the last century. Reddiappatti is a village near Kovilpatti in Tirunelveli district. Some admirers and devotees of this religious leader have formed themselves into an association to Propagate the "laws" propounded by the Swami. These "laws" are simple rules of conduct based on moral discipline.

நவசக்தி 9—11—1972

இரட்டையர்பட்டி அடிகள்

[இருடியர்பட்டி என்னும் இரட்டையர்பட்டி அடிகள் இரட்டைத் துதிப்பா மலர்கள். ஆசிரியர் — அருட்கவி சுவாமி சாதுராம், கிடைக்குமிடம் — இருடியர் பட்டி அடிகளார் இலக்கியப் பதிப்பகம், ''அடியார்கள் இல்லம்'' எண், 32 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1, வெளியிட உதவியவர்: சி. வி. இராமச் சந்திரன் செட்டியார், கஜேந்திரா மெடிகல்ஸ், அக்ரகாரம், சேலம்-1, பக்கம்—50, விலை: 50 காசு]

தெய்வத் தன்மை அம்சத்துடன் உலக மக்கள் சிறப்பாக வாழ்வதற்காக பாடு பட்ட இரட்டையர் பட்டி அடிகளைப் புகழும் நேரிசை வெண்பா கொண்ட இந்த சிறப்புப் புத்தகம், தெய்வபக்த்தர்களுக்கு விருப்பமானதாகும். அடிகள் வெண்பா அந்தாதி 102 நேரிசை வெண்பாக்கள் கொண்ட நூலாகும்.

திருக்கலிவெண்பாவில் ஊர், அருட்பா உதித்தது, அருவம், சமாதி, திருவருட் சட்டம் என்று பல விஷயங்கள் உள்ளன. விநயகர், பாதயாத்திரை, கீர்த்தனைகள் உள்ளன. அருட்சக்தி அன்னை இரட்டை மணிமாலை, பாதயாத்திரை சிறப்பு, விதிகள், பெயர்கள் எல்லாம் உள்ளன. தெய்வ அருள் பெற்ற அடியவர் களின் அடியவர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டிய சிறப்பான புத்தகம் இது.

தினத்தந்தி **புத்தகம்** 2—11—1972

The Kindly Light That Leads

(ஆசிரியர்: ஏ. ராமச்சந்திர குப்தா, வெளியீடு: ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமி கள் இலக்கியப் பதிப்பகம், விலை: 75 காசு)

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் பக்தி மணங்கமழும் வாழ்க்கை வரலாறு, இந்த ஆங்கிலப் புத்தகத்தில் அடங்கியுள்ளது. இது பக்தர்களுக்கான புத்தகம்.

★ ★ ★ ★

இருடியர்பட்டிக் குருநாதர் பிள்ளைத்தமிழ்

(ஆசிரியர்: சற்குருதாசன். வெளியீடு: ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப்பதிப்பகம் 32. கோவிந்தப்ப நாயக்கன், தெரு, சென்னை-1. விலை Rs 1-60).

இரெட்டியப்பட்டி சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவராகக் — குழந்தையாகப் பாவித்து பாடப்பட்டுள்ள பாடல்கள் கொண்ட புத்தகம். பக்தர்களுக்குப் பிடிக்கும்.

★ ★ ★ ★

பேரின்ப வேட்கை

இதுவும் சற்குருதாசன் எழுதிய பக்திப் பாடல்களின் தொகுப்பு ஆகும்.

இந்த புத்தகத்தின் விலை 50 காசு

OM

Sri Reddiappatti Swamigal Thunai

Objects of the Pathippaham :

1. To spread the teachings of Sri Reddiappatti Swamigal World wide.
2. To release special news about the Swamiji which is so far unknown.
3. To publish poems about the Swamiji sung by the disciples and which are in manuscriptis.
4. To issue a monthly magazine regarding the teachings and advices of the Swamiji.
5. Holding monthly meetings in big temples etc., and give discourses about the teachings of the Swamiji.
6. Conducting moffussil meeting too, in order to spread the teachings to people of different religions.
7. To improve the brotherly feeling among the followers of " Chattam " by making them meet very often when attending the meetings.
8. To collect and exhibit the experiences of the disciples, & exhibit also drawings, pictures of the Swamigal.
9. To learn a comparative study of the Swamigal's Teachings with that of others.
10. To organise a library about the Swamigal's literature etc.,...etc ..etc.

Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham. (Regd.)
32, Govindappa Naicken Street, Madras-1.
(Phone : 34600)

Our Publications :

			Rs.	P.
Telugu :	Anugraha Prasadam	...	0	10
Tamil :	Arutprasadam	...	0	10
	Guru Arul Thiru Undiyar	...	0	15
	Perinba Vetkai.	...	0	50
	Irudiarpatti Gurunathar Pillai Tamizh Ordinary Bind.	...	1	10
	Calico Bind	...	1	60
	Madurai Sri Paripoorna Vinayakar Varalaru	...	0	25
English :	The Kindly Light That Leads.	...	0	75
Photo :	Sri Reddiappatti Swamigal in Art Paper	...	0	25

Annual Subscription : Rs. 6-00 **Life Membership :** Rs. 100-00

Patronship : Rs. 1,000-00

Sri Reddiappatti Swamigal Ilakkiya Pathippaham (Regd.)
32, Gavindappa Naick Street, Madras-1. (Phone : 34600 P.P.)

*ஆண்டவர் விழா நடைபெறும் ஸ்தலங்கள்

ஒவ்வொரு மாத ரேவதி நன்னாளிலும், இரெட்டியப்பட்டியில் ஆண்டவருக்கு விசேஷ வழிபாடுகள் செய்யப்பெறுகின்றன.

மாதம்	நாள்	இடம்
புரட்டாசி	ரேவதி	1. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சந்நிதானம், **இரெட்டியப் பட்டி**, நாகலாபுரம் அஞ்சல், நெல்லை மாவட்டம்.
,,		2. உயர்தவத்திருமதி. பங்கஜவல்லி அம்மையார் அவர்கள், அருட்கொடி சந்நிதி, **திருச்சாத்தனூர்**, செம்மார் அஞ்சல், விழுப்புரம் R.M.S.
மார்கழி	அனுஷம்	1. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சந்நிதானம், **இரெட்டியப் பட்டி**, நாகலாபுரம் அஞ்சல், நெல்லை மாவட்டம்.
,,		2. திருவார்திரு அருள்சக்தி அன்னையார் அவர்கள், **பிள்ளையார் குப்பம்**, கிருமாம்பாக்கம் அஞ்சல், கடலூர் N.T.
தை	முதல் வெள்ளி	திருவார்திரு அருள்ஞானச் செல்வத்தாய் அவர்கள், 11. B. நிமந்தகார ஒற்றை வாடைவீதி, **பெரிய காஞ்சிபுரம்**, செங்கை மாவட்டம்.
,,	கடை வெள்ளி	திரு, M. இராமையா பிள்ளை அவர்கள், கீழவீதி, **வேளூர்**, திருத்துறைப் பூண்டி (வழி), தஞ்சை மாவட்டம்.
மாசி	ரேவதி	திரு. முத்துவேலு பிள்ளை அவர்கள், **கொக்காலடி**, பாமணி அஞ்சல், திருத்துறைப்பூண்டி(வழி), தஞ்சை மாவட்டம்.
சித்திரை	ரேவதி	திரு. R. பழனிவேலு அவர்கள், காய்கறி வியாபாரம், கணபதி நகர் (**வித்துவான் மானைக்கால்**), நெடும்பலம் அஞ்சல், திருத்துறைப்பூண்டி (வழி), தஞ்சை மாவட்டம்.
,,	கடைசி நாள் (வசந்தோற்சவம்)	திருமதி. சுந்தரம் அம்மையார் அவர்கள், சக்கரபாணி தெற்கு மடவிளாகம் தெரு, **கும்பகோணம்**, தஞ்சை மாவட்டம்.
வைகாசி	முதல் ஞாயிறு (ஆண்டு விழா)	ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம் (பதிவு பெற்றது), 32, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, **சென்னை-1.**
ஆனி	ரேவதி	திரு. அ. கோவிந்தசாமி அவர்கள் குழு, **பன்னுள்**, திருத்துறைப்பூண்டி தாலுகா, தஞ்சை மாவட்டம்.
ஆடி	ரேவதி	உயர்திரு. தியாகராஜப் பிள்ளை அவர்கள், நிலக்கிழார், **மடப்புரம்**, (வழி) திருப்பூண்டி, நாகப்பட்டினம் தாலுகா, தஞ்சை ஜில்லா.

*இன்னும் பல ஊர்களிலும் சுவாமிகளுக்கு விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவ் விழாக்கள் பற்றி மேலும் வெளியிட விரும்புவோர், **ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம், சென்னை-1,** என்ற முகவரிக்குத் தெரிவிக்கக் கோருகிறோம்-

மேகமும் மழையும்

(ஆனத்தூர்), திரு. M. K. வேங்கடராமன்

அனைத்துலகும் தனில்முளைக்க அனைத்துலகும்
தனுளியங்க அருளாய் மேவி
அனைத்துலகும் தனுள்விளங்க அனைத்துலகும்
தனுளொடுங்க அருள்வாழ் வாற்றி
அனைத்துயிரும் தனுளிலங்க அனைத்தனுவும்
அருளமுத மயமாய் மேவி
அனைத்துநலங் களுமுதவும் அருட்கடலாய்ப்
பரிபூர்ணர் அமைந்தா ரன்றே. 1

அமுதனைய மொழிவழங்கும் அற்புதமாம்
தமிழகமும் அன்பு வேளாண்
சமூகமும்ஆ வுடையனையும் வீரபத்ரத்
தந்தையும்செய் தவத்தின் மாண்பும்
சுமுகன்அருட் கருணையும்பக் குவமிகுந்து
குருவின்அருள் துணையை நாடும்
அமுதமன அடியர்தவப் பயனுமொரு
முகில்வடிவாய் அமைந்த தாமால். 2

பகலவன்றன் சுடரொளியும் முழுமதியின்
தண்ணிலவும் பார்நீர் தீகால்
ககனமெனும் ஐம்பூதங் களிற்பொலிதூய்
மையும்ஒருங்கு கலந்து தேவர்
தகவுடைய தவமுனிவர் அறிஞர்அரு
ளாளர்உளம் தழைந்து வாழ்த்த
மிகவொளிகொள் நளஆண்டில் புரட்டாசி
ரேவதியில் வெளித்தோன் றிற்றே. 3

நெல்லைநன்மா வட்டமுற்றுக் கலையுழவு
கண்டுலகில் நிறைவ யிற்றான்
இல்லையென வருந்துநருக் கினிதுதவி
எழிலால வாயிற் சார்ந்து
நல்லபொரு ளுணர்வைகை நதிக்கரையில்
ஒளிமிகுந்து ஞானம் நல்க
வல்லபொதி கையிற்பூர்ண வளம்படைத்து
வையமிசை வயங்கிற் றம்மா 4

அருளமுத மனையஅருட் சட்டநெறி
யெனும்மழையை அகில மெல்லாம்
இருளகல ஒளிவிளங்க அன்பொளிர
அறந்தழைய இகத்திற் கேற்ற
பொருள்வளரப் புகழ்பொறுமை புனிதமுடன்
தவம்வளரப் போதம் மேவத்
தெருள்விளக்கி அருட்போகம் திளைக்கவைத்(து)ஓ
யாதுபெய்து திகழு மாதோ. 5

குரு அருள் துணை

*மதுரைப் பரிபூரண விநாயகர் துதி

எண்சீர் விருத்தம்

அகரமென உகரமென மகர மென்ன
அமையுமொரு மந்திரமாய் அகில மெல்லாம்
பகரரிய எழிலுடனே படைத்தும் காத்தும்
பக்குவம்செய் வித்தழித்தும் மறைத்தும் பின்னர்
நிகரிலருட் பூரணமாம் முத்திப் பேற்றை
நேர்மையுற அளித்தும் மதுரையிலே வைகைப்
புகரறுதென் கரைப்பரி பூரணநா மத்தாற்
பொலிகளிற்றின் பதமலர்கள் போற்றி வாழ்வாம்

இருடியர் பட்டிக்குரவன் இனிதே போற்ற
எதிரிலெழுந் தருளிஇன்ப மூட்டு வோனை
பருதிபல கோடியும்நே ரிலையாம் என்னப்
பகரரிய ஒளிப்பிழம்பாய்த் திகழ்கின் றோனைச்
சுருதி முதல் நடுமுடிவாய்த் தோன்றுவோனைத்
தொன் மதுரை வதிபரிபூ ரணப்பே ரோனைக்
கருதி வணங் கடியர்பதத் துகளே சூடிக்
கன்மமுதற் கட்டறுத்துக் களித்து வாழ்வாம்.

உண்மையறி வானந்த ஒளியா னோனை
ஒப்புயர்வில் மெய்ப்பொருளாம் ஒருவன் றன்னைப்
பெண்மையுமாய் ஆண்மையுமாய் அலியு மாகிப்
பேசரிய பிரணவத்துட் பிறங்கும் தேவை
நுண்மையினுள் நுண்மையென நுழைந்துள் ளோனை
நோக்கரிதாய் வாக்குமனம் கடந்தோன் றன்னை
வண்மைமிகு மதுரைநகர் வைகைத் தென்பால்
வதிபரி பூர்ணப் பொருளை வழுத்தி வாழ்வாம்.

---

* ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு அருட்காட்சியளித்து ஆட்கொண்டருளிய **ஸ்ரீ பரிபூர்ண விநாயகர் திருக்கோயில்** மதுரை மாநகரில், வைகையின் தென்கரையில், புகைவண்டி செல்லும் பாலத்தின் மேற்கில் உள்ளது.

வழிகாட்டும் விண்ணொளி

உலகம் தோன்றிய நாள்முதல் உலகின் கண் பல பாகங்களிலும், பல காலங்களிலும் அருளாளர் பலர் தோன்றி, அருள் நெறி கண்டு, இன்பம் அடைந்துள்ளனர். தாம் பெற்ற பேரின்பத்தைப் பலரும் பெறவேண்டுமெனக் கருதி முயன்றுள்ளனர். அவர்கள் அனைவரின் கருத்தும் செயல் முறையில் நிறைவேற, எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட் பெருங்கருணையே ஒருருத்தாங்கி உலகின் கண் அவதரித்ததைப் போன்று, செந்தமிழ் நாட்டில் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அவதரித்தார்.

அவர் திருநெல்வேலி மாவட்டத்தில், கோயில்பட்டிக்குக்கிழக்கே 28 மைல் தொலைவிலுள்ள புதூர்-நாகலாபுரத்தை யடுத்துள்ள இரெட்டியப்பட்டி என்ற இருடியர்பட்டி திருத்தலத்தில், கி.பி. 1856-ல் (நள ஆண்டு, புரட்டாசி மாதம், இரேவதி நன்னாள்) சைவ வேளாளர் மரபில், வீரபத்திரப்பிள்ளை—ஆவுடையம்மை தம்பதியருக்கு, 'சுப்பிரமணியம்' என்ற திருநாமத்துடன் அவதரித்தார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். குலத் தொழிலாகிய விவசாயத்தில் ஈடுபடுகையில், அவ்வூர் ஏழை மக்களை வரட்சியும், வறுமையும் வாட்டியதை அறிந்த அவர், தூத்துக்குடிக்கு வண்டி கட்டிக் கொண்டு சென்று, சரக்குகளை வாங்கி வந்து, கொள்விலைக்கே விற்று அவர்களுக்கு உதவினார். இச்செயல் வீட்டிலுள்ளோருக்கு வருத்தம் தந்தது. அதனால் இவர் மதுரைக்குச் சென்று ஒரு முகம்மதியர் கடையில் கணக்குப் பிள்ளையாக அமர்ந்தார்.

நாள்தோறும் விடியல் 3-00 மணிக்கு வைகை நதிக்கேகி, நீராடி முன்னவனுர் வழிபாடு செய்து வந்தனர். சர்வஜித்து ஆண்டிலே ஒரு நாள் வழக்கம்போல் நீராடி வருகையில், சிறந்த ஒரு அருட்ஜோதி கண்டு, அருகே செல்லுகையில் அது ஒரு விநாயகர் போன்று தோன்ற, அதை ஆலிங்கனம் செய்துகொண்டார். பின்னர் அது ஒரு விநாயகர் சிலையாக மாறியதைக் கண்டு, பேரானந்தமுற்று, அம்மூர்த்திக்கு 'ஸ்ரீ பரிபூரண விநாயகர்' எனத் திருநாமம் சூட்டி, திருக்கோயில் எழுப்பி, கும்பாபிஷேகம் நடத்தினர்.

"மதுரா புரிவடக்காய் வைகைநதித் தென்பாற்
சதுரார் ரயில் பாலந் தன் மேற்கா யெங்கும்
கதித்தோங்குஞ் செந்நெல்சூழ் கட்டிடத்
தின் கீழ்பால்
உதித்தா யென்னுள்ளத் துறை."

என்று சுவாமிகளே தம் அருட்பாடலில் அக் கோயிலுக்கான நான்கு திக்கின் எல்லைகளைக் காட்டியுள்ளார். பின்னர் பெங்களூர், பம்பாய், சென்னை போன்ற பல இடங்கட்கு விஜயம் செய்து, குற்றாலம் சேர்ந்தார்.

அங்கு, சண்பகமாதேவி அருவிக்கருகில் உள்ள ஒரு குகையுட் சென்று, ஈராறு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து பிறவிப் பெரும்பயன் பெற்றனர். தாம் பெற்ற பேரின்பத்தை எவ்வுயிரும், எவ்விதத் தடையுமின்றி, எந்த வேறுபாடுமின்றி, எளிய முறையில் பெற்றுய்ய வேண்டும் என்று கருதி சிறந்த ஒரு செந்நெறியை வகுத்தருளினர். இயற்கையுடன் ஒட்டிய அந் நெறியைச் 'சட்டம்' என்று அருளினர்.

1. தினந்தோறும் விடியற்காலை 4-00 மணிக்கு மேல், 5-00 மணிக்குள் பச்சைநீரில் தலை நனைய மூழ்குதல்; குடிப்பதற்கும் தண்ணீரையே உபயோகித்தல்.

2. மனதை ஒருமுகப்படுத்தித், தான் வணங்கும் தெய்வத்தை நினைந்து அருள் நிட்டை பேணுதல்.

3. வெள்ளிக்கிழமை தோறும் ஒரு வேளை உணவை நீக்கி, விரதம் இருத்தல்.

4. மருந்து, புலால், லாகிரி வஸ்துக்கள் முதலியன விலக்குதல்.

5. பஞ்சமா பாதகம், பிற மதங்களை நிந்தித்தல் முதலியன விலக்குதல்.

சட்டத்தின் முதற்படிகளான இவற்றைக் கைக் கொண்டாலே பேரின்பத்தை அடையும் பக்குவ மேற்படுமென்று அருளியுள்ளனர். கி.பி. 1923-ல் (துந்துபி ஹூ மார்கழிமீ 28உ வெள்ளிக்கிழமை ஏகாதசி திதி, அனுட நன்னாளில்) இரெட்டியப்பட்டியில், தாம் அவதரித்த இடத்திலேயே, திருக்காப்பிட்டுக் கொண்டனர்.

சட்ட நெறியில் சற்றும் வழுவாது நடப்போர்க்கு என்றும் துணையாயிருந்து, அவர்கள் தவறி நடந்தால், உடல் உபாதை முதலியவற்றின் மூலம் உணர்த்தி, அவர்களைப் பக்குவப் படுத்தி நடத்திச் செல்லும் வழிகாட்டும் விண்ணொளியாக வீற்றிருந்து அருளுகிறார்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் வரலாற்று ஓவியங்கள்

(ஓவியர் திரு. S. K. சாரதி, சென்னை)



1. சுவாமிகள் அவதரித்த இரெட்டியப்பட்டித் திருத்தலம்

2. சுவாமிகள் திரு அவதாரம்

3. கல்வி பயிலச் செல்லுதல்

4. சிலம்பப் பயிற்சி



5. குலத்தொழிலாகிய வேளாண்மை

6. ஏழ்மை போக்கிய ஏழைப் பங்காளரும்,
வெறுப்புற்ற பெற்றோரும்



7. மதுரையில் கணக்கர்



8. திருமணம்

9. வைகை நதிக்கரையில் ஸ்ரீ பரிபூரண
விநாயகரின் திருக்காட்சி.



10. திருக்காட்சிக்குப் பின்
சிலா மூர்த்தியான ஸ்ரீ பரிபூரணர்.



11. மதுரை ஸ்ரீ பரிபூரண விநாயகர் ஆலயம்.



12. குற்ருலம் செண்பகமாதேவி குகையில் அருந்தவம்.



13. அன்னையார் அடக்கம்.



14. அருட்சட்டம் அருளுதல்

15. திருக்காப்பும் திருக்கோயிலும்

★★★ பதிப்பகச் செயலரின் பொன்னேடு ★★★

இக்கலிகாலத்தில் ஜாதி, மதம், செல்வம், கல்வி முதலியவற்றால் வேறுபாடுகள் மிகுந்து உண்மை நெறியறியாது மக்கள் திகைத்த பொழுது, தக்க நல்வழி காட்டி உயிர்களை உய்விக்கும் பொருட்டு கி. பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சற்குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அவதாரம் செய்ததும்; நாடு, மதம், மொழி, இனம், வயது முதலிய எவ்விதமான பேதமுமின்றி, எக்காலத்தும், எவரும் எளிதில் கைப்பற்றி இன்புறத்தக்க அருள் நெறியைச் 'சட்டம்' என்ற பெயரால் வகுத்து வழங்கியதும்; அடியவர்கள் பலரை ஆட்கொண்டதும்; அருளரசாட்சி புரிந்து வருவதும் பொன்னேட்டில் பொறிக்கத் தக்க அரும்பெருஞ் செய்திகளாகும்.

இத்தகைய அற்புதமான அருள் வழியைப் பலருக்கும், பிரசார மூலமாகவும், நூல் வெளியீடுகள் மூலமாகவும் உணர்த்தி, எவரும் பயன் பெறச் செய்யவேண்டியது அவசியம் என்ற கருத்துடன், பிள்ளையார்குப்பம், உயர்தவத்திரு அருட்சக்தி அன்னையார், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கச் செயலர்,—அருள் நகர். உயர்அருள்திரு. ஆ. நரசிம்மலு நாயுடு ஆகியோரின் அருளாசிகளைப் பெற்று, சென்னை மாநகரில், கோவிந்தப்ப நாயக்கன் தெரு, எண் 32-ல் உள்ள 'அடியார்கள் இல்லத்தில்,' 16-5-1971 ல் 'ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம், துவக்கப் பெற்றது. உயர்திரு. R. சண்முகசிகாமணி, M. A. (தற்போது நெல்லை மாவட்ட ஆட்சியாளர்) அவர்களின் தலைமையில், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தலைவர், 'ஆட்சிச் சொற் காவலர்' உயர்திரு. கீ. இராமலிங்கனர், M.A. அவர்கள் துவக்கி வைத்தனர்.

'இருடியர்பட்டி குருநாதர் பிள்ளைத்தமிழ்,'. 'குரு அருள் திரு உந்தியார்,' 'அருட் பிரசாதம்,' 'பேரின்ப வேட்கை' என்ற நான்கு தமிழ் நூல்களும், 'THE KINDLY LIGHT THAT LEADS' என்ற ஆங்கிலப் புத்தகமும், 'அநுக்ரஹப்ரஸாதம்' என்ற தெலுங்குப் புத்தகமும் வெளியிடப் பெற்றுள்ளன.

சென்னை மாநகரிலுள்ள பல திருக்கோயில்களிலும் கோவை, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, கீழ்ப் பென்னாத்தூர், கலசப்பாக்கம், வேலூர் (N. A.), வேளூர் (தஞ்சை மாவட்டம்), கும்பகோணம், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம், மாயூரம், இரெட்டியப்பட்டி, பிள்ளையார்குப்பம் (புதுவை மாநிலம்) முதலிய பல வெளியூர்களிலும் சுவாமிகளைப் பற்றியும், அருட்சட்டத்தைப் பற்றியும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

பிள்ளையார்குப்பம், ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையார், மதுரை, (முன்னாள் அமைச்சர்) தமிழவேள், உயர்திரு. P.T. ராஜன் Bar-at-law, கோவை, திரு. P. A. R. விஸ்வநாதன், காஞ்சீபுரம், திரு. C. P. கன்னியப்ப முதலியார், திருவிசை நல்லூர், திரு. G. சரவணப்பிள்ளை, சிதம்பரம், புலவர். திரு. A. ஆனந்த நடராஜ தீக்ஷிதர், M. A; B. O. L., வட திருமுல்லைவாயில், தவத்திரு. சாது. பார்த்தசாரதி, சென்னை, திரு. K. வெங்கடேசன், B. A., மதுரை, திரு. V. G. ஸ்ரீநிவாசன், நெல்லிக்குப்பம், திரு. T. K. ரங்கநாதம் செட்டியார், சிதம்பரம், திரு. க. சுவாமிநாதன், மாயூரம். திரு. E. S. கணபதி, B. E., சென்னை, திரு, S. பரமேசுவரன், திருக்கடவூர் திரு. சோமசுந்தரம் பிள்ளை, வேளூர் பிரம்மாநுபூதி, திரு. S. பெத்தபெருமாள் ஆச்சாரி முதலியோர் சென்னையிலும், வெளியூர்களிலும், பதிப்பகம் நடத்திய பிரசாரக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி இனிது நடத்தி வைத்தனர்.

''அருட்கவி,'' உயர்தவத்திரு. சாதுராம் சுவாமிகள், 'வாகீசகலாநிதி' திரு. கீ. வா. ஜெகந்நாதன், M. A. வித்வான், திருமதி. S. மங்கையர்க்கரசியார், 'செந்தமிழ் விளக்க வள்ளலார்' திரு. கீ. இராமலிங்கனர். M. A., சென்னை, திரு. K. சாம்பசிவ ஐயர், 'பிரபந்த வித்வான்' திரு. K. வேங்கடசாமி ரெட்டியார், காஞ்சீபுரம், திரு இராமச்சந்திர குப்தா B. A., L. T., வித்வான், திருஞானசம்பந்த முதலியார், சென்னை, திரு. T. ஜெகந்நாத

குப்தா, 'அருளிசைமணி' திரு. S. V. சுப்பிரமணியம், 'சற்குருதாசன்' திரு. M.K. வேங்கடராமன், திரு. R. பாலகுரு, L. C. E., ஆகியோர் அருளுரை யாற்றியுள்ளனர்.

முதலாண்டு விழா

பதிப்பகத்தின் முதலாண்டு விழா, 20 & 21-5-72 ல் சென்னைமாநகரில், கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, எண் 214, சௌந்தர்ய மஹாலில், சிறப்புற நடைபெற்றது. 20-5-72 ல் சென்னை, 'ஸ்பெஷல் ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட், 'இராவ்சாகிப்' திரு. A. வரதப்ப செட்டியார், J. P. அவர்கள் தம்பதி சமேதராய் வந்து, தலைமை வகித்து, 'ஆண்டவர் வரலாறு' பற்றிய பேச்சுப் போட்டியையும், ஆண்டவர் அருட்பாடல்களில் பாட்டுப் போட்டியையும் இனிது நடத்தி வைத்தனர்.

சென்னை உயர்திரு. C. சந்திரையா அவர்கள் தம்பதிகளாய் வந்து கலந்து கொண்டு, ஆண்டவர் அருட்பாடல்களைத் தக்க பக்க வாத்தியங்களுடன் பாடி இன்னிசைக் கச்சேரி நடத்தினர்.

காஞ்சீபுரம், வித்வான், உயர்தவத்திரு. S. மங்கையர்க்கரசியார் தலைமையில், வடதிரு முல்லைவாயில், 'அருட்கவிமணி' உயர்தவத்திரு சாதுராம் சுவாமிகள் ஆண்டவர் வரலாற்று ஓவியக் காட்சியைத் திறந்து வைத்தனர். காஞ்சீபுரம், உயர்திரு. V. R. அமரேந்திர குமார் 'அநுக்ரஹப்ரசாதம்' என்னும் தெலுங்குப் புத்தகத்தினை வெளியிட்டனர்.

21—5—72 ஞாயிறு மாலை மங்கள வாத்தியங்களுடன் ஆண்டவர் திருவுருவப் படம் திரு வீதித் திருஉலா இனிது நடை பெற்றது.

"சாந்தசீலர்" உயர்திரு கி. இராமலிங்கனர், M.A. அவர்களின் தலைமையில், சென்னை சர்வ கலாசாலைத் தமிழ்த் துறைத் தலைவர், Dr. ந. சஞ்சீவி, M.A., M. Litt. Ph.D., Dip. in Anthropology, Dip. in Pol & Public Admn. அவர்கள், 'இன்றைய நாளில் விந்தைப் புதுமை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். உயர்திருமதி. கிருஷ்ண சஞ்சீவி, M.A.L.T. அவர்கள் பாடல் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கினர்.

சென்னை குமாரி, S. N. கௌரி, குமாரி. T. J. நித்யவதி, குடந்தை குமாரி. G. பிரேமலதா ஆகியோர், 'குறி சொல்லக் கேளம்மா,' 'பூத் திருக்கும் சோலையிலே', என்னும் அருட் பாடல்களுக்கு நாட்டிய-அபிநய-விளக்கம் நிகழ்த்தினர். உயர்திரு கி. இராமலிங்கனர், M.A. அவர்களின் வாழ்க்கைத் துணைவியார். உயர் திருமதி. சிவகாம சுந்தரம் அவர்கள் அச் செல்வியருக்கு மலர் மாலைகள் சூட்டி ஆசி வழங்கினர்.

சென்னை மாநகர் அன்பர்களும், வெளியூர்களிலிருந்து வந்த பல அருட் சட்ட அடியார்களும், கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

பாதயாத்திரைக் குழுவினர்க்கு வரவேற்பு

9—6—72-ல் காஞ்சீபுரம் அருள் ஞானச் செல்வச் சந்நிதியிலிருந்து புறப்பட்டு, ஒரு மண்டலம் யாத்திரையாக நடந்து சென்று, மதுரையில் சுவாமிகட்கு அருட் காட்சியளித்து ஆட்கொண்டருளிய ஸ்ரீ பரிபூரண விநாயகரைச் சேவித்து, அபிஷேக ஆராதனை நிகழ்த்திக் கொண்டு, இரெட்டியப்பட்டித் திருத்தலம் சேர்ந்து, சிறப்பு வழிபாடாற்றிப், பின்னர் குற்றாலம் சென்று சுவாமிகள் அருந்தவமாற்றி அருட் பரிபூரணம் பெற்ற திருக் குகையைத் தரிசனம் செய்து கொண்டு, யாத்திரை நிறைவிற்காகப் புறப்பட்ட இடமாகிய காஞ்சீபுரம் சந்நிதிக்குச் சென்ற பாதயாத்திரைக் குழுவினரை, 29—7—72-ல் சென்னை மாநகரில் N.S.C. போஸ் சாலையிலுள்ள ஸ்ரீ பசுவேசுவரர் ஆலயத்தில் மங்கள வாத்தியங்களுடனும் பூரண கும்ப மரியாதையுடனும் பதிப்பக ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த அருள்திரு. கி. இராமலிங்கனர், M.A. அவர்களும், பதிப்பக அமைப்பாளர், திரு T. ஜெகந்நாதகுப்தா தம்பதிகளும், அடியார், அன்பர் குழாத்துடன் வரவேற்று, பதிப்பக அலுவலகத்திற்கு அழைத்து வந்து உபசரித்தனர்.

சென்னை, உயர்திரு. S. பரமேசுவரன் தலைமையில்பாத யாத்திரைக் குழுவினர் அனைவரும், யாத்திரையின் போது ஆண்டவர் அருளால் நிகழ்ந்த அற்புதங்களையும், அவர்கள் பெற்ற அனுபவங்களையும் விளக்கிப்பேசினர்.

இவ்வாறு இப்பதிப்பகம் இரண்டு ஆண்டுகளாகத் திருவருள் துணை கொண்டு பல நற்

பணிகள் புரிந்துள்ளது. இப்போது இரண்டாவது ஆண்டு விழா நடைபெற உள்ளது.

பதிப்பகச் செயலர் சில சமயங்களில் சில பெரியார்களைச் சந்தித்துப் பேசிய காலை, அவர்கள் பல நல்லுரைகளை அருளியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம் ;-

1. பிள்ளையார் குப்பம், திருவார்திரு. அருட்சக்தி அன்னையார் அவர்கள் அருளிய நல்லுரை.

அருட்சட்ட அடியார்கள் நாள் தோறும் காலை 4-30 மணிக்குள், பச்சை நீரில் தலை நனைய மூழ்க வேண்டும். சுவாமிகளின் அருட்பாடல்களில் இரண்டொன்றுவது பாட வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு ஐந்து நிமிடமாவது அசையாமல் உட்கார்ந்து ஆண்டவரைத் தியானிக்க வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமமாகத் தான் தோன்றும். தொடர்ந்து பழகி வந்தால் பிறகு சிரமந் தோன்றுது; நல்ல பலன் காணலாம். அனுவசியமான பேச்சுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். கூடியவரையில் மௌனமாய் இருக்க முயல வேண்டும். அது கொஞ்சம் அரிதான காரியந்தான். ஆனுலும் பேச்சைக் குறைத்து, ஆண்டவர் சிந்தனையில் தோயும் அளவிற்கு ஆனந்தம் அதிகரிக்கும். வெள்ளிக் கிழமை தோறும் விரதம் இருக்க வேண்டும். அம்மாதிரி வைராக்கியமாக இருந்து அருட்சட்ட நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகினுல், நம் குருநாதர் அருமையாக வழிகாட்டி அழைத்துச் செல்வார். செயற்கரிய செயல்களைச் செய்ய வல்ல ஆற்றலையும் அருளுவார்!

அவருடைய அருள் மகிமையைச் சொல்லால் சொல்லி முடியாது. ஒரு சமயம் சுவாமிகள் சில அடியார்களுடன் மலைகள், காடுகள் நிறைந்த வழியில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அருட் சட்டம் சம்பந்தமாக அடியார்கள் ஆண்டவரைச் சில கேள்விகள் கேட்டு, சந்தேகங்களைத் தெளிவு படுத்திக் கொண்டார்கள். உடன் சென்ற அடியார்களுள் ஒருவரான ஈராச்சி பார்வதிநாதம் பிள்ளை என்பவர், பிறவியிலேயே ஊமையாய்ப் பிறந்தவர். ஆண்டவர் அருளால் திடீரென்று அவர் வாய்திறந்து,

'வேடிக்கை பாராய்-ஐயன் திருவிளையாட்டை நேராய்'—எனும் பல்லவியும்,

'தேடும் அடியவர்கள் தெரிசித் தருள்சுரக்க
நாடும் ரெட்டியப்பட்டி நாதர் அவதரித்த
வேடிக்கை பாராய்'—எனும் அனுபல்லவியும்,
'தேவாதி தேவன் சகல வினை தீர்க்கும்
உதாரன்

என்று தொடங்கித் தொடர்ந்து செல்லும் 8 சரணங்களையும் பாடி, அருட் சட்டத்தின் அம்சங்களை அப்பாட்டில் விளக்கிப் பாடியுள்ளார்.

அப்பாடல் முழுவதையும் 'வழிகாட்டும் வான் பொருள்', புத்தகத்தில், அடியார் பாடல்கள்' என்ற தலைப்பில் காணலாம். பிறவியிலேயே ஊமையாய்ப் பிறந்த ஒருவர் இத்தகைய பாடலைப் பாடினுர் என்ருல், இதனை 'ஆண்டவரின் அருட் செயல்' என்று கூருமல் வேறு என்னவென்று கூறமுடியும்!

2. இரெட்டியப்பட்டியில், சுவாமிகள் சந்நிதியில் (24—9—72) சுவாமிகள் ஐயந்தி விழா நாளில், திருக்கோயில் திருப்பணிச் செயலர் ஸ்ரீ K. சாம்பசிவ ஐயர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது,

பதிப்பகச் செயலர்: சுவாமி! நீங்கள் மிகுந்த பாக்கியசாலி! ஆண்டவர் திருக்கோயிலை விரிவாக்கி அமைக்கும் திருப்பணியைச் செவ்வனே முடித்துக் கும்பாபிஷேகத்தையும் நடத்தி விட்டீர்கள்; இப்போதுதான் தங்கள் முகத்தில் மலர்ச்சியைக் காண்கிறேன்.

திருப்பணிச் செயலர்: ஸ்ரீலஸ்ரீ அன்னையார் அவர்களின் தபோ வலிமையாலும், அவர்களுடைய பூரண அருளாலும் நடந்ததேயன்றி நம்மால் ஓர் அணுவையும் அசைக்க முடியுமா? மேலும், கும்பாபிஷேகம் நடந்த அதிசயத்தைச் சொல்வதென்ருல் சொற்களே இல்லை; சொல்லவும் இயலாது. மற்றும் ஒரு முக்கிய விஷயம்; தற்சமயம் கோயில் விரிவாகியுள்ளதைப் பார்த்தால், இப்போதும் சுவாமிகள் தாம் அமர்ந்துள்ள இடத்தைச் சிறிதும் விரிவாக்கிக் கொள்ளவில்லை. அடியார்களின் சௌகரியத்துக்காகத் தான், அடியார் கூட்டம் புழங்கும் சுற்றுப் பிராகாரம் மட்டும் விரிவாக அமையும்

படி அருள் புரிந்துள்ளார். அடியார்கள் பால் அவர் கொண்டுள்ள அருட்பெருங் கருணையை அளவிடமுடியுமா?

3. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தலைவர் 'சாந்தசீலர்', அருள்திரு கீ. இராமலிங்கனார், M A. அவர்கள் அருளிய நல்லுரை.

பதி. செயலர் : சுவாமி! அருட்சட்ட அடியார்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

சங்கத் தலைவர் : பதிப்பகத்தில் நீங்கள் நல்லதையே செய்துகொண்டு முன்னேறுங்கள்; எல்லோரிடமும் அன்போடு பழகக் கற்றுக்கொள்ளுங்கள். 'அன்பே சிவம்'. மேலும் அடியார்களிடையே நல்லுறவும், நல்லுணர்வும் ஏற்படவேண்டுமானால் சத்சங்கம் அவசியம். அதனை விடாது பேணி வந்தால் அதுவே போதும். அதுவே அனைத்தையும் கூட்டுவிக்கும்.

4. ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கச் செயலரும், அருட்கொடிப் பள்ளியின் மேலாளரும், மாணவர் விடுதியின் காப்பாளருமான, அருள்திரு ஆ. நரசிம்மலு நாயுடு சுவாமிகளுடன் அருள் நகரில் பேசிக்கொண்டிருந்தபோது அவரருளியது.

பதி. செயலர் : இரெட்டியப்பட்டியில் ஸ்ரீ குருநாதர் திருக்கோயில் கும்பாபிஷேகச் சமயத்தில் பதிப்பகக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இசைவு தந்து, இனிது நடத்திவைத்த தங்களுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவதென்றே புரியவில்லை!

சங். செயலர் : 'எதனை எப்படி செய்ய வேண்டும்' என்று அறிந்து, முறைப்படி செய்தால் எதுவும் சிறப்பாகவே அமையும். முறையோடு நடக்கப் பழகுவது, எதிர்காலச்சிறப்புக்கு அறிகுறியாகும். ஆகையால் யாராயினும் முறையோடு செயல் புரியும் நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொண்டால் இறைவன் நமக்கு நிச்சயம் அருள் புரிவார்.

5. பதிப்பகத் தலைவர் திரு. K. வெங்கடேசன், B.A. அவர்களுடன்

பதி. செயலர் : என்ன சுவாமி! எதற்கெடுத்தாலும் 'கணக்கு', 'சிக்கனம்' இவைகளைப் பற்றியே பேசுகிறீர்கள்!

பதி. தலைவர் : ஆம் தம்பீ! எதையும் நன்றாக ஆலோசித்துச் செய்யவேண்டும். மேலும் பொதுக் காரியத்தில் ஈடுபடுவோர் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொதுப்பணம் நெருப்புக்குச் சமம். அடியார்களும், அன்பர்களும் ஆண்டவர் சம்பந்தமான அருட்பணிக்காகப் பணம் தருகிறார்கள். பரம் பொருளுக்கு உரியதாகிய அப் பணத்தை, அவருக்குப் பயந்து, நன்கு ஆலோசித்து அவசியமாய்த் தேவையுள்ள போது மட்டும், செயற்குழுவின் அங்கீகாரத்துடன், சிக்கனமாகச் செலவிடுவதும், கணக்குகளை அவ்வப்போது கவனித்துச் சரிவர எழுதிவைத்துக் கொள்வதும் நமது கடமையாகும்.

6. பாலகவி திரு. M. K. வேங்கடராமன் அவர்களுடன் அளவளாவுகையில்:

பதி. செயலர் : சுவாமிக்குக் கற்பூர ஆரத்தி செய்வது எதற்காக?

பாலகவி : பஞ்ச பூதங்களில் மண்ணும், நீரும் கீழ் நோக்கும். அதிலும் நீர் கீழ் நோக்கியோடினும், சமநிலைப்படுத்திக் கொள்ளும். தீ மேல் நோக்கி எழும். கனலை ஞானத்திற்கு ஒப்பிடுவர். மண்ணுக்கும், நீருக்கும் தூய்மை செய்யும் சக்தி இருப்பினும், கனலின் தூய்மை செய்யும் சக்தி தனிச்சிறப்புடையது. தன்னைச் சேர்ந்த அனைத்தையும் எரித்து பஸ்மப் படுத்தித் தூய்மை செய்யும் பேராற்றல் வாய்ந்தது கனல். இறைவன் ஜோதி சொருபன். அவனை அடைவதற்கு மனம் சிறிதும் மாசு மறுவின்றித் தூய்மை பெறவேண்டும்; அதில் அருள் மணமும் கமழ வேண்டும். கர்ப்பூரத்தின் தூய வெண்மையும் மணமும் இக்

கருத்தை விளக்குகின்றன. ஜோதி (கனல்) வடிவான இறைவன் சம்பந்தம் ஏற்பட்டவுடன் மனம் உருகிக்கரைந்து, மேல் நோக்கம் பெற்று, மெய்ஞ்ஞான மயமாகிய இறைவனோடு கலந்துவிடும். கனலுடன் சேர்ந்த கற்பூரம் மேல் நோக்கிய சுடரொளி வடிவாகிச் சிறிது நேரத்தில் கரைந்து, இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவதுபோல, ஜீவன் சிவத்துடன் கலந்து ஒன்றிவிடுகிறது. இத்தகைய உயர் நிலையை **'பரமுத்தி'** என்று சைவசித்தாந்தம் பேசுகிறது.

'தீதணையாக் கர்ப்பூர தீபம்போல் நான் அகண்ட
ஜோதியுடன் ஒன்றித் துரிசறுப்ப தெந்நாளோ'
—தாயுமான சுவாமிகள்.

ஆதலால், 'கர்ப்பூரம் போல மனம் தூய்மை பெற வேண்டு'மென்றும், 'ஜோதிவடிவான இறைவனுடன் கலந்து, முத்திப் பேறு பெற அருள்புரிய வேண்டும்' என்றும் பிரார்த்தித்து, இறைவனுக்குக் கர்ப்பூர ஆரத்தி செய்தல் வேண்டும் என ஆன்றோர் அருளியுள்ளனர்.

நம் குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளை ஆட்கொண்டருளிய ஸ்ரீ பரிபூரண விநாயகரும், அறுபத்தைந்தாம் திருவிளையாடலாக, ஜோதி வடிவில் அருட் காட்சியளித்து, ஆட்கொண்டருளி, அருட்சட்டம் வழங்கி, அருளாட்சி புரிந்து வரும் அற்புதத்தையும் நாம் உன்னிப் போற்றி உய்வோமாக!

With the best compliments from:

★

KARTHIGEYA FINANCE CORPORATION

Financiers & Chit Conductors,

24, Govindappa Naick Street,
MADRAS-1.

Mg. Partner
O. A. L. CHIDAMBARAM,

Manager
C. T. UDAYAPPAN, B.A.

இலக்கியப் பதிப்பகத்தின் இன்றியமையாமை

இறைவன் படைப்பில் எண்ணற்ற உயிர்கள் காட்சியளிக்கக் காண்கிறோம். அவ்வுயிர்களுள் மக்கட் பிறவியே மாண்புறு பிறவி என்பதை ஆன்றோர் பலரும் பரக்க விளக்கியிருக்கின்றனர். "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது!" என்பது தமிழ்ப்புலமைச் செல்வியராகிய ஔவையாரின் ஆய்வுரை. இங்ஙனம் கூறுவது எதனால்? மக்களே பகுத்தறிவுடையவர்கள். அவர்களே வாழ்க்கையில் செய்யத் தகுவனவும் விலக்கத் தகுவனவும் எவை? என்பதைப் பகுத்தறிவால் பிரித்துணர்ந்து வாழும் பண்பைப் பெற்றவர்கள்.

இப்பண்பை விளக்க ஆன்றோர்கள் பட்டறிவாற் கண்டறிந்த உண்மைகளை, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் உயர்ந்த நோக்கத்துடன் மக்கள் வாழ்வை மாண்புறச் செய்யும்கருத்துகளை நூல்களாக்கி மன்பதைக்கு வழங்கியுள்ளார்கள். அத்தகைய கருத்துக் கருவூலங்களே' இலக்கியம்' எனவழங்கப்படுகின்றன. விலை மதிக்க இயலாத பொருள்களாய் விளங்கும் இலக்கியங்களே மக்கள் வாழ்விற்கு வளம் சுரப்பவை; இறைநிலையைப்பற்றிய உண்மையை விளக்கி மக்களை வையத்தில்வாழ்வாங்கு வாழச் செய்பவை.

> 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்.'

என்பது திருவள்ளுவர் கூறிய உண்மை. வையத்துவாழ்வாங்கு வாழ வழி காட்டுவனவே ஆன்றோர்கள் அருளிச் செய்த அருள் வாக்குகள்.

இவ்வருள் வாக்குகளை அனைவரும் அறிந்து பெருநலம் எய்த இவற்றை மறைந்தொழியாத படி அச்சிட்டு ஏழைகளும் எளியவர்களும் பெற்றுக் கற்றுப் பெரும் பயன் அடையச் செய்வதே இலக்கியப் பதிப்பகத்தின் இன்றியமையாத தொண்டாகும்.

இவ்வுண்மையை உணர்ந்து பெருந்திருவினராகிய இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. அருளாளர்களின் இச்சீரிய தொண்டு பெரிதும் பாராட்டத் தக்கது!

இரெட்டியப்பட்டி சுவாமிகளும், அவர்கள் வகுத்த சட்டங்களை வழுவாமல் பின்பற்றி நடக்கும் அவர் அடியார்களும் அருள்கூர்ந்து இயற்றிய பாடல்களும், நூல்களும் பல அச்சிடப்படாமல் இருப்பது தெரிகிறது. அவற்றைத் தகுந்த முறையில், அடக்கவிலையில் அனைவர்க்கும் கிட்டும் வண்ணம் வெளியிட வேண்டுவது இவ்விலக்கியப்பதிப்பகத்தின் இன்றியமையாக்கடமையாகும். இக்கடமையை மேற்கொண்டுள்ள அருள் உள்ளம் படைத்த அன்பர்களுக்கு, ஒல்லும் வகை பொருள் உதவி செய்தல் பொருள் படைத்தவர்கள் செய்யத்தகுந்த நல்லறமாகும்.

> 'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> செல்லும்வாய் எல்லாம் செயல்'

என்பது வள்ளுவர் வழங்கிய நல்லறக்கட்டளை. இது நாடறிந்ததுதானே! இலக்கியப் பதிப்பகம் எழிலுற வளர இறைவன் திருவருள் சுரப்பதாக!

மகாவித்வான்,
திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை,
சென்னை.

'குருகாணிக்கை' என்ற பெயரில் பணம் கேட்பது, சீடர்களைக் கொண்டு பணம் பறிப்பது, தர்மத்துக்கென்று பணம் தண்டுவது போன்ற செயல்களை நம் சுவாமிகள் கனவிலும் கருதியதில்லையாம்.

"இரெட்டியப்பட்டிப் பெருமான்"

திரு. கி. வா. ஜகந்நாதன், M.A.,

புவிவாழ்வில் மயலளற்றில் ஆழ்ந்துமிக மாழாந்து போது போக்கித்
தவியாநிற் கின்றமக்கள் தமக்குநல்ல வழிகாட்டும் தயாவை மேற்கொண்
டவியாத பெருஞான விளக்காகிப் பேரின்பம் அடையும் மார்க்கம்
சவியாரக் காட்டிநின்ருர் இரெட்டியபட்டிச்சாமி தரணி மீதே.

நோய்வந்தால் நம்வினையின் பயன்நுகர வந்ததென நுனித்தந் நோய்க்கு
வாய்வந்த கைவந்த மருந்துகளை உண்ணுமல் மனத்தே என்றும்
ஆய்தந்த பரம்பொருளைத் தியானித்தல் நலமென்றே அருள்செய் ஞானி,
தாய்தந்த கருணையொடு முரைதந்த பெருவள்ளற் சாமி யன்னேன்,

சட்டமென வரையறுத்து மெய்ஞ்ஞானம் அடைபவர்கள் சார்ந்து நோற்கும்
திட்டமொன்றை வகுத்தந்த வழிநிற்பார் தம்துணையாய்ச் சிறக்கும் அண்ணல்
எட்டுணையும் அகந்தையின்றித் தனைமறந்து மோனநிலை யிருந்த செம்மல்,
ரெட்டியபட் டிப்பெருமான் பெருமைகளைப் பேச உண்டோ எல்லை யம்மா!

அப்பெரியோன் குருபூஜை ஆண்டுதொறும் நனிநடத்தி அன்பர் என்றும்
வைப்பெனவே அவன்நினைவி லாழ்ந்து பத்தி செய்கின்ருர்; வாய்த்த இந்நாள்
செப்புகுரு பூஜைக்குப் பொன்விழா எடுக்கின்ற திறத்தைக் கேட்டேன்;
தப்பரிதாம் பேரருளில் ஆழ்ந்தவர்தம் பெருமுயற்சி தழைக்க மாதோ!

ஞானியரை வழிபடலால் மக்கள்மனம் சாந்தி பெறும்; ஞானச் செம்ம
லானவர்கள் சொன்னநெறி கடைப்பிடிப்ப தால்இன்பம் அமையும்; யாரும்
ஈனமிலா வகைவாழ வழிகாட்டும் வள்ளலாம் எம்மான், போற்றும்
மாநகராம் இரெட்டியபட் டிக்கண்ணே கோயில்கொண்டான் வளச்சீர் வாழி!

சமாதி நிலை

திரு. கீ. இராமலிங்கனுர், M.A.,
தமிழ்மணம், சென்னை-30

வாழ்வின் நிறை பயன் சமாதிநிலை பெறல்
(1) 'சமாதி நிலை, இறையுடன் கூடும்' இன்ப நிலை

'சமாதி' என்னும் சொல்லுக்குக் 'கூட்டம்' என்று பொருள். எவற்றின் கூட்டம்? உயிர், இறை, இரண்டின் கூட்டம். இரண்டும் என்றும் உள்ள பொருள்கள். உயிர் சிற்றறிவுடையது, இறை பேரறிவுடையது. ஆகவே இரண்டும் அறிவுடையனவே. உயிருக்கு இன்பம் அளிப்பது இறையே.

உயிரும் இறையும் கூடியே இருக்கின்றன. உயிருக்கு உயிராய், உயிரின் மூச்சாய், இருக்கிறது இறை :

"என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை;
என்னிலும் இனியான் ஒருவன் உளன்;
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே".
—அப்பர்

இவ்வளவு நெருங்கியிருந்தும், உயிர், இறையுடன்,இரண்டறக்கலந்து உணர்வோடு இல்லை. இதனுல்; உயிர் பேரின்பம் நுகரக் கூடவில்லை. உலகச் சிற்றின்பங்களில் உழன்று, துன்பத்தில் சுழன்று கொண்டு கிடக்கிறது. இத்துன்பச் சூழலை உதறிவிட்டு, இறையுடன் ஒன்றி, பேரின்ப நிலை பெறவேண்டும். இந்நிலையே சமாதிநிலை.

(2) இயல்பாகவே உயிர் உடலுடன் ஒன்றி நிற்கிறது

இறையுடன், உயிர் இத்துணையிணைந்திருந்தும், இறைவனின் இன்ப நிலையை, உயிர் உணராது இருப்பதற்கு என்ன காரணம்? உயிர், உடலுடன் பின்னிப்பிணைந்து கொண்டிருப்பது தான் காரணம். உணர்ந்திருந்தால் இறையுடன் இரண்டற ஒருங்கி விடுமே. உடல் வேறு தான் வேறு என்று, எளிதில் பிரிக்க முடியாத படி, உடலுடன் உயிர் உறவு கொண்டுள்ளது. இது இயற்கையின் திட்டம். இறைவனின் திருஉள்ளம், உயிர் முட்டி முரணி, உழன்று உழைத்து, ஆணவ மூடி அகலப் பெற்று உண்மை நிலையை உணர வேண்டும் என்பது நோக்கம் போலும்.

இயல்பாகவே உயிரை மூடிக்கொண்டுள்ளது ஆணவம் என்று சொல்லப்படுகிற அறியாமை. இந்த ஆணவமே உயிரின் அறிவை மறைத்து உடையவனது உண்மை நிலையை உணர ஒட்டாமல் தடுக்கிறது.

"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞானத்
தாணுவினுே(டு) அத்து விதம் சாரும் நாள் எந்நாளோ?"

அறிவில்லாததும், அழியும் தன்மையதுமான உடலுடன் அத்துவித மாய்விட்டிருக்கும் உயிர், மெய்ஞான வடிவமானதும், நிலையானதுமான இறையுடன் அத்துவிதம் ஆகும் நாள் எந்நாள்? என்று ஏங்குகிருர் தாயுமானவர். "அத்துவிதம்" என்ருல் இரண்டறக்கலத்தல்.

(3) உடல் படைக்கப்பட்டது உயிரை இறையுடன் இணைக்கவே

உயிர் உடலுடன் இரண்டறக் கலந்து விடும்படி உயிரை இயல்பாகவே அறியாமை கவ்வியுள்ள இந்த இழி நிலையை மாற்றி, இறையுடன் உயிர் இரண்டறக் கலக்கும் உயர் நிலையைப் பெறுவதற்காகவே, நமது உடல் படைக்கப்பெற்றிருக்கிறது. இந்த உண்மையை உணராமல், உலக இன்பத் துளிகளை நுகர்வதற்காகவே, நமது உடலை நாம் பெற்றிருப்பதாக

நினைக்கிறோம். இவ்வாறு நினைப்பது உயிரைப் பற்றியுள்ள அறியாமையினாலேயே யாகும்.

" என்ன ! நான் அறியாத காலம் எல்லாம்,
புந்திமகிழ் உற
உண்டு உடுத்து, இன்பமாவதே போந்த
நெறி என்று இருந்தேன். !!
என்று தாயுமானவர் நெஞ்சம் நைகிறார்.

இந்த கீழ்த்தரமான நினைப்பினால், எத்தனையோ தீங்குகளைச் செய்து விடுகிறோம். எவ்வளவோ பேருக்குக் கேடு சூழ்ந்து விடுகிறோம், இழிந்து போகிறோம்.

நமக்கு அளிக்கப் பெற்றிருக்கும், கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்து அறிவு பெறு பொறிகளையும், அவற்றால் பெறும் பார்த்தல், கேட்டல், மோத்தல், சுவைத்தல், உணரல் ஆகிய ஐவகைப் புலன் அறிவுகளையும், இப் பொறிகளை இயக்கி, அறிவுகளை ஆளும் மனத்தையும், மனத்தை உள்ளிட்ட புத்தி, சித்தம், அகங்காரம், என்னும் உட்கருவிகளையும் கை, கால், பேச்சுக்கருவி, கருக்கருவி, எருக்கருவி ஆகிய ஐந்து செயற் பொறிகளையும், உடலின் பிற பகுதிகளையும், உலகப் படைப்பு முழுவதையுமே, இம்மை நலங்களைப் பெறவும் பயன் படுத்தலாம்; உடையவனுடன் ஒன்றுவதற்கான, மறுமை நலங்களைப் பெறவும் பயன் படுத்தலாம், இதுவே, இறைவனின் திருக் கருத்து.

இம்மை நலங்கள், அழியும் தன்மையன வாய் அற்ப இன்பமே தந்து இடர்க்கடலில் இருத்தி விடுவனவாய் இருக்கின்றனவே என்னும் உண்மையை உயிர் நாளடைவில் உணர வேண்டும். உணர்ந்து முட்டிக் கொள்ள வேண்டும். இச்சிறு நலங்களில் அருவருப்பும், வெறுப்பும், பெருக வேண்டும், என்றைக்கும் உள்ளனவும், முழு இன் ப ம் அளிப்பனவும், அல்லற் கடலிலிருந்து நம்மைக் கரை யேற்றக் கூடியனவுமான, சமாதி நிலையை முடிவாகக் கொண்ட அருள் இயல் நலங்களைப் பெற நாம் ஆர்வம் பூணவேண்டும்.

அந்த ஆர்வம் நமது உடலை உள்ளிட்ட உலகப் படைப்பு அனைத்தையுமே, மேல் நிலை பெறும் முயற்சியில் நம்மை மெல்ல மெல்ல உந்தித்தள்ளும். அதுவே உண்மையில் நாம் உடல்பெற்றதின் நிறை பயனான சமாதிநிலைக்கு நம்மை உய்க்கும். நமது ஆர்வத்திற்கும் உழைப்பின் அளவிற்கும் ஏற்றபடி ஆண்டவன் உடன் நின்று அருள் புரிந்து வருவான்.

(4) சமாதி நிலையடைய ஐந்து படிகள்

உடலில் நாம் இருக்கும்போதே சமாதிநிலை அடைய வேண்டும். உடலைவிட்டுப் பிரிந்த பின்பு அடைய முடியாது. ஏனென்றால் உடல் தானே சமாதி நிலை அடைவதற்கு நமக்கு கொடுக்கப் பெற்றிருக்கும் கருவி, கருவியை யிழந்து விட்ட பின்பு அதனால் செய்யக் கூடிய செயலை எப்படிச் செய்வது ?

சமாதி நிலை அடைய ஐந்து படிகள் உண்டு. ஐந்து புலன்களுடன் நாம் கூடியிருக்கும் நிலை ஒரு படி. புலன்களின் தொடர்பை விட்டு அவற்றை இயக்கும் மனத்துடன் மட்டும் கூடியிருக்கும் நிலை அதற்கு மேற்படி. மனத்தையும் விட்டு நிற்கும் நிலை மூன்றாவது படி. அந் நிலையைத் தாண்டியதும் வருவது நான்காம் படி. அதற்கு அடுத்ததும் ஐந்தாவது மானது கடைசிப் படி. இந்த ஐந்து நிலைகளின் பெயர்கள் நனவு நிலை, கனவு நிலை, உறக்க நிலை, பேர்உறக்க நிலை, உயிர்ப்பு அடங்கிய நிலை. இவற்றை, சாக்கிரதாவஸ்தை, சுவப்பனாவஸ்தை, சுழுப்தி, துரியம், துரியாதீதம் என்றும் சொல்வர். "அவஸ்தை" என்றால் நிலை, மேலே செல்ல இவற்றைப் பயன்படுத்துவதால் இவை மேல் நோக்கும் நிலைகள். (மேலாலவஸ்த்தைகள்) எனப் பெறும்.

தூக்கத்திலும், நாம் ஐம்புலன்களுடன் கூடிய விழிப்பு நிலையான நனவு நிலையிலிருந்து கனவு நிலைக்கும், உறக்க நிலைக்கும் செல்கிறோம். ஆனால் நமது முயற்சியால் நாம் செல்லவில்லை. இறைவன் செலுத்தி விடுகிறார். உடல் நலமுடன் இருப்பதற்காக இங்ஙனம் செய்கிறார். இவ்வாறு செல்வதைத் தூக்கம் என்கிறோம். எப்போதுமே ஐம்புலன்களுடன் கூடியிருந்தால், உடல்நலம் விரைந்து கெட்டுவிடும். தொடர்ந்து மனத்துடன் இருந்தாலும் உடல் நலத்திற்கு கெடுதி. எனவே புலன்களையும் மனத்தையும் விட்டு ஒவ்வொரு நாளும் ஒரு பகுதி நேரமாவது தனித்திருக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் நமக்கு தூக்கத்தை அருளுகிறான். தூக்கத்தில் நிகழ்கிற கனாநிலை, உறக்க நிலைகளுக்குக் கீழ் நோக்கு நிலைகள். (கீழாலவஸ்தைகள்) அல்லது படிகள் என்று பெயர்.

சமாதி நிலை அடையவேண்டிய ஐந்து படிகளையும் நாமே ஏறவேண்டும். இறைவன் நமது முயற்சியைப் பாராட்டி நமக்கு உடன் நின்று உதவுவார். நனவு நிலையில் புலன்கள் நம்மை அலைக்கழிக்கும். அவற்றிலிருந்து மீண்டு, அப்படியை விட்டு ஏறப் பெருமுயற்சி தேவை. புலன்களைத் தூய, நல்ல செயல்களுக்கும் இறை வழிபாட்டிற்கும், பயன்படுத்தி வந்தால், இம் முயற்சிக்கு இறையருள் கிட்டுவது திண்ணம். அடுத்த தான கனவு நிலையில் இறைவன் நமக்குத் தன் அருளை மறைமுகமாக வழங்கி, வழி காட்டி, விரைந்து மேற்படிக்கு ஏற விடுவான். உறக்க நிலையில் நிற்கும் நேரம் நாளுக்கு நாள் வளர்ந்து வரும். இந்நிலையில் அமுதம் சுரக்கும். உணவே தேவைப்படாது. உடல் நலம் மிகவும் செம்மையாகும்.

இவ்வமுதம் பருகுவதால், உணவோ நீரோ ஒரு சிறிதும் உட்கொள்ளாமல் உறுதியான நல உடலுடன் பல ஆண்டுகள் இருந்துவந்த உறவினர் ஒருவர் காஞ்சியில் சில ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார். அவர் பெயர் திரு கோபால கிருட்டிணன். அவருடன் உளங்கலந்து உரையாடியபோது இவ்வுண்மை தெரிந்தது. பிள்ளையார் குப்பத்தில் வீற்றிருக்கும் திரு அருள் சக்தி அன்னையார் அவர்களும் இவ்வாறு வாழ்ந்து வருவதைப் பலர் அறிவர்.

பேருறக்க (துரிய) ப்படியில் உண்மை நிலைகள் விளங்கும். இப்படிக்குச் சென்று தங்கும் பேறுபெற்றவர் அண்டத்தில் எங்கு எது நடந்தாலும் உள்ளது உள்ளபடியே அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையவர் ஆவார். காஞ்சியில் வாழ்ந்த உறவினர் இந்நிலையில் தாம் கண்ட உண்மை காட்சிகளைக் கூறுவதுண்டு. திருவருள் தன்மையை உள்ளவாறு உணரும் படியும் இதுவே. இத்துரிய நிலையில் பெற்ற இறையின்பத்தின் பெருகு சிறப்பை வள்ளற் பெருமான் 'காயெலாம்' என்னும் பாடலில் எடுத்தியம்ப மாட்டாமல் வியந்து விம்மிதம் கொள்கிறார்.

ஐந்தாவது படியான உயிர்ப்பு அடங்கிய நிலையே இறைவனுடன் கலந்து நிற்கும் நிலை. முதலில் உணர்வுடன் கலந்து நிற்கும் சவிகல்ப சமாதி பெற்றுப் பிறகு உணர்வின்றி இரண்டறக் கலந்து விடுவதே நிர்விகல்ப சமாதி நிலை.

II. சமாதி நிலைபெற மரபு வழியில் வந்த முறைகள்

1. நான்கு வழியே சென்று பெறும் முறை:

முழு ஞானம் பெறுவதற்கு, முத்தியடைவதற்கு, திருவருள் பூண்பதற்கு, சமாதிநிலை கூடுவதற்கு - எப்படிச் சொன்னாலும் ஒரே பொருள்தான்—நம் முன்னோர்கள் நான்கு வழிகளைப் பின்பற்றலாம் என்று கூறி வைத்திருக்கிறார்கள். இவை சீலம், நோன்பு, செறிவு அறிவு. இவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் சொல்வர்.

" சீலம் இன்றி, நோன்பின்றி, செறிவே இன்றி, அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலம் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே."

நால்வகை நெறிகளைப் பயன் படுத்திக் கொள்ளாமல், தோலினால் செய்யப்பட்ட பாவை கூத்தாடிச் சுழன்று விழுந்து கிடப்பதுபோல வீணாகக் கிடந்த என்னை, அருள் காட்டி, மேற் செல்லும் வழிகாட்டி, ஒருமுறை அடைந்துவிட்டால் அங்கிருந்து மீளாத இடமாகிய முத்திப் பாதையில் மேலே போக தன் அழகான திருவுருவைக் காட்டி, குருமூர்த்தியாக வந்தருளி, ஆண்டு கொண்ட இறைவனைக் கொடியவனாகிய நான் எப்போது சென்று சேரப் போகிறேன்? அவருடன் என்று சமாதி கூடப் போகிறேன்?— என்று நால் வழியைப் கடைப்பிடித்தவர்களில் ஒருவரான மாணிக்க வாசகர் ஏக்கம் மீதூரப் பாடுகின்றார். அவர் கடைப்பிடித்தது ஞானத்தில் ஞானம் என்பர்.

தாம் சமாதி கூடிய நிலையையும், அது இத்தன்மையது என்று விளக்குகின்ற முறையில் அவரே கூறியிருப்பது, சமாதி நிலையை உணர்வதற்கு நமது சிந்தனைக்கு உரியதாகும்.

" வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்
நான்கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ

ஊனுலாகிய உடல் உறுப்புகளும், உடலில் உள்ள உணர்வுகளும், உள்ளமும், யாவும், அடியோடு மறைக்கப்பட்டு மறைய "நான்" என்னும் உணர்வும் முற்றும் இழந்த நிலையே சமாதி நிலை என்று இப்பாடலால் அறிகிறோம்.

நான்கு நெறிகளை மகன் உறவு, தொண்டன் உறவு, நட்புறவு, காதல் உறவு, பற்றிய நெறிகளாகவும் கூறுவர். திருஞான சம்பந்தர் மகன் உறவு கொண்டும், திருநாவுக்கரசர் தொண்டன் உறவு பூண்டும், சுந்தரமூர்த்திகள் நட்புறவினாலும், மாணிக்க வாசகர் காதலுறவினாலும், முத்தி நிலை—சமாதி நிலை—பெற்றார்கள் என்பர்.

நாலு வழிகளை அன்பு வழி, கடமை வழி, தேனிப்பு வழி, ஞான வழி என்று வேறு வகையாகவும் சொல்வர். இந்நான்கு வழிகளை விளக்கி, "பக்தியோகம்," "கர்ம யோகம்," 'இராஜயோகம்', "ஞானயோகம்" என்று நான்கு நூல்களை விவேகானந்த அடிகளார் எழுதியிருப்பதை அறிவோம். யோகம் என்றால் பொருந்துதல். பக்தியோகம் — பக்தியோடு பொருந்துதல். அப்படியே, பிறவும் பரமனுக்கு பக்திமீதூரப் பெற்றவர்கள் வேறு எவ்வகையான பயிற்சியையும் மேற்கொள்ளாமலே சமாதி நிலை எய்துவர், பக்திக்கு உரியதென்னக இசை, தானாகவே சமாதி நிலை கூட்டுவிக்கும் மேன்மையுடையது. இசைவித்தலால்—கூட்டுவித்தலால்—சமாதி நிலை கூட்டுவித்தலால், இசை யென்ற பெயர் பூண்டது. அங்ஙனமே கடமையையே கண்ணாகக் கொண்டு அக்கடமையில் சிறிதும் வழுவாமல் நடப்பவர்களும் சமாதி நிலை அடைவர். இறைவனது திருவுருவத்தை இடைவிடாமல் தேனித்தும் "தியானம் செய்தும்" அந்நிலை பொருந்துவர். ஞானத்தினால் — அறிவினால்— கடவுளின் இயல்புகளைச் சிந்தித்து ஆராய்ந்து உணர்ந்து அவனோடு சமாதி கூடுவர்.

இவை ஒவ்வொரு நெறிக்கும் நமது முயற்சியும் முனைப்பும் மட்டும் போதா. அவற்றைக் கணக்கிட்டு ஆண்டவன் நல்கும் அருளே பெரும் துணை. இவை ஒவ்வொன்றிலும், பிற மூன்று வழிகளும் உள்ளமிழ்ந்து இருக்கின்றன. மேலோங்கி நிற்கும் பண்பைக் கொண்டே தனித்தனிப் பெயருடன் நான்கு வழிகளை குறிப்பிடுவர். சைவ, வைணவ; சமயப் பெரியோர்கள் இந்நான்கு கிளை கொண்ட முறையையே பெரிதும் பின்பற்றினார்கள்.

2. யோக நூலார் கூறும் முறை:

இந்த முறை, கடவுளே இல்லையென்று சொல்பவர்களும், உயிரும் கூட எங்கேயிருக்கிறது என்று ஐயுறுபவர்களும் கையாளக் கூடிய முறை. பௌத்த மதத்தினருக்குக் கடவுளிருக்கிறார் என்னும் நம்பிக்கை கிடையாது. உயிர் ஓர் உள்பொருள், என்னும் எண்ணமும் இல்லை. அவர்களும் இந்த யோகமுறையைப் பின்பற்றுபவர். தேனிப்பதற்குத் தமக்குப் பிடித்த ஏதோ ஒரு பொருளையோ ஒரு கருத்தையோ கருவியாக வைத்துக் கொள்வர் கடவுள் உருவமோ, பெயரோ, அவர்களுக்கு ஒவ்வாது. சமாதி நிலையில் அவர்கள் இறைவனுடன் ஒன்றிக் கூடுவதாகக் கொள்வதில்லை. உடல்முதலியகட்டுகளினின்றும், பிறவியினின்றும் விடுதலை (நிர்வாணம்) பெற்று ஒன்றும் அற்ற ஒரு நிலையை—சூனிய நிலையை அடைவது அவர்கள் குறிக்கோள். அப்படி அடைவதும் உயிர் அன்று. உயிர் என்பது இடையில் தோன்றும் ஓர் இல்பொருளே என்பது அவர்கள் கருத்து.

எனினும் தெய்வக் கொள்கை உடையோர்க்கும் இந்த முறை பெரிதும் உகந்ததோ, திருமூலர் தமது "திருமந்திரம்" என்னும் நூலிலே சரியை, கிரியை, ஞானம் என்னும் மூன்று வழிகளுடன் யோகமாகிய இதையும் விரிவாக அமைத்துள்ளார். பதஞ்சலி தமது யோகசூத்திரம் என்னும் நூலிலே மிக விளக்கமாக ஒழுங்குபடுத்தி இயம்புகிறார். ஒவ்வொரு மரபினரும் தம்தம் மரபுக்கு ஏற்றபடி, இவர் கூறும் முறைக்குப் பொருள் செய்துகொண்டு பயன்படுத்திக் கொள்கின்றனர். இது எல்லோரும் போற்றும் முறை. பயில்வதற்குப் பாங்கானது.

சமாதிநிலை கைகூடப்பெறுவதற்குத்தேனிப்பு (**தியானம**) இன்றியமையாதது என்கிறார். "**தேனிப்பு**" என்றால் இடையறாத சிந்தனை. தேன் ஒழுக்குப்போல் இடைவிட்டுப்போகாமல் ஒழுகுவது. தேன் இனிப்பதுபோல தேனிப்பில் அமுத ஒழுக்கான இன்பமும் ஊறும். ஏதேனும் ஓர் உருவத்தையோ, ஒரு மந்திரத்தையோ, ஒரு கருத்தையோ இடைவிடாமல் சிந்திக்க வேண்டும். இச் சிந்தனை செய்யும் நேரம் நாளுக்குநாள் மிகுந்து இறுதியில் இனி

பிறவியே தோன்ருத அளவுக்குப் பெருகிவிடும். அதுவே மீளாத சமாதிநிலை "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை", என் பார் அப்பர் பெருமான்.

தேனிப்பு கைக்கூடுவதற்கு மனத்தை ஒரு வழிப்படுத்தும் முயற்சியில் முனையவேண்டும். பலநாள் முயற்சியால் ஒரு பொருளில் உள்ளம் பொருந்தும் நிலை கிட்டியதும், அந்நிலையிலேயே இடையருமல் நிற்பதே தியானம் அல்லது தேனிப்பு ஆகும். தியானத்திற்கு முன்பு பயில வேண்டிய நிலையைத் தாரணை என்பர். தாரணை நிலையில் மனம் இடையிடையே வேறு சிந்தனைக்கு ஓடிவிடக்கூடும். அங்ஙனம் ஓடிவிடாமல் தடுத்து நிறுத்தி, சிந்திக்கும் பொருள்மீதே நாட்டம் பதியும்படி செய்யும் வேலையே தாரணையில் நிகழ்வது. மனக்கண் முன்னுள்ள உருவத்தில்தான் எல்லாமே அமைந்துள்ளது என்ற உறுதியும் அப்பொருள்மீது காதலும் கசிவும், பக்தியும், அதை அடைந்துவிடுவோம் என்ற முனைப்பும் ஏற்படவேண்டும்.

தாரணை வாய்ப்பதற்கு ஐம்புலன் அடக்கம் கட்டாயம் ஆகும். இதனைப் **"பிரத்யாகாரம்'**, என்பர். ஐந்து புலன்களும் நம்மை இழுத்து இழித்து சிறு நலங்களை நுகரும் ஆவலை வளர்த்து குறித்த ஒரே பொருளின்மீது நாட்டம் பதியாதபடி கெடுத்துவிடும். புலன்களையடக்குவது எளிதான செயலன்று. அவற்ருேடு பெரிதும் போராடி ஐந்து யானைகளை அடக்குவதற்கான ஆற்றலைக் காட்டிலும் மிகுந்த பேராற்றலைப் பெருக்கிக்கொண்டு அவற்றை வெல்லவேண்டும். ஐம்புல வெற்றிக்கு மனம் இடம் தராமல் அலைக்கழிக்கும்.

மனத்தைக் கட்டுப்படுத்த,மூச்சைக் கட்டுப் படுத்த வேண்டும். மூச்சைத் தம் வயப்படுத்துதல் பிராணுயாமம் எனப்படும். பிராணுயாமத்திற்குப்பலவகைப் பயிற்சிகள் கூறப்படுகின்றன. அவற்றில் பயில்வதற்கு எளிதாகவும் நற்பயன் தரத்தக்கதுமான மூச்சடக்க முறையை இதில் பழக்கமுடையாரை அணுகி அறியலாம். இம் மூச்சு பயிற்சியால் நாளடைவில் இடமும் வலமும் தவிர்த்து, ஒரு நடுநாசி (சுழுமுனை) யில் மூச்சு செல்லுமாறு செய்வதே சமாதி நிலைக்கு வழி கோலும் முக்கியமான பயனுகும், என்பர். முதற்படியில் மனம் இங்கும் அங்கும், ஓடாமல் அடங்கிக் குறித்த ஒரு பொருளையே சிந்திப்பதற்குத் துணை செய்யும் பயிற்சியே இது. மூச்சு கட்டுப்பட்டால் மனம் கட்டுப்பட்டு விடும்.

மூச்சைக் கட்டுப்படுத்த அமர்முறை (ஆசனம்) பயிற்சிகள் தேவை. ஆசனங்கள், சுரப்பிகளை (GLANDS) நல்ல வண்ணம் இயக்கி நாடிகளை தூய்மை செய்து உடலை செம்மையாக்கி,மூச்சுப் பயிற்சியில் வெற்றிபெற உதவும். இதனை ஆசனக்கலை விரிவாக விளக்குகிறது. இக்கலை பயில்பவர்களை நண்ணி முக்கியமான சிலவற்றை பயின்று வரலாம். சிறந்ததொரு ஆசனமான மலர் இருக்கை (பத்மாசனம்). பிராணுயாமம். செய்யும்போது அமர்வதற்குத் தகுந்ததாகும்.

ஆசனப் பயிற்சியுடன் ஒழுங்குமுறை தவருமல் நடக்கவேண்டும். இதனை நியமம் என்பர். கடவுளிடம் பக்தி மக்களிடம் அன்பு, உயிர்களிடம் இரக்கம், ஈகை, எதைச் செய்தாலும் ஒரு முறைமையோடு செய்தல், ஊக்கம் உறுதி, இவையும், பிறவும் இதனுள் அடங்கும். உணவுக் கட்டுப்பாடும் நியமத்தில் முக்கியமானதாகும்.

இந்நியமத்திற்கு முன்பு தேவைப்படுவது "இயமம்". இயமம் என்பது தவருனவற்றை தவிர்த்தல் ஆகும். அறநெறிக்கு மாருன கொலை, களவு, பொய், பொருமை, வஞ்சகம் சூது,பேராசைபோன்றமுறைகளில்ஈடுபடாமல் இருக்கவேண்டும். இயமமும் எளிதில் கைவரக் கூடியதன்று. பெரு முயற்சி தேவை.

யோகநூல் முறையை அடியிலிருந்து முடிநிலை வரைக்கும் வரிசைப்படுத்தினுல் இயமம் நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு ஆகும். இதனுல் இதற்கு அட்டாங்க யோகம் என்று பெயர்.

சமாதி நிலை கூடுவதற்கு முன் நிலைகளில் எல்லையற்ற அறிவாற்றல், இந்தயோகப் பயிற்சியால் கிடைக்கும் என்பர். சித்துகள் யாவும் கைகூடும். கூடுவிட்டு கூடுபாய்ந்து அண்டம் முழுதும் உலவலாம். ஆனுல் அவ்வகைப் பயன்களில் உள்ளத்தை இழித்து, உலகத்தவர் போற்றிப் புகழ வாழ்ந்து நிறைபயனுன சமாதி நிலை கூடுவது தவக்கப்படும்படியோ, சமாதிநிலை பெறும் வாய்ப்பை இழந்தோ, கெட்டுப்போய் விடக் கூடாது. பேரறிவும், பேராற்றலும் படைத்த பெரும் சித்தனுகிய ஆண்டவனின் அருளில் நம்மை அடைக்கலப்படுத்திக்கொண்டு இந்த யோகத்தில் ஈடுபட்டால் இடையிலே சிதறிவிடாமல் உயர்நிலையை அடைவது திண்ணம்.

III. இரெட்டியப்பட்டிக் குரவர் வகுத்தமுறை

1. குருநாதர், இறைவன் உறையும் திருக்கோயில் ஆனவர் :—

இறைவன், தான் உறையும் திருக்கோயிலாக ஆக்கிக் கொள்வதற்காகவே இரெட்டியப்பட்டியில் "சுப்பிரமணியம்," என்று பெயர் பூண்ட ஒரு திருமேனியை தோற்றுவித்தான். குழந்தை சுப்பிரமணியத்தின் திருஉடலில் இறைவன் குடி புகுந்த உண்மையைக் குறிப்பாக உலகு அறியும் முறையிலேயே அக்குழந்தையின் செயல்கள் அப்பருவம் முதலே அருட்செயல்களாக இருந்து வந்தன; நல்வினை உடையாரை ஆட்கொள்ளத்தான் அத்திருமேனியில் வெள்ளிடமலை யென வீற்றிருந்தருளும் பாங்கினை யாவரும் அறிந்து போற்றி அடிபணியுமாறு பொதிகையில் பன்னிரண்டு ஆண்டுகள் அத்திருமேனி குகையில் தங்கி, அதனைத் தங்கமேனி ஆக்கி இரெட்டியப்பட்டி அடிகளார் என்னும் திருப்பெயருடன் எழுந்தருளி, எல்லோரும் உய்ய அருட்சட்ட நெறியை அமைத்தருளினன். ஆட் படுத்த அருகரான அடியார்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று, குருபரராக அமர்ந்து அவர்களைச் சட்டநெறியில் நிறுத்தி ஆளாக்கிக் கொண்டான்.

2. அடியவர் முடியில் மலர்க்கை சூட்டிச் சமாதிநிலை கூட்டியவர்.

தீவிர அடியவர்கள் திரண்ட இடங்களில் அவர்களை வரிசையாக அமர்த்தி அவர்கள் சென்னியில், ஒவ்வொரு நொடி நேரம் தம் மலர்க்கையைச் சூட்டுவார் குருநாதர். உடனே அவர்கள் சமாதி நிலை எய்திடுவார்கள். அவரவர் பக்குவத்திற்கு ஏற்றபடி சிறிது போதோ, சில மணிக்காலமோ, மெய் மறந்து இருந்து இறையோடு கூடும் இன்ப நிலை துய்த்து மீள்வர்.

ஆண்டவரே அருகிருந்து அருளுவதானல், அடியவரும் அதற்குரிய நிலை பெற்றிருந்தால் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், முதலிய நிலைகளில் பயிலவேண்டிய தேவையில்லாமலேயே, சரியை, கிரியை, முதலிய படிகளில் ஒழுகாமலேயே, சமாதிநிலை கதுமெனக் கூடிவிடும் என்பதற்கு என்ன ஐயம் ?

3. நித்திய நிட்டையைச் சட்ட நெறியில் அமைத்தார்.

அருட்சட்டத்தின் அகப்பகுதியில் அன்றாடம் நிட்டையில் அமரவேண்டும் என்று குருநாதர் கட்டளையிட்டிருக்கின்றார். "நிட்டை," எனினும் 'தியானம்', "தேனிப்பு" எனினும் ஒன்றே. தியானமே சமாதி நிலைக்கு முன்னையபடி. இறைவனுடன் ஒருமை நிலை எய்தும் படி.

அவரவர்க்கு விருப்பமான, பழக்கமான திருவுருவத்தின் மீது, சிந்தையை நெகிழாமல் பதிய வைத்து, "நீயும் நானுமாய் ஏகபோகமாய்," என்னும் பாங்கில் நின்று குறை களைந்து நிறை அருளுமாறு இறைவனையே இறைஞ்சி வள வாழ்வுக்கு வழி காட்டுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும் என்று குருபெருமானர் திட்டமிட்டு இருந்தாலும், இறைவனேகுருநாதராக இறங்கி வந்துள்ள உண்மையை உளத்தில் ஏற்று அடியவர்கள் குருமணியின் திருமேனியையே தேனிப்புக்கு உரிய திருமேனியாக அமைத்துக் கொள்ளலாயினர்.

சட்டப்பகுதியில் நித்திய நிட்டைப்பகுதியே உயிரான பகுதி; உச்சநிலை அருளும் பகுதி. மற்ற அகப்பகுதிகளான பச்சைப் நீர் பழக்கமும், மருந்து அருந்தாமையும், புறப் பகுதியில் கண்ட பல திட்டங்களும் நிட்டை உருவாகி வளர்ந்து இப்பிறவியிலேயே இன்பச்சமாதியைக் கூட்டுவித்து இனிப்பிறவாததும் ஈடு எடுப்பில்லாதது மான, இன்ப நிலையை அடைவிக்கப் புடை சூழ்ந்து அரண்செய்து நிற்பனவேயாகும்.

4. அனைவரும் சமாதிநிலை பெறவே சட்ட நெறி அருளினர்.

குருநாதர் சட்டம் வகுத்தது எல்லா மக்களும்— படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், ஆண்பாலர், பெண்பாலர், திட உடம்பினர், மெலிஉடம்பினர், இவ் வினத்தவர், அவ் வினத்தவர், இம்மொழியினர், அம்மொழியினர், இம்மதத்தினர், அம்மதத்தினர், இந்நாட்டவர், அந்நாட்டவர் என்னும் வேறுபாடு சிறிதும் இல்லாமல்—சட்ட நெறியை ஏற்று ஒழுகிப் பயன் பெற வேண்டும் என்பதற்காகவே யாகும்.

சமாதி நிலை எய்துவதற்கு நாட்டில் நிலவும் பிற முறைகளை, இவர்களில் ஒவ்வொருவரும், கையாண்டு கடைத்தேற முடியாது. அம்முறைகளைப் புரிந்து கொள்ளும் அறிவு எல்லோருக்

கும் இருப்பதே அரிது. இனி கற்றுப் பெறுவது அரிதினில் அரிது. அவற்றில் பயில்வதற்கு உரிய வசதிகளும் வாய்ப்புகளும் அனைவருக்கும் இரா, எத்தனையோ எளியவர்கள் ஆசனங்கள் பிராணுயாமம், முதலிய மேற்கொள்ளும் முயற்சியில் உடல் நலம் கெடவும் பெறுவர். எனவே பண்டையமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்குச் சொல்வது பொருந்தாது. மேலும் புத்துணர்வோடு கிளர்ச்சி பூண்டு அனைவரும் கைக்கொள்வதற்குப் புதிய முறைகள் பயன் விளைப்பது இயல்பு. இக்கருத்துகளை உளத்து இருத்திக் குருபரனுர், பழைய வழிகளின் பயனை இக்காலத்துப் பரந்த சூழ்நிலையில் இனிது அடைவதற்கு ஏற்றவாறு, பொது உடைமையாக எல்லோர்க்கும் சம வாய்ப்பு அளிக்கும் "சமவாய்ப்பியக் (Socialism) கொள்கை" முறையில் சட்ட நெறியை அமைக்கலானுர்.

இச் சட்டநெறியில் உள்ளத்தை எல்லையற்ற உறுதியுடையனவாக ஆக்குவன, "பச்சைநீர் பழக்கமும், மருந்து அருந்தாமையும்" ஆகும். ஆண்டவனிடம் அசைக்கலாகாத நம்பிக்கையையும், பற்றையும், அடர விளைவித்துவிடும். சட்டநெறி என்ருல் இவையிரண்டுமே என்று எண்ணக்கூடிய அளவிற்கு இவையே சட்டத்தின் சிறப்பியலான ஒழுகலாற்றில் முதற்கண் அமைக்கப் பெற்றுள்ளன. இவை இரண்டுமே சாலும் எனலாம், மனத்தை ஒருவழியில் செலுத்த—தாரணை, கைவரப் பெற.

'பஞ்சமாபாதகம் தவிர்தல்' என்னும் சட்டப் பகுதி, இயமம் என்பதில் கூறியன போன்றது. நியமம் போல அமைந்திருப்பன, "மரக்கறி உணவு" "வெள்ளி விரதம்," "அறமன்றம் அணுகாமை," மணிமந்திரம் மருவாமை "நாளை கோளை நம்பாமை", என்பனவாகும்.

இவையும், ஆண்டவன் நாமமனனம் என்னும் பகுதியும் குருநாதரின் அருட்குறிப்பால், நிட்டையில் அடியவர்களுக்கு அவ்வப்பொழுது உத்தரவாகும், 'மௌனமும்,' 'உணவுக்கட்டுப்பாடும்', பிறவும் ஐம்புலன் அடக்கத்தினை-பிரத்தியாகாரத்தினை இயல்பாகவே விளைவித்து விடும் ஆற்றல் உடையனவாகும்.

உடல் உரமும் நலமும், இல்லாதவர்களும், வசதிகள் அற்ற ஏழை எளியவர்களும் சட்டம் ஏற்கலாம் என்று கட்டளை இட்ட குருபரர் "ஆசனம்" "பிராணுயாமம்" இவற்றிற்கு ஈடான இனங்களைச் சட்டநெறியில் அமைக்காது விட்டிருக்கின்ருர். அமைக்காது விட்ட தன் அருளார்ந்த நோக்கமே போலும் அவற்றின் பயன் அடியவர்களுக்குக், கைகூடி விடல்.

சமாதி நிலை எய்துவதற்கு கைக்கொள்ள வேண்டிய அட்டாங்க யோகப்பகுதிகளில் ஆறுன இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை இவை இவ்வாறு சட்டநெறியில் இடம் பெற்றுவிட்டிருப்பதை உணரலாம். 'ஏழாவதான'. 'தியானம்' என்பது 'நிட்டை' யென்னும் சட்டப் பகுதியில் வாய்ப்பதாகும். இதற்கு மேல் விளைவனவே உணர்வுடன் கூடிய இரண்டறக் கலப்பும் (சவிகல்ப சமாதியும்), உணர்வு அற்ற இரண்டறக் கலப்பு (நிர்விகல்ப சமாதியும்) ஆகும்.

"சரியை, கிரியை, யோகம் ஞானம்",என்றும் பிறவகையில் கூறப்பெறும் நால்வகை வழிகளை அவ்வப் பெயர்களால்; சட்டநெறியின் திட்டங்களில் குருபரனுர் சுட்டி வகுக்கவில்லை ஆயினும், அந் நால்வழி முறைகளும் குருநாதரின் அருட் சட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு இயல்பாகவே அமைந்து விடுவனவாகும். சமாதி நிலை பெற, இந்நால் வழியில் செல்பவர்கள் எய்தும் பயனை, சட்டம் ஏற்று ஒழுகுபவர்கள் எளிதில் பெற்று விடுவர் என்பது குரு பெருந் தகையின் அருள் வாழ்த்து.

5. சமாதி நிலை அடைவதால் அவர்களைச் சமாதி செய்க என்ருர் :

அடியவர் ஒவ்வொருவரும் இப்பிறவியிலேயே முத்தி பெற்றுவிடுவர் என்பது குருபிரானின் திருக்கருத்து. அடியவரின் உடல் இறைவனை உள் அமைத்த திருக்கோயிலாகி விடுகின்றது. எனவே உடல் எடுத்ததற்கான முன்னை வினைப் பயன் முடிந்ததும், நிறை சமாதி அடைந்த அடியவரை, மறை சமாதி செய்யவேண்டும், அதாவது நிலத்தாயின். திருவயிற்றில் மறைத்துத் காப்பிட்டு அமர்த்தி விடவேண்டும் என்பதே ஆண்டவர் குருநாதரின் கட்டளை. இதைக் கருத்திற் கொண்டே அடியவர் உயிர் ஒடுங்கினுல் அழக்கூடாது என்றும் ஆணை பிறப்பித்துள்ளார். சமாதிநிலை என்பது ஆனந்த நிலை; அல்லற்பட வேண்டிய நிலை அன்று.

வடலூர் வள்ளற் பெருமான், தாயுமானூர், போன்ற அருளாளர்களும் உயிர் உள் ஒடுங்கியதும் உடலை மண் காப்பிட வேண்டும் என்றே விதித்திருக்கின்றனர். எரிப்பதை அவர்கள் கொடிய செயல் என்றே கடிந்தனர். சமாதி பெறுவதில் நிறைநிலை எய்தாதவர்களும் மூச்சு அடங்கிய பின், உடலினுள் உயிர் இயங்கியவண்ணமே, இதே உடலை சமாதிநிலை முழுமை பெறப்பயன் படுத்திக் கொள்ளக்கூடும் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்திருந்தனர். நிலமகளின் திருவயிற்று மண்காப்பு அவர்களது உயர்மேனிக்கு ஏதும் ஊறு செய்துவிட முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

அடியவர்களைச் சமாதி செய்யவேண்டும் என்று குருபரனூர் நெறி வகுத்ததின் உண்மை விளக்கம் இதுவே யாகும்.

6. சமாதி நிலை முழுமை பெறக்குருபரரின் அருளே துணை :—

மேன்மை சான்ற சட்டநெறியை மேற்கொள்வதற்கு முன்னை நல்வினையும் குருபரரின் பேரருளும் முன்னின்று துணை புரியவேண்டும் என்பது உண்மை. சட்டம் ஏற்றவர்கள் சட்டநெறியில் வளர்ச்சி பெறுவதற்கும் ஆண்டவன் அருளே வேண்டுவதாகும் என்பதை அடியவர்கள் நன்கு அறிவர். அங்ஙனமே, சமாதிநிலை கைகூடப் பெறவும் அப் பரம்பொருளின் இன்னருள் இன்றியமையாதது. அவன் அருளாலேதான் அவன்தாள் வணங்கமுடியும் என்பதே ஆன்றோர் கண்ட உண்மை.

ஆண்டவரிடம் அடைக்கலப் படுத்திவிட்ட மனமும், அவர் அருள் புரியாவிட்டால் நம்மால் நலம் பெறு நெறியில் மேலோங்கிச் செல்ல இயலாது என்னும் மெய்யுணர்வும் மிக வேண்டும். தன் முனைப்பினாலும், தன் அறிவு, தன் ஆற்றலாலும் எதையும் சாதித்து விடலாம் என்னும் ஏமாற்றமான எண்ணம் அறவே அகல வேண்டும்.

மனித வாழ்வில் இயல்பாக ஏற்படற்பாலச் சரிவுகளினின்றும் மீளவும், மீண்டும் சரியா வண்ணம் ஒழுகவும், சட்டநெறியில் வழுவாமல் நிலை நின்று விளங்கவும், சட்டத்தின் உச்சநிலையான சமாதி நிலையை முழுமையாக முடிவில் பெறுவதற்கு நாளொடுநாள் நிட்டைப் பழக்கத்தில் வளமை பூண்டு வயங்கவும், இறுதியாக இன்பச் சமாதிநிலை எய்தவும் அரும் பெருந்துணையாக வழி நடத்திச் செல்வது பரம் பொருளான குருபரனூரின் ஈடும் இணையும் இலாத பேரருள் ஒளியே.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் யாரிடத்திலும் எதற்காகவும் ஒரு சல்லிக் காசும் பெற்றுக் கொண்டதில்லை. நீராடிய பின் உடுத்திக் கொள்ள ஒரு வேட்டியும். ஒரு துண்டும் உள்ள பொட்டணம் தவிர வேறொன்றும் அவர்கள் வைத்துக் கொண்டதில்லை. ஓரூரிலிருந்து அடுத்த ஊருக்குப் புறப்படும்போது அடியார்கள், அன்பின் மிகுதியால் அப்பொட்டணத்தில் பணம் ஏதாவது வைத்து விட்டார்களோ என்ற ஐயத்தால், அப்பொட்டணத்தைத் தம் எதிரே அவிழ்த்து மறுபடியும் கட்டச் சொல்வார்கள். பின், “சாமி பொருளை யாராவது எடுத்துக் கொண்டார்களா என்றுதான் பார்த்தது; வேறொன்றுமில்லை” என்று வேடிக்கையாக்ச் சொல்வார்கள்.

“அருட்சட்ட அடியார்களும், சுவாமிகளுடைய திருவருள் துணை கொண்டு, மக்களுக்கு நன்மைகள் செய்ய வாய்ப்பு ஏற்பட்டால் அதற்காக எவ்விதக் கைமாறும் எதிர்பார்த்தலாகாது” என்பது சுவாமிகளது கண்டிப்பான கட்டளை.

ஞானம்

ஓர் அடியார்

உலகில்வாழ் உயிரினங்களை இரு கூறாகப் பகுத்தனர் சான்றோர். ஒன்று மக்களினம்; மற்றொன்று மாக்களினம். 'மக்கள் தாமே ஆறறிவினவே; மாக்கள் தாமே ஐயறிவினவே' என்று பிரிக்கின்றது இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம்.

இங்ஙனம் மக்களையும் மாக்களையும் பிரிக்கும் ஆறாவது அறிவு எது? அது தான் பகுத்தறிவு என்பர். நன்மை தீமைகளைப் பகுத்து அறிகின்ற அறிவு பகுத்தறிவு. எந்த நன்மை தீமைகள்? உடலுக்குரியனவா? அன்றி உயிருக் குரியனவா? இங்குதான் ஒவ்வொருவருக்கும் கருத்து வேறுபாடு தோன்றுகிறது. உடலுக்குரிய நன்மை தீமைகள் எனின், மாக்களினங்களும் தங்களுக்குவேண்டிய நன்மைகளை விரும்பி, தீமைகளை வெறுக்கின்றன. அப்படி எண்ணும்போது அவையும் பகுத்தறிவினவே.

எனவே உயிருக்கு உறுதி பயக்கும் நன்மைகளை நாடி, தீமைகளை விலக்குவதே பகுத்தறிவாகும். அங்ஙனமாயின், உயிருக்கு உறுதி பயக்கும் நன்மைகள் யாவை? உணவா? உடையா? மற்ற இவ்வுலகபோகங்களா? இவை அடையப் பெற்ற உயிர்கள் இன்பமுறுவது ஓரளவு உண்மையே எனினும், இவற்றையடையாமலேயே, அதாவது நுகராமலேயே ஆனந்தமுறும் உயிர்களும் உள்ளன. 'கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்' என்ற குறள் இறைவனுடைய நல்ல திருவடிகளை அடைவதே கல்வியின் முடிவு என்று வகுக்கின்றது. 'மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையு'மாக அப்பர் சுவாமிகளுக்கு அத்திருவடிகள் இன்பம் பயக்கின்றன. புறத்தேயிருந்து வருகின்ற இன்பம் நிலையானதல்ல; அகத்தேயிருந்து வரும் இன்பமே நிலையானது.

நிலைத்ததை, அழியா இன்பமுடையதை, அழியா அழகுடையதை நாடுவதுதான் ஞானம் என்பது. ஞானம் எனினும், மெய்யறிவு எனினும் ஒன்றே. இஞ்ஞானம் உலகியலை அறியும்போது விஞ்ஞானம் என்றும், ஒன்றும் அறியாதிருக்கும்போது அஞ்ஞானம் என்றும், அருளியலை அறிய முபற்றும்போது மெய்ஞ்ஞானம் என்றும் பேசப்படுகின்றது.

அவரவர்கள் செல்லுகின்றபாதையைக் குறித்து விஞ்ஞானி, அஞ்ஞானி, மெய்ஞ்ஞானி என்று கூறுகிறார்கள். ஒரு விஞ்ஞானி கண்டுபிடித்த கண்டுபிடிப்பை விட அடுத்த ஒரு விஞ்ஞானி சிறந்த ஒன்றை, மேலான ஒன்றைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் மெய்ஞ்ஞானி கண்ட ஒரு முடிவைவிட, அதற்குப்பின் எத்தனைபேர் தொடர்ந்தாலும் அது மாறாததாக உள்ளது. விஞ்ஞானி தன் கண்டுபிடிப்பால் உலகுக்கு இக வாழ்க்கையில் சில நன்மைகளைச் செய்ய முடியுமேயன்றி, அழியாப் பெருநிலையை அடைவிக்க இயலாது. ஆனால் மெய்ஞ்ஞானி ஒருவன் தான் அடைந்த, தான் நுகர்ந்த இன்பம் காரணமாக ஊற்றெடுக்கும் அருளால் பல உயிர்களும் அழியாப் பெரு நிலையை அடையக் காரணமாகின்றான். எனவே மெய்ஞ்ஞானியே சிறந்தவன் என்பது தெளிவு.

இஞ்ஞானத்தைஅடைவதுஎவ்வாறு? அதற்குரிய வழிகள் யாவை? எனச் சிந்திக்குங்கால், பல சமயப் பெரியோர் களின் அருள்வாக்குகள் நமக்குக் காட்சி யளிக்கின்றன. நிலையா உடலில் அழியா ஆத்மன் வாழ்கின்றான். தன் நிலை மறந்து, தன் செயல் மறந்து, கருவி கரணங்களின் வசப்பட்டு மயங்கிக் கிடக்கின்றான். இதன் காரணமாக நிலை யில்லாததை நிலையென்றும், நிலை யுள்ளதை இலையென்றும் எண்ணு கின்றான். முழுநிலவு காட்டில் காய்வது போலவும் மேகங்கள் பயனின்றி கடலில் மழை பொழிவது போலவும் இவ் ஆத்மனுடைய வாழ்நாள் வீணாகின்றது.

அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கும் இவனுக்கு இவனுடைய நல்வினை காரண மாக ஓர் எண்ணம் பிறக்கின்றது; ஏக்கம் பிறக்கின்றது. மாடு, மக்கள், மனைவி, சுற்றம், வீடு என்கின்ற பொருள்களுக்காக உழைத்து, உழைத்து அலுத்துச்சோர்ந்த உள்ளம், இவற்றில் இன்பமில்லை என்பதை உணரத் தலைப்படுகின்றது. இதனைக் குருநாதராகிய ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகள்,

> 'மாடுமக் கள்மனை வீடுசுற் றம்அற்பம்
> வாழ்வுனக் கேன்மதி கேடா............
> .... முத்தர்
> ஞான வழிக்கிது யீடா,

என்றுவினவுகின்றார். அப்போது நிலைத்த இன்பம் எது? என வினவுகின்றது. நிலைத்த இன்பத்தை யடைந்தவர் களின் வழிகளை ஆராய்கின்றது. நம் நாட்டில் பழங்காலந்தொட்டு இன்று வரை வழங்கி வருகின்ற நெறிகள் நான்கு என அறிஞர் கூறுவர். அவை, கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்பனவாம்.

கர்மம் என்பது செயல். பக்தியென்பது அன்பு. யோகம்என்பதுகூடுதல். ஞானம் என்பது இரண்டறக் கலத்தல். நற் செயல்களைச் செய்து, நீங்கா அன்பைச் செலுத்தி, உள்ளத்துள் கூடி, எங்கும் நிறைந்த பேரொளியோடு இரண்டறக் கலத்தல் என்பதே இந்நெறிகளின் சுருக்கமாகும்.

ஈண்டு யாம் ஆராய்ந்து கூற முற்படு வது ஞானம் என்பதாம். கர்ம யோகி செய்யும் செயல்களையே கடவுள் பணியாக ஆக்குவான். பக்த யோகி உள்ளத்தை அன்பால் உருக்கி அவனைக் காண்பான். ராஜயோகி கும்பகத்தில் வாசியை அடக்கி மேல் நிலைகளை அடைவான். ஞானி உலகில் உள்ள எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் கண்டு அவன் மயமாகவே நிற்பான்.

ஞானியின் அடையாளம் யாது? அவனை எவ்வாறு அறிய முடியும்? எனின், புளியம்பழமும் ஓடும் போலவும், தாமரையிலைத் தண்ணீர் போலவும் இவ் வுடலோடு வாழும் போதும் அதனோடு தொடர்பின்றி யிருப்பான். அஃதாவது, இவ்வுடல் நுகரும் எந்த இன்ப துன்பமும் அவனுடைய பேரின்ப நாட்டத்துக்குப் பங்கம் விளைவிக்காது. மேலும் பிற உயிர் களால் தனக்கு நேருகின்ற இன்ப துன்பங்களுக்காக அவற்றைப் போற்று வதோ, தூற்றுவதோ செய்ய மாட்டான். ஓட்டையும் பொன்னையும் ஒக்கநோக்கும் இயல்புடையவன் ஆவான். **'ஆடுகின்ற கூத்தெல்லாம் அரன் கூத்தே'** என்றும், **'வந்ததை ஒப்புக் கொள்வாய் மனமே'** என்றும், **'நல்லது கெட்டது நமக்கினி இல்லை'** என்றும், **'மனோவாக்குக் காயங் கள் மூன்றும் உன்னிடமாக வைத்த நாள் முதலாக வருகின்ற செயலெல்லாம் உனக்கே பொறுப்பல்லாது எனக் கினிச்**

சுமையேது' என்றும், வீடும் வேண்டா விறலோடு விளங்குவான். சுடப்பட்ட ஒருகயிறு பார்ப்பதற்குக் கயிறுபோல் தோன்றினுலும், கயிற்றின் தன்மை அதனிடத்தில் இல்லாதது போல, ஞானி பார்ப்பதற்கு மக்களைப்போல் தோன்றினுலும், இவ்வுலக, இன்ப துன்பங்கள் அவனைத் தீண்டுவதில்லை.

'இந்நிலையை அடைய நாம் என்ன செய்ய வேண்டும்?, என்ற வினு நம்முள் எழுகிறது. நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கு செல்லப் போகின்ேறம்? நாம் கொண்டு வந்தது என்ன? கொண்டு போகப்போவது என்ன? இறவாமல், இனிப் பிறவாமல் இருக்க வழி உண்டா?' என்று எண்ணும்போது, நமக்கு ஒரு மலைப்பு ஏற்படுகிறது. "இவ் வினுக்களில் ஒன்றுக்கும் நம்மால் பதில் கூற இயலவில்லையே" என்று எண்ணுகின்ற ஆத்மனுக்கு, தன் இயலாமை குறித்து வருத்தமும், இதிலிருந்து தப்புவதற்கு உரிய வழியைத் தேடும் ஆர்வமும் மிகுகின்றன. இது ஞானம் அடைவதற்கு முதற் படி.

இந்நிலையில் தன் மனதுக்குள்ளே பெரும் போராட்டம் நிகழ்கின்றது. அவ்வமயம் இவ்வுயிரின் பக்குவ நிலையறிந்த இறைவன், அவன் உள்ளத்திற் பொருந்துமாறு, சில உபதேசங்களை குரு மூர்த்தமாகவோ, பிற உயிர்களின் மூலமோ, அல்லது இயற்கை மூலமோ போதிக்கின்ருன். அதனுல் சற்றுத் தெளிவுற்ற ஆத்மன் இறைவனை நாடும் வழிகளில் ஈடுபடுகின்ருன்.

ஆனுல், அவனுடன் ஆதிகாலம் தொட்டு இருந்து வருகின்ற பொறி, புலன், கருவி கரணுதிகள் அனைத்தும் அவனை அவ்வழிச் செல்ல விடாமல் தடுக்கின்றன. இந்நாள் வரை தனக்கு மிக நெருங்கிய நண்பர்கள் போன்று இருந்த இவைகள் இப்போது இடையூறு செய்வதை உணர்ந்து, அவைகளை அழிக்கும் ஆற்றலும் தன்னிடம் இல்லாமையை உணர்ந்து, மிகவும் துன்பமுறுகிருன்.

இந்நிலையில், 'என் செயலால் ஆவது ஒன்றில்லை; இறைவா! எல்லாம் நின் செயலே, என்றும்,'அவனன்றி அணுவளவும் அசையாது' என்றும், 'தனக்கும் மிஞ்சிய, தன்னைவிட வலிமையுள்ள, எல்லா வல்லமையும் படைத்த, எங்கும் நிறைந்த— ஆனுல் ஊனக் கண்களால் காண இயலாத—ஒரு சக்தி உண்டு' என்பதை உணர்கிருன். அவன் துணையைப் பெறவும் விழைகிருன். அச்சக்தி பூரணமாக அவனுள்ளிருப்பதை மறந்து, எங்கெங்கோ தேடி அலைகிருன்.

இவ்வாறு புலன்களாலும், இறை வழிபாட்டு உணர்வாலும், தேய்புரி பழங் கயிறே போல உள்ளம் இருபாலும் இழுக்கப்பட்டு, இவன் நல்வினைகூட, சித்தத் திடம் உடையவனுகி, எதுவரினும், எது போகினும் நிலை கலங்காது, இறைவனை உணரத்தலைப்படுகின்ருன். இது ஞானத்தின் இரண்டாவது படி.

அடுத்து அக உணர்வு அதிகமாக ஆக, புற உணர்வை அறவே மறந்து, எண்ண அலைகளை அடக்க முயல்கிருன். இப்போது புலன்களை அடக்குவதற்காகப் புறத்தே செய்த பூசைகள் அனைத்தும், எண்ணங்களை அடக்குவதற்காக அகத்தே செய்யப்படுகின்றன. இச் சாதகம் முற்றும்போது இவனுல் உள்ளே ஸ்தாபிக்கப் பெற்றமூர்த்தம் இவனுக்குக் காரண குரு வாகிறது. அக்குரு சுட்டிக் காட்டும் நிலையிலேயே தன்னை அர்ப்பணித்து நடக்கத் தொடங்குகிருன்.

இது உலகத்தார்களுக்குப் பைத்தியக் காரச் செயலாகப் படலாம். 'பித்தன், பேயன்' என்றும் பலரால் இகழப்படு வான். 'மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார்...' என்ற பாடலின்படி ஒன்றை யும் நோக்காது, நீங்கா நிழல் போல, தைலதாரைபோல அதனோடு தொடர்பு கொள்ளுகின்ருன். இதுவே ஞானியின் இறுதிப் பயணம்.

இங்ஙனம் முழுத்துறவு பூண்ட ஞானி கள் பலர் நம் பாரத நாட்டில் தோன்றி யுள்ளனர். அவர்களுள் தலைசிறந்த மாணிக்கமாகத் திகழ்பவர், பரம காருண்ய மூர்த்தியாகிய ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகள். அது எவ்வாறு என்பதை இம் மலரை வெளியிடும் இலக்கியப் பதிப்பகத்தோடு தொடர்பு கொண்டு அறிக.

இவ்வுலகம் ஓர் உடல் என்ருல், ஞானிகள் அதன் உயிராவர். இவ்வுல கம் ஓர் வயல் என்ருல், ஞானிகள் அதன் பயிர் ஆவர். எனவே ஒரு ஞானி தன் காலத்தில் வாழுகின்ற உயிர்களை முத்தி நிலைக்கு அழைத்துக் கொண்டு செல்லு கின்ற புகைவண்டித் தொடரின் முன் பொறி (எஞ்ஜின்) போன்றவராவர்.

ஞானம் எல்லா நிலைகளிலும் உயர்ந் தது; பேரானந்தத்தை அளிக்கவல்லது; இறைவனோடு ஒன்று படுத்தக் கூடியது; சர்வ சித்திகளையும் செய்ய வல்லது என்பதை உணர்ந்தோம். அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞ்ஞானத்தைப் பெற முயல் வோமாக!

வாழ்க இருடிப்பட்டி மாஞானி!
வாழ்க அவன் திருவடி மலர்கள்!!
வாழ்க அருட்சட்டப் பெருமக்கள்!!!

INVEST SAFELY YOUR SAVINGS IN OUR RECURRING DEPOSIT ACCOUNTS
CHITS & FIXED DEPOSITS
ATTRACTIVE RATES OF INTEREST OFFERED.
WE LEND LOANS ON HUNDIES, AGAINST R. D. ACCOUNTS UNDER DAILY REPAYMENTS SCHEMES ETC.

CONTACT :

Sri Kesava Finance Corporation

No. 32, GOVINDAPPA NAICK STREET,
MADRAS-1.
Phone: 34136

PARTNERS :

Smt. A. M. PARVATHAMMA — Sri K. KESAVAIAH
Smt. P. AMURTHAMMA — Sri B. M. SRIDHAR GUPTA
Smt. K. RADHABAI — Sri M. K. PARTHASARATHY

Manager : Sri O. AL. CHIDAMBARAM CHETTIAR

ஸ்ரீ வைஷ்ணவி துணை

கடவுள் அருவமா? அருவுருவமா? உருவமா?

[அருட்கவி — தவத்திரு. ஸாதுராம் ஸ்வாமிகள்
வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த ஸ்வாமிகளின் சீடர், ஸ்ரீ வைஷ்ணவி ஆலயம்,
வட திருமுல்லைவாயில், (அம்பாபுரி), சென்னை — 600062.]

" உருவும் அருவும் உருவோ டருவும்
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவும் எனநிற்கும் கொள்கையன் ஆகும்
தருவென நல்கும் ஸதாசிவன் தானே "
(திருமூலர் திருமந்த்ரம் — 1763)

'கடவுள்' என்ற சொல்லைக் கட + உள் எனப் பிரிக்கலாம். எல்லாவற்றையும் கடந்தும் ஆனல் அதே ஸமயத்தில் அத்தனைக்கும் உள்ளிருந்தும் அனைத்தையும் இயக்கும் ஒரு பேராற்றலைத்தான் கடவுள் என்று குறிப்பிடுகிறோம். அதையே 'இறைவன்' என்ற பெயரால் குறிக்கும் போது 'எங்கும் [நிலையாகத்] தங்கியிருப்பவன்' என்ற பொருளையும் உணர்கிறோம். 'தெய்வம்' என்று திருநாமம் சொல்லும்போது 'திவி', 'தேவன்' என்ற வடமொழி வேரடியாகப் பிறந்த சொல்லைக் கண்டு 'ஒளிமயமான பொருள்' என்ற அர்த்தத்தையும் அறிகின்றோம். அப்படிப்பட்ட அந்த ஒரு வஸ்து 'அரூபமா ?' அல்லது 'ரூபாரூபமா ?' அன்றி 'ஸ்வரூபமா ?' என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் அடிப்படை நோக்கம்.

மேலே கண்ட திருமூலர் திருமந்திரத்தைப் பார்க்கிறபோது ஸொரூபம், அரூபம், ரூபாரூபம் மூன்றுமாகவே பகவான் விளங்குகிறான் என்ற தத்வம் தெளிவாக விளங்கும். எனினும், வடிவம் இல்லாத ஒன்று வடிவமும் கொண்டும் இவ்விரண்டு நிலைகளுக்கும் இடையில் வடிவம் உடையது போலும் ஆனல், வடிவம் இல்லாதது போலும் ஆன ஒரு கலப்பு நிலையிலும் இருப்பதை உணர்தல் எங்ஙனம் ?

" உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் ! குஹனே"
(கந்தர் அநுபூதி — 51)

அருணகிரிநாத ஸ்வாமிகள் முற்ற முடிந்த தெய்வீக அநுபவ நிலையிலே பாடிய கந்தரநுபூதி என்னும் மந்த்ர நூலின் முடிவிலே (பாட்டு-51) எதிர் மறைகளின் இரட்டைகளில் முருகன் விளங்குவதாகக் குறிப்பிடுகிறார். அவரே, கந்தரலங்காரம் என்ற பகுதியில் கீழ்க் கண்டபடிப் பாடுகிறார்.

" வேலே விளங்குகை யான் செய்ய
தாளினில் வீழ்ந் திறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பதல்
லால்மந வாக்குச் செய
லாலே அடைதற் கரிதாய் அருஉரு
ஆகி ஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்வாறு
புகல்வதுவே ?"

அதே அருணகிரியார் மற்றோர் (13) அநுபூதியில் விளக்குதலைக் காண்போம் :

" முருகன் தனிவேல் முநிநம் குருஎன்
றருள்கொண் டறியார் அறியும் தரமோ?
உருஅன் றருஅன் றுளதன் றிலதன்
றிருள் அன் றொளி அன் றெனநின் றதுவே"

இந்தப் பாட்டினை நோக்குங்கால், இது முற் சொன்ன 51ஆம் அநுபூதிக்கு முற்றிலும் முரணாக இருப்பது போல் தோன்றுகிறது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரிய ஸ்வாமிகள் முருகனை யார் என்று விளக்குகின்றார்.

" அரும் உருவும் ஆகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்றஜோதிப் பிழம்பதோர்
மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன்
னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன்
உலகம் உய்ய."

இதைப் போலவே ஒன்ருய் இருக்கிற ஒரே பொருள், பலவாய் விரிந்து, பிரிந்து, பரந்து, நிறைந்து நிற்கிறது என்பதும் ஒரு புரியாத புதிராய் உள்ளது.

"ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்திவ்
வுலகெங்குமாய்
நின்ருள் அனைத்தையும் நீங்கி நிற்பாள்"

என்கிறது அம்பிகையை அபிராமி அந்தாதி(56)

"ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க"

என்கிறது திருவாசகத்திற்சிவனைச்சிவபுராணம்.

"ஒன்றே! பல உருவே! அருவே! என்
உமையவளே"

என்பதும் அபிராமி அந்தாதிப் பாட்டே தான். (31)

"எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை"

என்பது தக்ஷிணாமூர்த்தி துதி.

"முந்தும் கருவின்றி நின்ற கருவாய்
அருளே உருவின்றி நின்ற உருவாய்......
.... ஏகத்து உருவும் அருவும் உருவருவும்
ஆகிப் பருவ வடிவம் பலவாய் ......

என்பது கந்தர் கலிவெண்பா (அடிகள் 9,11)

"வடமுல்லைசேர் வைஷ்ணவியே! அருவே
அருவுருவே! அன்றி உருவே!"

என்பது வைஷ்ணவி இரட்டை மணி மாலைப் பாடல் 1.

"உருவெனவும் அருவெனவும்
உளதெனவும் இலதெனவும்.........
...உணரும் அவர் அநுபூதி ஆனதுவும்......
அபிராம நாயகி தன் மதலை ...... மணம்
நாறு சீறடியே"

என ஓதுகிறது அருணகிரியார் அருளிய சீர்பாத வகுப்பு.

"அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவனோடு" என்கிருர் குமரகுருபர சுவாமிகள். (முத்துக்குமாரஸ்வாமி பிள்ளைத் தமிழ் — அம்புலிப் பருவம் — பாடல் 5.) "உருவாய் அருவாய் அருவுருவாய்" — என வர்ணிக்கிறது தேவியைத் தேவி திருப்பள்ளி எழுச்சி — 4 ஆம் பாடல். (வைஷ்ணவி ஸந்நிதி முறை தொகுதி II) லலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரமோஅம்மையை, "நாராயணீ நாத ரூபா நாம ரூப விவர்ஜிதா" — என்றும் "ஏகாகி நீ பூம ரூபா" — எனவும் விவரிக்கிறது.

"ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" — என்பர் மாணிக்கவாசகர். (திருவாசகம் — திருத்தெள்ளேணம்). அவரே திருவெம்பாவை முதற்பாட்டில்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை" — எனச் சிவனைக் குறிக்கிருர். அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளிய ராமலிங்க வள்ளலார், "அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை" — என்று தாம் வணங்கும் தெய்வத்தைஜோதிவடிவமாகவே காட்டுகிருர். மூன்று முதலாழ்வார்களும் திருக்கோவலூர் இடைகழியில் ஜோதி ஸ்வரூபமாகத்தான் பெருமாளை உணர்ந்து, 4-ஆவது நபர் தம்மை நெருங்கியபோது, நினைந்து, தரிசித்து, ஜோதி விளக்கேற்றிச் சொல்விளக்கால் வழி பட்டிருக்கிருர்கள். திருமங்கையாழ்வாரோ,

"பாருருவில் நீர் எரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு ஸமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர் தம் திருவுருவே றெண்ணும்
போது

ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடல்உருவம் ஒத்து நின்ற
மூவுருவம் கண்டபோ தொன்ரும் ஜோதி
முகில் உருவம் எம்அடிகள் உருவம்
தானே"

எனத் திருமாலை ஜெகஜ்ஜோதியாகப் பாராட்டுகிருர். "ஜோதீ நடமிடு பெருமாளே", "ஜெகத்திற் ஜோதிப் பெருமாளே", "நிர்த்த ஜெகஜோதிப் பெருமாளே", "தீப மங்கள ஜோதீ நமோ நம" என்றெல்லாம் திருப்புகழ்ப் பாக்களில் முருகனை ஜோதி ஸொரூபமாகவே கண்டதாகப் பாடுகிருர். ஜோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே! சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதியே! பரனே!" — எனத் திருவாசகமும், "ஏதுக்களாலும் எடுத்தம் மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் ஜோதி" எனத் திருநெறிய தமிழ்ப் பாட்டும், "சொற்றுணை வேதியன்

ஜோதி வானவன்'' என அப்பர் தேவாரமும், "சுடர் உருவில் என்பருக் கோலத் தெரியாடும் எம்மானுர்'' என அற்புதத்திரு அந்தாதியும், "கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவம் ஆகி'' எனப் பெரிய புராணமும் சிவபிரானைப் புகழ்ந்து பேசுகின்றன. "பரஞ்ஜோதிஷே நம:" என லலிதா ஸஹஸ்ர நாமாவளிகளில் ஒரு திருநாமம் பராம்பிகையை விளிக்கிறது. இவை ஒரு புறம் இருக்க மண், புனல், கனல், வளி, வெளி, கதிர், மதி, உயிர் ஆகிய எட்டு வடிவங்களுடையது தெய்வம் என்றும் விவரிக்கப் படுகிறது.

"இரு நிலனய்த் தீயாகி விசும்பும் ஆகி
எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி இயமானனுய்
அஷ்ட்ட மூர்த்தியாகி"
—அப்பர் தேவாரம்

"பூதம் அவை ஐந்தாய்......ஆனுன்"—
ஸம்பந்தர் தேவாரம்.

"பாரும் புனலும் கனலும்வெங் காலும்
படர் விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறெலி ஒன்று
படச்
சேரும் தலைவி சிவகாம ஸுந்தரி"
—அபிராமி அந்தாதி.

"விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலும்......நிறைந்தாய்
—ஸகல கலாவல்லி மாலை—6.

'பஞ்சமீ பஞ்ச பூதேசீ'-லலிதா ஸஹஸ்ர
நாம ஸ்தோத்ரம்

'மண்ணிடை ஐந்தாய் மகிழ்ந்தாய்
போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றுய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியடை இரண்டாய் வளர்ந்தாய்
போற்றி
வெளியிடை ஒன்றுய் விளைந்தாய் போற்றி'
—திருவாசகம்-போற்றித் திரு அகவல்.

இவற்றிற்கு நேர்மாருக எதிர்மறைத் தத்துவமாகவும், இறைவனைப் பெரியோர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

'மண்ணல்லை விண்ணல்லை வாயுவல்லை'
—அப்பர்

'வானன்று காலன்று தீயன்று நீரன்று
மண்ணும் அன்று
தானன்று நானன் றசரீரி அன்று சரீரி
அன்றே'
—கந்தரலங்காரம்

'வேருய் உடன் ஆனுன் இடம் வீழிம்
மிழலையே'
—ஸம்பந்தர்

'பிறங்கொளிசேர் விண்ணுகி மண்ணுகி
இத்தனையும் வேருகி
—திருவெம்பாவை

'வானே ? புனல்பார் கனல்மா ருதமோ ?
... ..ஷண்முகனே'
—கந்தரநுபதி.

'நாத விந்து கலாதீ நமோ நம, வேதமந்த்ர
ஸ்வரூபா நமோநம'

என அருணகிரியார் முருகவேளின் உருவம் கடந்த நிலையையும் உருவ நிலையையும் விளக்குகிருர் திருப்புகழில். அவரேதான் கந்தரலங்கார மொன்றில், 'போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும் வாக்கும் வடிவும் முடிவு மில்லாதொன்று வந்து வந்து தாக்கும் ......அறுமுகவா' என்றும் வர்ணிக்கிருர். சைவ சித்தாந்த சாஸ்த்ரத்தில் 'நவந்தரு பேதமாகி' எனக்கூறி, நாதம், பிந்து, சிவம், சக்தி, ஸதா சிவன், மஹேச்வரன், ருத்ரன், விஷ்ணு, பிரம்மா என்கிற ஒன்பது வடிவங்களில் பரப்ரம்மாகிய பரசிவம் இருந்து செயற்படுவதாகக் குறிக்கிருர்கள். மேற் சொன்ன ஒன்பதுள் முதல் நான்கு பரசிவத்தின் நிஷ்களை வடிவத்தையும், பின்னைய நான்கு ஸகள வடிவத்தையும், இடையில் உள்ள 'ஸதாசிவன்' என்ற தத்வம், ஸகள நிஷ்களமாகிய ரூபாரூப தத்வத்தையும் குறிக்கும். ஸதாசிவன் என்பதே சிவலிங்கம். ஸகளம், ஸாகாரம், ஸ்வரூபம் என்பன உருவத்தையும், நிஷ்களம், நிராகாரம், அரூபம் என்பன அரு

வத்தையும், ரூபாரூபம், ஸகளநிஷ்களம், ஸாகார நிராகாரம் என்பன உருவத்தையும் முறையே குறிக்கும் வெவ்வேறு சொற்களே. ஸகளத்தை ஸகுணம் என்றும், நிஷ்களத்தை நிர்க்குணம் என்றும், ஸகள நிஷ்களமாகிய அருவுருவத்தை ஸகுணநிர்க்குணம் என்றும் குணதோஷங்க ளால் குறிப்பிடுவதும் உண்டு. ஸகுணத்தை ஸம லம் என்றும், நிர்க்குணத்தை அமலம், விமலம் நிர்மலம் என்ற சொற்களாலும்கூடக் குறிப்பர். பரசிவத்தின் உருவ நிலையினர்கள் நான்கு பேருள், பிரமன் நாற்றலையனுகிப்படைக்கிருன். திருமால் கருநிறத்தனுகிக் காக்கிருன். ருத்ரன் செவ்வண்ணனுகி அழிக்கிருன். மஹேச்வரன் மறைக்கிருன். உருவருவ நிலையினன் ஸதாசிவன் அருள்கிருன். இங்ஙனம் பஞ்சக்ருத்யம் நடத்து கிருர்கள் இவ்வைவரும். மேலும் பரசிவம், சக்தி, சிவம், பிந்து, நாதம் என்ற நான்குஅருவ நிலைகளிலிருந்தும் ஐந்தொழில் கடந்த துரியா தீதநிலையில் விளங்கி வருகிறது எனும் சைவ ஸித்தாந்த சாஸ்த்ரம்.

ஷண்மதங்களுக்குரிய கடவுளர்கள், கண பதி, முருகன், சிவன், விஷ்ணு, சக்தி, ஸூர்யன் என்பவர்கள். இவ்வறுவரும் பரப்ரம்மத்தின் நிர்க்குண நிஷ்கள நிர்மல நிலையனின் றிறங்கி ஸகுண, ஸகள, ஸமல நிலைக்குவந்துசெயற்படும் ஸாகாரப்ரம்ம மூர்த்தங்கள். இவர்களின் அரூப ரூபாரூப, ஸொரூப நிலைகளைக் கீழ்க்கண்டவாறு புரிந்து கொள்ளலாம், இந்த ஆறு மூர்த்தங் களைத்தான் ஹிந்து மதத்தில் உயர்ந்த தெய் வங்களாக ஸ்ரீ ஆதிசங்கரர் வடமொழியிலும், வடலூர் வள்ளலார் தமிழ் மொழியிலும் தோத்திரங்கள் பாடி வழிபட்டு உலகுக்கும் அறிவுறுத்தி உள்ளனர் :

ஸகுணப்ரம்மம்	உருவம்	அருவுருவம்	அருவம்	மதம்
1. விநாயகர்	பற்பல வடிவுகள்	மஞ்சட் பிள்ளையார் வெல்லப் பிள்ளையார் சாணப் பிள்ளையார்	பரகணபதி	காணபத்யம்.
2. முருகவேள்	,, ,,	வேல்	பரஸுப்ரமண்யம்	கௌமாரம்
3. சிவபெருமான்	,, ,,	மஹாலிங்கம்	பரசிவம்	சைவம்
4. சக்தி—	,, ,,	ஸ்ரீ சக்ரம் அர்த்த மேரு பூர்ண மேரு பூ சக்ரம்	பரா சக்தி	சாக்தம்
5. விஷ்ணு	,, ,,	ஸாளக்ராமம்	பரவாஸுதேவம்	வைஷ்ணவம்
6. ஸூர்யன்	அக்நி உருண்டை தீபஜோதி (த்வாதசாதித்யர்கள்)		அருட்பெருஞ் ஜோதீ (அல்லது) பரஞ்ஜோதி	ஸௌரம்

இவற்றையெல்லாம் பார்க்கும் போது அருவ மாயிருக்கும் பரம்பொருள் அல்லது பரப்ரம்மம் அருவுருவ நிலைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டு அதன் பின், உருவ நிலைக்கும் இறங்கி அதிலும் கல்லிலும், செம்பிலும், அர்ச்சாவதா ரங்களிலும், மண்ணிலும், மரத்திலும், படத்தி லும், ஸ்தம்பத்திலும், பிம்பத்திலும், கும்பத்தி லும் அனைத்திலும் இருக்கிற தன்மையைக் காட்டிக் கொண்டு அடியார்களுக்கு அருள் புரிந்து வருகிறது என்பதைத்தான் உணர முடிகிறது. ஐம்பெரும் பூதங்களில் விண்ணும் காற்றும் பரவஸ்துவின் அருவ நிலையையும், தீயானது அதன் உருவருவ நிலையையும், புனலும், மண்ணும் உருவநிலையையும் குறிக் கின்றன எனலாம். வெளியும், காலும் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனுல் அரூபம். நெருப்பு கண்ணுக்குத் தெரிகிறது ஆனுல் எந்தப் பொருளில் சேர்ந்து எரிகிறதோ அதன் வடிவை எடுத்துக் கொள்கிறதே தவிரத் தனக் கென ஒரு வடிவம் கொண்டில்லை. அதனுல்

ரூபாரூப தத்வத்தைக் குறிக்கும். தெய்வம் ஜோதியாகத் திகழ்கிறது என்ற ஸதாசிவ நிலையைத்தான் திருவண்ணுமலையும், அதன் நினைவாய்ச் சிவாலயங்கள் தோறும் வீற்றிருக்கும் சிவலிங்க ஸ்வரூபமும் நினைவூட்டுகின்றன. லிங்கத்தில் கரசரணுதி அவயவங்கள் காது, மூக்கு முதலிய இந்திரியங்கள் இன்மையால் அருவமே. ஆனுல் அதில் ஒரு குழவி போன்ற மேற்பாகம், ஆவுடையார்ப் பகுதி, அடிப்பீடம் இவை ஏதோ ஒரு வடிவில் அமைந்திருக்கின்றமையால் சிவலிங்கம் உருவமும் என்னலாம். ஆக அருவுருவம் கலந்த நிலை தான் மஹாலிங்கத் தத்வம்; மேலே உள்ள குழவி எப்போதும் மேல் நோக்கியே எரியும் ஜோதி தத்வத்தைத்தான் ஞாபக மூட்டும். நீரும், நிலனும், கண்ணுல் பார்க்கப்படுகின்றன. நீரானது, நெருப்பைப் போல் அல்லாது, பனிக்கட்டியாகிக் கெட்டிப் பட்டு ஒருவரும் தனக்குத்தானே கொள்ள வல்ல தாயிருத்தலின் பூமியும், புனலும் 'உருவம்' என்ற நிலையினதாய் இருக்கின்றன. பரம் பொருள் ஒன்ருய் இருக்கும்போது அருவம் பலவாய் விரியும்போது உருவம் இதையே வேறு நோக்கில் மாற்றியும் சொல்லலாம். எங்ஙன மாயினும் அருவமாயும், அருவுருவமாயும், உருவ மாயும் ஒரே பரம்பொருள் தான் இருந்து திருவிளையாடல் புரிகிறது என்பது தெளிந்த உண்மை. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனும் திருமூலரின் திருவாக்குப்படி ஒன்றே பரம் பொருள் அதுதான் கடவுள். அது அருவமாயும் அருவுருவமாயும், உருவமாயும் எல்லாம் விளங்கிக் கொண்டே அருள் புரிவது தான் அற்புதம்!

For Quick and efficient clearance and shipment of cargo through Madras Port

Please contact:

BINNY LIMITED

CLEARING & FORWARDING DIVISION

7, Armenian Street, MADRAS-1

Telephone: 29171 Telegram: "BINNY", MADRAS

Also

Steamer Agents, Stevedores Ware Housing Agents, Travel Agents.

குருநாதர் துதி

திரு. பாலகவி

இம்மையொடு மறுமை நலமெல்லாம் கொடுத்தருளும்
இனியதொரு சட்ட நெறியை
இதுகாலும் எந்தஅரு ளாளரும் காணாத
இயல்பினுற் கண்டுலகில் வாழ்
எவ்வுயிர்க ளும்பேணி இணையற்ற மெய்யின்பம்
எய்திட வழங்கி யருளி
எத்தகைய பிணிவரினும் எத்தகைய துயர்வரினும்
இறைபரனை நம்பி வாழ்தல்

செம்மை மிகு நல்ல நெறி என்றியற் கைப்பொலிவு
செறிசீத நீரி லாட்டித்
திருநீறு பூசுவித் தேயருட் தீர்த்தமும்
திவ்யமாய்ப் பருக வைத்தே
செப்பரிய மெய்க்கருணை யாற் பேணியருளாட்சி
செய்திலகு குருமூர்த்தியே
திருவடிக ளேதஞ்ச மெனநம்பும் அடியர்தம்
திருவே அருட்கல் வியே

மும்மை மலம் நீக்கியருள் முனிவனே மெய்ஞ்ஞான
முதல்வனே முக்க ணிறையாம்
மோதகக் கையனருள் வடுவுகண் டன்போடு
முன்சென் றணைந்த முத்தே
முத்தமி ழுடன் தூய சந்தனம் மணக்கின்ற
முகடுடைய பொதிகை மேவி
மோனவர சாய்நின்று ஞானவள மீட்டிய
முழுச்சோதி யேபுவி மிசை

வெம்மை மிகு காமமுத லானபல தீமைமிகு
வெறியனெனை யீர்க்கு முறவே
விற்பன ரெலா முணர வொண்ணாத மெய்ப்பொருள்
விளக்க விழைகின்ற பரமே
விரிவடையு மனமொடுங் கற்குரிய சூக்குமநல்
வினைவையெனு ளீந்தருளு வாய்
வேதாந்த சித்தாந்த நாதாந்த போதாந்த
விமலர் தொழு தேத்து குருவே.

உடையவர் அருள்பாலிப்பது ஒரு தகப்பன் தன் பிள்ளையை எவ்வாறு தன் அனுபவத்தின் படி நடத்தி நல்வழி திருப்ப என்ன பாடுபடு வானே, அதே போல் நம்முள் இருந்து நல்வழி திருப்பி நடத்த அயராது பாடுபட்டு வருகின்ருர். இது அவரை அண்டி அயராது நினைந்து உருகும் அடியார் பலர்க்கும் தெரிந்த உண்மை

சட்டம் என்பது 'மர்க்கடம்' (குரங்குக்குட்டி) போல் விடாப் பிடியாய் பற்றவேண்டும். நாம் வினைப் பயனுல் ஆண்டவரை நினையாது, பல கோடி நினைக்கிருேம். சொற்ப நேரமாவது தொடர்ந்து ஆண்டவரை நினைக்க இயல்வ தில்லை. அவ்வாறு தொடர்ந்து நினைக்க இயலாத நேரத்திலும், "அப்பனே! மர்க்கட மாகிய குரங்குக்குட்டி தானுக ஓடிப்போய் தன் தாய் வயிற்றை பிடித்துக்கொள்வதுபோல் நான் உன்னை நினைக்காவிட்டாலும் நீ என்னை மார்ஜ் ஜாலமாகிய பூனை தன் குட்டியை வாயினுல்

அருள் வேட்கை

திரு. G. சரவணப் பிள்ளை, திருவிசலூர்

கவ்வி நல்ல இடத்திற் சேர்ப்பதேபோல் உன் திருவடியிற் சேர்த்துக் காப்பாற்றக் கூடாதா?" என்று அழுது புலம்புவதைத் தவிர வேறு வழியில்லை. தனித்து இருந்து ஆண்டவனை நினைந்து உருகி அழுதால் கிட்டாதது ஒன்று மில்லை. அந்த சமயத்திலும் வரம் கேட்க வழி தெரிய வேண்டும். அதாவது, "என்னை நல் வழிப்படுத்து; நற்குணம் பெருகத் திருத்து; பிறர்குற்றம் பேசாமல், நின்னை மறவாமல், நின்னடிக்கு உரியவனுக்குவது உனது பொறுப்பு" என்பது முறையீடாக இருக்க வேண்டும்.

இருந்தபோதிலும் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய இவை குறுக்கிட்டு நம்மைத் தீய வழிக்குத்தான் இழுத்துச் செல்லப்பார்க்கும் அப்போது தான் நமக்கு உடையவர் தயவு மிக மிக அவசியம்; அஃதில்லாவிட்டால் அவற்றின் இழுப்பிலிருந்து நாம் தப்ப முடியாது. நாம் தவருன வழியில் செல்லுங்கால், உடையவர் நமக்குப் பல இன்னல்களைக் கொடுப்பார். 'நமக்கு ஏன் இந்த இன்னல் வந்தது?' என்று சிந்தித்தால், அன்று இரவோ, ஒருவாரத்திற் குள்ளோ, 'வேலைக்கேற்ற கூலி' என்ற முறை யில் பதில் கிடைக்காமல் போகாது; கண்டிப் பாகக்கிடைக்கும் ஆனுல் நாம் உணராமல்விட்டு விடு வதுமுண்டு. ஆனுலும், அந்த இடத்தில், 'கல்லாத மாந்தர் கருத்திற்கிசைந்தப்படி சொல் லாதிருந்தால் துயர்காண் பராபரமே' என்ற அருள் வாக்கிற்கேற்ப, நம் உள்ளத்திற் பொருந்தும்படி சொல்லுவார்.

அதற்கும், அதாவது அவரை நினைந்து உருக வும், 'எத்தனையோ ஜென்மம் எடுத்து இறைவன் அடி பணிந்தால் குற்றமற நல்லறிவு குறிக்கும் பராபரமே' என்ற திருவாக்கிற் கேற்ப, 'பல ஜென்மமெடுத்து உருகினுல் தான் குற்றமற்ற நல்லறிவு கிடைக்கும்' என்று அருளுகிருர். இது நாம் யாவரும் அனுபவப் பூர்வமாகத் தெரிந்து கொண்ட உண்மை.

தகப்பன் தன் பிள்ளையை நல்வழிப்படுத்திக் கொண்டு செல்வது போல், கொண்டு செல்லும் நம் ஆண்டவர், ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமி களைப் போல் வேறு எந்த ஒரு சமயமும், வேறு எந்த ஒரு தெய்வமும் இருப்பதாக என் மட்டில் தெரியவில்லை. உடல், பொருள், ஆவி அனைத் தையும் அர்ப்பணித்தால் பயன் பெறலாம்.

உடலையும், ஆவியையும் நாம் அர்ப்பணிக்கா விட்டாலும் அவை தாமாகவே போய்விடும். ஆனுல் பொருளை அர்ப்பணிக்கவோ மனம் இசைய மாட்டேனென்கிறது. ஏன் என்ருல், 'நாளைக்கு நமக்கு அதற்கு வேண்டுமே, இதற்கு வேண்டுமே' என்று ஆண்டவனுக்குப் பயன் படுத்தாமல் எடுத்து வைக்கத்தான் தோன்று கிறது. அந்த இடத்தில் தான் கர்மா வந்து குறுக்கிடுகிறது.

யானும் உபாத்தியாயர் மாதிரி சொல்லு கிறேனே தவிர, என்னிடத்திலும் எந்த பக்குவ மும் வந்ததாகத் தெரியவில்லை. 'அடே பையன் களா! நான் சொல்வதைச் செய்யுங்கள்! நான் செய்வதை நீங்கள் செய்யாதீர்கள்' என்று சொல்லும் சில ஆசிரியர்களும் உள்ளார்கள். எனக்கு நல்ல பக்குவத்தைக் கொடுத்தும், எனது பொருள்களை நல்வழியில் பயன்படுத்தக் கூடிய அறிவையும், ஆண்டவர் கருணையும் அடியார்களுடைய ஆசியையும் வழங்க வேண்டுமாய் பலமுறை நமஸ்கரித்து பணிவுட னும் அன்புடனும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்றும் இன்றும் என்றும் ஒன்றே!

(R. பாலகுரு)

பூவுலகில் தோன்றியுள்ள எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன. பிறப்பின் நோக்கம் இன்பத்தை நாடுவதே யாம். "எந்த இன்பம்?" என்பது அந்தந்த பக்குவத்தைப் பொறுத்துள்ளது. ஒவ்வொன்றிலும் ஏற்படும் வெறுப்பு மற்ருென்றை நாடுவதற்குத் தூண்டு கோலாயமைகிறது. இவ்வாறு பக்குவமடைந்து வரும் உயிர் கடைசியில் எய்ப்பு மிகவுற்று, இன்பத்தின் எல்லையாகிய பேரின்ப வீட்டை நாடுகிறது.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றயித் தாவர ஜங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்
பெருமான்"

என மாணிக்கவாசகர் கூறுகிருர்.

"எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்"

என்ருர் அருணகிரிநாதர்.

எத்தனையோ பிறப்புக்கள் எடுத்து, கடைசியில், "அரிதரிது மானிடராதல் அரிது" என்ற ஒளவையின் வாக்குக்கு ஏற்ப, எல்லாவற்றிலும் சிறந்ததும், அரிதானதும் இந்தமானிடப் பிறப்பாகும். அம்மானிடச் சட்டை தாங்கியவர்களிலும், மிகச்சிறந்த நிலையிலிருக்கும் பெரியோர் பலர் பல காலங்களில், பல நாடுகளில் பல சமயங்களில் திகழ்ந்து வந்துள்ளனர். அவர்களுடைய வாழ்வில் அமைந்துள்ள அடிப்படை இரகசியங்களை நுட்ப அறிவினுல் ஆராய்ந்தால், அவர்களுடைய வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள் யாவருக்கும் பொன் மொழிகளாகவும், வழி காட்டும் ஏடுகளாகவும் அமைந்து விடுகின்றன.

மனிதப் பிறப்பின் பெருமையைப் புரிந்து கொண்டாலும், "அதனுல் அடைய வேண்டிய பயன் யாது?" என்றும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இனி இப்பிறப்பைப் பற்றிச் சற்று ஆராய்வோம்: "பிறப்பு" என்ற சொல்லிலேயே உயிரும், மெய்யும் கலந்துள்ளன. உயிருக்குள் பரம் பொருள் இருந்து உலகில் உலாவச் செய்கிறது. உயிர் நீங்கி விட்டால் உடம்பு ஜடமாகிறது. ஆகையால் உயிர், "ஆத்மா," எல்லாவற்றிற்கும் மேலான பரம் பொருள் ஆகிய இரண்டும் என்றும் அழியாது நிலைத்திருப்பவை. மேலும் பிறப்பென்ற ஒன்று இருக்குமாயின் அதைத் தொடர்ந்து இறப்பென்ற ஒன்றும் உண்டு. இவ்விரண்டையும் உயிருடன் இணைப்பது 'கர்மம்'. ஆகையால் பிறப்புக்கு அடிப்படை கர்மங்களாகும். முன் செய்த கர்மங்களின் பயனுக ஒருவனுக்கு உலக வாழ்வு அமைகிறது. 'உலக வாழ்வு' என்பது கை விலங்கைப் போன்றது. அது பொன் விலங்காகவும் இருக்கலாம். அல்லது இரும்பு விலங்காகவும் இருக்கலாம்.

"புண்ய பாவமிரண்டும் புனர் ஜென்மம்
எடுத்திடும்
பண்ணிய தவங்கள் பரிபக்குவ மதடைந்
திடும்"

என்பது ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருவாக்கு. ஆகவே உலக வாழ்வு நம் நல்வினை தீவினைகளை அனுபவிப்பதற்காகவே அமைகிறது. எதிரிலுள்ள உருவத்தை ஒத்தே கண்ணுடியில் காணப்படும் பிரதிபிம்பமும் அமைகிறது. அது போலவே நல்வினைக்கேற்ற அளவு இன்பமும், தீவினைக்கேற்ற அளவு துன்பமும் வாழ்வில் வந்தமைகின்றன. அதற்குப் பெற்ருேரும் காரணக் கருவியாய்த் திகழ்கின்றனர். இதன் விளைவாகப் பிறவிப் பயணம் தொடங்குகிறது.

தாயின் மூலமாகத் தந்தையையறிந்து சற்குரு நாட்டத்தால் குருவையறிந்து, குருவின் மூலமாக உண்மையைத் தெளிந்து, வாழ்வினைத்தவ மயமாக்கி பக்குவம் பெற்ற பின்னர்பேரின்பத்தை நுகர வேண்டுமென்ற தாகம் உண்டாகிறது. அதனை 'அருட்தாகம்' என ஆன்ருேர் கூறுவர். அந்நிலையில் ஞான ஒளியாகிய

அறிவுச் சுடரில் உலகமாயையாகிய மும்மலங்களும்—கதிரவனைக் கண்ட பனிபோல்—விலகி ஓடுகின்றன.

'' கர்மமானது கோடி முன்னே
செய்தாலும் நின்
கருணைப் பிரவாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க
வல்லதோ ''

என்னும் தாயுமானவர் பாடல் இதனை விளக்குகிறது. அப்படிப்பட்ட ஞானஒளியை யுடைய அருட் பெரியோர், அசைவற்ற, அமைதி குலையாத, நிர்மல சொருபியாக விளங்குகின்றனர். அந்நிலையில் அவர்கள் எல்லா உண்மைகளையும் உணருகிறுர்கள்.

''ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவை
தந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே. ''

(அதாவது—விளையாடும் பொம்மைகளை விட்டெறிந்து விட்டுக் குழந்தை தன் தாயை நாடுவது போன்று, ஐம்புல இன்பத்தை நாடாமல் உன்னை நாடும் அகப்பணியைச் கொடுத் தருளிய அருள் ஞான வடிவான பரம் பொருளே என்று போற்றுகிறுர் தாயுமான சுவாமிகள்.)

அன்றுதிர்த்த இப் பொன்மொழிகள் இன்றும், என்றும் வழிகாட்டும் ஏடுகளாக அமைந்துள்ளன. அவ்வாறு அருட்பெரியோர் ஒவ்வொருவரின் அனுபவங்களிலும் வழிகாட்டும் ஏடுகள் நிறைய அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து பயன் பெறுவதென்பது இயலாத காரியமாகும். எடுத்த பிறப்புக்களும் போதாத நிலையில்,

''பிறந்து பிறந்து மண்மேல் உழன்று''—என்ற ஆண்டவர் அருட்பாடல் போல், பிறந்து பிறந்தே இறத்தல் வேண்டுமே யொழிய இன்பத்தை நுகருவது என்று? மேலும் அவ்வுயிர் தன் வழியினின்று பிறழுதற்கும் இடமுண்டு; மீண்டும் கர்மங்களில் அகப்பட்டு சகடக்காய் போல் சுழன்று கொண்டே இருத்தல் வேண்டும்.

மின்சாரம் என்ற நதி ஓடுகிறது; அதில் தொடர்பு கொண்ட பல்பின் ஆற்றலுக்கு ஏற்ப ஒளி தரும் தன்மையும் அமைகிறது. அது போலவே உயிர்களின் பக்குவத்திற் கேற்ப ஆங்காங்கு குரு மகான்கள் தோன்றி தக்க தருணத்தில் வந்து தடுத்தாட் கொண்டு அருள் புரிகிறுர்கள்.

அன்று,

குருந்தடிமரத்தில் ஆட்கொள்ளப் பெற்ற
மாணிக்கவாசகர்
திருவெண்ணை நல்லூரில் தடுத்தாட்
கொள்ளப் பெற்ற
சுந்தரமூர்த்தி நாயனுர்

இன்று,

இராமகிருஷ்ண பரம ஹம்சரால்
ஆட்கொள்ளப் பெற்ற
விவேகாநந்தர்,
முருகனுல் ஆட்கொள்ளப் பெற்ற பாலகவி
சுமாமிகள்,
அருணகிரிநாதர்

-முதலியோரின் வரலாறுகள் உலகறிந்தனவே!

வினை காரணமாகப் பிறப்பு ஏற்படுவதும், உண்மையான இன்பம் எய்த விழைவோர் வினையை ஒழித்தல் வேண்டும் என்பதும், அதற்குக் 'குரு அருள்' அவசியம் என்பதும், அன்றும், இன்றும், என்றும் உள்ள உண்மைகளாகும். 'அவ்வாறு குரு அருள் பெற்றுப் பேரின்பம் எய்துவதற்கு இக்கால வாழ்வில் இயலுமா?' என்ற ஐயம் தோன்றலாம். உலக வாழ்வை அடியோடு விடுத்து, கடவுள் அருளை நாட இயலுமா? என்றும் தோன்றலம். இல்லறத்தில் இருந்தவாறே அருள் நெறியைக் கடைப்பிடித்துப் பேரின்ப நிலைக்குப் படிப் படியாக முன்னேற முடியும். அதற்கேற்ற

" அடியவர்கள் ஆன்ம வளர்ச்சியின் பொருட்டு அடிக்கடி ஒருவரையொருவர் சந்திக்க வேண்டும்; நேரே கலந்து பேசும் நேரங்கள் சிலவாயிருந்தாலும் கடிதம் மூலமாக இடைவிடாது கலந்து கொண்டேயிருத்தல் வேண்டும் '' என்பது சுவாமிகள் கட்டளை.

எளிய ஆனால் சிறந்த ஒரு திருநெறியை அருட்சட்டம் என்ற பெயரில் சற்குருநாதர் ஸ்ரீ இருதிடியப்பட்டி சுவாமிகள் இவ்வுலகுக்கு வகுத்தளித்து, அரும் பெருந்துணையாயிருந்து முன்னேற்றுவித்து அரும்பெரு நிலைக்கு அழைத்துச் செல்கிறார். அவருடைய அருளாட்சி ஒப்புயர்வற்றதாக விளங்குகிறது.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள், 1856-ல் நெல்லை மாவட்டத்தில் இரெட்டியப்பட்டி என்னும் கிராமத்தில் அவதரித்தவர். பிறந்தது முதலே அருட்தாகம் கொண்ட இவருக்குத் தமது 23வது வயதில் மதுரை மாநகரில் வைகை நதிக்கரையில ஜோதி வடிவிலே வந்து ஆட்கொண்ட ஸ்ரீ பரிபூரண விநாயகரின் பேரருள் கிடைத்தது. கடல்போல் பரந்து விரிந்துள்ள சமய நூல்களையும், அருட் பெரியோர்களின் அனுபவங்களையும் ஆராய்ந்து பயன்பெறுவதென்பது இக்காலத்தவருக்கு இயலாத காரியமென்பதை உணர்ந்த இவர், எக்காலத்தும் யாவருக்கும் உகந்த வழிகாட்ட எண்ணி மிக நுணுக ஆராய்ந்தார். பொதிகையிலே ஈராறு ஆண்டுகள் அருந்தவமாற்றி, அதற்கான வழியையும் கண்டார். அதன் முதற்படியாக,

1. அதிகாலையில் தலை நனைய பச்சை நீரில் மூழ்குதல், பச்சை நீரையே பருகுதல்.
2. அருள் நிட்டையில் அமர்தல்.
3. வெள்ளிக் கிழமையில் விரதம் இருத்தல்.
4. புலால், லாகிரி வஸ்துக்கள், மருந்து முதலியன தவிர்த்தல்.
5. பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.

இது போன்ற சில விதிகளைச் "சட்டம்" என்ற பெயரில் வழங்கியுள்ளார். (இவற்றின் விளக்கத்தை 'வழிகாட்டும் வான் பொருள்' என்ற நூலில் காணலாம்). இவைகளைக் கைக்கொண்டு பக்குவப்பட்டவர்களை அவரவர் தகுதிக்கேற்பத் தாமே தோன்றாத்துணையாய்—வழிகாட்டும் வான் பொருளாய் — இருந்து கொண்டு நடத்திச் செல்கிறார். சட்ட அனுஷ்டானத்தில் வேலைக்கேற்ற கூலி உண்டு என்று தாமே திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அன்றும், இன்றும், என்றுமே அருட் பெரியோர்களால் கைக்கொண்டு ஒழுகப்பெற்ற நற்பண்புகளை, எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும், எல்லா இனத்தவரும், எக்காலத்திலும் எவ்விதத் தடையுமின்றி, எவ்வித வேறுபாடுமின்றி, எளிய முறையில் பெற்றுய்ய வேண்டுமென்று, ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளால் வகுத்தளிக்கப் பெற்ற இவ்வருட் சட்ட விதிகளை நாம் அனைவரும் அனுஷ்டித்துப் பயன்பெறுவோமாக.

T.N.G S.T. No. 214040 D/1-4-70 Phone No. 577
C.S.T. No. 8 D/29-6-57 Estd. 1927

சு. கிருஷ்ணசாமி முதலியார் & சன்,

பித்தளை, தாமிரம் & எவர்சில்வர் பாத்திர உற்பத்தியாளர்கள் & வியாபாரம்

465-466, மெயின் பஜார், : : வேலூர்-4. [வ.ஆ.]

★

S. Krishnaswamy Mudaliar & Son,

Brass, Copper & Stainless Steel Vessels Merchants & Manufacturers

465-466, Main Bazaar : : VELLORE-4. [N.A.]

சற்குரு நாதர் துணை

சுகம் தருவான்; நம்பித் தொழு.

[அடியார்க்கு இனியான்]

பல்லவி

நம்பித் தொழுவாய் மனமே — குரு நாதனை
நம்பித் தொழுவாய் மனமே

அநுபல்லவி

கும்பிட்ட வர்கள்வினைக் கூட்டங்க ளையழித்துச்
செம்பொற் பதநிழலில் சேர்த்தே யருள்புரிவான் (நம்பித்)

சரணம்

நம்பாத வர்களையும் நம்பித் தொழப்புரிவான்
வம்பாதி பேசுவோரை வலுவில் இழுத்தருள்வான்
செம்பாக மானஉள்ளம் திகழ்வான் அருள்பொழிவான்
நம்போன்ற வர்க்கும் அருள்நல்க விழைந்திடுவான் (நம்பித்)

குற்றம் பலபுரியும் கொடிய மனமே அன்பால்
பெற்றதாய் தந்தையினும் பிரியமாய்ப் பேணவல்லான்
செற்றம் அகந்தை மயல் தீயகா மம்தொலைப்பான்
நற்றவ நிட்டைதந்து ஞானச்சுகம் தருவான் (நம்பித்)

“இறைவன் படைத்த அற்பமான சுக்கினுலும், மிளகினுலும் மற்றுமுள்ள மருந்துப் பொருள்களாலும் தீரக்கூடிய ஒரு வியாதி அவனது நேர் அருளினுலேயா தீராமல் போய்விடும்? அவன் அருளை நாடிவிட்டவர்களுக்கு உலக மருந்துகளைப் பற்றிய நினைவு கூட வேண்டியதில்லை! தமக்கு வரும் நோய்களை அவனருளை அடரப் பெறுவதற்குத் துணையாக்கிக் கொள்ளாமல், மாய மருந்துகளை நாடியா மாய்ந்து விட வேண்டும்?” என்று சுவாமிகள் வினவுவார்கள்.

மனதிற்குக் கூறும் அறிவுரை

திரு. T. ஜெகந்நாத குப்தா, சென்னை

இம்மாபெரும் உலகில், உயிர்களுள் தலையாய நிற்பது மானிடப் பிறப்பேயாம். அது நல்வினையின் பயனாகக் கிடைத்த வரப்பிரசாதமாகும். நமது ஆறுவது அறிவாகிய பகுத்தறிவின் துணை கொண்டு ஆராய்ந்து. அழியக் கூடிய தாகிய இவ்வுலகை மறந்து, என்றும் நிலைத்திருக்கும் பரம்பொருளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்கு மனம் உறு துணையாக வேண்டும். ஆதலால் அதற் குக் கூறவேண்டிய அறிவுரையைக் கீழே காண்போம்.

மானுட அமைப்பில் உடலினும் உயர்ந் தது உள்ளம். உடலில் ஏதேனும் குறை பாடு இருந்தால் அதை முன்னிட்டு அம்மனிதன் கீழோனாகக் கரு தப்படமாட்டான். ஆனால் மனதில் நேர்மையும் ஒழுக் கமும் நல்லறிவும் அமையப் பெரு திருக்குமானால் அவன் புன்மை யன் ஆவான். மனதை மாண்புறச் செய்யுமளவு மனிதன் மேலோனாகிறான்.

உணவூட்டி உடலை வளர்க்கிறோம். அப்படி உடலைப் பேணுவது உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானது. பின்பு உள்ளத்தைப் பேணுவது மனிதனுடைய தனிச் செயலாகிறது. நல்லுணவையே உடலுக்குத் தரவேண்டும். அதுவே உடலுக்கு உறுதி தருவதுமாகும். அது போலவே நல்லெண்ணமும், நல்லுணர் வும் உள்ளத்திற்கு உணவாகின்றன. மனதிற்கு இனிய நல்லுணவாவது தினசரி தியானம். உள்ளத்தினுள் பக்தி யையும், ஞானத்தையும் வளர்ப்பதற்கு இது உற்றதோர் உபாயமாகும். இதற்கு முதற்படி அன்பு கொண்டவனாய் இருத்தல் வேண்டும்.

"என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை அறம்."

—திருக்குறள்.

"அன்பு சிவமென்றிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே"

—திருமந்திரம்.

அன்பு குலையாமல் இருக்க வேண்டுமானால், கோபம் சிறிதும் இருத்தல் ஆகாது. காரணம், கோபம் தன்னையே அழித்து விடும் என்பர் சான்றோர்.

"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற."

—திருக்குறள்

"கோபம் செய்தால் பாபங்கள் நேர்ந்து
குற்றம்வந் தெய்துனைச் சற்றும் விடாது.

மனமே—கோபம் செய்யாதே"...

—ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஆகையால் இறைவனுக்கும் நமக்கும் இருக்கும் உறவை பிரிப்பது சினம் என்னும் பகையேயாம் என்பது தெளிவு.

ஆண்டவனது அருளின்படி நம் சுவாமிகள் சென்று ஆட்கொண்ட அடியார் களைக் கண்டு, சுவாமிகளே வியந்து, "அடியார்களை மணி மணியாக அல்லவா உடையவன் கணக்கு எடுத்து விட்டிருக்கு!" என்று அருளோடு கூறுவார்கள்.

மேலும் 'நான்' என்னும் அகங்காரத்தைச் சுட்டெரித்து விட்டு ஆண்டவன் அருளில் ஆழ்ந்திருத்தல் நன்று. அவ்வாறு ஆழ்ந்தவர்களை வைணவர்கள் "ஆழ்வார்கள்" என்றும், சைவர்கள் "நாயன்மார்கள்" என்றும், குருநாதர் சட்டத்தினர் "அடியார்கள்" என்றும் குறிப்பிடுகின்றனர்.

"ஆங்காரம் என்னுமத
யானைவா யிற்கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள்
எய்துநாள் எந்நாளோ?"
—தாயுமானவர்

எந்தை யருளைப் பெற அருட்குரு தேவை. குருவின் அருள்பெற குரு வணக்கம் அவசியம். அது மிகுதியானல் பின்னர் குரு நம்மை அந்நிலைக்கு அழைத்துச் செல்வார். அந்த குரு வணக்கம் எப்படி இருக்கவேண்டும்?

"குருவைக் கண்டடிபணிந் தேத்து வாயிரு
வினைபற் றுதுணைவிட் டுப்போகு மேகசற்
குணமுற் றியுனைநற்றி யேவிடாதருள்
—கனிவாகும்"
— ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அப்படி அவ்வருள் குருவின் வழிநின்ருல் முத்தியாகிய பேரின்பம் கிட்டும். அதுவே இறைவன் திருவடியுமாகும்.

"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"
—திருக்குறள்

"பந்தமு மற்றுப்ப ணியற்றுச் சற்குரு
பாதத்தைப் போற்றிடு சேயே — அருள்
வேதவி திப்படி நீயே — பேதா
பேதகம் போக்கிடு வாயே
பலகாலமும் நிலையாகவே சலனுதிகள்
விலகாதிரு
பஞ்சப்பொறிபுல னடங்கும் — மாயா
வஞ்சப்பி றவிக ளொடுங்கும்."
—ஆண்டவர் அருட் பாடல்.

ஆதலால் பந்த பாசங்களை விலக்கி நிலைத்த உறவாகிய குருநாதர் திருவடிகளைப் பற்றி பேரின்பம் எய்த வேண்டும்.

அத்தகைய சிறந்த குருவாக விளங்குபவர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவர். அவர் ஈராராண்டு அருந்தவம் புரிந்து ஸ்ரீ பரிபூரண விநாயகரின் பூரண அருளைப் பெற்று, ஏழை எளியவர்களும் எளிய முறையில் கடைப்பிடிக்கும் வழியில் அருட் சட்டத்தை வகுத்து வழங்கி அருளாட்சி புரிந்து வருகிருர்.

"அனுதினம் நீராடி ஐயன் கணேசனைத்
தொழுது
தினந்தின மூன்றுபிர தட்சணஞ் செய்து
முடித்துக்
கணம்பெறு சுக்கிரவாரங் கனிவாய்
விரதமென்று
தினமும்வெந் நீர்மருந்து சேர்க்கக்கூ
டாதென்ற வேடிக்கை பாராய்
— வழிகாட்டும் வான் பொருள்

ஆண்டவர் மேலும் எவ்வளவோ அருட் பாடல்களைப் பாடியருளியுள்ளார். அவற்றுள் மனத்தை நோக்கிக் கூறும் பாடல்களும் பல உள.

"மனமே யருள் பெற வஞ்சக மற்றுநல்
வழியே கவுமொரு மந்த்ர மிருக்குது"

என்று தொடங்கும் பாடல்,

"நிருவா ணசகஜ நின்மல சாக்கிர —
நிஷ்டையாமே"

என்று பூர்த்தியாகிறது.

மனம் அருள் பெறுதற்கு இயலாத நிலையிலுள்ளது. காரணம், அது வஞ்சகம் நிறைந்ததாயுள்ளது. அதை நீக்குவதற்கு ஒரு வழியிருக்கிறது. அது ஒரு மதுவாகிய அமிர்தம் என்று சொல்லக்கூடிய மந்திரம். அதை மனத்திற் கொண்டு இடையருது ஜபித்தால் அருள் பெறலாம். மேலும் மனைவியுடன் அனுதினமும் சுகப்படும் சிற்றின்பத்தைப் பெரிதாக இந்தப் பாழ் மனம்

கொள்வது முறையாகுமோ; முறை யாகாது.

ஏ மனமே! இவ்வுடம்பு வினையின் காரணமாக வந்தது என வேதங்கள் செப்புகின்றன. அவ்வினைக்கேற்ற வண்ணமே இப்போது செயல்கள் நடைபெறும். ஆதலால் மேலான உத்தமர்களின் நட்பைக் கொண்டு, இக்கணமே சிற்றின்ப இச்சைகளை விடுத்து, உயர்ந்த மௌன நிலையில் நின்று குற்ற முடைய உலக விஷயங்களனைத்தையும் விடுத்து, நன் நிலையை எய்த வேண்டும். அப்போது, 'இவ்வுலக வாழ்வு கனவு போன்றது' என்னும் உண்மை தெளிவாகும். என்றும் அழியாத நித்தியப் பொருளாகிய கருணாமூர்த்தியின் திருநாமமும், அவன் திருவடியுமே நலம் பயக்கும் என உணர்ந்து உளத்துட் கொண்டு, போற்றுவாயாக. அப்பொழுது சூரியநாடி, சந்திர நாடி எனும் இரண்டும் ஓங்காரத்தின் வழி சென்று மேலே இறைவன் நடனமிடும் கனகசபையில் கொண்டு சேர்க்கும். அங்கு பிரணவப் பொருளாகிய விநாயகப் பெருமானின் திருவடி மலர்களை நாடி துதிப்பாயாக. அப்போது நடனமிடும் அவர் திருவடிகளில் உள்ள கிண்கிணி முதலியவற்றின் ஒலிகளும், அவர் அருகிருந்து அந்நடனம் கண்டு ஆனந்தக் கூத்தாடும் கணங்களின் ஒலிகளும், அந்நடனத்திற் கேற்ப இசைக்கப்பெறும் இன்னிசை ஒலியும், முழக்கப் பெறும் வாத்தியங்களின் ஒலியிம் இனிதே கேட்கும்.

நினைவே அதில் ஒன்றி உருகும்படி அமைத்து நல்ல நியமங்களை உளத்தில் பதித்து அத்தூய நெறியையே கடைப் பிடிக்கவேண்டும். பந்தங்களை அடியோடு நீக்கிச் சிதா காய (ஞானகாய) ஒளிமயமாய் ஆகவேண்டும். நீங்கா நிழல் போல அருட்பரம் பொருளினிடம் அன்பு மிகுந்து பொலியுமாகில், திருமால், பிரமன், மற்றும் உள்ள தேவர்கள் யாவரும் மெச்சிப் புகழ்வர். அப்பொழுது அனுபவிக்கும் உயர்ந்த நிலையை நிர்வாண சகஜ நிர்மல ஜாக்கிர நிஷ்டை நிலை என ஆண்டவர் அருளுகிறார்.

இவ்வழியை அனுஷ்டித்தால் சித்த மலம் அற்று சிவமயம் ஆகலாம். இந்நிலையடைந்து,

> "சித்தமலம் அறுவித்து சிவமாக்கி
> எனையாண்ட
> அத்தன் எனக்கு அருளிய வாறு ஆர்பெறு
> வார் அச்சோவே"

— என்று அருளுகிறார் மாணிக்கவாசகர்.

அம்பாசிடர், பியட்கார், டிராக்டர் முதலியவைகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸும்,
DAGENITE BATTERYயும் கிடைக்குமிடம்,

MURUGAN AUTO PARTS

172-G, West Bouleward,
PONDICHERRY-1

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் மீது பாடிய பக்திப் பாடல்கள்

['பிரம்மானுபூதி' பெத்தப் பெருமாள் ஆச்சாரி வேலூர்,]

[விருத்தம்]

1. கருணையே வடிவாய்க் கன்னிநற் றிங்கள்
கதிதரு ரேவதி நாளில்
உருவொடிவ் வுலகில் உதித்துநன் மக்கள்
உய்யவே வழிவகுத் திடவென்
றிருவினை நீக்கி மும்மலம் போக்கி
ஈரேழு புவியெலாம் போற்றக்
குருவென வந்த இரெட்டியப் பட்டிக்
குருபரர் குணமலர் போற்றி,

2. அருள்பொழி மழையே அடியவர் வினையை
அறுத்திட வந்தமெய்ப் பொருளே
குருவும் நற்றந்தை தாயுமாய்த் தேவாய்க்
குலமெலாம் பேணிட வந்த
மருவிலாத் தவத்தோய் இரெட்டியப் பட்டி
வள்ளல்வே லூரினில் மகிழ்ந்தே
உருவொடு வந்த உடையவா நினது
உபயதா மரையடி போற்றி.

நமது சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொள்ளும் நிலையை அடியார்களுக்குக் குறிப்பாக உணர்த்தும் பொருட்டு, அடியார்களின் நிட்டையில், "சாமி தங்கியிருக்க ஓர் இடம் கொடுக்குமா?" என்று ஒரு முறையும், "சாமிக்கு இடம் கிடைத்துப் போச்சு!" என்று அடுத்தபடியும் கூறியருளினுர்கள்.

விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானம்

திரு. வே. குருநாதன், M.A., ஈரோடு

உலகில் பிறந்துள்ள உயிர் வர்க்கங்கள் யாவும் இம்மை மாறிப் பிறப்பறுத்துப் பேரின்பப் பெருவாழ்வில் தங்களைத் தாங்களே கரைத்து விடத்துடிக்கின்றன. அவ்வாறு துடிக்கும் உயிர் வர்க்கங்கள் தத்தம் முயற்சியில் முன்னேற விடாது இடர்ப்பாடு செய்வது எது? என்பதே இன்றைய பிரச்சினையாகின்றது. இந்த ஆன்மீக உலகினுக்கு ஆன்மீக அறிஞர்கள் இந்த வினாவிற்குப் பலவிதக் கருத்துக்களைக் கொண்டிருப்பினும், 'மாயையென்னும் மங்கையின் அரவணைப்பே' என்பதில் யாதொரு கருத்து வேறுபாடும் இன்று! அந்த மாயையின் அங்கங்களுள் ஒன்றாகக் காட்சியளிப்பது தான் 'அறியாமை'

இதற்கு அடிப்படி அன்பு அல்லது பக்தியே யாகும். ஆத்திகவாதிகள் உடலின் தேவைக்காகவும், ஆன்மீக வளர்ச்சிக்காகவும் தேவையானவைகளாகப் படைத்துக் கொண்ட சில செயல்கள், அவர்களின் பின்வந்தோருக்குச் சரியாகப் புலப்படாத காரணத்தால், பின் வந்தோர் அதனைத் திருத்தியும், மறுத்தும், பொருள் வேறுபடுத்தியும் மூடப்பழக்கங்களாக்கிச் சமயத்தைப் பற்றி பிறர் இழிவாகப் பேசுமளவிற்குப் பாழ்படுத்திவிட்டனர். உடலையும், மனத்தையும் பக்குவப்படுத்தி, இறைவனோடு இணைக்கின்ற மாபெரும் சக்தியான சமயத்தை இன்றுபலரும் எள்ளி நகையாடுகின்ற அளவிற்கு இடமளித்து விட்டனர். சிறந்த பக்தியின் அடிப்படையில் சிலபல எண்ணங்களை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணங்கள் பலவாகி அவற்றில் ஆய்வும் பாங்கும் இடம் பெற்றால் உண்மையான வழி யாது என்று காணக்கூடும். அந்தப் பாங்கான வழியில் சென்றால் நல்லன யாவையும் பெற்று இறைவனடி சேரலாம். இந்த முறை தான் 'விஞ்ஞான ஆய்வு' ஆகின்றது. ஆகவே விஞ்ஞானத்தின் இறுதிப் பயன் மெய்ஞ்ஞானமாகவே இருத்தல் வேண்டும். 'விஞ்ஞானம்'' 'மெய்ஞ்ஞானம்' இரண்டிலும் இருப்பது 'ஞானம்'— அறிவுதான். 'வி' என்பது 'அறிவி' அல்லது 'செய்துபார்' என்ற பொருளில் வர, 'மெய்' என்பது 'உண்மை' அல்லது 'உள்ளது' என்ற பொருளில் வருகிறது. எனவே இரண்டும் உயிர் மேனிலை எய்த உதவிடும் சாதனங்களே. முதலது தொடக்கமாகவும், பின்னது சாதனையாகவும் இலங்குகின்றன.

இந்தச் சமயம் என்பது மனிதனது உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் தகைமை சான்றது. உணவினைச் சமைத்தபின் உட்கொண்டால் அது உடலுக்கு எவ்வாறு உரமளிக்கின்றதோ அஃதே போலச் சமயமும் மனதைப் பக்குவப்படுத்திப் பரமாத்மா—ஜீவாத்மா இணைப்புக்கு வழி கோலுகிறது.

இக்கருத்தினை நாம் அறிந்துகொள்ள ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் நலம் பயக்கும்.

'நீறில்லா நெற்றி பாழ்' என்பது பழமொழி. 'திருநீறு அணியாத நெற்றிக்கு அழகு கிடையாது' என்பது பொருள். திருநீறு, ஆவின்சாணம், நோய் நீக்கும் அருமருந்தாகும். இன்றும் 'மஞ்சள் காமாலை' நோய் வந்தவர்கள்

'அருட் சட்ட அடியார்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்; எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் அவர்களுக்கு எப்போதும் துணையிருக்கும்' என்பதை உணர்த்த, "சட்டத்துப்பிள்ளைகள் வெளியில் புறப்பட்டால் எத்தனை தேவர்கள் துணைவருவார்கள் தெரியுமா?" என்று சுவாமிகள் சொல்வதுண்டு.

சிறிது கோமயத்துடன் கோசலத்தையும் கலந்து பருகினுல் நோய் நீங்குகிறது என்கின்றனர். நமது இல்லங்களின் முன்றிலி னிலே தினமும் அதிகாலையில் பசுஞ்சாண மிட்டு மெழுகுகின்ருேமே, அது எதற்காக? வெளியில் உலவுகின்ற தீயசக்திகள் எவையும் நம்மை அணுகாதபடி, தீய நோயை வளர்க்கும் கிருமிகள் நம்மைத் தீண்டாதபடிக் காக்கும் அற்புத சக்தியைப் படைத்தது ஆவின் சாணம். அதிலிருந்து எடுப்பதுதான் திருநீறு. மேலும் அந்நீற்றினை நமது நெற்றியிலே பூசுவதினுல் நமது சிரத்திலுள்ள தலைவலியினை நீக்குகின்றது. இதனையேதான் ஆண்டவர்,

“ ... ...”பூசும்
வெண்ணீறவிழ்தமென்று கொள்ளுவாய் ’

என்று அருளிச் செய்தனர்.

‘ இறைவழிபாட்டின் போது தீர்த்தத்துடன் திருநீறும், துளசியுமிட்டு இறைவனுடைய அருளைப் பருகுவது போலப் பருக வேண்டும்’ என்ருர் ஆண்டவர். மெய்ஞ்ஞானிகள் பலர் அவ்வாறு பருகுவதனை உள்ளங்கையில் கொண்டு பருகவேண்டுமென்பர். அடிகளார் இன்னும் ஒரு படி மேலே சென்று, ‘ பச்சை நீரில் மூழ்கி, அந்நீரே பருக வேண்டும்’ என்ருர்கள். துளசிதனை உட்கொண்டால் உடல் வளம் பெறுவதோடு காமமும் குறையும் என்றும் இன்றைய விஞ்ஞானிகள் கூறு கின்றனர்.

‘விடியுமுன் நதிதனிலே மூழ்கி’—என அருளி னர் இருடியர்பட்டி அடிகளார். ‘அவ்வாறு விடியுமுன் நதிதனிலே மூழ்கினுல் என்ன கிடைக்கும்? விடிவதற்கு முன் குளிரும் பொழுது குளித்தால், ஜலதோஷம் முதலியன வந்தால், செய்வது என்ன?’, போன்ற ஐயங்கள் எழுதல் இயல்பே. இன்றைய அறிவியல் அறிஞர்கள், விடியற்காலையில் நீரில்—குளம், குட்டை ஏரி ஆறு எங்கணும்—ஓர் சக்தி படிகிறது’ என்றும், அது போது குளிக்கின்றவர்கள், நோய் நொடி யின்றி நலமாய் வாழலாம்’ என்றும், பகர்கின்ற னர். இந்த விடியற்காலை நேரத்தை ‘உஷத் காலம்’ என்றும், ‘அது உஷை சூரியனை வணங்கு கின்ற நல்ல நேரமென்றும்’ ‘அந்த நேரத்தில் குளித்து, இறைவனை வழிபட்டால் தீராத நோயெல்லாம் தீரும்’ என்றும் வடமொழியாளர் கூறுவர். ஆக மேற்குறித்தனவற்றில் எல்லாம் உள்ளடக்கியே, இருடியர்பட்டி அடிகளார், ‘விடியுமுன் நதிதனிலே’ மூழ்கி என்ருர்.

இறைவனையும் அவனுடைய அருளாடல்களை யும் நித்தம் நித்தம் கவனம் பண்ணுகின்ற ஆசாரியனை அடைந்து, ‘கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக’—என்று வள்ளுவ ருரின் வாய் மொழிப்படி, அவர் கற்பித்த வற்றை—நிட்டையினில் உணர்த்தியவைகளை—நித்தமும் நினைவில் இருத்தித் தொழுதால் இறைவன் நம்மைக் காப்பான். இதனையே அடி களாரின் அருமைச் சீடர் ஒருவர்,

‘நிட்டையிலே கிடைத்தபடி நித்தநித்தம்
கவனம் பண்ணு
கட்டமின்றிக் காத்திடுவார் கடவுள் ரெட்டி
பட்டிச்சாமி ’

என்று அழகாகக் கூறியுள்ளார்.

மேற்குறித்த ஆசாரியன் அல்லது குரு என்ப வர் யார்? அவர் என்ன செய்கின்ருர்? என்ற வினுக்கள் எழுகின்றன. பக்குவமறிந்து வகைப் படுத்தி வழிப்படுத்துபவரே ‘குரு’ ஆகின்ருர். வழிப்படுத்தப்பட்ட சீடன் உயர்நிலை எய்து கின்ருன். குருவைத் தெய்வமாகப் போற்றுதல் சீடரின் சீரிய கடனும். இதனைத்தான் இருடியர் பட்டிக் குருநாதரின் இனிய சீடர்,

‘குருவைப் பணிய வேணுங் கூடவே
யிருக்கவேணும்
கருத்தை அறிய வேணுங் கடவுளென்று
நம்பவேணும்’

என்று கூறுகின்ருர். இருடியர்பட்டி அடிகளா ரும் பரிபூரணப் பிரானுர் தம்மைக் குருவடிவில் ஆட்கொண்டதை,

‘ ஆதி குருவாய் வந்து அடிமைக் கருள்
செய்ததை
நீதமென உணர்ந்து நிச்சயப் படுத்திக்
கொண்டேன் ’

என நவின்ருர்.

குருவின் அருட்பார்வை பட்ட பின்னர், ‘நான் என்னும் ஆணவமற்று, இறையருளில் கலந்து விடுவதை நம் சுவாமிகள்,

‘ யானெனதென்னும் செறுக்கறுக்கத்
தெய்வம்
மானிடமாகவே வந்த ததிசயம்’

என்று, மதுரைப் பரிபூரணப் பெருமானுர் தம்மை ஆட்கொண்டருளிய சிறப்பினைச்செப்புகையில் மகிழ்வோடு குறிப்பிடுகின்றனர்,

குருநாதர் சீடனைப் பல சோதனைகட்கு உட்படுத்தி அவனது உள்ளத்தின் சீரிய நெறியினை அறிந்து, பின்னர் உத்தம சீடனாக ஏற்றுத் திருவருள் புரிகின்றார். பள்ளியில் மாணவர்களுக்குத் தேர்வு வைத்து, அறிவுத்திறனையறிந்து அடுத்த வகுப்புக்கு மாற்றுவதை ஒப்ப, இங்கு நம் குருநாதரும் தம் சீடருக்குச் சோதனை தந்து, பின்னர் அருள் செய்கின்றார். குருநாதரின் அருளின்றி பேரின்பம் பெறமுடியாது. இந்து சமயத்தைப் பற்றி உலகெலாம் எடுத்தோதிய பெருந்தகையாளராம் விவேகானந்தருக்கு ஸ்ரீ இராமகிருஷ்ணர் குருவாக அமர்ந்து பேரருள் புரிந்தார். மதுரைப் பரிபூரணப் பெருமான் இருடியர்பட்டிக் குருநாதருக்கு உருவத் திருமேனி காட்டிச் சீடராக ஏற்றுக் கொண்டு பேரருள் புரிந்ததை,

'என்னைத் தடுத்தெம் இறைவன் பணி
கொள்ளத்
தன்னைக் கொடுத்த திசயம் என் சொல்
வேன்'

என்று கூறி நம் குருநாதர் பெருங்களி கொள்கின்றார்.

'விதியை மதியால் வெல்லலாம்; முயன்றால் முடியாத தொன்றில்லை' என்றெல்லாம் வீரம் பேசிய அறிவியலார் எல்லாம் ஆய்ந்த நிலையில் 'அனைத்தினையும் ஆட்டுவிக்கும் அற்புதச் சக்தி ஒன்று உள்ளது' என்கின்றனர். அதற்கு இயற்கை என்றும் பெயரிடுகின்றனர். இன்றைய இந்த முடிவினை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னமேயே ஞானிகள் 'இறைவன் அருள்' என்று கூறி விளக்கியுள்ளனர்.

நமக்கு முதற்படி விஞ்ஞானந்தான்; அதன் இறுதிப்படி யாவது மெய்ஞ்ஞானமே! எனவே இவை இரண்டும் ஒன்றுக்கொன்றுத் தொடர்பு கொண்டு உலகியல் வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் நாம் முன்னேற உதவுகின்றன.

இருடியர்பட்டி ஆண்டவர் திருவடிகளே சரணம்!

இருடியர்பட்டி ஆண்டவர் அருட்புகழ்
வாழ்க! வளர்க!! வெல்க!!!

மதுரை மாநகரில் சுத்தமான தனிநெய்யில் தயாரிக்கப்பட்ட

இனிப்பு & கார பக்ஷணங்களுக்குத் தலைசிறந்த இடம்

ஆதிகாலத்து ஒரிஜினல் நெய் மிட்டாய் கடை

(Regd. 1652)

அறுசுவையின் இன்பம் காண இன்றே விஜயம் செய்யுங்கள்

"ஸ்ரீ ரங்கா மெஸ்"

16, தெற்கு காவல் கூடத் தெரு

தெற்குச் சித்திரை வீதி

மதுரை-625001

கீர்த்தனம்

[திரு. கோ. தியாகராசன் — தண்ணீர்க் குன்னம்]

தெய்வமதில் உயர்ந்த இரெட்டியப்பட்டி சுவாமியின்
திருவருள் பெற வாரீர்— வேலூர் நகரில்
திருவருள் பெற வாரீர். (தெய்வ)

அருட்பெருஞ் ஜோதி தெய்வம் அகிலமெலாம் போற்றும் தெய்வம்
அடியார்க்கருள் செய்யும் தெய்வம் ஆனந்த மான தெய்வம்
இன்பம் அளிக்கும் தெய்வம் இரெட்டியப்பட்டி நாத தெய்வம்
இகபர சுகம்தர ஈசனாய் நின்ற தெய்வம்
உயிரிணைப் பிரித்தவிஷம் உடனுயிர் கொடுத்த தெய்வம்
உத்தமனேன் இவ்வுலகம் ஊமையாய்க் கண்ட தெய்வம்
எள்ளுக்கு ளெண்ணெய்போல எங்கும் நிறைந்த தெய்வம்
ஏகதெய்வம் யோகதெய்வம் ஏகபராபர தெய்வம்
ஐயமிட்டிவ்வுலகில் அணைத்துயிர் காத்த தெய்வம்
ஐம்புல னடக்கியேதான் சங்கரனாய் நின்ற தெய்வம்
ஒருநாள் ஒருபொழுதேனும் உள்ளம் விட்டகலாத் தெய்வம்
ஓமென்ற அட்சரத்தில் உருவாகி நின்ற தெய்வம்
ஔடத மில்லாமலே அணைத்துயிர் காத்த தெய்வம்
அன்பாய்த்திரு நீறளிக்கும் ஆனந்த மான தெய்வம் (தெய்வ)

த. பெ. எண்: 514 போன்: 7371

எமது உளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்

பாலாஜி டைமண்ட் கம்பெனி

11-C, டைமண்ட் பஜார்,

திருச்சிராப்பள்ளி-8.

எங்குளான்? எங்கும் உளான்!

வானின்றி வையகம் இல்லை. உயிரின்றி உடலில்லை. அதுபோல் எல்லாம் வல்ல ஈசன் இன்னருளின்றி அண்டங்களும் அகில புவனங்களும் இல்லை. உலகம் ஆடுவதும், அசைவதும், வளர்வதும், வாழ்வதும் எல்லாம் அவன் செயல். 'புகை கண்டவிடத்து நெருப்பு உண்டு; பள்ளமுள்ளவிடத்து நீர் தேங்கும்' என்றறிவதைப் போல் இன்னருள் சுரக்கும் ஈசனை நாம் கண்டதில்லை. ஆனால் காணாத தனைத்தும் இல்லையென்று கூறுவது தவறு. பாலில் நெய் இருக்கிறதா என்று குழந்தையைக் கேட்டாலும், 'ஆம்' என்றுதான் சொல்லும் ஆயினும் நெய் கண்ணுக்கு தெரிவதில்லை. பாலை நன்றாகக் காய்ச்சி ஆறவைத்து, உறைய விட்டு, தயிராக்கிக் கடைந்தால் நெய் வெளிப்படுகின்றது. அதுபோல் மனமென்னும் பாலில் அவன் திருநாமத்தை உச்சரித்து உச்சரித்துச் சூடேற்றி, துதியாகிய பொரை விட்டு, பக்தியென்னும் தயிராக்கி, பூசையாகிய மத்தால் கடைந்தால், கடையக் கடைய (பூசிக்கப் பூசிக்க) ஈசன் காட்சி தருவன், என்கின்றார் அப்பர் அடிகள்.

"விறகில் தீயினன்; பாலில் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

'வாசித்துக் காணொணாதது' என்கின்றார் அருணகிரிப் பெருமான். அனுபவ அறிவால் மட்டுமே அவனை அறிய இயலும்.

தொலைவில் உள்ள பொருள் கண்ணுக்குத் தெரியாது; மதுரையில் இருப்போர்க்கு சென்னை தெரியாது. அதனால், 'சென்னை இல்லை' என்று சொல்வது அறிவீனமாகும். பகலில் சூரிய ஒளியில் நட்சத்திரங்கள் தெரியாது. அதனால் 'நட்சத்திரமே இல்லை' என்று கூறி விடலாமா? 'பாலில் நெய்போல், விறகில் தீபோல் மறைந்துளன் மகேசன்' என்பதே உண்மையாகும். தன்னை மறந்து அவனை உணர்பவர்க்கு அவன் காட்சியளிக்கின்றான்.

'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்கிறார் சேக்கிழார் பெருமான். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நின்ற பரமன், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசிப்பவன், எள்ளுக்குள் எண்ணெயும் மலருக்குள் மணமும் போல் இயற்கையோடு இணைந்திருப்பவன் ஈசன். மேலான நிலையில் உள்ளதால் 'பரம்பொருள்' என்றும், எல்லாவற்றையும், எல்லா சக்தியையும் கடந்து உள்ளதினாலும், எல்லாவற்றின் உள்ளும் விளங்குவதினாலும், எல்லாவற்றையும் கடவுவது, அதாவது நடத்துவதினாலும் 'கடவுள்' என்று போற்றப் பெறுகிறான். 'ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை' என்கின்றார் மணிவாசகர். அவனை வணங்குவதற்கும் அவன் அருள் தான் அருந்துணையும், பெருந்துணையும் என்பதை, 'அவன் அருளாலே அவன் தான் வணங்கி' என்கின்றார்.

ஈசன் இருக்கின்றானா? இல்லையா? எங்குளான்; எங்குளான்? என்று இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி அலையும் மானிடரே, தேனின் சுவையை உணரத்தான் முடியும், அந்த சுவை கருப்பா, சிகப்பா, நீளமா, அகலமா என எவராலும் அறுதியிட்டு உறுதியுடன் கூற இயலாது. பாலில் கரைந்த சர்க்கரையைச் சுவைக்கத்தான் இயலுமே ஒழிய நிறத்தையோ அன்றி கனத்தையோ செப்பிடல் எவர்க்கும் இயலாததுபோல் ஈசனை எங்குளான் என்று தேடிக்காண இயலாது. தூய அன்பினால் மட்டுமே அடைய இயலும். தான் தோன்றித் தனத்தினாலும், கர்வத்தினாலும் காண இயலாது.

த்ரேதா யுகத்தில் ஹிரண்யன் என்று பெரு இராக்கதன் ஒருவன் இருந்தான்.

ஓவியர் இரகி. வரதன், கீழ்நெல்லி

அவன் தன் தம்பியைக் கொன்றவன் ஹரி என்று அறிந்தும் கேவலமாக மதித்தான்; ஏசினான்; பேசினான். எங்குளான்? எங்குளான்? என இறுமாந்து எண்திசையும் தேடியலைந்தான். அவன் மகன் பிரகலாதன் தந்தையின் வினாவுக்குவிடையளித்தான்: "அப்பா! இறைவனை நிந்தித்து அடையமுடியாது; தூஷித்துக் காண இயலாத ஹரியைப் பூஜித்துக் காணலாம்" என்றான். பெருங்கோபங் கொண்ட ஹிரண்யன், "எங்குளான் அந்த ஹரி?" என்றான். "எங்கும் உளன்" என்றான் மகன்.

அருகிருந்த மண்டபத்தூணைக் காட்டி "இந்தத் தூணில் உள்ளானா?" என்றான் தந்தை. "தந்தையே, தொட்டவிடமெல்லாம் அவன் மறைத்துள்ளான். மலருக்கு மணம், நிறம் அவன்; உலகுக்கு உயிர் அவன், அவனின்றி ஓர் அணுவும் அசையாது. நீ சொன்ன சொல்லிலும் உளான். சிறிய துரும்பிலும் அவன் இருக்கின்றான்; மாமேரு பர்வதத்துள்ளும் அவன் இருக்கின்றான். அணுவை ஆயிரமாயிரம் கூறிட்டுச் சிதைத்தாலும் ஒவ்வொரு சிறு துண்டுள்ளும் அவன் இருக்கின்றான்

'சாணிலும் உளன் ஓர் தன்மை அணுவினைச்
சதகூறிட்ட
கோணிலும் உளன் மாமேருக் குன்றிலும் உளன்
இந்நின்ற
தூணிலும் உளன் நீ சொன்ன சொல்லிலும்
உளன் அத்தன்மை
காணுதி விரைவி லென்றான் நன்றெனக் கனகன்
நக்கான்.'

எனவே எங்குளன்? எங்குளன்? என்று தேடித் திரியாதே 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பொருளே ஈசன்' என்கின்றார் திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமான்.

'அவன் திருநாமத்தைச் சொல்லச் சொல்லத் தேனென இனித்திடும் திரு அருட்கடலே, என்கின்றார் வள்ளளார். அத்தேனை நாமும் பெற வேண்டும். அவன் எங்குளான்; அவன் கண்டங்கரியவன். விடமுண்டதினால் கண்டம் கருமையானது. எனவே 'கண்டங்கரியவன்'. அவன் கண்டு அங்கு அரியவன் எனவே தேனைப் பருகும் நாம் எந்தத் தேனைத் தேட வேண்டும்?

"தினைத்தனையுள்ளதோர் பூவினில் தேன்
உண்ணாதே
நினைந்தொறும் காண் தொறும் பேசுந்
தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள் நெக ஆனந்தத் தேன்
சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய்
கோத்தும்பீ"

என்கின்றார் வான்கலந்த வாட்டமிலா மாணிக்க வாசகர். 'ஈசனின் திருமலர் சொரியுந்தேன் மற்றைய மலரின் தேன் போன்றதல்ல. என்றும் சொரியும் பேரின்பத் தேன்; அதைப் பருகுவாய் மனமே' என்கின்றார்.

அவன் ஆன்மாக்களுக்கு அம்மையாகவும், அப்பனாகவும், அமுதாகவும், ஒப்பிலா மணியாகவும் விளங்குகின்றான். இதனை,
'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'
அன்பினில் விளைந்த ஆரமுதே—என்று
திருவாசகம் பேசுகின்றது.

'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான் உன்
நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாத தோர் இன்பமே! வருந்துன்பமே
துடைத் தெம்பிரான்
கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே

என்ற அருள் வாக்கின்படி நாமும் அவன் திருநாமத்தைப் பேசினால் அவனைக்காணமுடியும். அம்மையே அப்பா' என்று வாதவூர் அடிகளும், 'அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்' என்று வடலூர் அடிகளும் ஈசனைப் போற்றி ஏற்றித் துதிக்கின்றனர். நாமும் 'எங்குளான்?' எனவினவாது 'எங்கும் உளானு'ன ஈசனை வணங்கி இன்னருள் பெறுவோமாக.

"எக்காரணத்தைக் கொண்டும் அனாவசியமாக ஒரு சல்லிக் காசும் செலவிடலாகாது. மிக அவசியமான செயல்களுக்கும் சுருக்கமாகவும், சிக்கனமாகவுமே செலவு செய்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சி ஆடம்பரமாக ஏதும் செய்தலாகாது" என்று சுவாமிகள் அடியார்களிடம் கூறுவார்கள்.

மகா கணபதியின் மகிமை

அன்பன் மு. பெருமாள், வேலூர். (N.A.)

'ஓம் பிரவணப் பொருளே நம:' என வேதங்கள் தொடங்குகின்றன. வேத முதல்வன் விநாயகப் பெருமானுவார். 'வேதம் வருமோ?' என வேதாவை வினவினுர் வேத வித்தகரான வேலவப் பெருமான், 'ஓஹோ! எனக்கு நன்ருக வருமே! வேதம் ஓதும் முதல்வனே நான்தானே!' என்ருர் பிரமதேவனுர். 'தேவரீர் திருவருளால் ஒரு சிறிது அறிவேன்' என்று பவ்யமாகப் பகர்ந்திருக்க வேண்டும் பிரமனுர். எனின் என்ன செய்வது?



நானென்னும் ஆணவம் அவரையும் விட்ட பாடில்லை. எனவே 'நான்' என்னும் அகந்தை ஒருவருக்கிருப்பின் அவர் நிலை என்ன ஆகும்? என்பதனை உலக மக்களுக்கு உணர்த்த வேண்டுமோ என்னவோ! அதன் பொருட்டுத் தான் இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததோ என்னும் எண்ணம் எழுகின்றது. படைப்புக் கர்த்தாவின் மூலமாகச் செம்மான்மகள் கேள்வன் பெம்மான் முருகவேள், 'நான் என்னும் அகந்தை கூடாது' என்னும் தத்துவத்தைப் பெருங்கருணையால் உணர்த்தியுள்ளார் போலும் புவன மக்களுக்கு.

'அங்ஙனமாயின் வேதத்தை ஓதுக' என்ருர் எல்லாம் வல்ல அறுமுகப்பரமனுர். 'ஓம்' என்று தொடங்கினுர் பிரமதேவர். 'நிறுத்தும்; 'ஓம்' என்பதன் உட்பொருள் என்ன? முதலில் விளக்குக' என, 'விழி விழி' யென விழித்தார் வேதா! 'சென்று சிறையில் கிடப்பாயாக' என அவர் சிரசினில் குட்டியனுப்பினுர், செவ்வேள் பிரானுர் பிரமனை—இங்ஙனம் கந்தபுராண வரலாறு இயம்புகின்றது. இந்த ஓம் என்னும் மூலவடிவினனே நம் மகா கணபதிப் பெருமானுவார். ஓங்காரத்தையே உருவமாகக் கொண்டு விளங்குபவன் விநாயகப் பெருமான்.

பிரவணசொரூபன்—ஓங்காரஉருவினன்
விநாயகன்—தனக்கு மேல் நாயகன் இல்லாதவன்.

கணேசன்—உயிர்க்கணங்கட்கு ஈசன்
கணபதி—எல்லாகணங்களுக்கும் தலைவன்
முன்னவன்—முழுமுதற் கடவுள்.

என்னும் அவர் திருநாமங்களே காரண காரிய விளக்கமாக எழிலுடன் விளக்குகின்றன. 'ஓம்' என்னும் ஒலியும், வரிவடிவும், உள் தத்துவமும் விநாயகப் பெருமானை நினைவு செய்கின்றன. பண்டிதன் முதல் பாமரன் வரை, அரசன் முதல் ஆண்டி வரை, பெரியோர் முதல் சிறியோர் வரை, எளிதில் அணுகி வழிபடும் கருணைப் பிரானுக விளங்குகின்ருர் விநாயகப் பெருமான்.

அடியவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிக்கலான விஷயங்கள் ஏற்படுங்கால் சுவாமிகளிடம் முறையிடுகையில், அவர் அருகுள்ள தேர்ந்த அடியார்களை அழைத்து, மிக்க அருளோடு, 'இதுவிஷயம் உடையவனிடம் தாக்கல் கொடுத்து உடையவன் கணக்கு என்ன? என்று அறிந்து சொல்லட்டும்' என்று கட்டளையிடுவது வழக்கம்.

'பிடித்து வைத்தால் பிள்ளையார்,' 'உருட்டி வைத்தால் உம்பர் தம்பிரான்,' 'செதுக்கிவைத்தால் செல்வ கணபதி.' அரச மரத்தடியாயினும் சரி, ஆலயமாயினும் சரி, நாற்சந்தியாயினும் சரி, நடைபாதையாயினும் சரி, எல்லாவற்றையும் சமமாகப் பாவித்து எங்கும் எழுந்தருளி, எளிமையாகக் காட்சி தந்து, இன்னருள் புரியும் இறைவனுக விளங்குகின்ருர் எல்லாம் வல்ல 'வல்லபை கணேசர்.' அங்கங்கு முளைத்துக் கிடக்கும் மிக எளிதான அருகம்புல்லையே, உயர்வான அர்ச்சனை வழிபாட்டுப் பத்திரமாக ஏற்று அருள்பாலிக்கும் எல்லாம் வல்ல மகா கணபதிப் பெருமான் அரும்பெருங் கருணை தான் என்னே! ஆஹா! எத்துணை எளிமை! நம்பி அவரை வழிபட்டால் போதும். தும்பிக்கைப் பெருமான், நிச்சயமாக வந்து துணைபுரியும் தெய்வமாக விளங்குகின்ருர்.

'ஆமாம்! இவ்விநாயகப் பெருமான் திருமேனி மட்டும் ஒரு மேனி அமைப்பாக இல்லாமல், இருமேனியாக, அதாவது மனித உடலும், மிருக முகமுமாக அமைந்துள்ளதே! ஏன்?' என்னும் ஐயப்பாடு எழலாம் சிலருக்கு. வரலாற்றின் காரணமாக விளைந்த விளைவாகும் இவ்விரு திருமேனியின் அமைப்பும்.

வானவர்கள் தானவர்கள் துன்பம் துடைத்தருளத் தாங்கிய ஞான மேனியாகுமிது! எல்லாம் வல்ல இறைவன் ஆன்மகோடிகளை உய்விக்க இவ்விரு திருமேனியையும் ஒரு திருமேனியாகக் கொண்டு இசைந்து எழுந்தருளியதுதான், வான் கருணையான விநாயகப் பெருமான் திருவுருவம். எவர் எது வேண்டித் தவம் புரிந்து விழையினும், இல்லை என்னுது ஈந்தருள்புரியும் இறைவன் தன் கருணைதான் என்னே! என்னே!

கருணையே அறியாத கஜமுகாசூரன் என்பவன், பெற்ற பெருந்தவத்தால் பொல்லாத கொடுமைகள் புரிந்தான். அடக்கவோ, அழிக்கவோ யாருக்கும் ஆற்றலில்லாத அருந்தவ வலிமையால் ஆணவமிக்க அரக்கனுக விளங்கினுன். தேவர்களாலோ, மூவர்களாலோ, மனிதர்களாலோ, மிருகங்களாலோ, ஆயுதங்களாலோ இறவா வரம் பெற்றவன். எனவே எண்ணிலாத கொடுமைகள் புரிந்து எல்லோரையும் துன்புறுத்தலானுன். கஜமுகாசூரனின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் முறையிட்ட தேவர்களைக் காத்தருளத் திருவுளம் பாலித்து, அவன் பெற்றுள்ள வரத் தன்மையை, மாற்று முறையால் வென்று, அவ்வரக்கனை நன்கு திருத்தி ஆண்டருளக் 'கணேசப்பெருமான்' வடிவு கொண்டார்.

உலகப்படைப்பிலே இல்லாத ஒரு புது உருவாக—அதாவது மனித உடலும், மிருக உருவின் சிரமுங் கொண்டு—எழுந்தருளினர். மிருக வடிவங்களில் மிகவும் சிறந்த யானை முகத்தையே தமது திருமுகமாக ஏற்றருளினர். இங்ஙனம் இரு திரு உருவையும் ஏகமாகக் கொண்டதால் தான் கஜமுகாசூரனின் வர பலத்தை எளிதில் வெல்ல முடிந்தது. அவ்வரக்கனும் ஐங்கரப்பெருமான் திருவடி தீட்சையால் அருள் ஞானேதயம் பெற்று, ஆணவ மலம் அழிந்து, திருந்தி அடைக்கலம் புகுந்தான்; அப்பெருமானை என்றும் தாங்கும் பெருச்சாளி வாகனமாக அமர்ந்தான்.

கருணைக் கடலான கணபதி பெருமான் கருணை தான் என்னே! கொடுமைகளின் சிகரமாக விளங்கிய அக்கொடிய சூரனையும், அடியோடு அழித்து விடாமல், தம் திருவடி தீட்சையால் மறக்கருணை புரிந்து, பின்னர் அவன் திருந்திய வேண்டுதலுக்கு இரங்கியருளி, அறக்கருணை புரிந்து, தனக்கு வாகனமாக ஏற்ருர். மகா கணபதியின் மகிமைக்கும் மாபெரும் கருணைக்கும் இதனையும் விட மேலான சான்று வேண்டுமோ? மேலும் நம் தமிழக மக்களுக்கு மகா கணபதி பெருமான் புரிந்த ருஸியுள்ள மாபெரும் சாதனைகளையும் சிந்திப்போமாக.

நாமறிந்த நலஞ்சான்ற மொழிகளிலே, நம்மருமைத் தமிழ் மொழியும் ஒன்று. இம் முத்தமிழ் மொழியின் வரிவடிவை முதன் முதலில் வரைந்து எல்லா மக்களும் சேமமுற வகுத்தும், தொகுத்தும் இன்னருள் பாவித்தவரும் நம் விநாயகப் பெருமானுவார்.

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய—முதல்வோனே!

என்னும் அருணை மகான் அருணகிரிநாதர் கருணை மொழியே ஏற்ற சான்ருகும்.

இதுமட்டுமா?

ஐந்தாம் வேதமென விளங்கும் ஐம்பெரும் மக்களின் அரிய பெரிய வரலாறுன மகா பாரதத்தை உலக மக்கள் உணர்ந்து, தெரிந்து, திருந்தி உய்ய, வரைந்து வழிகாட்டியவரும் ஐங்கரத்தண்ணலார் பெருமானுவார்.

மற்றுமொரு மேலான அருள்வழியாவது :-

தேவதேவ தேவாதித்தேவப் பெருமானும் திருக்கயிலாயப்பதியான சிவபெருமானைத் தோத்திரங்களால் ஓதி, வழிபட்டு உய்ய, வழியறியாது தமிழ்ப் பெருமக்கள் வருந்தி கொண்டிருந்தனர். நம்மருஞ் சைவ சமயாசாரியர்கள் பாடியருளி ஓதி, உய்ய, வழங்கி வைத்தத் தேவாரத் திருமுறைப் பாடல்கள், தெரிவிப்பாரின்றித் தில்லையம்பலத் திருக்கோயிலில் மறைந்து கிடந்தன. நல்ல விநாயகப் பக்தரான நம்பியாண்டார் நம்பியும், அருள் நெறியரசர் அநபாய மன்னரும் வேண்டி விண்ணப்பத்துக் கொண்டதற்கிணங்கி, தில்லைத் திருக்கோயில் மேற்குப்புற வாயில்புற மண்டபத்தின் மேல் திருக்காப்பிட்டு வைக்கப்பட்டிருந்த மூவர் தேவாரத் திருமுறைப் பாடல்களை வெளிப்படுத்தி, வழங்கி வழி காட்டியப் பெருமானும் விநாயகர்தானே !

நாதநாமம் 'நமச்சிவாய'த்தைக் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி ஓதும்பேறு, இன்று தமிழறிந்த மக்களுக்கு வாய்த்துள்ளதே தேவாரத் திருமுறைப் பாடல்களால் தானே ! உம்பர்தருத் தேனுமணியான விநாயகப் பெருமானின் இவ்வுயர் கருணையை உன்னுந்தொறும் உள்ளமெலாம் உருகுகின்றது. தேவாரத் திருமுறைப் பாடல்களால் நம் உயிரினும் அரிய பெரிய சைவ சமயமும், ஐந்தெழுத்தும், திருநீறும், உருத்திராக்கச் சாதனமும் தமிழ் நிலத்தில் வளர்ந்து, மக்கள் வாழ்ந்துய்ய வழியும் விளங்கப் பெற்றது ; தமிழ் மொழியின் நயமும் உலகில் வாழ்கின்றது ; வேதக் கருத்துக்களின் விளக்கமும் வெளியாகின்றது. இவ்வுயர் சைவத் திருமுறைகளை மக்கள் ஓதும்பேறு பெற்றதால் இவ்வுலகமும் வாழும் பேறு பெற்றது ; வானுலகமும் வாழ வகை பெற்றது. இக்கருத்தை உணர்த்தும் பாடல்,

'வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய்கிற்பாம்'.

காவிரியாற்றின் நீர், கன்னித் தமிழகத்தே கலந்தோடி வந்து, சோழவள நாட்டை சோறுடைத் தாக்கி, மக்கள் உண்ண உணவும், அருந்த நீரும் வழங்கத் திருவிளையாடல் புரிந்ததும் கணபதியெம் பெருமான் கருணைத் திருவிளையாடல் தான்.

வடநாட்டில் விநாயகப் பெருமான் புரிந்துள்ள அற்புதத் திருவிளையாடல்களை விரிவாக 'விநாயகப் புராணம்' விளக்குகின்றது.

விநாயகப் பெருமானைத் தமிழகத்தே வணங்கி வழி பட்ட எண்ணற்ற அருளாளர்களில் நம் தமிழ்ப் பேரறிஞர் மூதாட்டியான ஔவைப் பெருமாட்டியார் தலையானவர். அப்பெருமாட்டியார் 'விநாயகர் அகவல்' என்னும் அருமையான அருள் நூல் அளித்துள்ளார். இப்பெரும் நூலில் எம்பெருமான், விநாயகப் பெருமானின் செப்பரும் திருமேனி அமைப்பையும், திவ்யத் திரு அங்கங்களையும், ஓதுவார் உள்ளத்தில் பசுமரத்தாணியெனப் பதியும் வண்ணம், அழகொழுக, அன்புமலர, அருள் பெருகத் தீட்டிப் புகட்டுகின்றுர் ; மேலும் அப்பெருமான் அருள் புரியுந் திறத்தினை முறையாக வரைந்து மெய்ஞ்ஞான விளக்கம் வழங்கியுள்ளார்.

நம்பிக்கை வைத்து நாளும் நெஞ்சம் நைந்துருகி வழிபட்டதின் காரணமாக விநாயகப் பெருமான், தம் தும்பிக்கைத் திருக்கரத்தாலேயே ஔவையை ஏந்தி திருக்கயிலாயம் சேர்ப்பித்தருளினுர். அடுத்துச் சின்னஞ்சிறு குழந்தை, நம்பியாண்டார் நம்பியின் கள்ளமில்லா உள்ளத்தின் உருக்கமான வேண்டுதலுக்கிரங்கி, நிவேதனம் புரிந்த அன்னத்தையும் நிதரிசனமாக எழுந்தருளி ஏற்றுர் ; ஆசிரியராகக் கல்வியறிவு புகட்டி மெய்ஞ்ஞானத்தையும் பெறவைத்து அகிலம் போற்றும் அருளாளராகச் செய்தார்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள், தாம் அருள் பெற்ற அனுபவத்தை பிற்காலத்தில் அடியவர்களிடம் அருளும்போது "இது கொஞ்சமான அழுகையா அழுதது ?" என்று கூறுவார்கள்.

இற்றைக்கு 117 ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழகத்தே தோன்றிய மகான் இரெட்டிப்பட்டி சுவாமிகளையும், பிள்ளைப் பிராயத்திலேயே, அவர்தம் பக்திப் பக்குவ நிலையையறிந்து, ஆண்டருள் புரிந்துள்ளார், எல்லாம் வல்ல விநாயகப் பெருமான். சுவாமிகள் சிறந்த ஞானி என்பதை அவர்கள் வரலாறு விளக்குகிறது. இறைவழிபாட்டு முறைகளை எளிய சட்ட திட்டங்களால் வகுத்து, எளிதில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அருளைப் பெற்று உய்யும் மார்க்கத்தை அருளி, மக்களுக்கு வழி காட்டிய இன்ப அன்பு மகானுவார். சுவாமி களைக் குருமுகமாக ஈர்த்தருளி, சிறந்த மெய்ஞ் ஞானியாக்கியவரும் சித்திபுத்தி விநாயகப் பெருமானே. அப்பெருமானுக்கு, 'ஸ்ரீ பரிபூரண விநாயகர்' என்று சுவாமிகளே திருநாமமிட்டுள் ளார்கள்.

இன்னும் இவர்போன்ற எண்ணற்ற மகான் கள், அருளாளர்களின் வரலாறுகள் எத் தனையோ உள்ளனர் ; எல்லாம் வல்ல சித்தி புத்திவிநாயகப் பெருமான் இன்னருள் பாலித் துள்ளத் திருவிளையாடல்கள் ! மகா கணபதிப் பெருமான் மகிமையை மறைகளும் அறியாவே ! அந்த ஆனைமுகத் தண்ணலை அகமுருகி, அனு தினமும் வழிபட்டு உய்வோமாக !

இறைவனுடைய திருவடிக்கு உரிமையுடையவர்கள் ; அத்திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் மதியாதவர்கள் ; அத்திருவடிகளுக்குத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப் பணம் செய்தவர்கள். அத்திருவடிகளின் செயலன்றி வேறு ஒன்றையும் செய்யாதர்கள் ; அத்திரு வடிகளையே தம் சிர மீது சூடி மகிழ்ந்திருப்பவர்கள் ; எண்ணம், மூச்சு, சொல், செயல் அனைத்தை யும் அவனுக்காகவே அர்ப்பணம் செய்தவர்கள் ; அவன் மயமாகவே வாழ்கின்றவர்கள் யாரோ; அவர்களே 'அடியார்கள்' என்ற தகுதிக்கு உரியவர்கள் ! அவர்களுக்கு இவ்வுலகம் ஏவல் செய்யும், இயற்கை அடிபணியும், இறைவன் எளியவனுவான். அவ்வடியார்கள் தம் உள்ளத்திலே இறை வனைக் கட்டி வைக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள்.

THE METAL WARE HOUSE

Prop: G. R. Manicka Chetty

★

Paints, Hardware, Metric Weights,
Measures and General Merchants
Import & Export

★

86, J. Nehru Street
PONDICHERRY-1

Telegrams: "EMMESLORRY"
Telephones: Offi: 23307, 26931 Resi: 441671, 442562

Popular Transport (Regd)
Regular Parcel Service
Forwarding and Clearing Agents

Very quick and dependable Service
Moderate and competitive rates
A trial will convince you

★

Head Office:
19, Stringer's Street, MADRAS-1
Branches: Throughout South India and Pondicherry

அருட்சீர் அகவல்

"திருவடிதாசன்"

ஆதியே நின்றன் அடித்தா மரைச்சீர்
ஓதியே உய்வோர் உணர்வுமிக் குடையோர்
ஜோதியே சுடரே சூழொளி விளக்கே
நீதியே நெறியே நேர்மைமிக் கவனே
சூதிலா உளத்தில் துலங்கு தூயவனே
பேதியா உயிரைப் பேணியாள் பவனே
ஓதிமா மறைகள் உள்ளுணர்த் தொளியே
கோதிமும் மலமும் குமைத்திடும் குருவே
பூதிசா தனத்தைப் புகட்டு பூரணனே
ஜாதிபே தங்கள் சமய பேதங்கள்

தவிர்த் தருட் சட்டம் தந்ததற் பரமே
தெவிட்டிடா அமுதம் தேக்கியாள் சிவமே
வினையெலாம் நீக்கி மீட்கும் ஆசானே
எனையும் ஆட்கொண்ட இணையிலாக் கோனே
உறவினுட் சிறந்த உறவு கூட் டுநனே
அறமுதல் நான்காய் அமைந்துகாப் பவனே
அன்பெனும் கடலாய் அருளெனும் அமுதாய்
இன்பமெல் லாமும் ஈந்துபேண் இறையே
மண்ணாய் நீராய் வளியாய் அனலாய்
விண்ணாய்க் கதிராய் மதியாய் மீனாய்

ஒளியாய் ஒலியாய் உடலாய் உயிராய்
அளியாய் அருளாய் அகமாய்ப் புறமாய்
கலையாய்த் தொழிலாய்க் கவினார் பொருளாய்
நிலையா உலகில் நிலையா னதுவாய்
அனைத்தும் அழியினும் அழியா ததுவாய்
நினைத்திடு முன்னெதிர் நிற்கின் றதுவாய்
எடுக்க எடுக்க வளரும் பொருளாய்
கொடுக்கக் கொடுக்கக் குறையா நிறைவாய்
எல்லா நாட்டார் எல்லா ஊரார்
எல்லா இனத்தார் எல்லா மதத்தார்

எல்லா வகையார் எல்லா நிலையார்
எல்லா வயதினர் எல்லா நடையினர்
யார்க்கும் பொதுவாய் இருந்து பேணரசே
காக்கும் செயல்செயக் கங்கணம் பூண்டே
ஊக்கும் பரனே ஒப்பிலா தவனே
நோக்கும் நன்னோக்கால் நோன்மைகூட் டுநனே
பத்திப் பயிர்செய் பான்மை மிக்கவனே
சித்திய னைத்தும் செய்யவல் லவனே
எத்திக் கும்தொழும் எங்களாண் டவனே
முத்தப் பேறருள் மூலகா ரணனே

சத்திய நெறியைத் தந்துகாப் பவனே
நித்திய நிலையில் நிலைக்கவைப் பவனே
வத்துதத் துவத்தின் மாண்புணர்த் துநனே
தத்துவ சுத்தி தந்துகாப் பவனே
ஆகார நியமம் அளித்தாள் பவனே
சாகா பிறவாச் சதுரளிப் பவனே
ஆகா மியவினை அழித்தாள் பவனே
மாகாத லூட்டி வாழ்வளிப் பவனே
பாகா யுருகிற் பரிந்தருள் பவனே
யோகாநு பூதி உவந்தளிப் பவனே

கண்ணீர் பெருக்கிக் கசிந்துனைத் தொழுவோர்க்
குண்ணீர்மை கூட்டி ஓம்பும் உத்தமனே
ஆசைகள் நீக்கிப் அன்பைப் பெருக்கி
ஓசையாய் ஒளியாய் உள்ளே நுழைந்து
கலைத்துறை காட்டித் தொழிற்றுறை காட்டி
புலைத் தொழில் நீக்கிப் புதுத் தொழில் காட்டி
அலைப்படு மனத்துக் கருட்புணை காட்டி
நிலைப்படச் செய்து நிட்டையைக் கூட்டி
கண்ணைக் கருத்தைக் கருணையா லீர்த்து
எண்ணை எழுத்தை இனிதுள்ளு ணர்த்தி

மண்ணைத் திருத்தி மனத்தைத் திருத்தி
விண்ணைத் தொடு நிலை விளங்கிடச் செய்து
பண்ணைக் கொடுத்துப் பாட்டைக் கொடுத்து
கண்ணைத் திறந்துட் கவலைகள் நீக்கி
பாடப் புரிந்துபா மாலைகள் சூடி
ஆடப் புரிந்தரு ளாவணம் காட்டி
நாடப் புரிந்து நன்னடம் காட்டி
கூடப் புரிந்து குறை யாமகிழ் வூட்டி
அருகில் வருகென் றன்போ டணைத்து
பெருகும் பரசுகப் பேற்றை வழங்கி
இரண் டறச் கலந்தே இன்பமாம் வெள்ளம்
திரண்டிடச் செய்யும் தெய்வம் நீ வாழி.

குறள் வெண்பாக்கள்

["சற்குருதாசன்"]

அன்பு

அன்பால் அடையா அரும்பே றுளதாமோ ?
அன்பால் அனைத்தும் அடை. 1

அவா இன்மை

ஆசை மிகுந்தாலே அல்லல் மிகும்கண்டாய்
ஆசை அனைத்தும் அடை. 2

அமைதி

உள்ளம் அசைந்தாலே உண்டாகும் துன்பமெலாம்
உள்ளத் தசைவற் றுளிர். 3

உண்மை

உண்மையுள் எல்லாம் உளதாம் ; அதனால் நீ
உண்மை உரைத்தே உயர். 4

ஒழுக்கம்

ஒழுக்கம் நிறைந்தால் உயர்வு பெறலாம்
ஒழுக்கத் தமைந்திங் கொளிர். 5

நல்லவை

நல்லவை யெல்லாம் நலமே விளைத்தலால்
நல்லவை செய்துய் நயந்து 6

கரவின்மை

கள்ளமில் லாநல் லுளமே கடைத்தேற்றும்
கள்ளமி லாதுட் கனி. 7

அருள்

அருளே திருவாம் ; அதனால் மனமே
அருளாம் திருவுற் றமை 8

தொண்டு

தொண்டே உயர்ந்த சுகத்தைத் தருதலால்
தொண்டே செயற்குத் துணி 9

இறையுணர்வு

எங்கும் விளங்கும் இறையை உணர்ந்தாலே
எங்கும் இலங்கும் சுகம். 10

ஆசிரியரும் அருட்சட்டமும்

(திரு சே. சு. சென்றுயன், நெய்வேலி)

உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் இன்றோ, என்றோ ஒருகாலத்தில் பரம்பொருளை அடைந்தே தீர வேண்டுமென்பது நியதி 'அவரவர்கள் செய்த வினைக்கேற்பப் பிறவிகள் எடுக்கின்றனர்' என்பது யாவரும் அறிந்ததே. 'புல்லாகி பூடாய்ப் புழுவாய் மரமாகிப் என்ற மாணிக்கவாசகர் திருவாக்கும் உன்னற்குரியது. பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் பரம் பொருளுடன் இரண்டறக் கலத்தல் மிகச் சுலபமானது. இப்பிறவி கிடைப்பதே மிகமிக அரிது! "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்ற ஔவை வாக்கை யாவரும் அறிவர். கிடைத்த இந்த மானிடப் பிறப்பை நன்கு பயன் படுத்தினுல் எளிதாக ஆண்டவனை அடைய முடியும்; அதற்கேற்ப இயற்கையும் அமைந் துள்ளது !

உலகின் தன்மைக்கேற்ப மானிடர்கள் உருவி விலும் நிறத்திலும் சற்றுமாறுபட்டு இருந்தாலும், மாயையால் முற்றிலும் பாதிக்கப்பட்டு, வந்த காரியத்தை மறந்து விட்டு, "கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழ்வு நடத்த முற்படுகின்றனர். பிறகு இதன் முடிவாக முதிர்ந்தகாலத்தில் (வயதில்) பலவித இன்னல் களுக்கு உட்பட்டு வழியறியாது திகைக்கின்ற னர். ஆண்டவர் தன் பெருங்கருணையால் மக்களை ஆட்கொள்ளும் பொருட்டு அவதாரம் பல எடுத்து அந்தந்த காலத்திற்கு ஏற்ப வழி காட்டி உய்வித்து அருளியுள்ளார். அப்படி அவதரித்தவர்களே திருமூலர், திருவள்ளுவர், ஏசுநாதர், முகமதுநபி, நால்வர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமானவர், அருணகிரியார், இராமலிங்க வள்ளலார் முதலியவர் ஆவர்.

பகுத்தறிவுக்காலம் என்று சொல்லப்படுகின்ற இக்கலியுகத்தில் மிகச் சமீபத்தில் தோன்றி, 'அருள் வழியைத் திட்டமாக எடுத்துக் காட்டியவர்களில் இருவரைக் குறிக்கலாம்: முருகன் அவதாரமாகத் தோன்றி, உலகின் இயல்பையும், அண்டங்களின் அமைப்பையும் மிகமிக விரிவாகக் கூறி, அன்பின் அடிப்படை யில் எழுந்த ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச மாகிய வீட்டை அடைய சிறந்த வழி என்று காட்டியுள்ளார் ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள். மேலும் குறிப்பாக அய்யா அவர்களது திருவருட்பாக்கள், ஆறும் திருமுறையில் பலப்பட எடுத்துக் காட்டியும் நாம் பின்பற்ற இயலாமல், பலவாறு உறுதியற்றவர்களாய் உழல்கின்றோம்.

ஆகையால், இந்நிலையையும் நீக்கித் தெளிவாக்க, ஸ்ரீ விநாயகப் பெருமான் அருள் நிலை கொண்டு, 'இரெட்டியப்பட்டி சுவாமிகள், என்ற திருநாமம் பூண்டு, திரு அவதாரம் செய்து, தான் எந்தை சிவபெருமானிடம் எளிதில் மாங்கனி பெற்றதுபோல், சுலபமாக ஆண்டவர் பேரருளைப் பெற்றுப் பெருவாழ்வு ஆற்றச் சில நியதிகளை ஏற்படுத்தியுள்ளார். அதற்கு அருட்சட்டம்! எனப் பெயர் வைத்துள் ளார். இச்சட்டம் உறுதியாகப் பின்பற்றப் படுமேயானுல் இந்தப் பிறவியிலேயே மோட்சம் என்னும் வீட்டை அடைவது எளியதும் உண்மையும் ஆகும் !

குற்றத்தை நீக்கி, நல்லவற்றை அறிவிப்ப தால் ஆசிரியர் (ஆசு+இரியர்) என அழைக்கப் படுகிருர். அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தருபவரையும், எதையும் நாம் அறிந்துகொள்ள நமக்கு அதைப்பற்றி அறிவிக்கும் ஆசானுக இருப்பவரையும் நாம் 'குரு' என்று கூறுகிறோம். குருவின் விளக்கத்திற்கேற்பவும், நாம் பின் பற்றக்கூடிய நம் மனநிலை, மன உறுதி, இவைகட்கும், அறியும் தன்மைக்கும் ஏற்பவும் நாம் உயர்வு பெறுகிறோம். சட்டத்தைத் தந்து அவைகளைப் பின்பற்றக் கூடிய வழிகளையும் காட்டிய பெருமானையே அடியார்கள் யாவரும் "குருநாதர்" என்று போற்றி வழிபடுகின்றனர். இவர் காட்டிய வழியானது யாவருக்கும் எளிதாகவும், எம்மதத்தினரும் பின்பற்றக் கூடியதாகவும் இளைஞரும், முதியவரும், செல்வரும் வறியவரும், ஆணும் பெண்ணும், அனைவரும் ஏற்கத்தக்கதாகவும் அமைந் துள்ளது.

இச்சட்டத்தின் தன்மை மிக எளிமை வாய்ந்ததாயும் அன்ருட வாழ்க்கையில் பின் பற்றக்கூடிய தன்மை வாய்ந்ததாயும் அமைந் துள்ளதால் பள்ளி ஆசிரியர்கள் வருங்கால நாட்டின் செல்வர்களுக்குச் சுலபமாக இதனைப் போதித்துப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கும் கடமை உடையவர்கள் ஆவார்கள்.

அவையாவன :— விடியற்காலையில் எழுதல்; தண்ணீரில் நீராடுதல். இவை இரண்டையும் பின்பற்றத் தூண்டவேண்டும். விடியற் காலையில் எழுந்து பழகுதல் முதலில் ஒரு நல்ல பழக்கமாகும்; மேலும் பாடங்களை அந்நேரத் தில் படித்தால் மனதில் நன்கு பதியும். அதுவும் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு, மிகச் சுறு சுறுப்பாய் தேகம் இருக்கும் நிலையில் படிப்பது சாலச்சிறந்ததாக அமையும். இச்சீரிய பழக்கம் பிற்காலத்தில் பல நன்மைகளைப் பெற அடிப் படையாய் அமையும். மேலும் அசிரியர்கள் வகுப்பறைகளில் உன்மையே பேசவும், மனம் அறிந்து செய்த குற்றத்தை உணர்ந்து திருந்த வும், ஒரே தெய்வம் என்ற உறுதியை உண்டாக்கவும், காலையில் நடக்கும் தெய்வ வழிபாட்டில் பல முறை எடுத்துக் கூறி நல் வழிப்படுத்த வேண்டும். குற்றத்தை உணர்ந்து திருந்துவதும், உண்மைபேசுவதும் ஒருவனை மேன்மைப்படுத்தும் என்பதைனைப் பிள்ளைகள் தவறுகள் செய்யும் போது எடுத்துக்காட்டித் திருத்தலாம். இம்முறைகளால் சிறந்த பண்பு களைப் பெறச் சிறு வயதிலேயே வித்திட்டவர் கள் ஆவர் ஆசிரியர்கள்.

அகாரங்களைப் பற்றி போதிக்கும் போது அதன் தன்மைகளையும், குணங்களையும் எடுத்துக் கூறிச் சத்துவகுணம், தாமச குணம் தரும் பொருட்களையே உண்ண ஊக்க வேண்டும். ‘புலால் முதலியவை இராஜச குணங்களைத் தருவதோடு, வெறும் உடல் தசை வலிமையைத் தரவல்லது; அறிவை வளர்க்காது’ என்று விளக்கம் தருவதோடு மாமிச உணவைச் சாப்பிடாமல் இருக்கும்படிக் கூறி உதவ வேண்டும்.

அடுத்ததாக ஜீவநாடியாகத் திகழும் தியான முறையை மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கலாம். இங்குக் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட கடவுளைக் கூருமல் அவரவர்கள் வணங்கும் தெய்வத்தையே மனதில் நினைத்து தியானிக்கக் கூறலாம். உருவ வழிபாட்டை விரும்பாதவன் கூடத் தன்னைப் பெற்றெடுத்தத் தாயை வணங்க மறுக்க மாட்டான். அதனுல் தன் தாயையே மனதில் நினைத்து தியானிக்க லாம். நிட்டை கைகூடத் தியானம் மிக அவசியம் என்றும், தியானத்திற்கு முதலில் உருவத்தை மனதில் நிறுத்திப் பிறகு மேல் படியை அடைய வேண்டுமென்பதையும் எடுத்துக்கூறிப்பயிற்சி அளிக்கலாம். தியானம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தையோ, ஆசனத்தையோ வற்புறுத்தாமல் தனக்கு ஓய்வுகிடைத்த போது, சுகாசனத்திலிருந்து, தியானிக்கப் பயிலத்தூண்டலாம். இப் பயிற்சியை விடாமல் தினமும் தொடர்ந்து செய்துவரக் கண்காணிப்பது மிகவும் அவசியம், அவ்வப்பொழுது நல்ல நூல்களைப் படிக்கவும் சான்ருேர்களை அணுகிப் பழகவும் தூண்ட வேண்டும். ‘நல்லார் இணக்கமே மேன்மையைத் தரவல்லது’ என்பதனை உணரும்படிச் செய்ய வேண்டும்.

விடியலில் எழுந்து குளிர்ந்த நீரில் மூழ்குதலும், தியானமும் பொதுவாக அனைவருக் கும் தேகக்கட்டு ஏற்படுவதற்கும், வியாதிகள் விலகுவதற்கும் உதவும். அப்படித் தப்பித் தவறி வியாதிகள் வந்தாலும் “தியானத்தில் உடையவரை” வேண்டி போக்கிக்கொள்ள முற்படலாம். மருந்துகளினுல் வேறுபல கெடுதிகள் உண்டாவதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிருேம். இதனுல் எல்லாம் வல்ல ஆண்டவரே வைத்திய நாதனுக இருந்து நமது உடற்பிணியையும் போக்க வேண்டுமென்பதை யும் ஆசிரியர் அறிவுறுத்த வேண்டும். “விட்ட வாறு உடையவன் செயல்.” “அவனன்றி ஓரணுவும் அசையாது” என ஒப்புக்கொடுக்கப் பழக்க வேண்டும்.

நம் குருநாதர் அடியார்களைத் தேர்ந்தெடுத்து அளவளாவுகையில், “உடையவனது அருளாட்சி உலகின் மீதுள்ள மிக மிகப் பெரிய அரசாட்சிகளிலும் மேலானது. அதை நடத்தும் சிப்பந்திகளும் உத்தியோகஸ்தர்களும் அளவிறந்த பேராவர்” என்று கூறுவார்கள்

இத்தகைய சீரிய பண்புகளைத் தோற்றுவிக்கவும், பயிற்றுவிக்கவும், மாணவர்களை அடிக்கடி அருட் சட்ட அடியார்களின் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு நெருங்கிப் பழகவும் விட வேண்டும். மேலும் இது சம்பந்தப்பட்ட நூல்களைப் படிக்க வாய்ப்பை உண்டாக்க வேண்டும். ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம், 32 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1 என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொண்டு பல நூல்களைப் பெற்று, கற்றுத், தெளிவு பெற ஊக்குவிக்க வேண்டும்.

வேண்டுகோள் :—

பள்ளி ஆசிரியர்களாகிய நாம், நம்மிடம் அனுப்பப் பெற்ற இளஞ்சிறுவர்களுக்குச் சமுதாயக்கல்வி போதிப்பதுடன் உடலையும் பேணத்தக்க பயிற்சிகளையும் அளிக்கிறோம். அத்தகைய கல்வியையும் பயிற்சிகளையும் அளிப்பதுடன், இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளவாறு அருட்கல்வியாக உள்ள இக்கல்வியினையும் போதித்து, இந்நாட்டின் வருங்காலச் செல்வங்களான இளஞ்சிறுவர்கள் வாழ்வாங்கு வாழ நாம் உதவுவோமாக.

குறைந்த விலையில் சிறந்த ஆடைகள்
கிடைக்குமிடம் :

கோபால பத்ம விலாஸ்

385, பஜார் வீதி, சேலம் 1.

Estd : 1916 Tel : "பத்மா"
Phone : 219 P. Box. No. 21

★

Props :

S. N. பத்மநாப செட்டியார்
P. R. ஜெயகோபால் செட்டியார்

சிலை வடிவத்தின் சிறப்பு
பாரதத்தின் பண்பாட்டைப்
பாரினிலே சிறப்பிக்கிறது.

நந்தினி வைரத்தின் சிறப்பு !
நங்கையர்கள் எழிலொளி
மிளிரப் பிரகாசிக்கிறது.

To Enhance Beauty..
NANDINI
Diamond Co.

54 DIAMOND BAZAAR
TIRUCHIRAPALLI.8

Sole Prop :

R. அயில் நாயுடு

54, டைமண்ட் பஜார்,
திருச்சிராப்பள்ளி - 8.

Tel : NANDINICO Phone : 6780

இலக்கியப் பதிப்பகத்தினர் வினவிய சில வினுக்களுக்கு ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையார் அவர்கள் அருள் கூர்ந்து அளித்தருளிய விடைகள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருக்கோயில் திருப்பணிக் குழு,
இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் (P.O), கோயில்பட்டி (வழி)

ஸ்ரீ அருள் சக்தித்தாய்
பிள்ளையார் குப்பம், ஸ்ரீ அருள்சக்தி விலாஸ்,
கிருமாம்பாக்கம் (P.O)
கடலூர் (R.M,S.)
நாள் : 27-10–'72
தங்கல் : இரெட்டியப்பட்டி

அன்புமிக்க தம்பு! தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் :

1. பச்சை நீரில் எந்தச் சமயத்திலும், எந்த நாட்டிலும் அதிகாலை 4-00 மணிக்குக் குளிப்பது இயலுமா?

பச்சை நீரைப்பற்றி முதற் கேள்வி. அதற்கு அத்தாட்சி பாண்டிச்சேரி, திரு. சாமிப் பிள்ளையின்பிள்ளைகள் சிவராஜும்,சண்முகமும் பாரீஸ் நகரத்தில், பனி மிகுந்த தேசத்தில் காலை 4-00 மணிக்கு எப்படி குளிக்கிறுர்கள்? அவர்கள்தான் அத்தாட்சி?

2. புலால் உண்பது தவிர்க்க வேண்டுமானுல் பால் பருகுவது மட்டும் முறையா?

புலாலுக்கும் பாலுக்கும் ஒப்பிட முடியுமா! புலால் உணவு உயிர் கொலைக்குக் காரணமாகிறது. பால் உயிர் கொலைக்கு காரணமாவதில்லை. கன்று அருந்தும் அளவு போக உபரிப் பாலை கறந்து தான் ஆண்டவருக்கு ஆராதிப்பதும், அடியார்கள் அருந்துவதும் பழக்கத்தில் உள்ளது. ஆதலால் அது பாவச் செயல் ஆகாது. மேலும், தேங்காய் உடைத்து ஆண்டவருக்கு ஆராதனை செய்கிரேும். மதுவை மட்டில் ஏன் விலக்கி வைத்தார்கள்? என்பதையும் உணர வேண்டும்.

3. புதிதாக ஒருவன் சட்டத்தில் சேர்ந்தால், அவன் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் யாவை?

'வழி காட்டும் வான் பொருள்' புத்தகத்தை பொறுமையாகப் படித்துப் பார்த்தால் புரியும்.

4. வெள்ளிக் கிழமைகளில் ஒரு வேளை உபவாசம் இருப்பதை வேறு எந்த நாளிலாவது வைத்துக் கொள்ளலாமா? உதாரணமாக, வேலைக்குப் போகிறவர்கள் ஞாயிற்றுக்கிழமை அல்லது விடுமுறை நாட்களில் உபவாசம் இருக்கலாமா?

சைவம், வைணவம், இஸ்லாமியம், கிறித்தவம் போன்ற பெருஞ் சமயங்கள் யாவும் ஒருங்கு ஒப்புக் கொள்ளும் வெள்ளிக்கிழமை உபவாசத்தை ஆண்டவர் தெரிவித்தருளினுர். ஞாயிறு அல்லது எந்த விடுமுறை நாளிலாவது நமது இஷ்டம் போல் இருப்ப தென்றுல் அது எல்லாச் சமயங்களும் ஒருங்கு ஒப்புக் கொள்ளும் கருத்து ஆகாது.

5. உபவாச நாளில் மௌனம் இருத்தல் வேண்டுமா?

உபவாச நாளில் மௌனம் இருப்பது நல்லது தான்; ஆண்டவர் பணித்தால் இருக்க முடியும்.

6. 'வெந்நீரும், மருந்தும் பயன்படுத்தலாகாது' என்று நம் இரெட்டியப்பட்டி சுவாமிகள் தமது அருள்பாடல்களில் பாடியுள்ளார்களா? இருந்தால், 'எந்தப் பாடலில்' என்று அடிமைக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

"வெந்நீரும், மருந்தும் பயன்படுத்தக் கூடாது' என்பதை ஆண்டவர் அருட்பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்; ஆதியிலே திரு நான்மறை' என்ற அருட்பாடலையும், 'வேடிக்கை பாராய்' என்ற பாட்டலையும் பாருங்கள்.

7. பதிப்பகத்திற்கும் அடியவர்களுக்கும் தாங்கள் கொடுக்கும் அறிவுரை என்ன?

பாடு பட்டால் பயன் அடையலாம்.

*திருப்பாதுகை மகிமை

திருவடி தாசன்

பாதுகையே—குரு—பாதுகையே—உயர்
பரம பதம்தரு பாதுகையே

பொன்னெளி மின்னிடும் பாதுகையே—அருட்
பொலிவு மிகுந்தொளிர் பாதுகையே
மன்னுமெய் அன்பருள் காருணி யம்பொறை
மாதவம் ஐம்புலன் வெல்லாற்றல்
ஞானம்ப ரானந் தானுப வம்மெனும்
நவமணி யொளிருயர் பாதுகையே
ஊனம றுத்தெளி யேன்சிர மீதில்
ஒளிர்ந்தருள் சற்குரு பாதுகையே

கள்ளன் எனத்தமி யேனைவி டாது
களங்கம் தவிர்த்தருள் பாதுகையே
உள்ளமெனும்கடி மாமலர் மீதில்
உவப்பொ டமர்ந்தருள் பாதுகையே
தெள்ளிய சட்ட மதைத்தரு தேசிகர்
திருவடி தாங்குமொண் பாதுகையே
அள்ளி யருட்டிரு வமுதினை மெய்யடி
யார்க்கினி தூட்டிடு பாதுகையே

எங்கடி யாருளர் அங்கருள் செய்ய
எழுந்தருள் சற்குரு பாதுகையே
துங்கமி கும்பெரி யாரித யத்துள்
துலங்கிடு தூயபொற் பாதுகையே
விண்ணவர் மண்ணவர் வேண்டிப் பராவிடும்
விதவித மலர்செறி பாதுகையே
எண்ணரி தாம்தவ முனிவரர் நாள்தொறும்
ஏத்தியி றைஞ்சுசெம் பாதுகையே.

---

* திருவருள் துணை கொண்டு 11—12—71ல் தொடங்கப் பெற்று, 1008 முறை 'பாதுகையே' என்று கூறித் துதிக்கும் முறையில் அமைந்துள்ள நூலின் ஒரு பகுதியே இங்கு அச்சாகியுள்ளது.

அந்த மொடேநடு வாதிசொ லற்கரும்
அற்புதப் பொற்பமை பாதுகையே
சந்த மறைத்தொகை சாத்திர மாதிய
சந்தத மேத்தருட் பாதுகையே
மாந்தர் குலம்புரி மாதவ மென்னஇம்
மண்ணுல கினில்வரு பாதுகையே
காந்த மெனக்கடி தேயடி யாரைக்
கவர்ந்தினி தீர்த்தருள் பாதுகையே

சத்திய ஞான விளக்கம் அனைத்தையும்
சாற்றிடு சற்குரு பாதுகையே
சித்தியல் யாவும் தெளிந்திடு மாறு
சிறப்பொ டுணர்த்தருட் பாதுகையே
பத்தியை எங்கும் பரப்பி உயிர்களைப்
பக்குவம் செய்யுமொண் பாதுகையே
முத்தி யெனும்கனி பெற்றிட வருகென
மூல மலம்கொயும் பாதுகையே

விடியு முனேதணீ ராடுவீ ரென்று
விளக்கி யெழுப்பிடு பாதுகையே
படியு மனம்பெறத் தீர்த்தம் அருத்திநற்
பக்குவம் மிக்கருள் பாதுகையே
நோயணு காது தடுத்தருள் செய்துநன்
நோன்மை வழங்குமொண் பாதுகையே
தாயினு மிக்க தயாநிறை வோடு
சராசரங் கட்கருள் பாதுகையே

பாதகம் யாவும் மன்னித்து மெய்ஞ் ஞானப்
பயிற்சி யளித்தருள் பாதுகையே
சூதகல் பேரரு ளாளருள் என்றும்
துலங்கு பராத்பரர் பாதுகையே
பற்பலகோடி பிறப்பைத் தவிர்த்தருட்
பான்மை விளக்குமொண் பாதுகையே
கற்பனை காணரிதான கவின்கொடு
கடையன் சிரத்தமர் பாதுகையே

வருகென அடியரை யீர்த்தருள் வாழ்வு
வழங்கரு ளாளர்பொற் பாதுகையே
அருவுரு வெனமறை யடிநடு முடிவினில்
அமைதியொ டேயொளிர் பாதுகையே

ஆலமும் விண்ணமு தாக்கிட வல்லவர்
அடிமலர் தாங்குமொண் பாதுகையே
காலனை வெல்வழி கடிதில் விளக்கிக்
கழல்பெறச் செய்யருட் பாதுகையே

கோடி கதிர் நிகர் பாதுகையே—அருட்
கொள்கை விளக்கிடு பாதுகையே
பாடிடு வோர்பயன் யாவும் அடைந்திடப்
பண்பொ டருள்புரி பாதுகையே
தெய்வ வளம்பல மேவிடு மாறு
சிறந்தவ ருக்கருள் பாதுகையே
உய்வழி காட்டி உயர்வை வழங்கி
உளப்பொலி வாயமை பாதுகையே

வஞ்சனை காணரும் பாதுகையே—அருள்
வாசகம் கூறுசெம் பாதுகையே
சஞ்சித மாதிய மூன்று வினைகளைத்
தழலினு ளாக்குமொண் பாதுகையே
* அக்ஷர மாயொளிர் பாதுகையே—அறி
வுக்கறி வாயமை பாதுகையே
** சக்ஷீவு மாயொளிர் பாதுகையே—இன்பத்
தத்துவ மாயொளிர் பாதுகையே

நன்மையெலாம் தரும் பாதுகையே—பர
ஞான சுகோதயப் பாதுகையே
தன்மய மாக்கிடும் பாதுகையே—அருட்
சாகர அமுதருள் பாதுகையே
ஜென்ம விடாய்தவிர் பாதுகையே—இந்த
ஜெகமுழு தாயொளிர் பாதுகையே
என்மயல் நீக்கிடும் பாதுகையே—எனக்
கின்பமெலாம் தரும் பாதுகையே

பாதுகையே—குரு—பாதுகையே—உயர்
பரமபதம் தரு பாதுகையே.

---

* அக்ஷரம்-அழியாதது; ** சக்ஷீ-கண்

நம் சுவாமிகள், அருட்குறிப்பின்படி அருளுலா செய்யுங்கால், 'வண்டிப்பாதை,' மற்ற வசதிகள், 'அடியார்கள் செல்வந்தரா' என்ற எதையும் சுவாமிகள் எண்ணியதே யில்லை யென்பது, "சாமி குச்சு வீட்டுக்கும் போகும், மச்சு வீட்டுக்கும் போகும்; உடையவன் பணக்காரருக்குப் பங்காளனு ?, ஏழைக்குப் பங்காளனு ?" என்ற அருள் வாக்கினுல் விளங்கும் !

ஸ்ரீ குரு கடாக்ஷம்

திரு. S. கிருஷ்ணமூர்த்தி ஐயர்,
ஆடுதுறை.

ஸ்ரீ விநாயகா துதி

தும்பிக்கையானே துணை செய்ய வேணுமே
நம்பிக்கையாகவே நான் செய்யும் சரிதம்
வெம்பி விழாமல் வீணுகப் போகாமல்
எம் குருநாதனின் இதம் சேர வேண்டுமே.

குருநாதன் அருளால் இன்று
அருள் நாதன் சரிதம் செய்ய,
பெருவாரி பொருளைச் சேர்த்து
அருளாக்கி அளிப்பா யப்பா

சரித கர்த்தா வணக்கம்

திருவடி தீக்ஷை பெற்றுத்
திருவிடைமருதூர் வாழ்ந்த
திருகுரு சுவாமி உன்றன்
திருவடி தியானம் செய்தேன்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருட்சட்ட அடியார்களில், சிறந்தவர்களில் ஒருவராகக் கருதப்பெறும் உயர்திரு S. சுவாமி நாத ஐயர் அவர்கள் திருவிடைமருதூரிலிருந்து பல வியாபாரம் செய்து புத்திர பௌத்திராதி களுடன் வாழ்ந்து இறைவன் திருவடியை எய்தி, அவ்வூரிலேயே வீரசோழன், காவேரி இரு ஆறுகளுக்கும் இடையில் சமாதி கொண்டுள்ளார். அவர் 1909-ஆம் வருடம் அவதரித்து, 1946-ஆம் ஆண்டில் அருட்சட்டம் ஏற்று, 1959-ஆம் ஆண்டில் இறையடி எய்தினுர்.

என் தமையனுரும், "ஸ்ரீ குரு கடாக்ஷம் சுவாமிகள்" என்று அழைக்கப் பெற்றவருமான அவருடைய அனுபவங்களை எழுத எண்ணி திருவருள் துணையைக் கொண்டு ஓரளவு எழுதி முடித்திருக்கிறேன். இதில் என் அறியாமையால் குற்றங்குறைகள் இருப்பின் இதை வாசிக்கும் அடியார், அன்பர்கள் குற்றத்தைப் பொறுத்து, குணத்தை இரக்ஷிக்கு மாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள் கிறேன்.]

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில் வடக்கு மட விளாகத்தில், எண் 18 இலக்க மிட்ட வீட்டில் சுவாமிநாத ஐயர் என்பவர் வசித்து வந்தார். திரு. ஸ்ரீநிவாச ஐயருக்கும், திருமதி. முத்துலக்ஷ்மி அம்மையாருக்கும் மூத்த மகனுக அவதரித்த அவர், சிறுவயது முதல் தெய்வ பக்தி கொண்டு விளங்கினுர். இவர் பதினுன்கு ஆண்டுகள் அம்பாள் பூஜை செய்து, அதன் பயனுக, 1946-ஆம் ஆண்டு, தை மாதம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் அருள் சட்டத்தை ஏற்ருர்.

அப்போது அவர் காபி கிளப் நடத்தி வந்தார். அத்தொழில் காலை, மாலை பூஜைக்கு இடைஞ்சலாக இருந்ததால், ஆண்டவரிடம் முறையிட்டுக் கொண்டு வந்தார். சட்டம் ஏற்ற 30 நாட்களில் திருவருள் துணையால், 'காபி கிளப்பை' மாற்றி மளிகைக் கடை வைத்துக் கொண்டார்!

அடுத்த புரட்டாசி மாதம் திருச்சாத்தனூரில் நடந்த இரேவதி விழாவிற்குச் சென்ருர். அங்கு நடந்த வைபவத்தைப் பார்த்து, அதைப் போலத் திருவிடைமருதூரிலும் விழா நடத்த எண்ணி இறைவனிடம் முறையிட்டு வந்தார்.

அது சமயம் நல்வினைப்பயனுல் நல்லார் ஒருவரை இறைவன் கூட்டி வைத்தார்; அவர் தான் உயர்திரு. பாலகவி சுவாமிகள்!

"அருட்சட்ட அடியார்களும், சுவாமிகளுடைய துணைகொண்டு, மக்களுக்கு நன்மைகள் செய்ய வாய்ப்பு ஏற்பட்டால் அதற்காக எவ்விதக் கைமாறும் எதிர் பார்த்தலாகாது" என்பது சுவாமிகளது கண்டிப்பான கட்டளை!

அவருக்குத் திருவருளால் பல வருடங்களுக் கப்பால் வரவேண்டிய அனுபவ ஆற்றல் வெகு சீக்கிரத்திலேயே வாய்த்திருந்தது. கற்ருேரைக் கற்ருேரே காமுறுவர்' என்னும் முதுமொழிக் கிணங்க அவ்விருவரும் உயிர்த் தோழராக ஆகிவிட்டார்கள்.

மறு வருடம் இரேவதி விழாவை திருவிடை மருதூரில், தன் இருப்பிடத்திலேயே நடத்தி ஞர். ஆனல் அவரிருந்த வீடு பழசு! அதை இடித்துக் கட்ட திருவருள் துணைக் கொண்டு ஆரம்பித்தார். அவ்வீட்டில் பற்பல தோஷங்கள் இருப்பதாகப் பலர் சொல்லக் கேட்ட அவர், தோஷ நிவர்த்திக்காக தஞ்சை உயர்திரு. முத்துகிருஷ்ண பாகவதரை அழைத்துத் திருவிளையாடல் புராணம் வாசிக்க ஏற்பாடு செய்தார். அதைப் பலர் கேட்டுப் பயன் பெறவும் வசதி செய்தார். அது முடிந்த பிறகு, கட்டிட வேலை ஆரம்பித்தார். அது முதல் ஆண்டவர் செய்த அற்புதங்கள் அள வற்றன. வேலை நடந்து கொண்டிருந்த போது கையில் பணமில்லாமல், செய்வ தறியாது விழிக்கும் சமயங்களில் எதிர்பாராத இடங்களிலிருந்து அவருக்கு உதவிகள் கிடைத் திருக்கின்றன. நிற்க, ஒரு சமயம் அங்கிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள திருப்பணிப் பேட்டை என்னும் ஊரில், செங்கல்லுக்காக, ஒரு பழைய வீட்டை வாங்கினுர். அதில் நான்குபுற சுவர் தான் இருந்தது. அந்த கற்களை இடித்து எடுக்கும்போது எதிர்பாராதபடி, பூமிக்கடியில் நான்கு அடி ஆழத்திற்கு முழுக்கற்கள் இருந் தன. அது, அங்கிருந்து கற்களைத் திருவிடை மருதூருக்குக் கொண்டு வரும் வண்டியாக வாடகைக்குச் சரியாகி விட்டது! இம்மாதிரி எதிர்பாராத இடங்களிலிருந்து எதிர்பாராத உதவிகளும், லாபகரமாக பல காரியங்களும் நம் குருநாதர் அருளினுர்.

ஐயர் தாம் நினைத்தது போல், குருமடம் என்று சொல்லும்படி அத்திரு மாளிகையை அமைத்தார். முக்கியமான வேலைகள் செய்யும் போது, அதாவது அஸ்திவாரம் தோண்டுதல், கல் முகூர்த்தம் செய்தல், நிலைவைத்தல், உத்திரம் போடுதல் முதலியன செய்யும்போது தாமாகவே இரேவதி அல்லது அனுஷ நட்க்ஷத்திர நன்னுட்கள் அமைந்துவிடும்.— அடிமை திருவிடைமருதூரிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஆடுதுறையில் வசித்து வருவதால் வாரம் ஒரு முறை அங்கு சென்று நடந்தவற்றை அவ்வப்போது கேட்டறிந்து கொள்ள வாய்ப்பிருந்தது.— இறைவன் திரு வுருவப்படம் அமைக்க நடு ஹாலில் செங்கற் களால் திருக்கோயில் அமைத்தார். அதில் இறைவனை பிரதிஷ்டை செய்யவும், புதுமனை புகுவிழா கொண்டாடவும் ஒரு நாளை நிச்சயிக் கும் காலை அது ஆவணி மாத இரேவதியாக அமைந்தது. அன்று முதல் ஆண்டுதோறும் ஆவணி மாத இரேவதி நட்க்ஷத்திர நன்னுள். விழாவாகக் கொண்டாடப்படுகிறது

நித்திய பூஜை :—

சுவாமிகள் ஒவ்வொரு நாளும் விடியற்காலை 4-00 மணிக்கு விழித்து கொள்வார். "விண் ணில், மண்ணில் உள்ள இயற்கைச் செயல்கள் மாறினுலும் இவருடைய விடியல் நீராட்டம், வந்தனை வழிபாடு, பாராயணம், நிட்டை நேரங் கள் சிறிதளவும் மாருது, " என்று சொல்லு மளவிற்கு நியமத்தோடிருந்தார். இதில் அவ ருடன் அடியார்கள் கலந்து கொள்ளாத நாட் கள் சிலவாகத்தானிருக்கும். அவ்வீட்டிற்குப் பக்கத்தில் கோயில் இருப்பதால், கோயிலுக்கு வரும் பக்தர்கள் இங்கும் வந்து பூஜையில் கலந்துகொள்வார்கள். மடம் போன்ற விஸ்தார மான கட்டிடம் அதன் நடுவில் அமைந்திருக் கும் கல்விமானம், அதில் அமைந்திருக்கும் கம்பீரமான மூர்த்தி, பூஜைபாத்திரங்கள், மின் விளக்கின் அதிக ஒளி, எதிரில் அமர்ந்திருக்கும் ஆண், பெண், குழந்தைகள்—அவர்கள் பாடும் ஸ்தோத்திரங்கள்—ஆகியவற்றைக் கண்டு ஆனந்தித்து மெய்மறந்து நின்று விடுவார்கள்!

உற்சவச் சிறப்பு :—

ஒவ்வோராண்டும் திருவிடைமருதூர்-உற் சவத்திற்கான அழைப்பிதழ் பல அடியார் களுக்கும் அனுப்பப்படும்; சுவாமிகள் இரெட்டியப்பட்டிருக்கும் தவருமல் அனுப்பு வார். அதைக்கண்ட இரெட்டியப்பட்டி மக்கள் தங்களுக்குள் பணம் வசூல் செய்து ஆவணி மாத இரேவதியில் குருநாதர் பிறந்த நாள் விழா கொண்டாட ஆரம்பித்தார்கள். அடுத்த ஆண்டில் இறைனன் திருவருள். பாலகவி சுவாமிகளை அங்கனுப்பி ஆவணி மாதத்தை புரட்டாசி மாதமாக மாற்றியது.

திருவிடை மருதூரில் இரேவதி உற்சவத் திற்கு வரும் அடியார் அனைவரும் முதல் நாள்

மாலையே வந்து கூடிவிடுவார்கள். சமையல்காரர்கள் சமையல் செய்வதும், அடியார்கள் தாமே பூமாலை கட்டுவதும், விளக்குகள் அமைப்பதும், மறுநாள் உணவுக்கான காய்கறி இலைகளைத் தயார் செய்து வைப்பதும், அடியார் தத்தமக்கு ஏற்பட்ட அருளனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதும், சிலர் அருட்பாடல்களைப் பாடுவதுமாக அன்று இரவெல்லாம் அருள் விழாப் பரவசக் கோலந்தான் !

ஸ்ரீ குருகடாக்ஷம் சுவாமிகள் இவையனைத்தையும் பார்த்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருப்பார். எல்லாம் முடிந்து படுக்கைக்குப் போகும்போது மணி 12–00க்கு மேல் ஆகிவிடும்.

மறுநாள் விடியற்காலை 4-00 மணிக்கு விழித்துக்கொண்டு, அனைவரும் சமீபத்திலுள்ள திருக்குளத்தில் மூழ்கி, திருநீறணிந்து, பூசையை ஆரம்பிப்பார்கள். திருப்பள்ளியெழுச்சிக்குப் பின் அர்ச்சனை நடக்கும். அது முடிந்த பிறகு தூபம் (சாம்பிராணி) போடுவார்கள். பிறகு அவர் மனைவி அலங்கார தீபம் ஏற்றிக்கொடுக்க தீப ஆராதனை நடக்கும். பின் கற்பூர தீபம் (பஞ்சமுகார்த்தி) எடுக்கும்போது ஒலிக்கும் அந்த மணியோசையும், மேள வாத்தியங்களும், "அரோஹரா" கோஷமும் அனைவரையும் மெய் மறக்கச் செய்யும். அது முடிந்ததும் பக்தர்கள் யாவரும் உதிரி புஷ்பத்தைக் கையில் வைத்துக் கொண்டு புஷ்பாஞ்சலி என்று சொல்லும்படியாகக் கையை கூப்பிக் கொண்டு ஒவ்வொருவராக வரிசையாகக் குருநாதர் விமானத்தைச் சுற்றி வருவார்கள். சுவாமிகள் அதற்கொரு மந்திரம் சொல்லுவார் ; அவர் சொல்ல அனைவரும் சேர்ந்து சொல்லுவோம். அதாவது :—

குரு பிரம்மா, குரு விஷ்ணு
குரு தேவா மகேஸ்வரஹ
குரு சாக்ஷாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

என்று சொல்லி ஒவ்வொருவராக, வரிசையாய் வரும் அற்புதம் மிக அருமையாயிருக்கும். மூன்று சுற்றுக்கள் முடிந்ததும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வார்கள். பின் சுவாமிகள் ஓர் ஆசனத்தில் அமர்ந்து யாவருக்கும் திருநீறு வழங்குவார். அனைவரும் ஒவ்வொருவராக வந்து பெற்றுக் கொள்வார்கள். உடனே யாவருக்கும் பால், காபி கொடுப்பார்கள். சுவாமி குடும்பத்தினர் சேர்ந்து சில தோத்திரம் சொல்லுவார்கள். அது தினசரி நடப்பதுதான் : என்றாலும் அந்த அனுபவத்தை இன்றும் யாராலும் மறக்க முடியபது ! பிறகு சுவாமிகளை ஓர் ஆசனத்தில் அமரச் செய்து, அவர் வாழ்க்கைத் துணைவியார் பாத பூஜை செய்து பிரதக்ஷண, நமஸ்காரம் செய்வார். உடனே மற்றோர் ஆசனம் இட்டு, அதில் அவர் வீட்டுத் தாயையும் இருத்தி அக்குடும்பத்தவர் யாவரும் பாத பூஜை முதலியன செய்வார்கள் ; அதில் சில அடியார்களும் கலந்துகொள்வார்கள். அது முடிந்ததும் காலை டிபன் செய்துவிட்டு, குருநாதர் திருவுருவப்படத்தை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து அடியார்கள், "ஊஞ்சல்," "லாலி" முதலியான பாடுவார்கள். பிறகு உபந்நியாசங்கள் நடைபெறும். சுமார் 12 அல்லது 1 மணிக்குக் குருநாதருக்கு மகா நெய்வேத்தியம் நடக்கும், அடுத்து அடியார்கள் அனைவரும் அமுது செய்வார்கள். உள்ளே வராதவர்களுக்கும் வீட்டிற்கு எடுத்துக் கொண்டுபோக வேண்டும்மென்று நினைப்பவர்க்கும் கிடைக்கும்படி அண்டாவில் சாதம், சாம்பார், பொறியல் பலதும் போட்டு கலந்து தெருவில் வைத்துக் கொண்டு விநியோகம் செய்வார்கள். உணவருந்திய அடியார்கள் பிரசாதம் பெற்றுக் கொண்டு விடைபெறுவார்கள் ; சிலர் இரண்டொருவேளை தங்கியும் செல்வார்கள்.

இம்மாதிரியாக 1947 முதல் 1956 வரையில் நடைபெற்றது. பிறகு அவருக்கு ஒரு உணர்ச்சி உண்டாயிற்று ; நிகழ்ச்சிகளும் தோற்றங்களும் உண்டாகி, அவர் ஒரு முடிவிற்கு வந்தார். கால்நடையாக இரெட்டியப்பட்டிக்குச் செல்வதென திட்டங்களும் போட ஆரம்பித்து விட்டார். அதுமுதல் கடைவிவகாரங்களையும், மற்ற விவகாரங்களையும் கொஞ்சங் கொஞ்சமாக ஒதுக்கி

அருட்சட்ட நெறிப்படி காலையில் 4-30 மணிக்கு நீராட இயலாது காலம் தாழ்த்து நீராடும் அடியார்களைப்பற்றி சுவாமிகள், "சாமி சட்டத்திலே வேலைக்கேற்ற கூலி உண்டு" என்று புன்னகையுடன் பகர்வார்கள்.

வைத்துக் கொண்டே வந்தார். இவ்வளவிற்கும், காரணம் அவருடைய மனைவியின் ஒத்துழைப்புதான்.

பிள்ளையார் குப்பம், ஸ்ரீ அருள்சக்தி அன்னையார், திருச்சாத்தனூர், ஸ்ரீ அருட்கொடி சுவாமிகள் ஆகியோரின் ஆசியும், உத்தரவும் பெற்று ஒருசிலருடன் திருச்சாத்தனூரிலிருந்து பாதயாத்திரை கிளம்பினர். கையில் அருட்கொடி, கழுத்தில் இறைவன் திருவுருவப் படம் இந்த கோலத்துடன், திரு. பாலகவி சுவாமிகள், அருள் நகர், ஸ்ரீ நரசிம்மலு சுவாமிகள், இன்னம் சிலர் ஆக ஐந்து நபருடன் கிளம்பி ஒன்பது நபராக இரெட்டிப்பட்டி சந்நிதி சென்றடைந்தனர். 45 நாட்களில், வழியில் நடந்த அற்புதங்கள்,— ஆண்டவர் செய்த உதவிகள் எண்ணில. அனைத்தையும் எழுத அடிமைக்கு ஆற்றல் கிடையாது; ஆயுள் போதாது! அவ்வாண்டு குருபூஜை சேரச் சந்நிதி சென்றடைந்தோம்.

அடுத்த ஆவணி-இரேவதியில் அவர் தம்பியாகிய அடிமைக்கு அவர் அருளால் நிகழ்ச்சியில் சில உத்தரவுகள் தோன்றின. "அவரில்லத்தில் திருக்கொடி பறக்க வேண்டும்; அதற்கு நீதான் கொடி தயார் செய்து, இங்கு ஒரு பூஜை செய்து, பல அடியார்களுக்கு அன்னமளித்து, பல அடியார்களுடனும், மேளவாத்தியங்களுடனும், பலவெகுமதி புதுவேட்டி, புடவையுடனும் கலியாணத்திற்குச் சீர் கொண்டு போவதுபோல் இரேவதியின் முதல் நாள் மாலை பூஜைக்குமுன் திருவிடை மருதூருக்குக் கொண்டு போக வேண்டுமென்று உத்தரவாகியது. அடிமையும் முடிந்த வரையில் அதே போலச் சென்றது. திருவிடைமருதூர் எல்லை வந்ததும் என் தமையனுர், சில அடியார்களுடனும், மேள வாத்தியத்துடனும், "அரோஹரா" கோஷத்துடனும் எதிர் கொண்டழைக்க, வடக்கு வீதி ஸ்ரீராமலிங்க சுவாமிகள் மடத்து வாசலில் வந்து சந்தித்தார். இருதரத்தாரின் "அரோஹரா"கோஷமும், இருமேள வாத்தியமும் பிரமாதப்பட்டன. அது சமயம் அடிமையும் அவரும் அன்பு மிகுதியால் அணைத்துத் தழுவினோம்; ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அந்த நிலையைக் கண்டவர்கள் களிப்பெய்தினுர்கள்! இக் கோலத்துடன் அவருடைய திருமாளிகை சென்றடைந்தோம். இவ்வளவு விமரிசையுடன் வந்து சேர்ந்த திருக்கொடியை அரிசி நிரப்பிய ஒரு பித்தளை அண்டாவில் அமைத்து, அதற்கும் ஆண்டவருக்கும் சேர்த்து பூஜை நடந்தது உயர்திரு. பாலகவி சுவாமிகள் கொடி வணக்கம் செய்யப் பாட்டு எழுதினுர். மறுதினம் காலை கொடியேற்ற உயர் திரு. நரசிம்மலு சுவாமிகள், திடீரென, வந்து சேர்ந்தார்.

அடுத்த ஆண்டு இரேவதி முதல், ஒவ்வோர் ஆண்டும், கொடியைப் புதிதாகத் தயாரித்து முதல் நாள் மாலை பூஜையானதும் அக் கொடியை சுவாமிகளோ அல்லது அடிமையோ கொண்டுவர மேளவாத்தியம், அடியார்கள் பஜனை ஆகிய வைபங்களுடன் ஊர்வலம் வருவோம் மறுநாள் காலை பூஜை முடிந்ததும் குருகடாக்ஷம் மாளிகையின் முன்னர் குருநாதர் திருவுருவப்படத்தை எழுந்தருளிவித்து மாடியில் கொடியேற்றி, மேளவாத்தியங்கள் முழங்க, கொடிக்கும் குருநாதருக்கும் தீபாராதனை செய்வர். இக்காட்சி, குருநாதர் திரு முன்னர் கொடியேற்றுவது போல் அமையும். இதைப் பார்க்க மிக ஆனந்தமாயிருக்கும். பிறகு கலியாண மண்டபத்தில் உள்ள ஊஞ்சலில் குருநாதர் திருவுருவப்படத்தை எழுந்தருளச் செய்வார்.

1959-ல் திருச்சாத்தனூரில் இரேவதி விழா காணச்சென்ருேம். அங்கு திருவார் திரு. அருட்கொடி சுவாமிகளிடமும், மற்ற அடியார்களிடமும், "இந்த வருடத்துடன் சரி; இது அடைந்துவிடும்" என்று சுவாமிகள் சொன்னுர் அவருக்கு ஒரு பெண் கலியாணத்திற்கு இருந்தது. அது சம்மந்தமாகச் சென்னை செல்ல எண்ணினுர். அடிமை, "தைமாதம் கலியாணம் வைத்துக் கொள்ளலாமென்று சொன்னேன். அதற்கு அவர், "நான் தைமாதம் வரையில் இருக்கமாட்டேன்; ஆகையால் கார்த்திகையில் நடத்தவேண்டும்" என்ருர். இம்மாதிரியான முடிவைச் சந்தோஷத்துடன் சொல்லிக் கொண்டே இருந்தார். அவருடைய ஆத்ம நண்பர் உயர்திரு. இராமச்சந்திர ஐயர் அவர்களைப் பலதரம் கேட்டு, இடத்தையும் பார்த்து, சாமதிக்குத் தயார் செய்து வைத்து விட்டார்.

ஐப்பசி மீ 28ந்தேதி அவரைப் பார்க்கச் சென்றேன். அது சமயம் என்னேடு பேசும் போது, "எமலோகத்தை எட்டிப் பார்த்துவிட்டு

வந்து விட்டேன், இன்னும் ஏதோ டயம் பாக்கியிருக்கிறது; ஆகையால் இருக்கிறேன்.'' என்று சொன்னார். மறுதினம் என் கடையை மூடிவிட்டு அவருடனேயே தங்கிவிட்டேன். யார் யாருக்குச் செய்தியனுப்ப வேண்டுமென்பதைச் சொன்னார். 'சமாதி எப்படி வைப்பது' என்ற விபரத்தைக் கேட்டேன். ''அதெல்லாம் அருள் நகர் சுவாமி வந்துதான் செய்ய வேண்டும். அவர் வரத் தாமதமானாலும் எல்லோரையும் பட்டினி போட்டு விடாதே, சமையல் செய்யச் சொல்லி, எல்லோருக்கும் சாப்பாடு போடு; சம்மதித்தவர்கள் சாப்பிடட்டும். காடு புகைந்தால் வீடு புகையக்கூடாது. என்பார்கள். காடுமில்லை; புகையுமில்லை! ஒருவரும் அழக்கூடாது'' என்று சொன்னார். அருள் நகர் சுவாமிகள் எப்போது வருவாரோ குழி எப்படி? வாகனம் எப்படி? எல்லாம் சொன்னால் முன்கூட்டியே செய்ய முடிந்ததைச் செய்து வைக்கிறேன்'' என்றேன். விபரம்யாவும் சொன்னார்; ''புரியாததைத் திருவிசலூர், திரு. சரவணப்பிள்ளை அவர்கள் வந்ததும் கேட்டுத் தெரிந்துகொள்'' என்று சொல்லிவிட்டார். உயிர் உள்ள அடங்கியதும் தன்னை உட்கார்த்தி வைத்துவிட வேண்டுமென்றும் சொன்னார்.

ஐப்பசி மீ 30ஆந் தேதி இரவு 9-00 மணிக்கு சுவாமிகள் இறைவன் திருவடி யெய்தினார். அடியார்கள், அன்பர்கள் பலர் கூடினார்கள். மறுதினம் காலைமுதல் இவருக்குப் பூஜை, தோத்திரங்கள் நடைபெற்றன. வந்தவர் அனைவரும் அழாமல் தோத்திரத்தில் கலந்து கொண்டார்கள். சமையல், காபி யாவும் நடந்தது. வீடு போல் பலர் சாப்பிட்டார்கள்; சிலர் சாப்பிட மறுத்தார்கள். இப்படியாக இரவு முழுவதும் கழிந்தது. மறுநாள் அவ்வூர் கோயிலில் அன்னாபிஷேகம் நடக்க இருந்தது. சுவாமிகள் மறைவால் அது நின்றுவிட்டது. கோயிலுக்கு வந்த கூட்டமும் இங்கு கூடி விட்டது. இந்த நிலையில் சுவாமிகளுக்கு அபிஷேகம் நடந்தது. இவையெல்லாவற்றையும் ஆச்சரியம் என்னவெனில், அவருடைய மனைவி யார் அழவேயில்லை; ஒரு சொட்டு கண்ணீர் கூட விடவில்லை! அழாமல் இருந்ததுடன் சுவாமி பாடல்களை ஓயாமல் பாடிக் கொண்டிருந்தார். அவர் தம்பியாகிய என்னால் அம் மாதிரி இருக்க முடியவில்லை! அபிஷேகச் சமையத்தில் அவருடைய மனைவியின் தாய் வீட்டார் அலறிக்கொண்டே வந்தார்கள். அபிஷேகச் செயலில் ஈடுபட்டிருந்த அவருடைய மனைவியார் ஓடிவந்து, ''இங்கு அழக்கூடாது; அழுபவர் வெளியில் போய் விடுங்கள்'' என்று அதட்டினார். இந்தச் செயல் அங்கிருந்த யாவருக்கும் மிக்க ஆச்சரியமாயிருந்தது.

இரவு சுமார் 8·00 மணிக்கு ஊர்வலம் கிளம்பியது. ஜாதிமத பேதமின்றி அனைவரும் சுவாமிகளைச் சுமந்து ஆண்டவர் பஜனையுடன் திருமேனி ஊர்வலம் செல்லும்போது கடைகள் பூராவும் மூடிவிட்டார்கள். அவ்வூர் மக்கள் ஊர்வலத்தில் சுவாமிகளுக்கு மாலையணிவித்தார்கள். இம்மாதிரியான வைபவத்துடன் ஸ்ரீ குரு கடாக்ஷம் சுவாமிகள் கல்லறை புகுந்தார்! இவர் சிறப்பை உயர்திரு பாலகவி சுவாமிகள் இரங்கற்பாவாக பாடியளித்தார்.

ஸ்ரீ குருகடாக்ஷம் சுவாமிகளைப்பற்றி

இவர் பிராமணனாயிருந்தும் மற்ற சட்டமேற்றவுடன் அதி சிரத்தையுடன் செய்து வந்த நித்திய கர்மாக்கள் (சந்தியாவந்தனம், ஜபம், அமாவாசை தர்ப்பணம், சிரார்த்தம் திதி) முதலியவற்றை ஒவ்வொன்றாக நிறுத்திவிட்டார் இதற்காக உறவினர் எதிர்ப்பையும் பொருட்படுத்தினாரில்லை! இம்மாதிரியாகப் பல காரியங்களில் உலகை வெறுத்து வாழ்ந்தார்.

இவர் அதி தீவிர ஆசார சீலர்; ஜாதி மதப் பற்று மிக உடையவர். அப்படிப்பட்ட இவர் அருட்சட்ட நெறியில் இறங்கியதும், தாமாகவே சமத்துவம் பாராட்ட ஆரம்பித்தார். இவருடைய மூத்த குமாரனுக்கு விவாகம் நடத்தும்போது பல இனத்து அடியார்களை உடன் வைத்துக் கொண்டு உணவருந்தினார். அதில் உறவினர் பலருக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டது ஏன்?

நமது சுவாமிகள் அடியார்களிடத்தில் அளவளாவும்போது சட்ட அனுட்டானத்தில் உடல், பொருள் ஆவி அனைத்தையும் உடையவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற தத்துவத்தைக் கூறுகையில், ''வடத்தைக் கையில் எடுத்து விட வேண்டும்; எடுத்து விட்டால், தேரில் உட்கார்ந்திருக்கும் உடையவன் 'இழு, இழு' என்று உற்சாக மூட்டி செலுத்திக் கொண்டே போவான்; கட்டாயம் நிமிஷத்தில் நிலை சேர்ந்து விடலாம்'' என்று அருளுவார்கள்.

அவருடைய சகோதர்களாகிய நான் என் தமையன், அவர் தம்பி இன்னெருவர் ஆகியோர் உணவருந்த வேறு இடம் சென்றுவிட்டோம். இவையெதையும் அவர் பொருட்படுத்தவில்லை! இவர் உறவினராயிருந்தாலும் அருசட்ட வழியில் நில்லாரை மதிக்கமாட்டார். அருட்சட்ட வழியில் நிற்பவர் யாராயிருப்பினும் உறவினரென அன்பு செலுத்துவார்.

இவர் எங்கு இருந்தாலும், எந்த விசேஷத்தை நடத்தினுலும், எக்காரணத்தைக் கொண்டும் ஸ்நானம், பூஜை, நிட்டை முதலியவற்றை காலம் தவருமல் நடத்துவார்.

இவரைக் குருவாகக் கொண்டு சட்டநெறி பின்பற்றிய அடியார்கள் பலர்.

இவரிடத்தில் விபூதி வாங்கி நலமடைந்த அன்பர்கள் பலர்.

இவர்,

"சாகத்துணிந்தவனுக்குத்தான் சட்டம்"—என்பார்.

"எந்த நேரத்திலும் நல்ல நினைவையே நினைக்க வேண்டும். அதாவது, 'நீ நினைப்பதைப் பலர் முன் சொன்னுல், அதைப் பலரும் ஒத்துக் கொள்ளக் கூடிய, சந்தோஷப்படக் கூடியதாக இருக்கவேண்டும்"—என்பார்.

"உன் இறுதி நாளை எந்த நேரத்திலும் சந்தோஷத்துடன் எதிர்பார்த்திரு"—என்றும் சொல்வதுண்டு!

ஸ்ரீ பரிபூரண விநாயகர் ஆலயத்தில் தொடங்கப்பெற்ற விபூதி விலாசம் இரெட்டியப்பட்டியிலும் விளங்கலாயிற்று. பிற்காலத்தில், சுவாமிகள் அடியார்களை ஆட்கொள்ள அருளுலா செய்து வந்த காலத்தில் பல பிணிகளை நீக்கியருளுவார். பேயுற்றவர்கள் அங்கு வருவார்கள். அவர்கள் படும் துன்பத்தைக் கண்டு திருவுளமிரங்கி, "இனி இவர்கள் வருந்தாது இருக்க வேண்டும் இறைவா" என்று உடையவன் அருளை உறுத்து நினைந்து, "எழுந்திருந்து போங்கள்" எனக் கட்டளையிடுவார்கள், உடனே, பேய் கொண்டவர்கள் சாதாரண மக்களைப்போல எழுந்து நின்று, ஆண்டவரை வழிபட்டு, அருள் திருநீறு பெற்று மகிழ்வுடன் செல்வார்கள்.

சிறந்த வெள்ளிப் பாத்திரம்

நாணயம்! நம்பிக்கை!! உத்திரவாதம்!!!

★

போன்: 228

G. நாகராஜன்,

நகை வியாபாரம்,

414, மெயின் பஜார்,

வேலூர் - 4. [N.A.]

முதன் முதலாக 'நள' ஆண்டு (1917) சுவாமிகள் வேலூர் வந்து சேர்ந்தார்கள். எந்தவிதமாகவோ அன்பர்கள் கூடி அடியவர் கூட்டங்களாகி விட்டன! எந்த நோயாளரும், சுவாமிகளைக் கண்ணால் கண்டு தரிசித்துவிட்டால், மூன்று நாட்களுக்குள் சுகமடைந்து செல்வார்கள். இருபது மைல் சுற்றளவுக்கு மேலுள்ளவர்கள் கூட ஏராளமானவர்கள், திரள், திரளாக வந்து சுவாமிகளைத் தரிசிப்பார்கள். சுவாமிகள் கையால் திருநீறு கொடுப்பதில்லை. திருநீறு வட்டிலில் இருக்கும்; மக்கள் தாங்களாகவே எடுத்துக் கொள்வார்கள். சுவாமிகள் அருள் நோக்கும், திருவாக்கும் பெற சுவாமிகள் எப்போது வருவார்கள் என்று கேட்பவர் கணக்கிலர். சுவாமிகள் இங்கு எண்ணிறந்த முறை வருகை புரிந்துள்ளனர்.

சுவாமிகள் தங்கும் நாள் திருவிழாக் கூட்டமாகவே இருக்கும். அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி அதிக நாள் தங்கி இருப்பார்கள்; ஆங்காங்கு சென்று வருவார்கள். ஏழை அடியார்கள் மனத்தூய்மையுற்று நிறைந்திருப்பார்கள். பல அற்புதங்கள் நிகழ்ந்த வண்ணமிருக்கும். ஒரு அடியார் வியாகூலமடைந்திருப்பதைக் கண்டு சுவாமிகள் கேட்டபோது, "எனது ஒரே கறவைப் பசு காணாமற் போயிற்று" என்று கூற சுவாமிகள் பக்கலில் நின்ற ஒரு அடியாரைப் பார்த்து "எங்கு இருக்கு என்று சொல்லட்டும்" என்றவுடன் அவ்வடியார் பசுவைத் திருடிச் சென்றவர் பெயர், ஊர் எல்லாவற்றையும் கூறினர். 'திருடிச்சென்றவர் மீது நடவடிக்கை எடுக்கலாகாது' என்று உத்திரவானது. அதன்படி நடவடிக்கை எடுக்காமல் பசுவை ஓட்டி வந்தனர். சுவாமிகள் பால் மக்கள் பக்தி மிகப் பூண்டு பரவசமாயினர்.

சுவாமிகள் வந்தகாலம் "பெரிய நாயகி" என்ற முப்பத்தி ஐந்து வயதுள்ள அம்மையார் ஐந்து மணிக்குள் நீராடி ஏழு மணிக்குள் புஷ்பங்களெடுத்து சுவாமிகளின் பாதத்தில் சொரிவார்கள். 'அவர்களுக்கு நிட்டை கூடும்' என்று சுவாமிகள் கூறியிருந்தார்கள். அவ்வம்மையார் நிட்டை கூடி கலைந்தெழுந்து, "சுவாமி இன்று மதுரையிலிருக்கிறார்" என்பார்கள். உடனே வேலூர் அடியார்கள் மதுரைக்குத்

வேலூரின் கண்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

(திரு. பெத்த பெருமாள் ஆச்சாரி, வேலூர்)

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள், தாம் அருள் பெற்ற அனுபவத்தைப் பிற்காலத்தில் அடியார்களிடம் அருளும்போது "இது கொஞ்சமான அழுகையா அழுதது?" என்று கூறுவார்கள்.

தந்தி கொடுத்துக் கேட்டால், "இருக்கிருர்கள்" என்று பதில் கிடைக்கும்!

சுவாமிகளின் முன் ஆடும் பேய்கள் அநேகம். 'அவைகளுக்கு மணிக்கணக்கில் விலங்கிடப்பட்டுள்ளது' என்பார்கள்; அவர்களை அசைக்கவும் முடியாது, அதிகமாகவும் ஆடாது, தானுகப் போய்விடுகிறேன் என்று போய்விடும். அது அன்றுபோல் இன்றும் நடந்து வருகிறது. அன்று முதல் இன்றுவரை விஷம் தீண்டி, குருநாதன் திருநீறணிந்து மாண்டவரில்லை! சுவாமிகள் வந்து தங்கும்போது அடியார் எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு, தாயுமானவர் பாடல், கைவல்யம் ஆகியவற்றிலிருந்து உபமானங்கள் கூறி விளக்குவார்கள். ஒருநாள் வெள்ளி விரதம்பற்றி விளக்கி சொற்பொழிவு செய்யுங்காலை, ஒரு பள்ளிக்கூடப் பையன் கூட்டத்தை விலக்கி விட்டு சுவாமியிடம் சென்று, "நான் இருக்கலாமா வெள்ளிவிரதம்?" என்று வினவ "இருக்கலாம்சாமி; இரு" "என்று சுவாமி கூறியவுடன்;" அப்படி இருந்தால் சட்டத்திற்குப்பிசகி நடந்தாலும் தண்டனை இல்லாதிருக்க வேண்டும். இது எங்களூர் ஜனங்களுக்கும் அப்படியே நடக்க வாக்களிக்க வேண்டும் சுவாமி" என்று அப்பையன் கோரியதைக் கேட்டு, சுவாமிகள் சந்தோஷமுற்று, "இந்தசாமி தன்னுேடன்றி இவ்வூருக்கே கேட்டு விட்டது; எந்த தண்டனையும் வராது! சட்டத்திலிருக்க வேண்டுமென்ற எண்ணத்திலிருங்கள்; அது சட்டத்தில் கொண்டு சேர்க்கும்" என்று உரைத்ததை நினைத்து நினைத்து மகிழ்கிறோம். சுவாமிகள் வந்த காலத்திலிருந்ததைப் போன்று இன்றும் நடப்பதால் சுவாமிகள் இங்கிருப்பதாகவே எங்களூரார்க்கு நினைவு!

சுவாமிகள் உபன்யாசம் செய்யும் போது, "சல்லடைக் கண்ணுக்கு ஒப்பான சரீரத்திற்குப் பரம ஔஷதம் சுத்த ஜலம்" என்றும் "தேவதைகளைக் கூலிக்காரனுக்காதீர்கள்; பிரார்த்தனையிருந்தால் நிறைவேற்றிவிடுங்கள். மரணமடையுமுன்னே சரணமடையுங்கள்" என்றும் அடிக்கடி கூறுவார்கள்.

சுவாமிகள் வேளூருக்கு முன்னறிவிப் போடு வருவதில்லை. நிட்டை கூடும் தாய்மார்கள், "சுவாமி இரயிலில் வருகிறது; வண்டி கொண்டு செல்லுங்கள்" என்பார்கள். அதே போல் சென்று மேள வாத்தியம் முழங்க அழைத்து வருவார்கள். ஒரு சமயம் சுவாமிகள் வந்தபோது, மழையில்லாது பயிர் வாடும் சமயம்—மக்களாகவே குறையைக் கூறு முன்பு—சுவாமிகள் ஆகாயத்தைப் பார்த்து "மழை பெய்தால் நலம்" என்று கூறி விட்டுவந்து நாற்காலியில் உட்கார்ந்தனர். கால்மணி நேரத்திற்கெல்லாம் சப்தமேகமும் ஒன்று திரண்டு பொழிவது போன்று மழைபொழிய, இவ்வேளூர் மக்களானந்தத்திற்குக் கேட்கவும் வேண்டுமா!

சுவாமிகள் இங்கு வரும்போது உபயோகிக்கும் நாற்காலியும், கைப்பிரம்பும் இன்றும் உள்ளன. சுவாமிகள் வேளூர் மக்களின் வழிபாட்டிற்காக விநாயகர் சிலை யொன்றைத் தம் திருக்கையால் ஓர் அரசமரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து, "ஹரி அவதார கணபதி" என்று பெயரிட்டார்கள். அம்மூர்த்திக்குத் தற்போது ஆலயமுண்டாகிச் சிறப்புடனிருந்து வருகிறது.

சுவாமிகள் இறைவனோடுறைவதென்ற எண்ணம் வந்தவுடன் இரெட்டியப் பட்டியிலுள்ளவர்களிடம், 'வேளூர் அடியார்கள் வந்து தேகசமாதி செய்தல் வேண்டு'மென்று உரைத்திருக்கின்றனர். துந்துபி ஞு மார்கழி மீ 28 உ [1923] அனுஷ நட்க்ஷத்திரத்தன்று இறைவனோடெய்தியதாக எங்களுக்குத் தந்தி வந்தது. பெருமழை, புயல் காரணமாக வேளூர் அடியார்கள் நான்கு நாட்கள் கழித்துத்தான் போய்ச் சேர முடிந்தது! திரு. கமலப்பிள்ளை, திரு. T. சுப்பிரமணியப் பிள்ளை இருவரும் சென்று கண்ணுற்றபோது சுவாமிகளின் திருமேனி அப்போதுதான் அடங்கியது போலிருந்தது! சுவாமிகள் பிறந்த இடத்திலேயே முறைப்படி அடக்கம் செய்து, அடியார்கள் கூடி அதே இடத்தில்–இப்போதுள்ள--மூலஸ்தானக் கோயிலை எழுப்பினர்.

சுவாமிகள் அருளால் வேளூரின் கண் நிகழ்ந்த, நிகழும் அற்புதங்கள் எழுதுந் தரமன்று! சுவாமிகள் அடக்கமான காலமுதல் இப்பொன்னாண்டுவரை வேளூரில் ஒவ்வோராண்டும் தை மீ கடைவெள்ளிப் பெருவிழா உற்சவம் எண்ணிறந்த மக்கள் வெள்ளத்துடன் கோலாகலமாக நடைபெற்றுவருவது குருநாதரின் அருளாட்சியன்றி வேறில்லையென்பது திண்ணம். சிலவருடங்கள் ஆண்கள் ஒரு பக்கமும், பெண்கள் ஒரு பக்கமும் நின்று கேடயத்தில் ஊர்வலம் நடைபெற்றது. தற்போது, முத்து விமானத்தில் வீதியுலா- மேளக்கச்சேரி, பஜனையுடன்-நடைபெறுகிறது. தற்போது இப்பெருவிழாவினை திரு. M. இராமையாப் பிள்ளையவர்கள் நடத்தி வருகிறார்.

வாழ்க இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருமலரடிகள்.

ஓம் சற்குருநாதர் துணை

நல்லிருடிப் பட்டியெனும் நகர் விளங்க
நாகலா புரம் விளங்கச்

சொல்லரிய பெருமைமிகு திருவருட்சட்டம்
விளங்கத் துணிந்து பேணும்

இல்லறத்தார் இன்னடியா ரினம்விளங்க
எழில்ஞாலம் விளங்கப் பாரில்

பல்லறமும் விளங்கவந்த குருபர! நின்
பாதமலர் போற்றி! போற்றி!!

R. K. இராமுபிள்ளை & மக்கள்

ஷாப் வியாபாரம் & அச்சகம்

நாகலாபுரம் (நெல்லை மாவட்டம்)

இல்லம்: இரெட்டியப்பட்டி

அருட்சட்ட அனுபவங்கள்

திரு. ச. ராஜு செட்டியார் அருணுபுரம்

எனக்குத் தொடர்ந்து மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. 'ஆண் குழந்தை இல்லையே' என்ற குறை எனக்கிருந்தது. திருவண்ணுமலையில் ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி கோயில் கும்பாபிஷேகத்திற்குச் சென்றிருந்த போது என் சட்டகர், திரு. K. R. கன்னைய செட்டியார் வீட்டில் தங்க நேர்ந்தது. ஏற்கனவே, ஆனத்தூர், திரு. M. K. வேங்கடராமன் அவர்களின் மூலமாக அருட்சட்டம் ஏற்றிருந்த என் மைத்துனி, திருமதி லக்ஷ்மிபாய் அம்மாள் என்னைச் சட்டமெடுத்துக் கொள்ளச் சொல்லித் தூண்டி, 'வழி காட்டும் வான் பொருள்' புத்தகம் கொடுத்தார்கள். அதைப் படித்துப் பார்த்த நான் சட்டமெடுப்பதென முடிவு செய்து, அதற்கான வழியைக் கேட்டேன். "உடல், பொருள், ஆவி மூன்றையும் குருநாதரிடம் ஒப்படைத்து சட்டமேற்றுக்கொள்ள வேண்டியது தான்-சட்டமேற்க வேறு 'விதிமுறைகள்' இல்லை" என்று மைத்துனி சொன்னுர்கள். அதன்படியே திருவண்ணுமலையிலிருந்து வீடு திரும்பியதும் மறுநாளே சட்டமேற்றேன்.

என் முன்னேர்கள் செய்து வந்த விநாயகர் பூஜையின் பலனுகவே நான் அருட்சட்டமேற்கும் பாக்கியம் கிடைத்ததோவென ஆச்சரியப்படுகிறேன்! வழி வழியே வந்த விக்ரக ஆராதனையை இன்றும் நடத்திவருகிறேன். தினமும் காலையில் பூஜை முடித்த பின்னரே வேறு வேலை செய்ய மனம் ஈடுபடும்.

அருட்சட்டமேற்ற சில நாட்களில், பிள்ளையார்குப்பம் ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையாரைத் தரிசிக்க தம்பதி சமேதராய் சென்றிருந்தோம். 'குடும்பத்தில் ஒருவர் மட்டும் சட்ட மேற்ருல் போதாது. தம்பதியர் இருவருமே சட்டமேற்பதே சிறப்பு' என்று ஸ்ரீலஸ்ரீ அன்னையார் கூற, அதன்படியே, அங்கேயே என் மனைவி, சௌ. கமலம்மாளும் சட்டமேற்ருள். பிறகு எங்கள் கோரிக்கையின் படியே ஆண் மகவு பிறந்தது. ஸ்ரீலஸ்ரீ அன்னையார், ஆசியுடன், அவர்களே அக்குழந்தைக்கு 'பாலகுரு' என்று நாமகரணம் சூட்டினுர்கள். 26 ஆண்டுகள் கழித்து அவனே இன்று இப்பதிப்பகத்தில் சேர்ந்து அருட்சட்டத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளான்.

எங்களைக்கண்டு எங்களூரில் என் நண்பர்கள் சிலர் இவ்வருட் சட்டம் ஏற்ருர்கள். நாங்கள் சட்டமேற்ற பிறகு சுவாமிகள் ஜயந்தி, குருபூஜை போன்ற விழாக்களுக்குத் திருச்சாத்தனூர், பிள்ளையார் குப்பம் ஆகிய ஸ்தலங்களுக்குச் சென்று, ஸ்ரீ அருட் கொடிச் சுவாமிகளையும், ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தித் தாயையும் பலமுறை தரிசித்துள்ளோம்.

சட்டமேற்றது முதல் எனக்கு வந்த சோதனைகளும், அவையாவும் குருநாதர் அருளால் நிவர்த்தியானதுமான செய்திகள் பற்பல. என்னுடைய, சுமார் 30 வருட சட்டவாழ்க்கையில், ஆனத்தூர், திரு. M. K. வெங்கடராமன் அவர்கள் அவ்வப்போது ஊட்டிய உற்சாகமும், தைரியமுமே மிகவும் முக்கியமானது !

சமீபத்தில் நான் மூலநோயால் அவதிப்பட்டேன். 57 ஆண்டுகள் வயதான நான் மிகவும் சிரமப் பட்டேன். காஞ்சீபுரம், ஸ்ரீ அருள் ஞானச் செல்வத்தாய் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு, கடிதம் மூலமாக அறிவுரைகளுடன், தைரியமும் ஊட்டினுர்கள். அந்த அறிவுரைகளின் படியே நான் சட்டத்தை ஒழுகி வர, மூல நோய் நிவர்த்தியாயிற்று.

அதற்கு முன்னர் ஒரு சமயம் 'புளூ' (FLUE) ஜுரத்தால் அவதிப்படும்போது காலை மாலை குளியல் கைக்கொண்டு குணமடைந்தது. வைத்தியநாதனை ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளுடைய அருளே என்பதையும் உணருகிறேன்.

சட்டமேற்கு முன், எனக்கு லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கும் பழக்கமிருந்தது. சட்டமேற்றதும் அதிக சிரமமின்றி அவைகளை விட்டு விட்டேன். அதுவும் 'சட்டநாதனை' குருநாதரின் துணையினுல்தான் முடிந்தது !

நான் வெளியூர் சென்று தங்க நேருகையில், என் மனைவி வீட்டில் தனித்திருக்க நேரும். அப்போதெல்லாம் நமதாண்டவரே துணையாயிருந்து நடத்திவருவதையும் அனுபவப் பூர்வமாய் உணருகிறேன்.

நல்லாரைக் காண்பதும் நன்றே, நலமிக்க நல்லார் சொல் கேட்பதும் நன்றே, அவரோடு இணங்கி இருப்பதும் நன்றே—என்ற முது மொழிக்கிணங்க, பெரியோர்கள் கூட்டுறவு எனக்கு மிகவும் உதவியாயிருந்தது. அதில், அருள்நகர், திரு. ஆ. நரசிம்மலு நாயுடு, வட திருமுல்லைவாயில், திரு. சாதுராம் சுவாமிகள் முதலியோரின் விஜயம் குறிப்பிடத்தக்கது !

திரு. T. ஜெகந்நாத குப்தா, சென்னை

சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் தெரு, எண் 32, இல்லத்தில் வசிக்கும் நான்...........ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு அம்மையார் உருத்திராக்க மணியை என்னிடம் கொடுத்து, 'இதை வைத்துப் பூஜை செய்' என்று கூறினுர்கள். அடுத்த நாள் இக்கனவைப்பற்றி உயர்தவத் திரு. பாலகவி M. K. வேங்கடராமனுர் அவர்களுடன் பேசி முதன் முதலில் உயர்தவத் திரு. சங்கராச்சாரிய சுவாமிகளிடம் சென்று, அவர் திருக் கரங்களால் மணிமாலை பெற்றுக்கொள்ள எண்ணி காஞ்சீபுரம் சென்றேன்.

அங்கு நிமந்தகார ஒற்றைவாடைத் தெருவில் உள்ள உயர்தவத்திருமதி சு. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்

நமது சுவாமிகள் அடியார் இல்லங்களுக்கு எழுந்தருளுங்கால், அவரை தரிசனம் செய்ய, எதிர்பாராமல், அடியார்கள் ஏராளமாக வருவதுண்டு, அக்காலங்களில் வீட்டுக்கு உரியவர், 'செய்த உணவு எல்லோருக்கும் எப்படிப் போதும்?' என்று அஞ்சுவர்; சுவாமிகள் அந்நிலையறிந்து, அருள் சுரந்து, உற்சாகத்தோடு, "உடையவன் பொறுப்பு; போடட்டும் இலையை !" என்பார்கள். நூறு பேருக்குச் செய்தது இருநூறு பேருக்கு எங்ஙனமோ திட்டமாய்ப் போய்விடும்.

கள் இல்லம் சென்றோம். மூவரும் 'பெரியவாளைச்' சந்திக்கச் சென்றோம். சங்கரமடத்தின் வாயிலில் ஒரு யானை துதிக்கையைத் தூக்கி, ஆசீர்வதித்து வரவேற்றது. பின் பெரியவாளைத் தரிசனம் செய்தபோது அவர் மௌனத்திலிருந்த தால், கைசாடையால் காட்டினுர்கள், திரும்பவும் அம்மையார் வீட்டிற்கு வந்தோம்.

அவர்கள் அன்று இரவு உயர் தவத்திரு. பாலகவி சுவாமிகளிடம், " இவர் சட்டத்தில் சேர்ந்து விடுவார் போல் தெரிகிறது." என்று கூறினுர்; இரவு ஒரு கனவு கண்டேன். அடுத்த நாள் ஆண்டவர் அருட்சட்டம் மேற் கொண்டேன். அன்று முதல் இன்றுவரை என் வாழ்வில் ஆண்டவர் இயற்றியுள்ள அற்புதங்கள் கூற இயலா! இத்தகைய ஒரு சிறந்த நெறி இருந்ததே நமக்கு இது வரையில் தெரியவில்லையே என எண்ணி வருத்த மடைகிறேன். சிறந்த இந்நெறியில் ஈடு பட்டுப் பயன் பெற இப்போதாவது திரு வருள் கூட்டுவித்ததே என்பதை உன்னி மிகு மகிழ்வுறுகிறேன்.

திரு. K. V. இராம ஐயங்கார், சென்னை

நான் பெற்ற பலனை யாவரும் அறியவும் எனது அன்பை தெரிவிக்கவும் மகிழ்ச்சியுடன் எழுதுகிறேன்.

நான் ஒரு வைஷ்ணவ குடும்பத்தவன். திருநெல்வேலி ஜில்லாவில் சங்கர நாயனுர் கோவில் தாலுகா, கராசாத்தான் கிராமவாசி. எனக்கு இன்று வயது 73.

எனக்கு $1\frac{1}{2}$ வயது இருக்கும் போது இரு கண்களின் கீழ் பாலுண்ணி பெரியதாய் வளர்ந்து கண்களையே மறைத்து விட்டதாம். எனது பெற்றோர்க்கு யாது செய்வதென்று திகைத்த சமயம், அவ் வூரைச்சேர்ந்த ஒருவர் "இரெட்டியப் பட்டி சுவாமியிடம் எடுத்துச் சென்றுல் உடனே குணம் ஆகும் " என்றனர்.

அதன்படியே என்னை ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமியிடம் எடுத்துச் சென்ற னரும். அவர் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி வீபூதி தடவி, "போங்கள், சரியாகிவிடும்" என்றுராம். வீடு வருமுன் குணமாகி விட்டதாக என் பெற்றோர் சொல்லக் கேட்டுள்ள விஷயத்தை இங்கு மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

இப்பொழுதும் என் கண்களுக்கு அடியில் அதன் தழும்புகள் உள்ளன.

குடந்தை திருமதி G. சத்தியவதி

அருட் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டதே ஒரு தனிப்பட்ட முறை. என் தந்தை திரு. ஜகந்நாத குப்தா அவர்கள் ஒரு முறை திருவிசலூரிலுள்ள அருட் சட்ட அடியார் திரு G. சரவணப்பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடந்த விளக்கேற்று கல்யாண விழாவிற்குச் சென்றிருந்தார், அவ்வமயம் அங்கு விஜயம் செய்திருந்த திருவார்திரு அருள் சக்தி அன்னை அவர்களிடம் எங்கள் குடும்ப நிலையைக் கூறி அவர்களை எங்கள் இல்லத்திற்கு வருகை புரியுமாறு வேண்டிக் கொண்டார்.

திருவார்திரு. அன்னையார் அவர்கள் 4-4-70 காலை எங்கள் பூர்வ புண்ணியத்தின் பயனுக எழுந்தருளினுர்கள். அவ்வமயம் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்த எங்களுக்கு ஆபத் பாந்தவன் போன்று உயர்தவத்திரு. பாலகவி சுவாமிகள் அவர்கள் உதவி செய்தார்கள். தாயவர்களுடன் வந்திருந்த அடியவர்கள் பலர் எங்களைச் சட்டம் ஏற்றுக்கொள்ளும்படி ஆலோசனை கூறினுர்கள். எங்கள் தந்தையா

ரும், பிறப்பு ஒன்று உள்ளது போல் இறப்பு ஒன்றும் இருக்கிறது என்று மறைமுகமாகக் கூறிவிட்டுச் சென்னைக்கு திரும்பிவிட்டார்கள். எனவே நாங்கள் நன்கு ஆலோசித்துத் தெளி வுற்றபின் 6-4-'70 முதல் அருட் சட்டத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வருகிறோம்.

இதில் ஆண்டவருடைய சோதனைகள் எத் தனையெத்தனையோ, அப்பொழுதும் திட நம்பிக் கையுடன் இருக்கிறோம். ஒரு சமயம் வீட்டில் பகலுணவிற்கு ஒரு மணி அரிசி கூட இல்லை; கையில் காசுமில்லை ; கடன் கொடுப்பாரில்லை ; 'ஆண்டவரே இதுவும் உமது திருவிளையாடல் தானு' என்று மனமுருகிக் கண்ணீர் விட்டேன். எனது கணவர் பணிபுரியும் இடத்திற்குச் சென்று விட்டார் ; குழந்தைகள் பள்ளிக்குச் சென்று விட்டார்கள். நான் நிம்மதியில்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்தேன். காலை 10-30 மணி சுமாருக்கு யாரோ ஒருவர் எங்கள் வீட் டிற்கு வந்து, "பச்சரிசி இருக்கிறது வேண்டுமா?" என்றார்கள். நான், "கையில் பணமில்லை; வேண்டாம்" என்றேன் அதற்கு அந்த அம் மாள், "பணத்திற்கு என்னம்மா; உங்களிடம் இருக்கும்போது கொடுங்கள்" என்றார்கள். எனக்கு மெய் சிலிர்த்து விட்டது. என் கண் ணிற்கு அது ஆண்டவர் உருவமாகவே தெரிந் தது, "வழிகாட்டும் வான் பொருளி"லிள்ள, "துன்பம் மிகவும் கொடுப்பாண்டி, அவன் தோழமையான துணைவனடி" என்ற பாட்டின் வரிகள் என்னையறியாமலேயே என் வாய் பாடத் தொடங்கி விட்டது !

மற்றொரு சமயம் எனக்குத் தொண்டையில் வலி ஏற்பட்டது. நான் அதை பெரிதாகக் கருதவில்லை. நிமிடத்திற்கு நிமிடம் வலி அதிக மாகிவிட்டது. தொண்டையும், காதின் பக்கங்களிலும் வீக்கம் கண்டு விட்டது; உமிழ் நீர் கூட விழுங்க முடியாமல் போய் விட்டது. இரண்டாவது நாளும் அப்படியே இருந்ததால் வீட்டில் யாவரும் பயப்பட்டு விட்டு, சென்னை யிலுள்ள என் தம்பியும், இலக்கியப் பதிப்பகத் தின் கௌரவச் செயலாளருமான திரு T. J. குபேந்திரனுக்குத் தந்தி கொடுத்து விட் டார்கள். தந்தி கொடுத்த மறு நிமிடத்திலிரு ந்து படிப்படியாகக் குணம் கண்டு விட்டது. மூன்று நாட்கள் படாத பாடு பட்டேன். ஊரிலிருந்து திரு. குபேந்திரன் வரும்போது நான் காலை உணவு தயாரித்துக் கொண்டிருந் தேன். ஆண்டவனுடைய மகிமையை யாரால் அறிய முடியும்.

இன்னொரு சமயம் எனது மகனுக்கு பாதத் தில் கடுகத்தினை சிறங்கு போல் வந்தது. நானும் திருநீறு தடவி விட்டேன், அது என்னடா வென்றால் நெல்லிக்காயளவு பெரிதாகி நடக்க முடியாமல் படுத்த படுக்கையாய் மிக்க அல்ல லுற்றான். பதினைந்து நாட்களாகி விட்டன ; அது உடையவுமில்லை, எனக்கு மனதுக்குள் பயம் கண்டு விட்டது! "உனக்குத் தினமும் பூஜைக்காகப் பூ வாங்கிக் கொண்டு வரு வானே; உனக்கு பூஜை தவறாமல் செய்வானே; அப்படிப்பட்ட குழந்தைக்கா இந்த கதி?" என்று மனங்கசிந்து ஆண்டவரிடம் பிரார்த் தனை செய்தேன். மறுநாள் காலையில் எழுந்து பார்க்கிறேன், அந்த கட்டி உடைந்து விட்டது. எனக்கு ஒரே மகிழ்ச்சி. நான் இருந்த இடத் திலேயே ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி னேன். நான் 'இந்த சட்டம் இன்னும் முன்ன மேயே நமக்குத் தெரிந்திருக்கக் கூடாதா ?' என்று நினைத்துக் கொண்டேன்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் ! எழுதிக் கொண்டிருந்தால் மற்றவர்களுக்கு வாய்ப்பு கிட்டாமல் போய்விடும், அதனால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

அருள் படைத்த குருநாதா வா வா வா
அமைதி வடிவ குருநாதா வா வா வா
கருணை கொண்ட குருநாதா வா வா வா
கஷ்ட மெலாம் தீர்த்திடுவாய் வா வா வா
உண்மை உருக் குருநாதா வா வா வா
உன்னடியார் கண்டு தொழ வா வா வா

—G. பானுமதி

சுவாமிகள் பொன்னுண்டுப் பாதயாத்திரை

(திரு. V. இராமலிங்கம், B.E., நெய்வேலி)

'சற்குரு ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் 50-வது குருபூஜை விழா வருமுன்னர் கால்நடையாகப் — பாதயாத்திரையாகப் — புறப்பட்டுச் சென்று சற்குருவைக் காண வேண்டுமென்ற பேரவா அடியார்கள் மனதில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் சற்குருவின் பதியான இருடியர்பட்டியில், எழுந்தது. ஆண்டவர் திருவருள் அவரது அடியார்களில் ஒருவரான காஞ்சித்தாய், திருமதி. மங்கையர்க்கரசி அம்மையார், உள்ளத்தில் தீவிரமாக உந்துவித்து, பாலகவி. திரு. வேங்கடராமன் என்ற அடியார் உதவியுடன் பாதயாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டது.'

ஏற்கனவே ஒரு முறை பாதயாத்திரை சென்று அனுபவம் பெற்றிருந்த அடியார், பாலகவி திரு. வேங்கடராமன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, பதினொருவர் அடங்கிய அடியார் குழு பாதயாத்திரையில் கலந்து கொண்டது. ஆண்டவர் அருள் துணையுடன் 9—6—1972 வெள்ளிக் கிழமை காலை காஞ்சீபுரம் அடியார், திருமதி. மங்கையர்க்கரசி அம்மையார் வீட்டில், ஆண்டவர் பூஜை முடித்துக்கொண்டு, அங்கிருந்து சரியாக 5-30 மணிக்கு இருடியர்பட்டியை நோக்கி எங்கள் பாதயாத்திரைக் குழு புறப்பட்டது.

பாதயாத்திரையின் நோக்கம் :

ஆண்டவர் அருளனுபவங்களைப் பெறுவதும், பாதயாத்திரையில் கலந்து கொள்ளும் ஒருசில நாட்களேனும் உலகச் சூழ்நிலைகளை மறந்து ஆண்டவர் எண்ணத்தையே மையமாகக் கொண்டு ஒழுக முயலுவதும், 50 ஆவது ஆண்டு குருபூஜைக்கு முன்னர் அவரது தரிசனத்தை பாதயாத்திரையின் மூலமே சென்று அடைய வேண்டுமென்பதும், சற்குருவின் நாமத்தை, அவரது புகழை, அவரது கொள்கைகளை யாத்திரை செல்லும் வழியெல்லாம் கூடியவரை பரப்பவேண்டுமென்பதும், அடியார்கள் பலரது இல்லம் சென்று காணவேண்டும் என்பதுமே !

பாதயாத்திரையின் சட்டதிட்டங்கள் :-

சட்டதிட்டங்களில் மிக முக்கியமானதும், குறிப்பிடப்பட வேண்டியதுமானவை:

1. பாதயாத்திரை, புறப்பட்டுச் சென்று சேரும் வரை எவரும் தன் நண்பர்களுடனே, குடும்பத்தாருடனே, கடிதப் போக்குவரத்தாலோ அல்லது வேறு எந்த விதமாகவோ செய்திகள் பரிமாறல் கூடாது.

2. பாதயாத்திரையின் போது காலணிகள் அணியக்கூடாது.

3. அவரவர் உடமைகளை அவரவரே சுமக்க வேண்டும், என்பதே.

பாதயாத்திரை சென்ற தூரமும், வழியும் :-

யாத்திரைத் தூரம் ஏறக்குறைய 400 மைல்களாகும். யாத்திரை காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு வந்தவாசி — இரெட்டணை — விழுப்புரம் — திருச்சாத்தனூர் — அருள்நகர்— பண்ருட்டி— கடலூர் — பிள்ளையார்குப்பம்— கடலூர் — வடலூர் — சிதம்பரம் — வைதீஸ்வரன்கோவில் — மாயூரம் — திருவிசலூர் — கும்பகோணம் — கல்லணை — திருச்சி — மணப்பாறை — மேலூர் — மதுரை — அறுப்புக் கோட்டை — இருடியர்பட்டி என வழி வகுத்து அவ்விடங்களுக்குச் செல்வதற்கு முன்னமேயே தேதியும் குறிப்பிட்டுச் செய்திகள் அனுப்பப் பெற்றன.

அனுபவங்கள் :-

பாதயாத்திரையில் பெற்ற அனுபவங்கள் பல. ஒவ்வோரனுபவமும் யாத்திரையில் கலந்து கொண்ட அடியார்கள் மனதில் நாளும் இனிய

வகையில் நினைவூட்டி மகிழ்விக்கின்றன. குறிப்யாக ஓரிரு அனுபவங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1. யாத்திரை துவங்கிய முதல் நாள் மாலை மாமண்டூரிலிருந்து கூழமந்தல் சென்றுகொண்டிருந்தோம். வெகு தொலைவு நடந்து பழக்கமின்மையாலும், எடுத்துச் சென்ற பை சுமையாலும் யாத்திரைக் குழுவினரின் நடை தளர்ந்து கொண்டிருந்தது. ஒரு அடியார், 'ஒரு மாட்டு வண்டி மட்டுமிருந்தால் இந்தப் பைகளை யெல்லாம் அதில் போட்டுவிட்டு ஆனந்தமாகப் பஜனை செய்து கொண்டு செல்லலாமே' என்று கூறிக் கொள்ளுகிறார்—தன் மனதிற்கும். ஆனால் அதே சமயத்தில் பிறருக்கும் கேட்கும் வண்ணம்! ஐந்தாறு நிமிடங்கள் கழித்து ஒரு மாட்டு வண்டி எங்களைத் தாண்டிச் சென்றது. 'பைகளை எடுத்துச் செல்ல முடியுமா, என்று அவரைக் கேட்டோம். அவர் சம்மதிக்க, எங்கள் பைகள் வண்டியில் பிரயாணம் செய்தன.

இருட்டி விட்டது! கருமுகில்கள் சூழ்ந்து எந்த நிமிடமும் மழை வரலாமென்ற பயத்தை ஊட்டுகின்றன; காற்று பலமாக வீசுகிறது. வண்டியோட்டி கூழமந்தல் ஊரின் ஆரம்பத்திலேயே, வண்டியை நிறுத்தி, "இங்கு ஒரு துவக்கப்பள்ளி இருக்கிறது; இங்கேயே தங்குங்கள். மழைக்கு வசதியாக இருக்கும்" என்று கூறி, பைகளை இறக்கி வைத்தார் பிறகு, 'தான் ஒரு முகமதியர்' என்றும், 'ஆண்டவர் எந்த மதத்திலும் உறைகிறார், அவரை எப்படியும், எந்நாமமும் கொண்டு வழிபடலாம்' என்றும் கூறி விடைபெற்றார்.

அடியார்கள் மனதில் குருநாதரின் பாடல் நினைவுக்கு வந்து இனிக்கின்றது!

'நாடுவோர்க் கெல்லாம் நாடியபடியே
நல்வரம் கொடுக்கும் நல்லீசன்'... ..

'குருநாதரின் அன்புக்கு உகந்த முகம்மதியர்களைச் சார்ந்த ஒருவர் எவ்வாறு மனமுவந்து குருநாதரின் அடியார்கட்கு உதவினார்; நல்லுரை புகன்றார்' என்பதை எண்ணி மனம் சிலிர்த்தது.

2. 20—6—72 அன்று காலை கடலூரிலிருந்து புறப்பட்டு, சுமார் 9.00 மணிக்குப் பிள்ளையார் குப்பம் அடைந்து ஸ்ரீ குருநாதரின் தலைசிறந்த அடியயராய் விளங்கி, மற்ற அடியார்கட்கெல்லாம் வழிகாட்டி உதவி வரும் ஸ்ரீலஸ்ரீ அருட்சக்தி அன்னையார் அவர்களைத் தரிசித்தோம். அன்னையார் அவர்களும் யாத்திரைக் குழுவை மிக்க மகிழ்வோடு வரவேற்றார். சுற்றுப்புறத்து அடியார்களுக்கு முன்னமேயே தெரிவித்து அவர்களையும் வரும்படிச் செய்து யாவரையும் காண்பதற்கும் அளவளாவுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தருளினார்கள்.

யாத்திரையின்போது பலருக்குப் பல்வேறு விஷயங்களில் ஐயங்கள் எழுந்திருந்தன. அவற்றிற்கெல்லாம் நாங்கள் எதுவும் கேட்காமலேயே ஸ்ரீலஸ்ரீ அன்னையார் அவர்கள் அருளிய அருளமுதங்கள் மூலம் விடையும் தெளிவும் கிடைத்தன. அடியார் ஒவ்வொருவரும் இந்த அற்புதத்தினை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.

யாத்திரை நல்ல வெய்யில் காலத்தில் நடைபெற்றதால், காஞ்சி முதல் பிள்ளையார்குப்பம் வரை சற்று சிரமமாகவே இருந்தது. அன்னையிடம் எங்கள் துன்பத்தைக் கூறியபோது, 'இனிச் சிரமமிருக்காது; என் உள்ளத்தால் உங்களுடன் யாத்திரை புரிவேன், சென்று வாருங்கள்' என்று விடை கொடுத்தனுப்பினர். அன்று முதல் யாத்திரை முடியும் வரை எங்கள் பாதங்கள் வெயயிலில் வாடவேயில்லை! எப்படியோ சற்குருநாதர் மேக மூட்டத்தையும், மிகப்பல இடங்களில், மழையையும் அருளி உதவினர். ஒவ்வொருநாளும் அன்னையாரின் சிந்தனையை அவைகள் எங்களுக்கு ஏற்படுத்தின.

3. கல்லணையிலிருந்து ஸ்ரீரங்கம் வழியாகத் திருச்சி செல்வதெனத் திட்டமிட்டிருந்தோம். அவ்வழி அதிகத் தொலைவு என்பதால், வேறு வழியாகச் செல்வதென முடிவு செய்து அங்குள்ள அன்பருக்குத் தந்தி மூலம், எங்கள் மாற்றத்தைத் தெரிவித்திருந்தோம். கல்லணையிலிருந்து ஓரிரு கல் தொலைவு சென்றதும், யாத்திரைக் குழுவில் வந்த 60 ஆண்டுகள் வயதான ஒரு முதிய அடியவர் காலணிகள் இல்லாது பல மைல்கள் யாத்திரை செய்ததால் காலெல்லாம் புண்ணாகி இருக்க, மெள்ள மெள்ள நடந்தார். எங்கள் தந்தி கண்டு ஸ்ரீ ரங்கத்திலேயே சாப்பாட்டிற்கான யாவற்றையும் தயார் செய்துத் தன் காரிலேயே

கொண்டு வந்திருந்த அந்த அன்பர் அப்பெரிய வரைக் கண்டு மனம் கசிகிறார். "தாங்கள் இப் போதே என் காரில் வாருங்கள்; இன்று இரவே இரெட்டியப்பட்டி சற்குருநாதர் முன்னிலையில் தங்களைச் சேர்ப்பிக்கின்றேன்" என்றார், அம் முதிய அடியார் அதற்கு மறுக்கவே, "தாங்கள் வரவில்லையென்றால் ஆட்களை வைத்தேனும், தங்களைக் கட்டி காரில் எடுத்துச் செல்வேன்" என்று அன்பின் காரணமாக அந்த அன்பர் கூறியது அம்முதியவருக்கு அச்சத்தைக் கொடுத்தது, அருகிலிருந்த அடியவர்களிடம், "ஐயோ! இவ்வளவு தூரம் செய்த யாத்திரை பயனற்று விடுமோ! என்னுடன் ஒத்துழைத்து, என்னை அழைத்துச் செல்லுங்கள்; காரில் வேண்டாம். இறந்து வீழ்ந்தாலும் யாத்திரை யில் நடந்தே இறப்பேனே தவிர, காரில் செல்ல மாட்டேன்" என்று வணங்கினார். இதைக்கண்டு, அனைவர் மனமும் கசிந்தன! அவரது அயரா ஊக்கத்தையும், ஆண்டவர் பாலுள்ள தளரா நம்பிக்கையையும் கண்டு குழுவே வியந்தது.

